

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
# புரட்சித்தலைவி அம்மாவின்
# நலத்திட்டப் பயனாளிகளின்
# வெற்றிக் கதைகள்

சிறப்பு வெளியீடு எண். 52

# தமிழரசு

இலவச வெளியீடு

மே 2015

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
110, அண்ணா சாலை
சென்னை – 600 002.



# அறிமுகவுரை

தமிழக மக்களின் நலனை மேம்படுத்துவதே தனது வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கடந்த 2011ஆம் ஆண்டு மூன்றாம் முறையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்று செயல்படுத்திய பல்வேறு மக்கள் நலத் திட்டங்களின் உதவிகளால் பயன்பெற்ற பயனாளிகளின் மன உணர்வை வெளிப்படுத்தும் விதமாக **"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் நலத்திட்டப் பயனாளிகளின் வெற்றிக்கதைகள்"** என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையில் கடந்த 2011ஆம் ஆண்டில் பொறுப்பேற்ற அரசு தற்போது நான்காண்டுகள் நிறைவடைவதையொட்டி வெளியிடப்படும் இந்நூல், மாண்புமிகு அம்மா அவர்களின் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் மக்களிடையே சிறப்பாக கொண்டு சென்றதுடன் அத்திட்டங்களால் தமிழக மக்கள் அனைவரின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது என்பதை படம் பிடித்துக்காட்டுகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் முன்னேற்ற திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளின் வெற்றிக் கதைகளைச் சீரிய முறையில் தொகுத்து நூலாக வழங்கிய செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப அவர்களையும் இப்பணிக்கு உறுதுணை புரிந்த செய்தித்துறை அலுவலர்களையும் மனதார பாராட்டுகிறேன். இந்நூலை அனைவரும் படித்து பயன்பெற வேண்டும் என அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் இந்நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.



மூ. இராசாராம் இ.ஆ.ப
அரசு செயலாளர்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

## பொருளடக்கம்


| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 1. | அரியலூர் | 1 |
| 2. | கோயம்புத்தூர் | 9 |
| 3. | கடலூர் | 31 |
| 4. | தருமபுரி | 33 |
| 5. | திண்டுக்கல் | 47 |
| 6. | ஈரோடு | 54 |
| 7. | காஞ்சிபுரம் | 61 |
| 8. | கன்னியாகுமரி | 65 |
| 9. | கரூர் | 69 |
| 10. | கிருஷ்ணகிரி | 76 |
| 11. | நாகப்பட்டினம் | 88 |
| 12. | நாமக்கல் | 90 |
| 13. | நீலகிரி | 113 |
| 14. | பெரம்பலூர் | 121 |
| 15. | புதுக்கோட்டை | 131 |
| 16. | இராமநாதபுரம் | 139 |
| 17. | சேலம் | 146 |
| 18. | சிவகங்கை | 165 |
| 19. | தஞ்சாவூர் | 173 |
| 20. | தேனி | 178 |
| 21. | திருச்சி | 188 |
| 22. | திருநெல்வேலி | 192 |
| 23. | திருவள்ளூர் | 194 |
| 24. | திருவண்ணாமலை | 196 |
| 25. | திருவாரூர் | 200 |
| 26. | வேலூர் | 202 |
| 27. | விழுப்புரம் | 214 |
| 28. | விருதுநகர் | 230 |




## பசுமை வீடு தந்து வாழ்வைப் பசுமையாக்கிய பாசமிக்க தாய்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வாக்கிற்கிணங்க "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்" எல்லோரும் வாழ்வில் வளம்பெறும் வகையிலான ஆட்சி அமைவதே சிறந்த மக்களாட்சியாகும். இவ்வாறான மக்களாட்சியில்தான், ஏழைகளும் வசதி படைத்தோர்க்கு இணையாக வசதிகளைப் பெற இயலும் என்ற உன்னத நோக்கத்துடன், தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலம் ஏழை, எளிய மக்களுக்கென பல்வேறுத் திட்டங்கள் மிகச் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் மக்களின் அடிப்படைத் தேவையை நிறைவேற்றும் முக்கிய திட்டமாக, முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் கீழ், பசுமை வீடு ஒவ்வொன்றும் 300 சதுர அடி பரப்பளவுடன் ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் சூரிய சக்தி (Solar System) மின் வசதியுடன் கூடிய பசுமை வீடு ஏழை, எளிய மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**இத்திட்டத்தின் கீழ் பசுமை வீடு பெற்றுள்ள நாகமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு.அர்சுணன் கூறுகையில்:–**



“என் பெயர் அர்சுணன். அரியலூர் வட்டம், நாகமங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு 2 பெண் குழந்தைகள் மற்றும் 1 ஆண் குழந்தை உள்ளது. எனக்கு வயதான அம்மா உள்ளார். வசதியற்ற என்னுடைய குடும்ப சூழ்நிலையில் நாங்கள் மிகவும் சாதாரணமான ஒரு குடிசையில் தான் வசித்து வந்தோம். மழைக் காலங்களில் குடிசை வீட்டில் வசிக்க முடியாமல் இருந்து வந்தது. எனது வருமானத்தைக் கொண்டு நாங்கள் மூன்று வேளை சாப்பிடுவதே கடினமான சூழ்நிலையில் சொந்தமாக வீடு கட்டுவது என்பது எனக்கு இமாலய கனவாக இருந்து வந்தது. பின்பு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்த சூரிய சக்தி மின் வசதியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தைப் பற்றி தெரிந்து கொண்டு அரியலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் விண்ணப்பம் கொடுத்தேன். என்னுடைய குடும்ப சூழ்நிலை மற்றும் உரிய தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டு எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன்மூலம் எனது வாழ்நாள் கனவு நிறைவேறியதுடன், சொந்த வீட்டுக்காரன் என்ற பெருமையோடு நான் தலை நிமிர்ந்து நடக்கிறேன். சூரிய ஒளிசக்தியுடன் கூடிய மின்சாரம் மூலம் எங்களுக்கு தடையற்ற மின்சாரம் கிடைப்பதால் எனது குழந்தைகள் படிப்பதற்கு பெரிதும் பயனாக உள்ளது. என்னைப் போன்ற ஏழை, எளியவர்களுக்கு பசுமை வீடு வழங்கி பாலைவனமாக இருந்த எங்களது வாழ்வை பசுமையாக்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்”.

❖ ❖ ❖

# பெண் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கைக்குப் பாதுகாப்பு!

"பெண் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கைப் பாதுகாப்பிற்கு உத்திரவாதம் அளித்து அவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும், பெண்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவும், பெண்சிசுக்கொலை செய்யும் கொடிய எண்ணத்தை தகர்த்தெறியவும், பெண்கல்வி ஊக்குவிப்பு, வேலைவாய்ப்பு அளித்திடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால், 1992ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட மகத்தான திட்டம் தான் மாண்புமிகு முதலமைச்சரின் "பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்".

இத்திட்டத்தின் கீழ், 18.11.2011க்குப் பிறகு குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் இருந்து, ஆண் குழந்தை ஏதும் இல்லாதிருப்பின், அப்பெண் குழந்தையின் பெயரில் ஆரம்ப வைப்பீடாக ரூ.50,000/–மும், குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருந்து, ஆண் குழந்தை ஏதும் இல்லாதிருப்பின், ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் தலா ரூ.25,000/–மும், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது.

இந்த வைப்புத் தொகை ஒவ்வொரு ஐந்தாண்டு முடிவிலும் புதுப்பிக்கப்பட்டு, பெண் குழந்தைக்கு 18 வயது நிறைவடைந்ததும் திரளான வட்டி விகிதத்துடன் கூடிய, நிலை வைப்புத்தொகையின் முதிர்வுத் தொகை இரு திட்டங்களின் கீழ் முறையே ரூ.3 இலட்சத்து 232 மற்றும் ரூ.1 இலட்சத்து 50 ஆயிரத்து 117 ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்படுகிறது.

மேலும், இந்தத் திட்டத்தின் கீழ், தொகை வைப்பீடு செய்யப்பட்ட ஆறாவது ஆண்டிலிருந்து கல்விச் செலவுக்காக ஆண்டுதோறும் ஊக்கத்தொகை ரூ.1,800 வரை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பெண் கல்வி முன்னேற்றம் அடைந்துள்ளதற்கும், பெண் குழந்தைகளின் இடைநிற்றல் குறைந்துள்ளதற்கும், பெண் குழந்தை பாலின விகிதம் அதிகரித்துள்ளதற்கும் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் முக்கிய காரணியாக உள்ளது.

சாதாரண மக்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் திட்டத்திற்கான ஆண்டு வருமான வரம்பு

14.10.2014 முதல் ரூ.24,000/– லிருந்து ரூ.72,000/– ஆக உயர்த்தி தமிழக அரசு ஆணை வழங்கியுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் 689 பெண் குழந்தைகளுக்கு ரூ.1 கோடியே 28 இலட்சத்து 35 ஆயிரத்து 800 மதிப்பில் பத்திரம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

*ராபியதூள் பஜிரியா*



**இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற ஜெயங்கொண்டம் பகுதியைச் சேர்ந்த, ராபியதூள் பஜிரியா க/பெ. முகமது ரியாஸ் தெரிவித்ததாவது,**

“எனது கணவர் கூலி வேலை செய்து வருகிறார். எனது இரண்டு பெண் குழந்தைகளுக்கும் நல்லதொரு எதிர்காலம் அமைந்திட வாய்ப்பு ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்”.


*தமிழரசி*

**அரியலூரைச் சேர்ந்த தமிழரசி, க/பெ. மகேந்திரன் அவர்கள் பேசும் போது,**

“எனது கணவர் சிறிய பல சரக்கு மளிகைக்கடை வைத்து தொழில் செய்து வருகிறார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய இந்த வைப்புத்தொகை எனது பெண் குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தை எனக்கு ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பேருதவியைப் பெற்றிடக் காரணமான மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு கோடான கோடி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்”.

❖ ❖ ❖

# இடைநிற்றலைத் தடுத்து நிறுத்திடும் ஏற்றமிகு திட்டங்கள்

“**அ**றிவுசார் மனிதவளம் மேம்பாடு அடைய வேண்டுமெனில், அனைவருக்கும் தங்குதடையின்றி தரமான கல்வி கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும்” என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அமுத மொழிக்கிணங்க பள்ளி செல்லும் குழந்தைகளின் இடைநிற்றலைத் தடுத்து நிறுத்தவும், குழந்தைகள் ஊக்கமுடன் தொடர்ந்து கல்வி பயிலவும் பள்ளிக் கல்வித்துறையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



மணிமேகலை

**பள்ளி மாணவச் செல்வங்களுக்குப் பல்வேறு கல்வி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தில் பயன்பெற்ற அரியலூர் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 10ஆம் வகுப்பு பயிலும் மாணவி மணிமேகலை நம்மிடம் கூறியதாவது:—**

“நான் அரியலூர் அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் 10ஆம் வகுப்பு பயின்று வருகிறேன். எனது அம்மா பெயர் ஜகதாம்பாள், அப்பா பெயர் முருகேசன். நாங்கள் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எங்களை வறுமை சூழ்ந்த போதிலும் என்னுடைய அப்பா என்னைப் படிக்க வைத்துக் கொண்டு இருக்கிறார். ஒவ்வொரு நாளும் என்னுடைய அப்பா விற்கும் ஐஸ் வியாபாரத்தைப் பொறுத்தே எங்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள இயலும். இந்தச் சூழ்நிலையில் அப்பா என்னை நீ பள்ளிக்கூடம் போவதை நிறுத்திவிடு. என்னால் இதற்கு மேல் உன்னை படிக்க வைக்க இயலாது என்று கூறினார். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த விலையில்லா பாடநூல்கள், விலையில்லா சீருடைகள், விலையில்லா காலணிகள், விலையில்லா வண்ணப்பென்சில்கள், விலையில்லா கணித உபகரணப்பெட்டிகள், விலையில்லா புவியியல்

வரைப்பட நூல்கள், விலையில்லா பேருந்து பயண அட்டைகள், விலையில்லா நோட்டு புத்தகங்கள், விலையில்லா புத்தகப் பைகள், மதிய உணவுத்திட்டம், விலையில்லா மிதிவண்டிகள், இடைநிற்றலைக் குறைப்பதற்கான சிறப்பு ஊக்கத்தொகை ஆகிய திட்டங்களை எடுத்து கூறினேன். பின்னர், எனது அப்பா மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இவ்வளவு திட்டங்களை அறிவித்து என்னுடைய குடும்ப சுமையை குறைத்திருக்கிறார்கள் என்னும் போது நீ கட்டாயம் பள்ளி செல்ல வேண்டும் என்று கூறினார். இப்போது நான் தொடர்ந்து பள்ளி சென்று வருகிறேன். எனக்கு ரொம்ப மகிழ்ச்சி'' என்று கூறினார்.




**9ஆம் வகுப்பு பயிலும் மாணவி ஸ்ரீதேவி கூறுகையில்**

``நான் இப்பொழுது கணித பாடத்தில் 100க்கு 70 மதிப்பெண் வாங்கி இருக்கேன். எப்படி தெரியுமா? அரியலூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 9ஆம் வகுப்பு படிக்கிறேன். என் அப்பா விவசாயக்கூலி எனக்கு ரெண்டு தங்கச்சி இருக்காங்க. எங்க அப்பா எங்கள வறுமையான சூழ்நிலையிலும் படிக்க வச்சிட்டு இருக்காங்க. எனக்கு கணித பாடத்திற்கு தேவையான கணித உபகரணப்பெட்டி வாங்கித் தரச் சொல்லி அப்பா கிட்ட சொன்னேன். ஆனா அப்பா அது வாங்குவதற்கு இப்போதைக்குப் பணம் இல்லை, மத்த ரெண்டு தங்கச்சியையும் படிக்க வைக்கவே சிரமமா இருக்கு அதனால இரண்டு மாசம் கழிச்சி வாங்கி தரேன்னு சொன்னாங்க. அதனால நடைபெற்று முடிந்த தேர்வில் கணித பாடத்தில் எனக்கு ஆர்வம் இருந்தும் கணித உபகரணங்கள் பெட்டி இல்லாததால் கணித பாடத்தில் குறைவான மதிப்பெண் பெற்றேன். சிறிது நாட்கள் கழித்து எங்களது பள்ளியில் அம்மா அறிவிச்ச விலையில்லா கணித உபகரணப்பெட்டி வழங்கும் திட்டத்தின் கீழ் எனக்கு கணித உபகரணப்பெட்டி கிடைத்தது. அதைக் கொண்டு நான் கணித தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றேன். எனவே, எனது அப்பா, அம்மா செய்ய வேண்டிய கடமைகளை எனக்கு முதலமைச்சர் அம்மா அவங்க செஞ்சிருக்காங்க. என்னைப் போன்ற ஏழை, எளிய மாணவிகளுக்கு இதுபோன்று பல்வேறு திட்டங்கள் மூலம் எங்களுக்குக் கல்வி வழங்கி வரும் அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

❖ ❖ ❖

# சமுதாய வளைகாப்பின் மூலம் தமிழக அரசு வழங்கும் தாய்வீட்டு சீதனம்!



**க**ருவிலே திருவைத் தாங்கி, தங்களது அடுத்த தலைமுறையை உருவாக்கித் தர இருக்கும் கர்ப்பிணித் தாய்மார்களை சுற்றமும், நட்பும் சூழ வாழ்த்தி மகிழும் வளைகாப்புத் திருவிழா தங்களுக்கும் நடக்க வேண்டும் என்பது எல்லா கர்ப்பிணிப் பெண்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

ஆனால், இத்தகு விழாவை நடத்துவதற்கேற்ற பொருளாதார வசதி அற்ற ஏழை கர்ப்பிணிப் பெண்களின் உள்ளார்ந்த விருப்பத்தை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தாயன்போடும், மனித நேயத்தோடும், சமுதாய வளைகாப்பு விழா திட்டத்தைச் செயல்படுத்தினார்கள்.

இத்திட்டத்தின்படி அரியலூர் மாவட்டத்தில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சமுதாய வளைகாப்பு விழா மாவட்டத்தின் 6 வட்டாரங்களிலும் நடத்தப்பட்டது. அப்போது, கர்ப்பிணிப் பெண்களுக்கு சீர்வரிசையாக ஜாக்கெட் துண்டு, மஞ்சள், குங்குமம் மற்றும் வளையல் தட்டு வழங்கப்பட்டன. மேலும், விழாவில் கலந்து கொண்ட கர்ப்பிணிகளுக்கு 5 வகை சாதம் வழங்கப்பட்டது. பெண் அலுவலர்கள் மேள தாளத்துடன் சீர் எடுத்து வந்து கர்ப்பிணிப் பெண்களுக்கு மாலை அணிவித்து வளைகாப்பு நடத்தினார்கள். இவ்விழாவில், பங்கேற்ற

கர்ப்பிணி பெண்கள் தங்கள் குடும்பத்தில் நடந்த விழா போன்று இருந்ததாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்கள்.

**தமிழ்நாடு அரசே நடத்துகின்ற வளைகாப்பு விழா திட்டத்தின் மூலம் பயனடைந்த திருமதி தி. வனரோஜா என்ற கர்ப்பிணிப் பெண் நம்மிடம் கூறும்போது,**


வனரோஜா

“எனது கணவர் பெயர் திருமுருகன். நான் அரியலூர் வட்டம், புதுப்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது தந்தை ஒரு விவசாயி. எனக்கு இரண்டு தங்கைகள் உள்ளனர். நான் முதல் பெண் என்பதால் எனக்குத் திருமணம் செய்து வைப்பதே எனது பெற்றோர்களுக்குப் பெரிய சுமையாக இருந்து வந்த சூழ்நிலையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிமுகப்படுத்திய திருமண நிதியுதவி மற்றும் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம் மூலம் எனக்குத் திருமணம் நடைபெற்றது. அதன்பின், ஏழு மாத கர்ப்பிணியான எனக்குப் பெற்றோர் வீட்டில் முறைப்படி நடைபெற வேண்டிய வளைகாப்பு நடத்திட முடியாத சூழ்நிலை இருந்து வந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தயவினால் வளைகாப்பு விழா பெற்றோர் வீட்டில் செய்வதை விட மிகவும் விமர்சையாக நடைபெற்றது” என மகிழ்ச்சியோடு தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் குறிப்பாக ஏழை, எளிய பெண்களின் வாழ்வை, உயர்த்திட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி உள்ளார்கள். திருமண நிதியுதவி, தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், சமுதாய வளைகாப்புத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், உயர்கல்வி பயில்வதற்கு வங்கிக் கடன் வழங்கும் திட்டம், மகளிர் சுயஉதவிக்குழு என எண்ணற்ற திட்டங்களை பெண்களுக்கென்றே அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள்.

சமுதாய வளைகாப்புத் திட்டத்தின் மூலம் ஏழை கர்ப்பிணிப் பெண்களின் இதயத்தில் பால்வார்த்து நெஞ்சங்களில் மகிழ்ச்சி குடி கொள்ள வைத்துள்ளது என்று சொன்னால் மிகையாகாது.

❖ ❖ ❖



# துன்பப்படும் விவசாயிகளின் துயர் போக்கிடும் "உழவர் பாதுகாப்புத் திட்டம்"

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பல்வேறு வகையான உதவித்தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2.5 ஏக்கர் நன்செய், 5 ஏக்கர் புன்செய் நிலமுடைய அல்லது விவசாயம் சார்ந்த தொழில் புரியும் நபர்களுக்கு உழவர் பாதுகாப்பு திட்ட அடையாள அட்டை வழங்கப்பட்டு, குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு பல்வேறு வகையான உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விவசாயப் பெருமக்களுக்கு மிகுந்த பயனளிக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்கள் சிலரைச் சந்தித்தோம். அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கூறிய கருத்துக்கள் இங்கே :–

**ஆறுமுகத்தாள் (வயது 65), தீத்திபாளையம்:–**

"எனது கணவர் மாரண்ணன். கடந்த 3 மாதத்திற்கு முன்பு இறந்துவிட்டார். கணவரை இழந்து கஷ்டப்பட்டு வாழ்ந்து வந்தேன்.

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் என் கணவர் இறந்ததுக்காக ஈமச்சடங்கு உதவித் தொகையாக ரூ.12,500/– கொடுத்தார்கள். இது எனது குடும்பத்திற்குப் பேருதவியாக இருந்தது. உழவர் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வந்து இதுபோன்ற உதவி பெற்றிடக் காரணமான அம்மாவுக்கு என் நன்றியைத் தெரிவிச்சுக்கிறேன்.''


ஆறுமுகத்தாள்

**திருமதி சரஸ்வதி (45), செலம்பனூர்**

''எனது கணவர் பழனிசாமி. விவசாயக்கூலி வேலை பாத்துக்கிட்டு பால் வியாபாரம் செய்து வந்தார். கடந்த 6 மாதத்திற்கு முன்பு சாலை விபத்துல இறந்துவிட்டார். விவசாயக் கூலிங்கிறதால உழவர் பாதுகாப்புத் திட்டத்துல பதிவு செய்திருந்தோம். முதல்வர் உழவர் பாதுகாப்புத் திட்டத்துல விபத்து நிவாரண உதவியாக ரூ.1 இலட்சத்து 2,500 கொடுத்தார்கள். மகன் கோவிந்தராஜ், மகள் பூங்கொடி நாங்க எல்லோரும் சிரமப்பட்ட நேரத்துல இந்த பணம் கொடுத்தது ரொம்ப உதவியா இருந்துச்சு. அம்மா அவங்களுக்கு நானும், என் குழந்தைகளும் எங்களுடைய வாழ்நாள் முழுவதும் நன்றியுள்ளவர்களாக இருப்போம்.''


சரஸ்வதி

உழவுத் தொழிலையே நம்பியுள்ள வேளாண் பெருமக்களின் நலனுக்காக கொண்டு வரப்பட்ட இத்திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதற்கு இந்தக் குரல்களே சாட்சி. ஏழை, எளிய மக்களின் நலன் பேணப்பட்டு அவர்களின் சிரமங்களைப் போக்கி வாழ்வில் உயர வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எண்ணம் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பது திண்ணம்.

❖ ❖ ❖

# மக்களின் சிரமங்களை முற்றிலும் நீக்கிய "அம்மா திட்டம்"

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய மக்களின் சிரமங்களைப் போக்கும் வகையிலும், அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவையை வழங்கும் வகையிலும் 24.02.2013 அன்று அம்மா திட்டத்தை தொடங்கி வைத்து செயல்படுத்திட உத்தரவிட்டார்கள்.

"அம்மா" திட்டத்தின் மூலம் வருவாய்த்துறை அலுவலர்களான வருவாய் வட்டாட்சியர், சமூகப் பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியர், ஆதிதிராவிடர் நல வட்டாட்சியர், குடிமைப் பொருள் வழங்கல் தனி வட்டாட்சியர், உள்ளிட்ட வட்டாட்சியர் நிலை அலுவலர்கள், சம்பந்தப்பட்ட மண்டல துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிருவாக அலுவலர்கள் ஒரு குழுவாக நேரடியாக வருகைத் தந்து முகாம் அமைத்து பொதுமக்களின் மனுக்கள் மீதான முதியோர் ஓய்வூதியம், பட்டா மாறுதல், இலவச வீட்டுமனைப் பட்டா, உழவர் பாதுகாப்பு அட்டை, பிறப்பு இறப்பு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் செய்தல் போன்றவைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட்டு அன்றே சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

**கோயம்புத்தூர் மாவட்டத்தில் அம்மா திட்டத்தில் பயனடைந்த கண்ணாத்தாள் (வயது 38), நியூ சித்தாபுதூர்.**


கண்ணாத்தாள்

"எனது கணவர் கட்டடத் தொழிலாளி, நான் காலை மற்றும் மாலை வேலைகளில் வீட்டு வேலைக்குச் சென்று வருகிறேன். எனது மகனின் கல்வி உதவித்தொகை பெற வருமானச் சான்றிதழ் பெற வேண்டியிருந்தது. அப்போதுதான் மாநகராட்சி பள்ளியில் "அம்மா திட்டம்" நடப்பதாகவும் அங்கு சென்று மனு கொடுத்தால் உடனேயே நாம் பெற்றுக் கொள்ளலாம் என்று எனக்கு தெரிவித்தனர். அதன்படி நான் காலையில் எனது வேலைகளை முடித்துவிட்டு வந்து அம்மா திட்டத்தில் 11 மணியளவில் மனுகொடுத்தேன். அன்றைய தினம் மதியம் 2 மணிக்கெல்லாம் சான்றிதழ் பெற்றுக் கொண்டு சென்றேன்.

அம்மா திட்டம் வரும் முன்னாடி தாசில்தார் அலுவலகத்திற்குச் சென்று மனுக் கொடுத்து வாங்கனும். ஆனால் அதிகாரிகள் மக்களிடம் வந்து மனுவாங்கி உடனடியாக சான்றிதழ் வழங்குறாங்க. இதனால் எங்களுக்கு மிகவசதியா இருக்கு. இந்த திட்டத்தைக் கொண்டு வந்த அம்மாவுக்கு நன்றிங்க''.

**மாரிமுத்து (வயது 25), ஸ்ரீதேவி காலனி, கணபதி, கோயம்புத்தூர்.**

''நான் தொலைதூரக் கல்வி மூலம் இளங்கலை வணிகவியல் பயின்று வருகிறேன். எனது சிறுவயதில் போலியோ நோய் தாக்கி எனது கால்கள் பாதிக்கப்பட்டது. எனக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை குறித்து அறிந்திருந்த போதிலும் அவற்றைப் பெற வட்டாட்சியர், மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு சென்று வருவதை சிரமமாக நினைத்து அவற்றிற்கு விண்ணப்பம் அளிக்காமலே இருந்தேன். அப்போதுதான் செய்தித்தாள்கள் மூலம் அம்மா திட்டம் குறித்து அறிந்து எங்கள் கிராமத்தில் அம்மா திட்ட முகாம் நடைபெற்ற அன்றே காலை 10 மணிக்கெல்லாம் மனு கொடுத்து மதியம் 12 மணியளவில் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை பெறுவதற்கான ஆணையைப் பெற்றுக் கொண்டேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இதன்மூலம் மாற்றுத்திறனாளியான நான் என்னுடைய தேவைகளுக்காக பிறரை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிலைமாறி தற்போது நானும் உறுதியுடன் வாழ வழி செய்துள்ளார்கள். சிறப்பு வாய்ந்த திட்டங்களை வெறும் அறிவிப்போடு நிறுத்தி விடாமல் அதை பயனாளிகளின் இருப்பிடத்திற்கே சென்று நலத்திட்ட உதவிகளை வழங்கிவரும் ''அம்மா திட்டம்'' ஏழை மக்களுக்கும் மற்றும் எங்களைப் போன்ற மாற்றுத்திறனாளிகளுக்கும் ஒரு வரப்பிரசாதமாகும். இதுபோன்றதொரு திட்டம் கொண்டு வந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.




❖ ❖ ❖




## பசிப் பிணியைப் போக்கிய அம்மா உணவகம் பயனாளிகள் மன மகிழ்ச்சி!

ஒரு தேசத்தின் வளர்ச்சி என்பது ஏழைகளின் கண்ணீரை துடைப்பதாக இருக்க வேண்டும் என்று எண்ணி பசிப்பிணி இல்லாத தமிழகத்தை உருவாக்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் வகுத்து செயல்படுத்தப்படும் திட்டங்கள் எண்ணற்றவை ஆகும். நலிவடைந்த நிலையில் உள்ள குடிசைவாசிகள், தொழிலாளர்கள், கூலிவேலை செய்பவர்கள், ஆட்டோ தொழிலாளர்கள் ஆகியோரின் பசியைப் போக்கிடும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சென்னை மாநகராட்சி மற்றும் தமிழகத்தில் உள்ள ஏனைய மாநகராட்சிகளிலும் அம்மா உணவகங்களைத் துவக்கி வைத்தார்கள்.

**கோயம்புத்தூர் அம்மா உணவகத்தில் உணவு உண்டு மகிழ்ந்த திருமதி முத்துலட்சுமி, கூலித் தொழிலாளி கூறியதாவது,**

“எனது பெயர் முத்துலட்சுமி (62) நான் இராமநாதபுரம் பாரதிநகர் பகுதியில் வசித்து வருகிறேன். எனக்கு 2 மகன்கள் மற்றும் ஒரு மகளும் இருக்கிறார்கள். எனது பிள்ளைகள் எனக்கு உண்ண உணவு கூட கொடுப்பதில்லை. எனவே, அக்கம் பக்கத்தில் உள்ள வீடுகளில் வீட்டு வேலை செய்து, சாப்பிட்டு வருகிறேன். சில சமயங்களில் எனது வருமானம் மிகக்

குறைவு என்பதால் என்னால் பிற ஹோட்டல்களுக்குச் சென்று அதிக விலை கொடுத்து உணவு சாப்பிட முடியாமல் பட்டினியாகக்கூட இருந்துள்ளேன். என்னைப் போன்று பசியால் வாடும் ஏழை மக்களுக்கென்றே மிக மலிவான விலையில், சுவையான உணவை அளித்து, எனது பசிப்பிணியைப் போக்கிய அன்னலட்சுமி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.


முத்துலட்சுமி

**அன்னபூரணி (திருப்பூர் மாவட்டம், தாராபுரம்) பயணி கூறியதாவது**


அன்னபூரணி

''எனதுபெயர் அன்னபூரணி. எனது கணவர் பெயர் ஹரிஹரன். நான் இங்குள்ள ஜெம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் எனது சகோதரனைக் காண வந்தேன். எனது சகோதரனை பார்த்து விட்டு சாப்பிட செல்லலாம் என நினைத்து உள்ளூர் வாசிகளிடம் கேட்டபோது, இந்த பகுதியிலேயே உள்ள அம்மா உணவகத்தில் மலிவான விலையில் மிக சுகாதாரமான முறையில், சுவையாக உணவு கிடைக்கிறது என்றார்.

எனவே, நேற்றும் வந்தோம், இன்றும் வந்தோம். உண்மையிலேயே மிக சுகாதாரமாக சுவையான உணவு இங்கு மலிவான விலையில் கிடைக்கிறது. இதே போல் ஏழைகளின் பசியைப் போக்கும் உன்னதமான இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

❖ ❖ ❖



# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டம்

**த**மிழக மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப திட்டங்களைத் தீட்டி சிறப்புடன் அவற்றை செயல்படுத்தி இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் தமிழகம் விளங்க அயராது பாடுபட்டு வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சிந்தையில் உதித்த சீரிய திட்டம் தான் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டம்.




**இத்திட்டத்தின் மூலம் 4 ஆடுகள் பெற்று அதன்மூலம் 44 குட்டிகள் பெற்று பயடைந்த ஏ.நாகூரைச் சேர்ந்த வீரன் என்பவரது மனைவி திருமதி காளாள் கூறியதாவது,**

“என் பெயர் காளாள், என் கணவரு பேரு வீரன். நாங்கள் விவசாய கூலி வேலை செஞ்சு வாழ்ந்துட்டு வந்தோம். சிலநேரம் கூலிவேலை இருக்காது. இதனால்

சாப்பாட்டுக்கே கஷ்டமா இருக்கும். இந்த சூழ்நிலையில் எங்களைப் போன்ற ஏழைகளின் கண்ணீரைப் போக்கிடும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இலவசமாக 4 ஆடுகள் கொடுத்து பிழைக்க வழிகாட்டினார்கள். அதோடு மட்டுமல்லாமல் இலவசமாக மருத்துவ உதவிகளும் செய்றாங்க. இன்னைக்கு வரைக்கும் 44 குட்டிகளை உற்பத்தி செஞ்சுருக்கு. இதில் 31 குட்டிகளை விற்று ரூ.90,000/– வரை இலாபம் பெற்றுள்ளேன். இதனைப் பயன்படுத்தி இரண்டு மாடுகளையும், எனக்கு அரைபவுன் நகையும், வாங்கிக் கொண்டேன். மேலும், வீட்டு செலவுகளுக்கும் உதவியது. இப்ப என்னால ஊர்ல நிம்மதியா தலைநிமிர்ந்து நடக்க முடியுது. இதுக்கெல்லாம் உதவியது ஏழைகளின் தாய் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவங்கதான். அவங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிச்சுக்கிறேன்''.

**அதே ஊரைச் சேர்ந்த மறைந்த பழனிச்சாமி என்பவரது மனைவி திருமதி மீனாட்சி கூறியதாவது,**




''என் பெயர் மீனாட்சி. என் கணவர் பெயர் பழனிசாமி. அவர் 10 வருடங்களுக்கு முன் நெஞ்சு வலியால் இறந்துவிட்டார். எனக்கு 2 மகள், 1 மகன் உள்ளனர். கூலி வேலைக்குச் சென்று வாழ்ந்து வந்தோம். எனது முதல் மகள் திருமணத்தை கடன் வாங்கி மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் நடத்தி முடித்தேன். மிகவும் கஷ்டப்பட்டு வாழ்ந்து வந்த நிலையில் கடவுள் மாதிரி எனக்கு நான்கு ஆடுகளை இலவசமாக வழங்கி, கொட்டகை செலவுக்கும் ரூ.2,500/– கொடுத்தார்கள். இதனால் 4 ஆடுகள் இதுவரை 31 குட்டிகளை ஈன்றுள்ளது. இவற்றில் 18 ஆடுகளை 40,000/–ரூபாய் வரை விற்று எனது 2ஆவது மகள் திருமணத்தை நடத்தி முடித்தேன். இப்போது 15 குட்டிகளுடன் 4 ஆடுகளை மேய்த்துக்கொண்டு, அவ்வப்போது கூலி வேலைக்கும் செல்கிறேன். மிகவும் சந்தோசமாக உள்ளது. சமுதாயத்தில் நிம்மதியாக வாழ வச்ச அம்மா அவங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிச்சுக்கிறேன்''.

❖ ❖ ❖



## கல்வியில் சிறந்து விளங்க மாணவச் செல்வங்களுக்கு மடிக்கணினி !

இந்தியாவிலேயே கல்வியில் சிறந்த முதல் மாநிலமாகத் தமிழகம் திகழ வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வித் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து, மாணவச் செல்வங்களுக்கு காலணி முதல் கணினி வரை விலையில்லாமல் வழங்கும் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

**விலையில்லா மடிக்கணினி பெற்ற வால்பாறை பாரதியார் பல்கலைக் கழக அரசுக் கலைக் கல்லூரி வணிகவியல் மூன்றாமாண்டு மாணவர் செல்வன் ஜனகர் கூறியதாவது**



ஜனகர்

“எனது பெயர் ஜனகர், எனது தகப்பனார் பெயர் கருணாகரன். நாங்கள் வால்பாறை மலுக்கப்பாறை எஸ்டேட் பகுதியில் குடியிருந்து வருகின்றோம். எனது அம்மா, அப்பா, இருவரும் தேயிலை தோட்டத் தொழிலாளர்கள். நான் வால்பாறை பாரதியார் பல்கலைக்கழக அரசுக் கல்லூரியில் வணிகவியல் 3ஆம் ஆண்டு

பயின்று வருகிறேன். நான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்த மாணவ மாணவியர்களுக்கு பல்வேறு சிறப்பான சலுகைகளை செய்து வருகின்றார்கள். எனது தாய், தந்தையரின் குறைந்த வருமானத்தை வைத்து வாழ்க்கை நடத்துவதே பெரிய விசயம். எனக்கு நிச்சயமாக அவர்களால் லேப்டாப் வாங்கித் தர இயலாது. தாயாக இருந்து வாங்கிக் கொடுத்த அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கணினியின் மூலம் பவர் பாயின்ட் பிரசன்டேசன், டிக்ஸ்னரி, டைப்பிங் மற்றும் படிப்பு தொடர்பான நல்ல விசயங்களை கற்றுக்கொண்டு சிறப்பாக மேல்படிப்பு பயின்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எந்த நோக்கத்திற்காக மடிக்கணினி வழங்கினாரோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றுவேன்''.

**செல்வி. சுகன்யா பேபி, பி.எஸ்.சி. கணினி அறிவியல் மூன்றாம் ஆண்டு.**




“எனது பெயர் சுகன்யா பேபி, எனது தந்தை சுப்ரமணியம் 10 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். எனது தாய் அமுதா தேயிலை தோட்டத்தில் கூலித் தொழிலாளியாக வேலை செய்து என்னையும், எனது தங்கையையும் படிக்க வைக்கிறார்கள். நான் கணினி அறிவியல் பட்டப்படிப்பு மூன்றாம் ஆண்டு படித்து வருகிறேன். எதிர் காலத்தில் கணினி அறிவு இருந்தால் தான் எந்த வேலையும் கிடைக்கும் என்பதால்தான் கணினி அறிவியல் படிக்கிறேன். கல்லூரியில் மட்டுமே கணினியை பார்க்கும் எனக்கு, சொந்தமாக கணினி வைத்திருக்க முடியுமா ? அப்படி இருந்தால் படிப்பிற்கு எவ்வளவு உதவியாக இருக்கும் என நினைத்துப் பார்ப்பேன். சத்தியமாக எனது தாயாருக்கு கிடைக்கும் சொற்ப வருமானத்தில் எனக்கு கணினி வாங்கித்தர முடியாது. உனது அம்மா வாங்கித் தராவிட்டால் என்ன நான் இருக்கிறேன் உனக்கு, என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எனக்கு மடிக்கணினி வழங்கியுள்ளார்கள். அவர்களின் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் சிறப்பாக படித்து எனது தாயையும் தங்கையையும் சிறப்பாக காப்பாற்றுவேன். எனக்கு மடிக்கணினி வழங்கிய அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

❖ ❖ ❖

# பண்ணைக் குட்டை திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளிகள் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றி!

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஊரக பகுதிகளில் உள்ள சிறு, குறு, தாழ்த்தப்பட்ட பழங்குடியின விவசாயிகளின் நிலங்களில் நில மேம்பாடு மற்றும் பணி மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்த ஆணையிட்டார்கள். அதன்படி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 12 வட்டாரத்திற்குட்பட்ட 228 கிராம ஊராட்சிகளில் உள்ள சிறு, குறு, தாழ்த்தப்பட்ட பழங்குடியின விவசாயிகளின் நிலங்களில் 1,500 பண்ணைக்குட்டைகளின் பணிகள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன.

கிராம ஊராட்சிகளில் விவசாய நிலங்களில் பண்ணைக் குட்டை மனித சக்தியின் மூலமாக அமைப்பதன் மூலம் மானாவாரியில் மழையை எதிர்பார்க்காமல் பயிரை சாகுபடி செய்ய முடிகிறது. பண்ணைக்குட்டையின் கரைகளில் பழ மரங்கள் மற்றும் காய்கறிகள் சாகுபடி செய்வதால் விவசாயிக்குக் கூடுதல் வருமானம் கிடைப்பதோடு மட்டுமல்லாமல் அரிய சத்தான உணவும் கிடைக்கிறது.

**கோயம்புத்தூர் மாவட்டத்தில் பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டு அதன் மூலம் பயனடைந்த விவசாயி கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது:**


கிருஷ்ணமூர்த்தி

“என் பெயர் எம். கிருஷ்ணமூர்த்தி, பன்னிமடையில் விவசாயம் செய்து நிரந்தரமாக வசித்து வருகிறேன். எனது தோட்டத்தில் தமிழ்நாடு அரசு கூறியபடி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் பணி செய்யும் ஆட்களை வைத்து பண்ணைக் குட்டையை

அமைத்துள்ளேன். அக்குட்டையில் தற்போது மீன் வளர்க்கிறேன். இதில் 3,500 மீன் குஞ்சுகளை வைத்து அதற்கு உணவளித்து வளர்த்து வருகிறேன். தொடர்ந்து 6 மாத காலம் வளர்த்தால் நல்ல இலாபம் கிடைக்கும். இதன் மூலம் எனது வாழ்வாதாரம் மேம்படும். இது மீன் வளத்தைப் பெருக்குவதோடு மிகவும் எளிமையான தொழிலாகும். எதிர்பார்த்த வருமானத்தை விட அதிகமாக கிடைக்கிறது. இக்குட்டை மூலம் விவசாய நிலங்களுக்கு நீர் பாய்ச்சி விவசாயமும் நல்ல முறையில் செய்து என் பொருளாதாரம் மேம்பாடு அடைய வழி வகுக்கிறது. இக்குட்டையை அமைக்க உதவிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு வாழ்வாதாரம் கொடுத்த அம்மா அவர்களை எந்நாளும் மறக்க மாட்டேன்''.

**பிரபாகரன், மடத்தூர் கூறியதாவது**





பிரபாகரன்

''எனது பெயர் பிரபாகரன், நான் கடந்த 20 வருடமாக விவசாயம் செய்து வருகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மழைநீர் வீணாவதைத் தவிர்க்கும் பொருட்டு எங்கள் பகுதியில் பண்ணைக்குட்டை அமைத்துள்ளார்கள். அது எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இதன் மூலம் எங்களின் விவசாயத் தொழில் முன்னேற்றம் அடைந்து நாங்கள் பயன் அடைவதோடு மட்டுமின்றி எங்கள் தோட்டத்திற்கு கூலி வேலை செய்ய வருபவர்களுக்கு போதிய வேலை கிடைக்கிறது. அதற்குண்டான வருமானம் மன நிறைவாகக் கிடைக்கிறது. எங்களைப் போன்ற ஏழை, எளிய விவசாயிகளின் நலனில் அக்கறைக் கொண்டு குட்டை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

❖ ❖ ❖

# சர்வதேச விளையாட்டு வீரர்களை உருவாக்கும் தொலைநோக்குத் திட்டம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2002ஆம் ஆண்டு “சர்வதேச விளையாட்டு வீரர்கள் கண்டறியும் திட்டத்தை” கொண்டு வந்தார்கள். இந்தத் திட்டம் 6,7,8 ஆம் வகுப்பு பயிலும் சிறந்த உடல் திறன் கொண்ட இளைஞர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு பல கட்டங்களாகத் தேர்வுகள் நடத்தி அறிவியல் ரீதியாக பயிற்சிகள் வழங்கி அவர்களின் திறமையை வெளிக்கொண்டு வரும் திட்டமாகும். இத்திட்டத்தின் படி தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் 6,7 மற்றும் 8ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர் உடல் திறன் தேர்வுகள் நடத்தப்படும். இது ஆண்டிற்கு ஒரு முறை நடத்தப்படும்.

இளம் வயதிலேயே பள்ளி சிறுவர், சிறுமியரின் உடல் திறனைக் கண்டறிந்து சர்வதேச அளவில் பதக்கங்களைப் பெறும் அளவில் அவர்களை மேம்படுத்தும் நோக்கத்தில் சர்வதேச விளையாட்டில் பதக்கம் பெறும் திறமை வாய்ந்தவர்களைக் கண்டறியும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் துவக்கினார்கள். இது போன்ற திட்டம் இந்தியாவில் முதன் முதலாகத் தமிழகத்தில் தான் துவங்கப்பட்டுள்ளது.

இவ்விளையாட்டு வீரர்களுக்கு உண்டு உறைவிடப் பயிற்சிப் பள்ளியில் நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு உணவு செலவுக்காக இதுவரை ரூ.75/– வழங்கப்பட்டது. இதனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ரூ.250/–ஆக உயர்த்தினார்கள். சீருடைகள், விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதுடன், மாநில, தேசிய போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கு பயணப்படியும் வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த தொலைநோக்குத் திட்டத்தில் பயிற்சி பெற்று ஜுலை 2013ஆம் ஆண்டு புனேயில் நடைபெற்ற 20ஆவது ஆசிய தடகளப் போட்டியில் வெண்கலப்பதக்கம் பெற்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கனவை நனவாக்கிய கோயம்புத்தூர்**

**மாவட்டம் ஒண்டிப்புதூரைச் சேர்ந்த ஹேமாஸ்ரீ அவர்கள் தெரிவித்ததாவது,**




“கோயம்புத்தூர் ஒண்டிப்புதூர் எனது ஊர். எனது தந்தையின் பெயர் பி.ஜெயபால், தாயார் பெயர் ராஜாமணி, 2002ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்காகக் கொண்டு வந்த சர்வதேச விளையாட்டு வீரர் கண்டறியும் திட்டத்தின் கீழ் என்னைத் தேர்வு செய்தனர். அப்போது சி.ஆர்.ஆர். மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பயின்று வந்தேன்.

எனக்கு இத்திட்டத்தின் கீழ் சிறப்பானப் பயிற்சிகள் வழங்கப்பட்டது. 2003ஆம் ஆண்டு நடைபெற்ற மாநில அளவிலான போட்டியில் காஞ்சிபுரத்தில் கலந்து கொண்டு டிரையத்லான் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றேன். தொடர்ந்து, தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்றேன். 2004ஆம் ஆண்டு மாநில அளவிலான தடைதாண்டுதல் போட்டியில் முதல் பரிசு பெற்றேன். 2005ஆம் ஆண்டு மாநில அளவிலும், தேசிய அளவிலும் 100 மீட்டர் தடை தாண்டுதல் போட்டியில் முதல் பரிசும் வென்றேன். தொடர்ந்து 2006ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரை 100 மீட்டர் தடை தாண்டுதல் போட்டியில் இரண்டு இடங்களுக்குள் வந்து தொடர்ந்து பரிசுகள் பெற்றுள்ளேன். 2008ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் நடைபெற்ற சர்வதேச அளவிலான தடகளப் போட்டியில் கலந்து கொண்டு 8ஆவது இடத்திற்கு வந்தேன். காமன்வெல்த் போட்டியில் கலந்து கொண்டு 5ஆவது இடத்தில் வந்தேன். 2010ஆம் ஆண்டு வியட்நாமில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் சேம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்டு வெண்கலப்பதக்கம் வென்றேன்.

மேலும், இத்திட்டத்தின் கீழ் ஊக்கத்தொகையுடன் விளையாட்டு உபகரணங்கள், சீருடைகளையும் எனக்கு வழங்கினார்கள். ஒவ்வொரு மாதமும் விளையாட்டு முகாம் நடத்தப்பட்டு எங்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டது. நான் பி.காம். மூன்றாம் ஆண்டு படித்து வரும் போதே விளையாட்டு வீரர் என்ற காரணத்திற்காக எனக்கு எல்.ஐ.சி.யில் பணி நியமனம் கிடைத்துள்ளது” என்று தெரிவித்தார்.

❖ ❖ ❖

# உழவர் பெருமக்களின் வாழ்வில் உற்சாக அலை எழுப்பிய உழவர் பெருவிழாக்கள்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையில் வேளாண்மை உற்பத்தியை இரண்டு மடங்காக உயர்த்திடவும், விவசாயிகளின் வருமானத்தை மூன்று மடங்காக உயர்த்திடும் வகையிலும் பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். விவசாயத்தை ஒரு நல்ல இலாபம் ஈட்டும் தொழிலாக மாற்ற வேண்டும் என்பதற்காகப் புதிய திட்டங்கள், புதிய தொழில் நுட்பங்கள் எல்லாம் அறிமுகப்படுத்தியுள்ளார்கள். விவசாயம் செய்திட ஆட்கள் பற்றாக் குறைகளைப் போக்கிட புதிய வேளாண்மைக் கருவிகளை அறிமுகம் செய்து அவைகளை மானிய விலையில் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

கடைக்கோடி கிராமத்தின் மூலை முடுக்குகளில் உள்ள அனைத்து விவசாயிகளும் அரசுத் திட்டங்களைப் பயன்படுத்தி முன்னேற வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சிந்தையில் உதித்தது தான் "உழவர் பெருவிழா" திட்டம். உழவர் பெருவிழாவில் கலந்து கொண்டு பயன்பெற்ற விவசாயிகள் தெரிவித்ததாவது.

**திரு.சரவணக்குமார் – சமத்தூர்**

"எனது பெயர் சரவணக்குமார், சமத்தூர் எனது சொந்த ஊராகும். எனக்கு 4.75 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. கடந்த 1½ ஆண்டுகளுக்கு முன்பு 50 சதவிகித மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைத்தேன். நிலத்தை சுற்றி 70 தென்னை மரங்கள் வைத்துள்ளேன். பருத்தி, பூசணி, பரங்கிக்காய், போன்றவைகளை சாகுபடி செய்கிறேன், புதிய தொழில்நுட்பங்களைக்



சரவணக்குமார்

கடந்த ஆண்டு நடைபெற்ற உழவர் பெருவிழாவில் தெரிந்து கொண்டு மூடாக்கு முறையில் பூசணி சாகுபடி செய்தேன். நீர் தேவை மிகவும் குறைவாக இருந்து நல்ல மகசூலும் கிடைத்தது. இன்று களை எடுக்கும் கருவி, மினி டிராக்டர், உள்ளிட்ட பல்வேறு கருவிகளை மானிய விலையில் வழங்குவது குறித்தும், புதியரக விதைகள். நாற்றுப்பண்ணைகள் அமைத்தல், புதிய தொழில்நுட்பங்களைத் தெரிந்து கொண்டேன். உழவர்களுக்கு மிகவும் பயனுள்ள திட்டங்களை தீட்டி அவர்கள் அதை தெரிந்து பயனடைய வேண்டும் என்பதற்காக ஒரு விழாவையே எடுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.




**திரு. துரைசாமி, புகளூர்**

''எனது பெயர் சி. துரைசாமி, எனது தகப்பனார் பெயர் சின்ன ரங்கநாயக்கர் அன்னூர் ஊராட்சி ஒன்றியம் புகளூர் கிராமத்தில் புஞ்சைபூமி 4 ஏக்கர் 12 சென்ட் உள்ளது. 2 ஏக்கர் கரும்பு விவசாயம் செய்துள்ளேன். 1½ ஏக்கரில் ஜீ 9 வாழை பயிர் செய்துள்ளேன். கடந்த ஆண்டு நடைபெற்ற உழவர் பெருவிழாவில் கலந்து கொண்ட போது அரசு வழங்கும் மானியங்கள் குறித்து எங்களுக்கு தெரிந்தது. அதை வைத்து தற்போது கரும்பு ஒருபருவ திட்டத்தில் (SSI) மானியத்துடன் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து பயிர் செய்துள்ளேன். மினி டிராக்டர் என்னைப் போன்ற விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும் என்பதால் வாங்கவுள்ளேன். வாழை சாகுபடிக்கு 1½ ஏக்கருக்கு சொட்டு நீர்ப்பாசனமுறையில் அமைக்க மானியம் கேட்டு உள்ளேன். 25 சென்டில் மாடு வளர்க்க புல் மானியம் ரூ.3,000 பெற்று வளர்த்து வருகின்றேன். 50 சதவிகித மானியத்தில் வெண்டை விதை மற்றும் நுண்ணுயிர் உரங்கள் பெற்றுள்ளேன். புதிய தொழில்நுட்பங்கள் தெரிந்ததால் தென்னை நார் கழிவுகளைக் கொண்டு உரம் உற்பத்தியும் செய்து வருகிறேன். இது போன்ற தொழில்நுட்ப விவரங்களை சக விவசாயிகளுடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் விழா நடத்தப்படுகிறது. உழவர்களுக்கு தொழில்நுட்பங்களை வழங்கி அவர்களைப் பெருமைப்படுத்தும் விதமாக அறுசுவை விருந்தளித்த அம்மா அவர்களுக்கு எங்கள் பகுதி உழவர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

❖ ❖ ❖



## திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம்

**தி**ருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் பசியாற்றி அவர்களது அகமும், முகமும் குளிர வைக்கும் அன்னதானத் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களது திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்ட திட்டம் ஆகும்.




**இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற தேர்முட்டி வீதி, சரஸ்வதி தெரிவித்ததாவது,**

“என் பெயர் சரஸ்வதி. நான் வாரா வாரம் வெள்ளிக்கிழமை தோறும் கோனியம்மன் கோயிலுக்குச் சென்று அம்மனை வழிபடுவது வழக்கம். கோயிலுக்குச் செல்லும் பொழுது காலையில் விரதம் இருந்து

அம்மனை வழிபடுவேன். வெள்ளிக்கிழமை என்பதால் ஒரு சில வாரம் கூட்டம் அதிகமாக இருக்கும். இதனால அம்மனை தரிசிக்க வெகு நேரமாகும். மிகவும் களைப்படைந்து விடுவேன். தமிழக முதல்வர் அவர்கள் எங்களைப் போன்ற பக்தர்களின் இன்னல்களைப் போக்கிட அன்னதானத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்கள். கோனியம்மன் கோயிலிலும் அன்னதான திட்டத்தின் கீழ் அன்னதானம் நடைபெறுகிறது. இதன் மூலம் வயிறார உணவு சாப்பிடுகிறேன். அன்னதானத் திட்டத்தில் அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. தமிழக மக்களின் நலன் காக்கும் வகையில் திட்டங்களை அள்ளித் தரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

**இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வரும் சூலூர் ராஜேந்திரன் தெரிவித்ததாவது,**

''என் பெயர் ராஜேந்திரன். எனது ஊர் சூலூர், ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் தண்டு மாரியம்மன் கோயிலுக்கு செல்வது வழக்கம். கடந்த, 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்தக் கோயிலுக்கு வந்து கொண்டிருக்கிறேன். தமிழக முதல்வர் கொண்டு வந்த அன்னதானத் திட்டத்தின் மூலம் தண்டு மாரியம்மன் கோயிலில் தரமாகவும், சுவையாகவும் உணவு வழங்கப்படுகிறது, அம்மனை வழிப்பட்ட சந்தோஷத்தில் சாப்பாடும் உண்ட திருப்தியுடன் வீட்டிற்குச் செல்கிறேன். இதுபோன்று மக்களின் தேவையறிந்து திட்டங்களைச் செயல்படுத்தும் தமிழக முதல்வர் அவர்கள் தண்டு மாரியம்மன் அருளால இதுபோன்ற பல திட்டங்களைத் தொடர்ந்து வழங்க வேண்டும். அன்னதானத் திட்டம் கொண்டு வந்த அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.



*ராஜேந்திரன்*

❖ ❖ ❖



## குடிசைகளில் வாடியவர்களுக்கு கான்கிரீட் வீடு!

**த**ங்களுக்கென்று ஒரு வீடு வேண்டும் என்று ஏங்கும் ஏழை மக்களின் கனவை நனவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சிந்தையில் உதித்தது தான் பசுமை வீடுகள் திட்டம்.

பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்கள் 3 சென்ட் நிலம் இருந்தால் அதிலும், நிலம் இல்லாத ஏழை, எளியவர்களுக்கு 3 சென்ட் நிலமும் வழங்கி 300 சதுர அடி பரப்பளவில் ரூ.2.10 இலட்சம் மதிப்பில் சூரிய சக்தி வசதியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டித் தரப்படுகின்றன.

ஒவ்வொரு வீட்டிலும் சூரிய ஒளி மூலம் மின்சக்தியை உருவாக்க Solar System அமைக்கப்படுகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் இத்திட்டத்தில் பயன் பெற்ற பயனாளிகள் சிலரிடம் பேசினோம்.

**திருமதி பி.ஜெயலட்சுமி**

“எனது கணவர் பெயர் பிரபு, எங்களுக்கு ஒரு குழந்தை உள்ளது. எங்களுக்கு சொந்தமாக நிலம் ஏதும் இல்லைங்க. களை எடுக்கறது, நடவு பாத்தி பிடிக்கிறது போன்ற விவசாய வேலைக்குப் போய் குடும்பம்

நடத்துறோம். நாங்க முன்ன இருந்தது கூரை வீடு, அங்கு மழை பெய்தால் ஒழுகும். வெளியில உள்ள தண்ணீர் உள்ளே வரும். சில சமயத்தில பாம்பு, பூச்சிகளும் வரும். ரொம்ப சிரமப்பட்டுக் கொண்டிருந்தோம். பஞ்சாயத்து தலைவர் தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவங்க பசுமை வீடு கட்டிக் கொடுக்கற திட்டம் கொண்டு வந்து இருக்காங்க, நீங்க வீடு கட்டுகிறீங்களா, என்று கேட்டார். எப்பதான் கான்கிரீட் வீடு கட்டி அதுல குடியிருக்க போறோம்னு ஏங்கிட்டு கனவு கண்டுகிட்டு இருந்த எங்களுக்கு அம்மா அவங்க வீடு கட்டித்தர்ரதா சொன்னதுமே சந்தோசமாயிட்டேன். இப்ப எங்க கூரை வீடு காரை வீடா உசந்துடுச்சு. எங்களுக்கு வீடு கட்டிக் குடுத்த அம்மா அவங்களை எங்க வாழ் நாளெல்லாம் மறக்க மாட்டோம்''.


ஜெயலட்சுமி

**திருமதி நஞ்சம்மாள் (வயது 75)**

“கே.கே.புதூர் எனது சொந்த ஊராகும். எனது கணவர் கருப்புசாமி 10 வருஷத்துக்கு முன்னாடி இறந்துட்டாரு. முன்னாடி அம்மா அவங்க முதல்வரா இருந்தப்பதான் எனக்கு 3 சென்ட் நிலம் இலவசமா கொடுத்தாங்க. அதுல தான் கூரை போட்டு குடியிருந்தேன். அம்மா அவங்க மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் புதுசா வீடு கட்டித் தராங்கன்னு சொன்னாங்க. நானும் எழுதிக் குடுத்தேன். எனக்கு வீடு கட்டிக் கொடுத்தாங்க. அம்மா அவர்கள் இடமும் கொடுத்து, இப்பொழுது வீடும் கட்டிக் கொடுத்திருக்கிறாங்க. அவங்களுக்கு மனசார நன்றியைத் தெரிவிச்சுக்கிறேன்'' என்று கூறினார்.

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

மாநிலத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் வீடுகள் வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் என்பதே என் நோக்கமாகும்.




# மலிவு விலையில் மக்களுக்கு காய்கறிகளை வழங்கும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள்

**ந**கர்ப்புறப் பகுதிகளில் கூட்டுறவு அமைப்புகள் மூலமும், தோட்டக்கலைத்துறை மூலமும் விவசாயிகளையும், நுகர்வோரையும் நேரடியாக இணைத்து, மலிவு விலையில் காய்கறிகளை மக்களுக்கு வழங்கிடவும், காய்கறி விலை உயர்வினைக் கட்டுப்படுத்தவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த சீரிய திட்டம் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் (Farm Fresh Consumer Outlets) ஆகும்.

**கோயம்புத்தூர் மாவட்டம், சாயிபாபா காலனியைச் சேர்ந்த அம்பிகா என்ற பயனாளி கூறியதாவது,**

“என் பெயர் அம்பிகா. நான் தினந்தோறும் காலையில் நடைப்பயிற்சியின் போது சிந்தாமணி பண்ணைப் பசுமைக் கடைக்கு வந்து காய்கறிகள் மற்றும் கீரை வகைகளை வாங்கிச் செல்கிறேன். வெளி மார்க்கெட்களில் விற்கப்படுவதைக் காட்டிலும் இங்கு விலை குறைவாக உள்ளது. அதுமட்டுமின்றி தரமாகவும் உள்ளது. விவசாயிகளிடமிருந்து

அறுவடை செய்து அன்றைய தினமே விற்பனைக்கு வருவதால் காய்கறிகள் தரமாக உள்ளது. இது போன்ற கடைகள் அமைத்துத் தந்தது மக்கள் பயனடையும் வகையில் உள்ளது. இந்தக் கடையை அமைத்துத் தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.





**கோயம்புத்தூர் மாவட்டம், சாயிபாபா காலனியைச் சேர்ந்த கிருஷ்ணன் என்ற பயனாளி கூறியதாவது:**

''என் பெயர் கிருஷ்ணன். நான் சாயிபாபா காலனி பகுதியில் வசித்து வருகிறேன். என் வீட்டிற்கு அருகிலேயே, அம்மா அவர்கள் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளைத் துவக்கி வைத்தார்கள். இதன் மூலம் காய்கறிகள் தரமாகவும் மிகக் குறைந்த விலையிலும் கிடைக்கிறது. இதற்கு முன் அருகிலுள்ள மளிகைக் கடைகளிலும், தனியார் அங்காடிகளிலும் காய்கறிகளை வாங்கி வந்தேன். அங்கு அதிக விலைக் கொடுத்துதான் வாங்க வேண்டும். ஒரு சில சமயங்களில் தான் காய்கறிகள் தரமானதாக இருக்கும். தற்போது பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் விவசாயிகளிடமிருந்து காய்கறிகளை நேரடியாக கொள்முதல் செய்வதால் மிகக் குறைந்த விலையில் மிக சுத்தமானதாக காய்கறிகள் கிடைக்கிறது. இதுபோன்ற மக்களுக்குப் பயனுள்ள திட்டங்களைக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.




❖ ❖ ❖



## பெண்மையைப் போற்றும் உண்மை அரசு

தமிழகத்தில் பெண்கள் விடுதலையைப் பற்றி பெரியோர்கள் எல்லோரும் வலியுறுத்தி கூறியிருந்தபோதிலும், பெண்களுக்கு அவர்கள் முன்னேறுவதற்கு வழித்தடங்களை அமைத்து ஒரு வழிகாட்டியாய் இருந்தது தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தான். தமிழக அரசின் திட்டங்களான தொட்டில் குழந்தை திட்டம், மூவலூர் இராமாமிர்த அம்மையாரின் திருமண உதவி மற்றும் தாலிக்கு 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டம், பெண் குழந்தை பாதுகாப்புத்திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்கள் எல்லாம் தமிழகத்தில் உள்ள மகளிரை மேம்படுத்தும் மகத்தான திட்டம். இந்த திட்டங்கள் அவர்கள் வாழ்க்கையை உயரச் செய்வது மட்டுமல்லாமல், சமுதாயத்தில் அவர்கள் வெற்றிப் பயணத்தை ஊக்குவிக்கும் திட்டமாகவும் அமைந்துள்ளதால்தான் தமிழக அரசு பெண்மையைப் போற்றும் உண்மை அரசாக திகழ்கிறது.

**தமிழக அரசின் திருமண உதவித் திட்டத்தால் பயன்பெற்ற கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உச்சிமேடு கிராமத்தைச் சேர்ந்த திருமதி விஜயா கூறியதாவது,**



விஜயா

“என்னுடைய கணவர் ஒரு விவசாய கூலித் தொழிலாளி. எங்களுக்கு 2 பெண் குழந்தை, 1 ஆண் குழந்தை. என் கணவருடைய வருமானத்தை கொண்டே நாங்கள் வாழ்ந்து வந்தோம். ஏழ்மையாக பிறப்பு இருந்தாலும் எங்கள் பிள்ளைகளை படிக்க வைப்பதற்கு தமிழக அரசின் திட்டங்கள் மிகவும் பயன்பட்டது. என்னுடைய பெண் எழிலரசி கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்றபின் திருமணம் செய்ய இந்த திருமண உதவித்திட்டம் எங்களுக்கு பெரும் உதவியாக இருந்தது. இந்த திருமண உதவித் திட்டத்தின் மூலம் நிதி உதவி மற்றும் 4 கிராம் தங்கம் வாங்கியதால் தான் வறுமையிலும் எங்கள் மகளுக்கு திருமணம் செய்து கொடுக்க முடிந்தது. இதற்கெல்லாம் காரணமாய் இருந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்”.

**தமிழக அரசின் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு திட்டத்தின் கீழ் பயன்பெற்ற கர்ப்பிணி பெண் திருமதி வெண்ணிலா கூறியதாவது,**



வெண்ணிலா

“எனக்கு சிறுவயதில் இருந்தே அம்மா கிடையாது என்னுடைய அப்பாதான் என் திருமணத்தை நடத்தி வைத்தார். நான் என் கணவர் வீட்டில் இருந்த போதிலும் என்னுடைய முதல் குழந்தை தலைப்பிரசவம் என்பதால் எங்கள் அம்மா இல்லாத குறையை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள செவிலியர்கள் கவனித்தார்கள். அச்சமயத்தில் அரசு வழங்கிய நிதி உதவி பேருதவி புரிந்தது. இதற்கு காரணம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா வழங்கிய மகப்பேறு நிதி உதவித் திட்டம் தான். இது போன்ற அம்மா இல்லாத கர்ப்பிணி பெண்களுக்கு அம்மாவாகத் திகழ்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்”.

❖ ❖ ❖




# குடும்ப பொருளாதாரத்தை உயர்த்திய நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டம்!

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் வெண்மைப் புரட்சியை உருவாக்கிடவும், மகளிரின் பொருளாதாரத்தை மேம்படுத்திடவும் விலையில்லா கறவைப்பசுக்கள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டம் மற்றும் நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டம் ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார்.

இதே போன்று தருமபுரி மாவட்டத்தில் 2012–2013ஆம் ஆண்டு முதல் நாட்டுக்கோழி வளர்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு பயனாளிக்கு 250 நாட்டுக்கோழிகள் வளர்க்க கட்டடம் கட்டுதல் உபகரணங்கள், கோழிக்குஞ்சுகள் வாங்கிட திட்ட செலவினமாக ரூ.1,17,000 வழங்கப்படுகிறது. இதில் ரூ.63,500 மானியமாக வழங்கப்படுகிறது. மீதத்தொகை வங்கிகளின் மூலம் கடனாக வழங்கப்படுகிறது.

**இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 5 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற நல்லம்பள்ளி ஒன்றியம் மாதேமங்கலம் பஞ்சாயத்துக்குட்பட்ட குட்டூர் கிராமத்தைச் சேர்ந்த கோ.சின்னசாமி கூறியதாவது:–**




“இந்தத் திட்டத்துல என்னை பயனாளியாக தேர்வு செய்தாங்க, நான் நாட்டுக்கோழி வளர்த்து வர்றது மட்டுமல்லாம நானே சொந்தமாக கடை வச்சி கோழி மற்றும் கோழி இறைச்சியையும் விக்கறத முழுநேர தொழிலாகவே செஞ்சி வரேன்.

இன்னைக்கு வரைக்கும் 750 கோழிகளை மூணு கட்டங்களாக வளர்த்து வருகின்றேன். கால்நடை பராமரிப்புத் துறையை சேர்ந்தவங்க எனக்கு கோழி வளர்க்கும் முறைகளை சொல்லி குடுத்திருக்காங்க. அதோட அதுக்கு சிகிச்சை அளிக்கிறதும், தடுப்பூசி போடுறதையும் செய்யுறாங்க. இதனால எனக்கு போன வருஷம் மட்டும் 40 ஆயிரம் ரூபாய் இலாபம் கெடச்சது. இந்தத் திட்டத்தினை வழங்கின மாண்புமிகு அம்மாவுக்கு என்னோட நன்றியை தெரிவிச்சிக்கிறேன்’’ என்றார்.

**செம்மறியாடுகள்/வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற நல்லம்பள்ளி ஒன்றியம் ஏ.ஜெட்டிஅள்ளி பஞ்சாயத்து எற்றப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ராஜாமணி அம்மாள் கூறியதாவது:–**

நான் எற்றப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். இத்திட்டத்தின் கீழ் கிராமசபை மூலம் என்னை பயனாளியாக தேர்ந்தெடுத்தாங்க. பிறகு ஒருநாள் எனக்குப் பயிற்சி குடுத்தாங்க. அந்தப் பயிற்சியில சந்தையில ஆடு எப்படி வாங்குறது, நோய் வராம எப்படி பாதுகாக்குறதுனு கத்துக்கிட்டேன். அதுக்கு அப்பறம் நல்லம்பள்ளி சந்தையில 4 வெள்ளாடுகள (3 பெட்டை ஒரு கிடா) நானே விலைபேசி கால்நடை டாக்டர்ங்கள வச்சி பரிசோதனை பண்ணி வாங்கினேன். மாசம் மாசம் டாக்டருங்க தேவையான சிகிச்சை கொடுக்கராங்க. நான் வாங்குன ஆடுகள் 52 குட்டிகள போட்டு இருக்கு. அதோட இப்போதைய மதிப்பு ஒன்றரை இலட்சம் ஆகும். இப்படியொரு அற்புதமான திட்டத்தை தொடங்கி எங்கள் வாழ்வில் ஒளியேற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என்னோட நன்றியைத் தெரிவிச்சுக்கிறேன்’’.




❖ ❖ ❖



## பள்ளி மாணவச் செல்வங்களுக்கு 14 வகை கல்வி உபகரணங்கள்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய மாணவ, மாணவிகளும் தரமான கல்வி பெற வேண்டும். தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இணையாகக் கல்வி அறிவைப் பெற்றிட வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு மாணவச் செல்வங்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களைத் தொடங்கினார்கள்.



பள்ளி மாணவ, மாணவிகளுக்கு 14 வகையான விலையில்லா பொருட்கள் அதாவது, பாடநூல்கள், நோட்டுப் புத்தகங்கள், சீருடைகள், புத்தகப் பை, மதிய உணவு, பேருந்து பயண அட்டை, கணித உபகரண பெட்டி, புவியியல் வரைபட

புத்தகம், காலணிகள், வண்ணப் பென்சில்கள், மடிக்கணினி, மிதிவண்டி, இடை நிற்றலைக் குறைக்க சிறப்பு ஊக்கத்தொகை, வருவாய் ஈட்டும் குடும்பத்தலைவரை இழந்த குழந்தைகளுக்கு நிதிஉதவி முதலான பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் கட்டணமில்லா கல்வி மாணவ, மாணவிகளுக்கு கிடைக்கின்றது. அரசுப்பள்ளிகளில் தமிழ் பயில்வதன் மூலம் அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மாணவ, மாணவிகள் சான்றிதழ்கள் பெற்றுள்ளனர்.

**விலையில்லா பொருட்கள் பெற்ற இலக்கியம்பட்டி அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளியைச் சேர்ந்த 10ஆம் வகுப்பு மாணவி எஸ். நதியா கூறியதாவது:–**

“நான் ரொம்ப ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவள். என்னைப் படிக்க வைக்க என் தந்தை மிகுந்த சிரமப்பட்டார் கடன் வாங்கித்தான் புத்தகங்கள் வாங்கித் தருவார். இப்போது என்னை போன்ற மாணவிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 14 வகையான விலையில்லா பொருட்களை வழங்கி எங்களின் கல்வித்தரத்தை உயர்த்திக் கொள்ள உதவியதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு மிகுந்த நன்றி எனக் கூறினார்”.


நதியா

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

- அறிவுசார் மனிதவளம் மேம்பாடு அடைய வேண்டுமெனில், அனைவருக்கும் தங்கு தடையின்றித் தரமான கல்வி கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.
- நாட்டின் நம்பிக்கையாகத் திகழும் மாணவச் செல்வங்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி அவர்தம் எதிர்கால வாழ்க்கையைச் செம்மைபடுத்தி, அவர்களை நல்ல குடிமக்களாக்கும் கடமை ஆசிரியர் சமுதாயத்தைச் சார்ந்ததாகும்.



# இல்லத்தரசிகளின் வேலையை எளிதாக்கிய விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர் திட்டம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சிறப்புத் திட்டமான விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் அரிசி பெற தகுதியுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்படுகின்றன.



**வீரப்பநாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும்**

**மின்விசிறி பெற்ற பயனாளியான சமீன் க/பெ பஷீர் கூறியதாவது:–**




“நான் ஒரு சின்னபொட்டிக்கடை வச்சிருக்கேன். எனக்கு மூணு ஆம்பள பசங்க, மூணு பொம்பள புள்ளைங்க எல்லாரும் கூலி வேலைக்குதான் போறாங்க அவங்களுக்கு என்னால சமையல் கூட பொறுமையா செய்ய முடியாத நிலமை. சமையலுக்கு அம்மிக்கல்லுல அரைக்கனுனா கூட என்னால முடியாம இருந்துச்சு இப்ப அம்மா மிக்சி, கிரைண்டர், பேன் குடுத்துட்டாங்க. இதனால புள்ளைங்களுக்கு என்னால சீக்கரம் சமையல் செஞ்சு எல்லாருக்கும் குடுத்தனுப்ப முடியுது கடையையும் என்னால பாத்துக்க முடியுது இதெல்லாம் கொடுத்த அம்மாவுக்கு என்னோட நன்றி” எனக் கூறினார்.




**வீரப்பன் நாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த, பயனாளியான சாந்தாமணி பேசும்போது,**

“எனக்கு ரெண்டு ஆம்பள பசங்க. ரெண்டு பேருமே தறி வேலை செய்யுறாங்க. எங்க வீட்ல கொஞ்சம்கூட காத்து வசதி இல்ல. தறி நெய்யும் போது பசங்களுக்கு வேர்த்து கொட்டும். இதனால அடிக்கடி உடம்பு சுகமில்லாம ஆயிடும். இப்ப மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேன் கொடுத்ததால பசங்க நிம்மதியா வேலை செய்றாங்க. மிக்சி, கிரைண்டர் கொடுத்ததால பசங்களுக்கு நல்ல சாப்பாடு செஞ்சித்தரேன். எனக்கு அம்மிக்கல்லுல அரைக்கர வேலை இல்ல, மாவு ஆட்டுறவேலையும் இல்ல, இதனால உடம்பு வலியும் இல்ல. இந்த மிக்சி, கிரைண்டர், பேன் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி” என இரு கைகளையும் கூப்பி வணங்கினார்.

❖ ❖ ❖

# மனுக்கள் மீது உடனடி தீர்வு! "அம்மா திட்டம்" தந்தது நல்வாழ்வு!

**ம**க்களின் கோரிக்கைகளுக்கேற்ப அடிப்படை வசதிப் பணிகள் உள்பட அனைத்துப் பணிகளையும் சிறப்புடன் நிறைவேற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா மக்கள் எவ்வித அலைச்சலுமின்றி தங்களது கிராமத்திலேயே மனுக்களை வழங்கி அதற்கு தீர்வுகாணும் வகையில் 'அம்மா'' திட்டத்தினை அறிவித்துள்ளார்கள்.

''அம்மா'' திட்டம் (AMMA – Assured Maximum Service to Marginal People in All Villages) - அனைத்து கிராமத்திலும் அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவை வழங்கல் என்கிற புதிய திட்டம் மக்களுக்கு நன்மை பயக்கும் சிறந்த திட்டமாகும். இத்திட்டம் தருமபுரி மாவட்டத்தில் 26.03.2013 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள 470 வருவாய் கிராமங்களிலும் 6 மாத காலத்திற்குள் ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமை அன்று முகாம்கள் நடத்தி மக்கள் குறைகளைக் கேட்டு நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது. இதன்படி, தருமபுரி மாவட்ட 14 வருவாய் கிராமங்களில் அம்மா திட்ட சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டது.


சரோஜா

**இத்திட்டத்தின் கீழ் மனு கொடுத்து முதியோர் உதவித்தொகை ஆணையினைப் பெற்ற அச்சல்வாடியைச் சேர்ந்த சரோஜா கூறியதாவது:**

''அம்மாவோட உத்தரவுப்படி நடக்கற இந்த முகாம்ல மனுகொடுத்தா உடனே நடவடிக்கை எடுப்பாங்கனு

சொன்னாங்க. நானும் எனக்கு வயசாயிருச்சு யாருமில்லாம கஷ்டப்படறேன்னு உதவித்தொகை கேட்டு மனு கொடுத்தேன். உடனே மாசம் ஆயிரம் ரூபாய் கிடைத்திட உத்தரவு கொடுத்திட்டாங்க. அதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்றேன்'' என்று கண்ணீர் மல்க கூறினார்.

**இம்முகாமில் மனு கொடுத்து வீட்டுமனைப் பட்டா பெற்ற ஒடசல்பட்டி ரம்யா கூறியதாவது:**


ரம்யா

“என்னோட வீட்டுக்கு பட்டா வாங்காமஇருந்தேன்.இந்தமுகாம்லமனு கொடுத்தா பட்டா கிடைக்கும்னாங்க. நானும் மனு கொடுத்தேன். கொஞ்ச நேரத்திலேயே பட்டா கொடுத்திட்டாங்க. இதனால எனக்கு எந்த அலைச்சலும் இல்லாம பட்டா கிடைச்சது ரொம்ப சந்தோசமா இருக்கு. முதல்வர் அம்மாவுக்கு என்னோட நன்றியைத் தெரிவிச்சுக்கிறேன்னு உவகை பொங்கக் கூறினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் மக்கள் இருக்கும் இடத்திலேயே முகாம்கள் நடத்தி அவர்களின் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காணும் மிகச் சிறந்த திட்டமாக ‘அம்மா'' திட்டம் விளங்குகிறது என்று சொன்னால் அது மிகையாகாது''.

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர வேண்டுமானால், அவர்கள் பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்று தமது சொந்தக் கால்களில் நிற்கும் வலிமையையும், தன்னம்பிக்கையையும் பெற வேண்டும்.

# வெண்மைப் புரட்சி ஏற்படுத்தும் கறவை மாடுகள்

**கி**ராமப்புற மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் உயர்ந்த நோக்குடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கிராமப்புற மகளிருக்கு விலையில்லா கறவைப்பசுக்கள் வழங்குதல், ஆடுகள் வழங்குதல், மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி இத்திட்டங்கள் யாவும் தொடர்ந்து சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**தருமபுரி ஒன்றியம், வெள்ளோலை ஊராட்சியில் கறவைப்பசுக்கள் பெற்ற பயனாளிகளில் வேட்டராயன் கொட்டாயைச் சேர்ந்த திருநங்கையான சாருலதா (35) கூறுகையில்,**


சாருலதா

“சமூகத்தில் ஒதுக்கப்பட்ட எங்களைப் போன்ற திருநங்கைகள் வாழவே முடியாத சூழ்நிலை இருந்துச்சு. எந்த வேலைக்கும் போக முடியாம ரொம்ப கஷ்டப்பட்டேன். வீட்டிலும் சேர்க்காம எந்த வேலையும் இல்லாம ரொம்ப இடிஞ்சு போயிட்டேன். இப்ப அம்மா எனக்கு விலையில்லா பசு மாடு கொடுத்திருந்தாங்க. என்னோட வாழ்க்கையில இப்ப நம்பிக்கை பிறந்திருச்சு. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா செஞ்ச உதவியை உசிருள்ள வரைக்கும் மறக்கமாட்டேன்” எனக் கூறினார்.

**வெள்ளோலை கிராமத்தைச் சேர்ந்த பொன்னி (34) கூறுகையில்,**




"எம் புருஷன் போய் சேர்ந்துட்டாரு. பசங்களை வெச்சு என்னால காப்பாத்த முடியல. கூலி வேலைக்குதான் போறேன். கட்டுப்படியாகலே வாழ்க்கையே வெறுத்துப் போச்சு. நல்லவேளை அம்மா கொடுத்த பசு மாட்டால இனி நிம்மதியா இருப்பேன். இந்த மாடு வெச்சு பால் கறந்து சம்பாரிச்சு பசங்களை காப்பாத்துவேன். மாடு கொடுத்து எனக்கு வாழ்க்கை கொடுத்த அம்மாவுக்கு நன்றி " என கண்ணீர் மல்கக் கூறினார்.

**வெள்ளோலை கிராமத்தைச் சேர்ந்த காளியம்மாள் (40) கூறுகையில்,**




"என்னால எந்த வேலையும் சுயமா செய்ய முடியல. எப்படிதான் இருக்கப் போறேனோ என பயமா இருந்திச்சி. அப்பதான் முதல்வர் அம்மா மாடு கொடுக்கப்போறதா கேள்விபட்டு, எனக்கும் கேட்டேன். எங்கள மாதிரி ஏழைகளுக்கு உதவி செய்யற அம்மா எனக்கு மாடு கொடுத்திருக்காங்க. மாண்புமிகு அம்மாவுக்கு கோடான கோடி நன்றி" என உவகை பொங்கக் கூறினார்.

❖ ❖ ❖

# பொதுமக்கள் பாராட்டும் 24 மணி நேரமும் இயங்கும் இலவச கட்டணமில்லா தொலைபேசி சேவை மையம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தருமபுரி மாவட்ட ஆட்சியரகத்தில் 01.08.2013 அன்று முதல் பொதுமக்களின் கோரிக்கைகள், புகார்கள் மற்றும் பொது பிரச்சினைகள் குறித்த தகவல் அளித்திட 24 மணி நேரமும் செயல்படக்கூடிய கட்டணமில்லா தொலைபேசி எண் 1077, 18004257016, 18004251071 மற்றும் குறுஞ்செய்தி எண் (SMS) 8903891077 ஆகிய எண்கள் கொண்ட சேவை மையம் செயல்பட்டு வருகிறது. இந்த சேவை மையத்தில் பொதுமக்களிடமிருந்து அன்றாடும் பெறப்படும் குடிநீர் பிரச்சினை மற்றும் அனைத்துத் துறைகள் தொடர்பான புகார்கள், பிரச்சினைகள், கோரிக்கைகள் கணினியில் பதிவு செய்து




அவ்வப்போது மின்னஞ்சல் மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும் உரிய முறையில் தொடர்புடைய அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்பட்டு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்கள் விழிப்புணர்வு பெற்று தங்களுடைய கோரிக்கைகள் பிரச்சினைகள், குறைகளை நேரடியாக மாவட்ட நிருவாகத்திற்கு தெரிவிக்க இந்த கட்டுப்பாட்டு அறை உதவுகிறது.

இச்சேவை மையத்தில் மாவட்ட ஆட்சியரால் நியமனம் செய்யப்பட்ட அலுவலர்கள் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பணியாற்றி வருகின்றனர். பெறப்பட்ட புகார்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் விவரத்தைப் பெற்று மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியரால் புகார்கள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட பதிவேட்டில் புகார்தாரர்களின் கைபேசி மற்றும் தொலைபேசி எண்களில் மாவட்ட ஆட்சியரால் தொடர்பு கொள்ளப்பட்டு அப்புகார்களின் தன்மை உறுதி செய்யப்படுகிறது.

இந்த 1077 இலவச சேவை மையம் தொடங்கிட ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் இக்கட்டுப்பாட்டு அறை சிறப்பாக செயல்பட்டு வருவதற்கு பொதுமக்கள் தங்கள் நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

**இது குறித்து நல்லம்பள்ளி ஒன்றியம், மாதேமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த மாது என்பவர் கூறியதாவது :–**




“எங்கள் மாதேமங்கலம் கிராமத்தில் ஆழ்துளை குடிநீர் குழாய் பழுதடைந்து ஒருசில நாட்கள் குடிநீர் வராமல் சிரமப்பட்ட சூழ்நிலையில் நான் மாவட்ட ஆட்சியரின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்கும் 1077 எண்ணை 19.07.2014 அன்று தொடர்பு கொண்டேன். உடனடியாகக் குடிநீர் குழாய் சரி செய்யப்பட்டு குடிநீர் சேவை அளிக்கப்பட்டு எங்கள் கிராமத்தில் உள்ள சுமார் 300 குடும்பங்கள் பயன்பெற்று வருகிறது. உடனடியாக தீர்வுகண்டு துரித நடவடிக்கை மேற்கொண்டதற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார்.

❖ ❖ ❖



## மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் மாற்றம் உண்டாக்கிய மகத்தான திட்டங்கள்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் அவர்களும் மற்ற சராசரி மனிதர்களைப் போன்று பள்ளிக்குச் செல்லவும், பணிக்குச் செல்லவும் தங்களது வாழ்வாதாரத்தை முன்னேற்றிக்கொள்ளவும் வழிவகை ஏற்படுத்தித் தந்துள்ளார்கள். கால், கை செயல்படாதவர், காதுகேளாதவர், பார்வையற்றவர், வாய்பேச முடியாதவர், மனவளர்ச்சிக்குன்றியோர், தசை சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர், தொழுநோயால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்காக அவர்கள் மாற்றுத்திறனின் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் மூன்று சக்கர வண்டி, சக்கர நாற்காலி, காலிப்பர், ஊன்றுகோல்கள் போன்ற பல உதவிகள் பெற்று மாற்றுத்திறனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

**மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டி பெற்ற காரிமங்கலம் ஒன்றியம் ஏ.சப்பாணிபட்டி கிராமத்தைச் சேர்ந்த வே.முருகன் கூறியதாவது:–**



முருகன்

“எனக்கு இரண்டு காலுமே ஊனம், நான் எங்கு போனாலும் தவழ்ந்துதான் போனும் என் மனைவி மற்றும் இரண்டு பொண்ணுங்களும் வெளியில எங்கையாவது போவனுனா அவங்களுக்கும் சங்கடம் எனக்கும் ரொம்ப சங்கடம். ரெண்டு பொண்ணுங்கள்ல ஒன்னு 4ஆவதும், இன்னொரு பொண்ணு 1ஆவதும் படிக்குதுங்க நான் செங்கல் அறுக்கும் வேலைய செய்யுறேன் என்னால வண்டி ஓட்ட முடியாது. அதனால மோட்டார் வச்ச மூன்று சக்கர வண்டிய கேட்டு மனு கொடுத்தேன். என் நிலமைய பார்த்து உடனே எனக்கு இந்த வண்டியை குடுத்துட்டாங்க. இனிமே நானும் என் பொண்டாட்டி புள்ளைங்களும் இந்த வண்டில நிம்மதியா போய் வருவோம். இந்த வண்டிய கொடுத்த மாண்புமிகு அம்மாவுக்கு நன்றி” என உணர்ச்சி பொங்கக் கூறினார்.

**மோட்டார் பொருத்திய விலையில்லா தையல் இயந்திரம் பெற்ற தருமபுரி குமாரசாமிபேட்டையைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி நந்தகுமார் கூறியதாவது:–**

“நான் ஜவுளிக்கடையில் வேலை செய்தேன். எனக்கு தையல் வேலை துணி தைக்கத் தெரியும். எனக்கு காது சரியா கேட்காது. அதனால கடையில இருந்து அனுப்பிடாங்க. எந்த கடையிலேயும் வேலை நிரந்தரம் இல்ல. எனது குடும்பத்தக் காப்பாத்த முடியாம வாடக குடுக்க முடியாம சாப்பாட்டுக்கு ரொம்ப கஷ்டப்பட்டேன். அதனால மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் கேட்டு மனு கொடுத்தேன். இப்ப கொடுத்துட்டாங்க. இனி குடும்பக் கஷ்டம் எனக்கு இல்லாம இந்த மிஷின் வெச்சு என் குடும்பத்தைக் காப்பாத்துவேன். என்ன மாதிரி மாற்றுத்திறனாளிகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா நாங்களும் வாழ்க்கையில உயர்வடையனும்னு இந்த மிஷின குடுத்திருக்காங்க அம்மாவுக்கு மிக்க நன்றி” எனக் கூறினார்.

❖ ❖ ❖



## எட்டாத கல்வி கனியை எளிதில் பெறவைத்த மடிக்கணினி

**ப**ள்ளியில் சிலேட்டு, நோட்டு புத்தகமில்லாத காலத்தை வரவேற்கும் முன்னோடித் திட்டம் தமிழக அரசின் விலையில்லா மடிக்கணினி திட்டமாகும்.

மடிக்கணினித் திட்டத்தால் தான் வறுமையே வாழ்க்கையாக வாழ்கின்றவர்கள், அரசுப் பள்ளியில் படித்து அறிவுப் பெருக்கத்தின் வழிகாட்டுதல் இல்லாதவர், உழைக்கும் நடுத்தர விவசாய குடும்பம், கூலித் தொழிலாளர்களின் குடும்பத்தில் உள்ள மாணவ, மாணவிகளும் அறிவுப் புரட்சியை ஏந்தி மேல்மட்ட மக்களிடம் நேருக்கு நேர் படிப்பில் போட்டி போடும் அளவிற்கு உயர முடிந்துள்ளது.

அதன்படி, திண்டுக்கல் மாவட்டத்தில் இதுவரை 12ஆம் வகுப்பு மாணவ, மாணவியர், அரசு உதவி பெறும் கலைக்கல்லூரி மாணவ, மாணவியர், பாலிடெக்னிக் மாணவ, மாணவியர், பொறியியல் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு என மொத்தம் 53,912 விலையில்லா மடிக்கணினிகள் ரூ.93.08 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

**திண்டுக்கல் எம்.வி.எம். அரசினர் கலைக் கல்லூரியில் பி.எஸ்.சி. கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கும் மாணவி செல்வி. அரிப்பா கூறும்போது:—**

“நான் புனித லூர்தன்னை மேல்நிலைப்பள்ளியில் 12 ஆம் வகுப்பு படிக்கும் பொழுது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட புத்தகங்கள், விலையில்லா மிதிவண்டி, விலையில்லா மடிக்கணினி ஆகியவை எனக்கு வழங்கப்பட்டது. அப்போது, வழங்கப்பட்ட விலையில்லா மடிக்கணினியில் தமிழ் அகராதி, திருக்குறள் மற்றும் பாடப்புத்தகங்கள் அடங்கியுள்ளன. முன்பு மடிக்கணினி என்றால் என்ன என்பதே எனக்கு தெரியாது. ஆனால், தற்பொழுது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் வழங்கப்பட்டுள்ள இந்த விலையில்லா மடிக்கணினியினால் உலக அறிவையும், பொது அறிவையும், நாட்டு நடப்பையும் தெரிந்து கொள்ள முடிகிறது. விலையில்லா மடிக்கணினி எனக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. மேலும், என்னுடைய தந்தை ஒரு வாழைப்பழ வியாபாரி. தினந்தோறும் தள்ளுவண்டியில் வைத்து தான் வியாபாரம் செய்கிறார். அவருடைய வருமானத்தைக் கொண்டு தான் நாங்கள் சாப்பிட்டு வருகின்றோம். வறுமையோடு படித்துக் கொண்டிருக்கும் எனக்கு விலையுயர்ந்த மடிக்கணினி வாங்கி என்னுடைய வாழ்க்கையில் பயன்படுத்துவது எட்டாக்கனியாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த மடிக்கணினியை எனக்கு வழங்காவிட்டால் படிக்கும் பொழுதே என்னுடைய வாழ்க்கையில் சொந்தமாக மடிக்கணினி வாங்குவது கானல் நீராகும். எனவே, இந்த மடிக்கணினியை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என்றென்றும் நன்றிக் கடன்பட்டவளாக இருப்பேன்”.


அரிப்பா

❖ ❖ ❖

# நீர் ஆதாரத்தைப் பெருக்கும் பண்ணைக் குட்டை திட்டம்



நிலத்தடி நீர்மட்டத்தை வேளாண் பகுதிகளில் உயர்த்தும் நோக்கோடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் பண்ணைக் குட்டைகள் திட்டத்தை அறிமுகம் செய்து செயல்படுத்தி விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றி வைத்துள்ளார்கள்.

தமிழ்நாட்டில் 50,000 பண்ணைக் குட்டைகள் அமைக்க தமிழக அரசால் தீர்மானிக்கப்பட்டு அதனை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர வகுப்பினரைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளின் விளைநிலங்களில் 100 சதவிகித மானியத்தில் பண்ணைக் குட்டைகள் அமைத்துத் தரப்படுகிறது. இந்தப் பண்ணைக் குட்டைகள் அமைக்க ஊரக வளர்ச்சி முகமையின் மூலமாக பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்படுகின்றன. இதனால், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணிபுரிபவர்கள் தங்களுக்கு நிருணயிக்கப்பட்ட முழு சம்பளத்தைப் பெறுவதற்கான வேலை வாய்ப்பையும் பெறுகின்றனர்.

**இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் கூறியதாவது:**

**திரு. மகேஷ் முருகன் / பன்னப்பட்டி, நிலக்கோட்டை வட்டம்**

“எனது 5 ஏக்கர் நிலத்தில் தென்னை உள்ளிட்ட மரக்கன்றுகள் சாகுபடி செய்து வருகிறேன். கோடைக் காலங்களில் இந்த மரங்கள்



*மகேஷ் முருகன்*

தண்ணீர் பற்றாக்குறையால் பட்டுபோய் விடுவது வழக்கமான ஒன்றாகும். மேலும், நிலத்தடி நீர்மட்டம் கோடைக் காலங்களில் மிகுந்த ஆழத்திற்குச் சென்று விடுவதால் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால், இந்த நிலையில் தற்பொழுது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் பண்ணைக் குட்டைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களைக் கொண்டு எனக்கு செலவுகள் ஏதுமில்லாமல் 100 சதவிகிதம் மானியத்தில் பண்ணைக் குட்டை அமைத்து கொடுத்தார்கள்.

மேலும், மீன்வளத் துறையின் மூலமாக மீன் குஞ்சு வகைகளான ரோகு, கட்லா, கெண்டை உள்ளிட்ட 1,350 மீன் குஞ்சுகள் எனது குட்டையில் விட்டுள்ளேன். இதற்குத் தேவையான உணவினை மானியத்தில் வழங்கப்பட உள்ளதாகவும் அலுவலர்கள் தெரிவித்தனர். தற்பொழுது எனது தோட்டத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாமல் இருப்பதோடு மீன்கள் வளர்ந்து குறிப்பிட்ட வருமானத்தை அளிக்க உள்ளது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

**திரு. எம். கண்ணன் / இராமராஜபுரம், நிலக்கோட்டை வட்டம்.**

"எனக்கு சொந்தமான 4 ஏக்கர் நிலப்பரப்பில் தென்னை உள்ளிட்ட மரங்களை வளர்த்து வருகிறேன். மழை தற்பொழுது குறைந்துவிட்ட காரணத்தால் தண்ணீருக்கு மிகுந்த சிரமமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், என்னுடைய போர்வெல்லிலும் தண்ணீர் வராமல் போய்விடுகிறது. இந்தச் சூழ்நிலையில் வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட பண்ணைக் குட்டைகள் திட்டம் குறித்து எங்களுக்கு எடுத்துச் சொன்னார்கள்.


கண்ணன்

இந்தப் பண்ணைக் குட்டைகள் அமைக்க தற்பொழுது பெய்துள்ள மழையினால் எனது பண்ணைக் குட்டை நிரம்பி வழிகிறது. மேலும், நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து எனது போர்வெல்லில் நிறைய தண்ணீர் கிடைக்கிறது. மேலும், மீன்வளத்துறையின் மூலமாக கட்லா, ரோகுல், மிருகால் போன்ற விரைவில் வளரக்கூடிய 1,000 மீன் குஞ்சுகள் விட்டுள்ளேன். தற்பொழுது, அவை நன்றாக வளர்ந்த நிலையில் உள்ளது. இன்னும் மூன்று மாதத்தில் 40 சதவிகித மீன் குஞ்சுகள் வளர்ச்சியடைந்து தோராயமாக ரூ.50,000 வருமானம் கிடைக்க வழிவகை உள்ளது. இந்தப் பண்ணைக் குட்டையின் மூலம் எங்களைப் போன்ற விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் சிறப்பான இந்தத் திட்டத்தை செயல்படுத்தி உள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னைப் போன்ற விவசாயிகள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''. இவ்வாறு விவசாயி கண்ணன் தெரிவித்தார்.

❖ ❖ ❖

# மழைநீர் சேகரிப்பு என்னும் மகத்தானத் திட்டம்

“நீரின்றி அமையாது உலகு” என்ற வள்ளுவரின் வாக்கை மனதில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் வகுத்துத் தந்த மழைநீர் சேகரிப்புத் திட்டத்தின் மூலம் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது. இதனால் எதிர்கால தண்ணீர் பற்றாக்குறை அச்சத்தை பொதுமக்களிடையே போக்கி மகிழ்ச்சியையும் வரவேற்பையும், தமிழக அரசு செயல்படுத்திய மழைநீர் சேகரிப்புத் திட்டம் அளித்துள்ளது.

குறிப்பாக சொல்வதென்றால், இதன் காரணமாக முன் எப்போதும் இல்லாத அளவிற்கு நிலத்தடி நீர் மட்டம் சராசரியாக 20அடி முதல் 100அடி வரை உயர்ந்துள்ளது வரலாற்று சாதனை ஆகும்.

**மழைநீர் சேகரிப்புத் தொட்டி அமைத்ததன் பயன் குறித்து வத்தலக்குண்டு அக்ரஹாரம் பகுதியைச் சேர்ந்த இல்லத்தரசி திருமதி கமலா வெங்கட்ராமன் அவர்கள் கூறுகையில் :–**

“கடந்த பல ஆண்டுகளாக எங்களது வீட்டு கிணற்றில் தண்ணீர் இல்லாமல் காணப்பட்டது. இதனால் பாதுகாப்பு கருதி பயன்பாடு இல்லாத கிணற்றை மூடி விடலாம் என்ற எண்ணத்தில் நாங்கள் இருந்தோம். ஆனால், தற்பொழுது எங்கள் கிணற்றில் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் இருந்த நீர் மட்டத்திற்கு நீர் அளவு உயர்ந்துள்ளது. வறட்சியை எப்படி சமாளிப்பது என்ற அச்சத்தில் இருந்த எங்களுக்கு பெறும் மகிழ்ச்சியை அளித்துள்ளது.




இதற்குக் காரணம் தமிழக அரசால் தனிக் கவனம் செலுத்தப்பட்டு இல்லங்கள்தோறும் அமைக்கப்பட்ட மழைநீர் சேகரிப்புத் திட்டமே ஆகும். வடகிழக்குப் பருவ மழையில் பெய்த நீர் அனைத்தும் வீணாகாமல் அப்படியே மழைநீர் சேகரிப்புத் தொட்டி வழியாக நிலத்தடிக்கு சென்று நீர் மட்டத்தை உயர்த்தி கொடுத்துள்ளது.

இதன் மூலம் வரும் ஆண்டுகளுக்குத் தேவையான அளவு தண்ணீர் பிரச்சினை இல்லாத வகையில் பயனளித்துள்ளது. இதற்கு காரணமான திட்டத்தைக் கொண்டு வந்து செயல்படுத்திய அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்''.

**எழுவனம்பட்டி பகுதியைச் சேர்ந்த இல்லத்தரசி திருமதி ராதா அவர்கள் கூறுகையில்:–**




''திண்டுக்கல் மாவட்டத்தில் போதிய மழைப்பொழிவு இல்லாத காரணத்தால் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத அளவிற்கு வறட்சி ஏற்பட்டு வந்தது. எதிர் காலத்தில் தண்ணீருக்கு என்ன செய்வது என்ற அச்சத்தோடு இருந்த எங்களைப் போன்ற இல்லத்தரசிகளுக்கு வரப்பிரசாதமாக பருவமழை பெய்யத்தொடங்கியது.

கடந்த காலங்களில் மழை பெய்திருந்தாலும் அவை உடனடியாக சாக்கடை மற்றும் வாய்க்கால்களில் பயனற்று வீணாகிவிடுவது வழக்கமான ஒன்றாகும். ஆனால், இந்தமுறை வீடுகள்தோறும் தமிழக அரசின் அறிவுறுத்தலின்படி மழைநீர் சேகரிப்புத்தொட்டி அமைத்ததின் பயனாக பெய்த மழை அப்படியே நிலத்தடியை சென்று நீர்மட்டத்தை உயர்த்தி உள்ளது. இதுபோன்ற நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளதை என் கண்களால் பார்த்து பல ஆண்டு காலம் ஆகிவிட்டது. தமிழக அரசின் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படுத்தப்படும் இத்தகைய திட்டங்கள் மக்களுக்குப் பெரிதும் பயனுள்ளதாக அமைவது மகிழ்ச்சியாக உள்ளது''.

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

மழை பெய்யும் போது அந்நீர் கடலில் சென்று வீணாகக் கலப்பதைத் தடுத்து முறையாகச் சேமித்து, பூமியில் செலுத்தினால் நிலத்தடி நீர் வளம் அதிகரிக்கும். கடல் நீர் உள்ளே புகாமல் நிலத்தடி நீரின் தரமும் உயரும், குடிநீர் ஆதாரமும் பெருகும்.




## முதியோர் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி

ஈரோடு மாவட்டம், சென்னிமலை சாலை கே.கே.நகர் ஆர்ச் அருகில் அமைந்துள்ள என்.எல்.கருணை இல்லத்தில் தமிழக அரசின் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் சார்பில் முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகம் அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 05.09.2012 அன்று காணொலிக்காட்சி மூலம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு வட்டாரத்தில் உள்ள என்.எல்.கருணை இல்லம், சத்தியமங்கலம் வட்டாரத்தில் கஸ்தூரிபா கருணை இல்லம் ஆகிய இல்லங்களில் முதியோர்கள், ஆதரவற்ற குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் என அனைவரையும் பாதுகாத்து சேவை செய்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**ஈரோடு மாவட்டத்தில், ஈரோடு வட்டாரத்தில் உள்ள என்.எல்.கருணை இல்லத்தில் புதிதாக துவங்கப்பட்டுள்ள முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லத்தில் சேர்ந்துள்ள ஆதரவற்ற 75 வயது மூதாட்டி திருமதி மா.காளியம்மாள் என்பவர் தெரிவித்ததாவது :**

“நான் ஈரோடு, மரப்பாளையத்தில் வசித்து வந்தேன். எனது கணவர் திரு.மாரப்பகவுண்டர் கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்னர் மறைந்து விட்டார். எனக்கு தற்போது 75 வயது ஆகிவிட்டபடியால் என்னால் எந்த வேலையும் செய்ய முடியவில்லை. எனக்கு பிள்ளைகள் கிடையாது. உற்றார், உறவினர்களும் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் நான் என்ன செய்வது என்று திக்கு தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் என்னுடைய வீட்டின் அருகில் இருந்தவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உங்களைப்போன்ற ஆதரவற்ற அனாதைகளுக்காக முதியோர்களும், ஆதரவற்ற குழந்தைகளும் ஒருங்கே ஒரே வளாகத்தில் வாழும் வகையில் ஒருங்கிணைந்த வளாகங்களை உருவாக்க ஆணையிட்டுள்ளார்கள் என்று கூறினார்.


காளியம்மாள்

நான் உடனே ஈரோடு, சென்னிமலை சாலை, கே.கே.நகர் பகுதியில் உள்ள என்.எல்.கருணை இல்லத்திற்கு நேரில் சென்று விண்ணப்பம் கொடுத்தேன். அப்பொழுது, நீங்கள் யாரும் இல்லா அனாதை அல்ல. உங்களுக்கு உறுதுணையாக இவ்வில்லம் இருக்கும் என்றனர். இந்த இல்லத்தில் நான் சேர்ந்த பிறகு என்னில் இருந்த இயலாமை நீங்கி என்னைப் போன்ற முதியோர்களோடும், சின்னஞ்சிறு குழந்தைகளோடும் வாழுகின்ற குடும்ப சூழ்நிலையை நான் நன்கு உணருகிறேன். நான் என் கணவரோடு இருந்த காலத்தில்கூட குழந்தைகள், பெரியோர்கள், சிறியோர்கள் என குடும்பமாக வாழ முடியவில்லை. எங்களுக்கு குழந்தைகள் இல்லை. எனது கணவர் மறைந்துவிட்ட பிறகு யாருமற்ற அனாதையாக இருந்த எனக்கு 70 வயதைக் கடந்த பிறகு பெரியோர்கள், பேரக்குழந்தைகள் என இந்த இல்லத்தில் தங்கியுள்ளோரிடம் பாசம் காட்டி பழகுகின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நான் வாழும் காலம் முழுவதும் நன்றிக் கடன்பட்டவளாக இருப்பேன்” என்று தெரிவித்தார்.

❖ ❖ ❖

# வாயில்லா ஜீவன்களுக்கு வயிறார உணவு வழங்கிய அம்மா!

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வறட்சி காலத்தில் தீவன பற்றாக்குறையினைப் போக்கி பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் மற்றும் கால்நடைகளுக்கு வறட்சி காலத்தில் உலர் தீவனங்கள் கிடைக்க வழிவகை செய்யும் வகையில் உலர் தீவன கிடங்கு திட்டத்தினை செயல்படுத்த ஆணையிட்டார். மாநிலம் முழுமைக்கும் இத்திட்டத்திற்காக ரூ.12.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஈரோடு மாவட்டத்திற்கு ரூ.50 இலட்சம் இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாவட்டத்தில் 5 இடங்களில் உலர் தீவனக்கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

**பெரிய வேட்டுவபாளையம், பண்ணாடித் தோட்டத்தைச் சார்ந்த திரு.விஸ்வநாதன் (வயது 53) என்பவர் கூறியதாவது :**

“நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். கறவைமாடு ஒன்றும் வளர்த்து வருகிறேன். தற்போது வறட்சி காலமாக உள்ளதால் நான் வளர்த்துவரும் கறவைப்பசுவிற்கு பசுந்தீவனம் கிடைக்காத நிலை உள்ளது. மேலும், உலர் தீவனமும் தனியாரிடம் அதிக விலைக்கு வாங்கி கறவைப் பசுவிற்கு போதிய அளவு தீவனம் வழங்க முடியாததால், பால் உற்பத்தி குறைந்தது. இந்நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்த உலர் தீவன திட்டம் பற்றி கால்நடை பராமரிப்புத் துறையினர் விளம்பரம் மூலம் தெரிய வந்தது. நான் தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் மானிய விலையில் வழங்கும் உலர் தீவனத்தைப் பெற்று


விஸ்வநாதன்

என் பசுவிற்கு வழங்கி பால் உற்பத்தி குறையாமல் பார்த்து வருகிறேன். என் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையான கறவைப்பசுவிற்கு மானிய விலையில் வைக்கோல் தந்து உதவிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.




**இட்டையங்காடு பகுதியைச் சார்ந்த திருமதி சுமதி என்பவர் தெரிவித்ததாவது,**

''எங்கள் கிராமத்தில் அறுவடை காலங்கள் தவிர்த்து கால்நடைகளுக்குத் தேவையான வைக்கோல் தட்டு, பசுந்தாள் இலைகள், வைக்கோல் இவைகள் கிடைப்பது மிக அரிது. கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்கள் கொடுக்கப்படாத காரணத்தினால் பால் கறப்பது குறைந்துவிடும். எங்கள் வாழ்வாதாரமாக இருக்கின்ற கால்நடை செல்வங்களுக்கு பசியாற வைக்கோல் உணவினை மானிய விலையில் வழங்கி அவைகளின் பால் உற்பத்தி குறையாமல் எங்களைக் காத்து வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி.

சொந்த நிலம் இல்லாமல் கால்நடை வளர்க்கின்ற எங்களைப் போன்ற கால்நடை வளர்ப்போருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சி காலத்தில் வைக்கோல் பில்லையும் மானிய விலையில் வழங்கி வாயற்ற ஜீவன்களுக்கு ஆபத்பாந்தவனாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திகழ்கின்றார்''.

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

பல்வேறு உயிரினங்கள் சமச்சீரான நிலையில் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாக வாழ்ந்து ''இயற்கைச் சமன் நிலையைக்'' காத்து வருகின்றன. இந்தப் பேருண்மையை நாம் அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

# விலையில்லா மின்ராட்டை திட்டம் மூலம் கைத்தறி நெசவாளர்களின் வருவாய் அதிகரிப்பு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் வேலைப்பளுவினை குறைத்து உற்பத்தியை அதிகரித்து, வருமானத்தைப் பெருக்கும் வகையில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.3 கோடியே 75 இலட்சம் மதிப்பிலான 25,000 மின்மோட்டார் பொருத்திய தார்சுற்றும் இயந்திரம் வழங்கும் திட்டத்தினை அறிவித்து உத்தரவிட்டார். ஈரோடு மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் 186 நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் 6,200 நெசவாளர்களுக்கு தார் சுற்றும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

**விலையில்லா மின்ராட்டை பெற்ற வீரப்பன் சத்திரம் பகுதியைச் சார்ந்த கைத்தறி நெசவாளர் திருமதி எம்.தமிழரசி (வயது 52) என்பவர் கூறியதாவது,**

“என் பெயர் தமிழரசி. எனது கணவர் பெயர் மாரிமுத்து, நான் வீரப்பன் சத்திரம் பகுதியில் வசித்து வருகின்றேன். எனது கணவர் கடந்த 30 ஆண்டு காலமாக விசைத்தறி தொழில் செய்து வந்தார். எனது கணவர்



சில ஆண்டுகளுக்கு முன்பாக இறந்துவிட்டார். எனது மகன் மோட்டார் கம்பெனியில் வேலை செய்து வருகின்றான். அவனது வருமானம் எங்களது குடும்பத்திற்கு போதுமானதாக இல்லை. எனவே, எனக்குத் தெரிந்த தொழிலான கைத்தறி தொழிலை செய்து வந்தேன். கைத்தறி தொழிலில் மிக முக்கியமானது கைராட்டை சுற்றுவதாகும். இதன் மூலம் நான் ஒருத்தி மட்டும் கைராட்டை சுற்றி, கைத்தறி நெசவு செய்வது என்பது மிகவும் கடினமாக இருந்து வந்தது. அதன் மூலம் எனக்கு கை மற்றும் தோள்பட்டை ஆகிய இடங்களில் வலி இருந்து வந்தது. இதனால் பல நாட்களில் இரவு நேரங்களில் வலியால் தூக்கம் வருவதில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மின்ராட்டையை வழங்கினார்கள். அதனடிப்படையில் எனக்கும் மின்ராட்டை கிடைக்கப்பெற்றது. நான் இந்த மின்ராட்டையைப் பயன்படுத்தி தார் சுற்றுவதால் தற்போது எனக்கு கை மற்றும் தோள்பட்டை போன்ற இடங்களில் வலி உண்டாவதில்லை. இதனால் எனக்கு வேலைப்பளுவும் குறைகிறது. மேலும் 2 நபர்கள் செய்கின்ற வேலையை நான் ஒருத்தியே செய்து வருமானம் ஈட்ட முடிகின்றது. உற்பத்தியை பெருக்கி வருமானத்தை ஈட்டுவதால் எனது குடும்ப பொருளாதாரத்திற்கு விலையில்லா மின்ராட்டை உபயோகமாக உள்ளது. என்னைப் போன்ற கைத்தறி நெசவுத் தொழில் செய்து பிழைக்கும் ஏழை, எளிய கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களின் வாழ்வில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்திய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்''.

**விலையில்லா மின்ராட்டைப் பெற்ற வீரப்பன்சத்திரம் பகுதியைச் சார்ந்த கைத்தறி நெசவாளர் திரு.பி.முருகவேல் (வயது 46) என்பவர் கூறியதாவது,**

''என் பெயர் முருகவேல், எனது தந்தை பெயர் பெரியசாமி முதலியார், நெசவுத் தொழிலானது எங்களது பரம்பரைத் தொழில் ஆகும். நான் எனது தந்தைக்குப் பின் இத்தொழிலை செய்து வருகின்றேன். எனக்குத் திருமணமாகி 12 ஆம் வகுப்பு படிக்கும் ஒரு மகன், 9 ஆம் வகுப்பு படிக்கும் ஒரு மகள் உள்ளனர். நான் அதிகம் படிக்காததால் தந்தையிடம் கற்றுக்கொண்ட கைத்தறி தொழிலை செய்ய ஆரம்பித்தேன். இந்தத் தொழிலைக் கடந்த 10 ஆண்டு காலமாக செய்து வருகின்றேன். கைராட்டை மூலம் நூல் சுற்றுவதால் ஒரு நாளுக்கு ரூ.150 வரை மட்டுமே வருமானம் பெற முடிந்தது.




ஆனால் தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழங்கிய விலையில்லா மின்ராட்டை மூலம் ஒரு நாளுக்கு ரூ.250 முதல் ரூ.300 வரை வருமானம் பெறுகின்றேன். மின்ராட்டை மூலம் தார்சுற்றுவதால் குறைவான நேரமே போதுமானதாக உள்ளது. மேலும் உற்பத்தியும் அதிகப்படுத்த முடிகிறது. உற்பத்தியினை பெருக்குவதால் எனக்கு வருமானமும் அதிகமாக கிடைக்கிறது. இதனால் பள்ளியில் பயிலும் எனது குழந்தைகளின் கல்விச் செலவுக்கும், குடும்பச் செலவுக்கும் கூடுதலாக கிடைக்கும் இத்தொகை உறுதுணையாய் உள்ளது.

எங்களைப் போன்ற நெசவாளர்களின் குடும்பத்தினை உயர்த்திடும் வகையில் இத்தகு சீர்மிகுத் திட்டங்களை அறிவித்து, மிகச்சிறப்பாக செயல்படுத்தி வருகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு கைத்தறி நெசவாளர்களின் சார்பில் எங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்".

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

எந்தத் தொழிலை நீங்கள் செய்கிறீர்களோ அதற்காக உங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். புதிய முறைகள் தேவை! புதிய வழிகள் தேவை! புதிய உத்திகள் தேவை! புதிய அணுகுமுறைகள் தேவை!



# அயல்நாட்டவரும் பாராட்டும் அன்னதானத் திட்டம்

"மண்தினி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி
கொடுத்தோர் உயிர் கொடுத்தாரே"

என்பதற்கு ஏற்ப மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களது உன்னதத் திட்டங்களில், திருக்கோயில் அன்னதானத் திட்டம் முதன்மையானதாகும்.

அருள் வேண்டி வரும் இறையன்பர்களுக்கு இறையருளோடு அன்னதானமும் வழங்கும் உன்னதத் திட்டம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 24 முக்கியத் திருக்கோயில்களில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில், மதிய உணவின்போது கூட்டு, சாம்பார், ரசம், மோர், ஊறுகாய் போன்றவை வழங்கப்படுகின்றன. விசேஷ நாட்களில் வடை, பாயாசம் வழங்கப்படுகிறது. காஞ்சிபுரம் வட்டத்தில், அருள்மிகு தேவராஜ சுவாமி திருக்கோயில், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயில், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், உள்ளிட்ட மொத்தம் 24 கோயில்களில் தலா 50 முதல் 75 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. ஏறக்குறைய ஒரு நாளைக்கு 1,440 நபர்களும் 30 நாட்களில் 43,200 நபர்களும் இத்திட்டத்தால் பயனடைந்து வருகின்றனர்.

**காஞ்சிபுரம் திருக்கோயில் அன்னதான உணவு உண்டு அயர்லாந்து நாட்டவர் பாராட்டு**

**காஞ்சிபுரத்திற்கு சுற்றுலா வந்திருந்த அயல்நாட்டினர் இருவர் நம்மிடம் பேசியபோது,**

"ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு சுற்றுலா வந்த பயணிகள் சுவாமி தரிசனம் முடித்து சிற்பக்கலை, மாமரம், 108 லிங்கம், ஆயிரங்கால் மண்டபம் போன்ற பல அரிய இடங்களை பார்வையிட்டு மிக மனமகிழ்ச்சியுடன் திரும்பியபோது, சந்நிதானத்தில் இருந்து வெளியில் வந்து பார்த்தால் அனைவரையும் அன்னதானத்திட்டத்தில் சாப்பிட மரியாதையுடன் அழைத்து, நல்ல உணவு வழங்கியதைப் பார்த்து வியந்து போனோம். இந்தியாவில் பல இடங்கள் சென்று வந்தோம். தமிழ்நாட்டில் தான் இது போன்ற சிறப்பானத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் தமிழக அரசுக்கு எங்களது பாராட்டுக்கள்" என முகமலர்ச்சியுடன் தெரிவித்தனர்.

**விருத்தாசலம் தம்பதியினர் திரு.கேசவன், மனைவி கோகிலா கூறுகையில்,**

"நாங்கள் காஞ்சி மாநகரத்தின் புனிதத் தலங்களைப் பார்வையிட வந்தோம். அருள்மிகு வழக்கறுத்தீஸ்வரர் திருக்கோயிலில் சாமி தரிசனம் முடித்து வெளியே வந்தபோது நன்கு உபசரிப்புடன் கூடிய உணவு வழங்கப்பட்டது. வயிறார உண்டு சாமி தரிசனமும், வயிற்றுக்கு உணவும் கிடைத்ததை நினைத்து மனமகிழ்ச்சியுடன் சொந்த ஊருக்குச் செல்ல இருக்கிறோம். புதிய இடத்திற்கு வந்து உணவுக்காகப் பல இடங்களில் அலைந்து திரியாமல் சுத்தமாகவும், சுகாதாரத்துடன் கூடிய ஏற்ற உணவு வழங்கிக் கொண்டிருக்கும் இறைவனாக நாங்கள் காணும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எங்கள் உற்றார், உறவினர் சார்பிலும், எங்கள் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்" எனக் கூறினார்கள்.

❖ ❖ ❖

**அம்மாவின் அமுதமொழி**

தொண்டுகளிலே பல வகை உண்டு.
நாட்டுக்குச் செய்யும் சேவை "தேசத் தொண்டு"
மக்களுக்குச் செய்யும் சேவை "மக்கள் தொண்டு"
இறைவனுக்குச் செய்யும் சேவை "திருத் தொண்டு"

# அம்மா ஆட்சியில் ஆதிதிராவிடர்கள் மகிழ்ச்சி!

**கா**ஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர்கள் சுயதொழில் செய்து வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் நோக்கத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 7 வகையானத் திட்டங்கள் வகுத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொழில் முனைவோர் திட்டத்தின் மூலம் 18 வயது முதல் 55 வயது வரையுள்ள ஆதிதிராவிடர்களுக்கு 30% அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் குறைந்த தொகை மானியமாக வழங்கப்படும். இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் 18 முதல் 35 வயது வரை உள்ள இளைஞர்களுக்கு 30% அல்லது ரூ. 2.25 இலட்சம் இதில் குறைந்த தொகை மானியமாக வழங்கப்படும்.

**இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்– உத்திரமேரூர், மருதம் காலனியைச் சேர்ந்த பயனாளி சுகுமார், த/பெ. கண்ணபிரான் கூறுகையில்,**

“நான் வேலையில்லாமல் பல வருடங்களாக கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்னைப் போன்ற இளைஞர்களுக்கு ஆதிதிராவிட நலத்துறையின் தாட்கோ மூலம் இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வங்கிக் கடனாக ரூ.7 இலட்சம், மானியமாக ரூ.2 இலட்சம் வழங்கியுள்ளார்கள். வங்கி கடன் வழியாக சொந்தமாக ஒரு



சுகுமார்

கார் வாங்கினேன். இந்த கார் மூலம் டிராவல்ஸ் நடத்தி அதனால் வரும் வருமானத்தில் எனது குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறேன். இத்திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றி சொல்ல நானும் என் குடும்பத்தாரும் கடமைப்பட்டுள்ளோம்'' எனக் கூறினார்.

**தொழில் முனைவோர் திட்டம் – திருக்காலிமேடு கிராமத்தைச் சேர்ந்த பயனாளி திரு. ஆர். தனக்கோடி கூறுகையில்,**



*தனக்கோடி*

''நான் கடந்த 5 வருடங்களாக சைக்கிள் ரிக்ஷா ஓட்டி எனது குடும்பத்தைக் காப்பாற்றி வந்தேன். இதில் கிடைக்கும் வருமானத்தில் எனது பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியவில்லை. எனது குடும்பத்தைக் காப்பாற்றப் போதுமானதாகவும் இல்லை. மேலும், சைக்கிள் ரிக்ஷா ஓட்டுவதால் எனக்கு உடல்வலி மற்றும் அடிக்கடி உடல்நலக் குறைவு ஏற்பட்டு வந்தது. தற்போது மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் என்னைப் போன்ற தொழிலாளிகளுக்கு பல்வேறு திட்டங்களை வகுத்து சுயதொழில் செய்ய பல நலத் திட்டங்களை வகுத்து வருகின்றார். ஆதிதிராவிட நலத்துறையின் தாட்கோ மூலம் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் வங்கி கடனாக ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டதில் மானியம் ரூ. 60,000/– வங்கிக் கடன் மூலம் சொந்தமாக ஓர் ஆட்டோ வாங்கினேன். இந்த ஆட்டோ ஓட்டுவதினால் எனக்குப் போதுமான வருமானம் கிடைக்கிறது. இந்த வருமானத்தில் எனது பிள்ளைகளைப் படிக்க வைக்கவும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் போதுமானதாக உள்ளது. இத்திட்டத்தின் மூலம் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' எனக் கூறினார்.

❖ ❖ ❖

# ஏழைகளின் சிரமத்தைக் குறைக்கும் அரசு கேபிள் டிவி பொது இ–சேவை மையம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்களின் நலன் கருதி பல்வேறு மக்கள் நல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி உள்ளார்கள். அனைத்து திட்டங்களும் தாய்மார்களின் நலனை கருத்தில் கொண்டு அறிவிக்கப்பட்ட திட்டங்களாகும். அதுபோன்ற எண்ணற்ற திட்டங்களில் ஒன்றான தமிழ்நாடு அரசு கேபிள் டிவி பொது இ–சேவை மையம் என்ற திட்டம் தமிழக மக்களின் சிரமங்களைப் போக்கும் ஒரு உன்னதமான திட்டமாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்திய அரசு பொதுமக்களுக்கு தேவையான அனைத்து சான்றிதழ்களும் உடனுக்குடன் கிடைத்திட தமிழ்நாடு அரசு கேபிள் டிவி பொது இ–சேவை மையத்தின் மூலம் பெறும் திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களில் தொடங்கப்பட்டு மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது.



மேலும், பாஸ்போர்ட் விண்ணப்பிக்க ஏதுவாக முன்பதிவு செய்து ரசீது பெறும் சேவையினை கன்னியாகுமரி மற்றும் பிற மாவட்டங்கள் என 9 மாவட்டங்களில் திட்டமிட்டபடி செயல்படுத்தி வருகிறது. அதாவது ஆன்–லைனில் விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக ஏ.ஆர்.என் (Application Reference Number) ரசீதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

**அகஸ்தீஸ்வரம் வட்டம், இந்திரா நகரைச் சார்ந்த பயனாளி திரு. யேசுதாஸ் கூறுகையில்:–**




*யேசுதாஸ்*

“ஐயா, நான் கூலி வேலை செய்து வருகிறேன். என் மனைவி வீட்டு வேலை செய்து வருகிறார். எங்களுக்கு ஒரு ஆண் குழந்தை 6ஆம் வகுப்பும், பெண் குழந்தை 7ஆம் வகுப்பும் படித்து வருகிறார்கள். என் குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பதற்கு வருமானச் சான்றிதழ் தேவைப்பட்டது. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி பொது இ–சேவை மையத்தின் மூலம் நான் வருமானச் சான்றிதழ்களைப் பெறுவதற்காக விண்ணப்பித்திருந்தேன். நான் விண்ணப்பித்த இரண்டு நாட்களிலேயே எவ்வித சிரமம், அலைச்சலின்றி குறிப்பிட்ட நாளில் இங்கு வந்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டேன். கடந்த காலங்களில் வருவாய்த்துறையில் உள்ள இரண்டு, மூன்று அலுவலகத்திற்குச் சென்று காலவிரையம் செய்துதான் இத்தகைய சான்றிதழ்களைப் பெற முடிந்தது. என் குழந்தைகளின் கல்வியை உயர்த்துவதற்கு இது ஒரு அடித்தளமாக இருக்கும் என நம்புகிறேன். இந்த அளவுக்கு எளிமையாக்கி தந்த தமிழக அரசுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி என கண்ணீர் மல்க தெரிவித்தார்.

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

வளர்ந்த நாடுகளின் வெற்றிக்குக் காரணம் உழைப்பு தான்! உழைப்பு என்னும் மரத்தின் வேர்கள், கசப்பாக இருக்கலாம்; ஆனால், அதன் கனிகள் இனிப்பானவை. உழைப்பு மட்டுமே நம்மை உயர்த்தும். உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், நாள் ஒன்றுக்கு 20 மணி நேரம் உழைக்கிறேன் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

# முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் நலன் காக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சிறப்புத் திட்டங்கள்

இலங்கை அகதி முகாம்களில் வசிக்கும் குடும்பத்தின் தலைவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகையினை 400 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாகவும், பிற குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையினை 288 ரூபாயிலிருந்து 750 ரூபாயாகவும், 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை 400 ரூபாயாகவும் உயர்த்தி வழங்க உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இலங்கைத் தமிழர் முகாம்களின் நிலையினை மேம்படுத்த வீடுகளையும், அடிப்படை வசதிகளையும் மேம்படுத்தும் பொருட்டு 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார்கள். மேலும், 416 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தலா 10,000 ரூபாய் வீதம் சுழல்நிதி வழங்கப்படும் எனவும், தமிழ்நாட்டிலுள்ள இலங்கை அகதிகளின் முகாம்களிலிருந்து கல்லூரிகளில் உயர்கல்வி பயிலும் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும் எனவும் ‘முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டம்’ முகாம்களிலுள்ள தமிழர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் எனவும் அறிவித்தார்கள்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஈமகிரியை உதவித் தொகையினை 2,500 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாகவும், இயற்கைச் சீற்றம், விபத்து போன்ற அசாதாரண நிகழ்வுகளில் நேரிடும் இறப்பின் போது வழங்கப்படும் உதவித் தொகையினை 15,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாகவும் உயர்த்தி வழங்க உத்தரவிட்டார்கள்.


மாணிக்கம்மாள்

**பெருமாள்புரம் அகதிகள் முகாமில் உள்ள பயனாளி திருமதி மாணிக்கம்மாள் (70) தெரிவிக்கையில்,**

“எனது கணவர் மைக்கேல் இறந்து சுமார் 20 வருடங்களாக கூலி வேலை செய்து பிழைத்து வருகிறேன். பல சமயங்களில் சாப்பிடுவதற்கே மிகவும் சிரமப்பட்டுள்ளேன். உடல்நிலை சரியில்லாத போது, அருகில் உள்ளவர்களிடம் கடன் கேட்க தயக்கமாக இருக்கும். எனவே, பல நேரங்களில் மருத்துவமனைக்கு செல்லாமலேயே இருந்து விடுவேன். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு எங்களுக்கும் முதியோர் உதவித்தொகை வழங்கி வாழ வைத்துள்ளார். நாங்கள் பிறந்த நாடு எங்களைக் கைவிட்டாலும், அடைக்கலம் கொடுத்து நிதியுதவியும் செய்த அம்மா அவர்களை மனதாரப் பாராட்டி நன்றி தெரிவிக்கிறேன்”.

**பெருமாள்புரம் அகதிகள் முகாமில் வசித்து வரும்**
**திருமதி அமராவதி (35) தெரிவிக்கையில்,**

“எனது கணவர் பெயர் தயானந்தன் (40) கூலி வேலை செய்து வருகிறார். எங்களுக்கு 2 ஆண் குழந்தைகளும், 1 பெண் குழந்தையும் உள்ளனர். நான் 9ஆம் வகுப்பு படித்து, தையலும் படித்துள்ளேன்.


அமராவதி

கூலி வேலை செய்துதான் அனைவரும் வாழ்ந்து வருகிறோம். தற்பொழுது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அகதிகள் முகாமில் வாழும் தையல் பயிற்சி பெற்ற பெண்களுக்கு விலையில்லா தையல் இயந்திரங்கள் வழங்கப்படும் என அறிவித்த செய்தி எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. தற்பொழுது எங்கள் கையில் விலையில்லா தையல் இயந்திரங்கள் கிடைத்தபொழுது இரட்டிப்பு மகிழ்ச்சியாக உள்ளது. விலையில்லா தையல் இயந்திரங்கள் வழங்கியது மட்டுமல்லாமல் தைப்பதற்கு சமூக நலத்துறையின் மூலம் ஆர்டர்களும் கொடுத்ததற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்றார்.

❖ ❖ ❖



# ஏழைப் பெண்களின் உணர்வுகளை மதிக்கும் "தாலிக்குத் தங்கம்" வழங்கும் உன்னதத் திட்டம்

தமிழகத்தில் எந்த ஒரு பெண்ணிற்கும் பொருளாதாரக் காரணங்களினால் அவர்களது திருமணம் தடைபடக்கூடாது என்ற உயர்ந்த நோக்கத்தில், தாய் உள்ளத்தோடு பெண்களின் எதிர்கால வாழ்க்கை ஒளிமயமாக அமைந்திட 10 மற்றும் 12ஆம் வகுப்புப் படித்த பெண்களுக்குத் தாலிக்கு 4 கிராமும், ரூபாய் 25 ஆயிரம் நிதியுதவியும் வழங்கும் திட்டத்தினை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்து சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள்.

**இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளிகள் நம்மிடம் பேசியபோது:**
**திருமதி சுபாங்கினி, காந்திகிராமம், கரூர்.**

"என் தந்தை பெயர் இராமச்சந்திரன், தாயார் பெயர் விஜயலெட்சுமி. எனக்கு 27.11.2011 அன்று திருமணம் நடைபெற்றது. என் தந்தை மிகவும் கஷ்டப்பட்டு படிக்க வைத்தார். எனது திருமணத்தை எண்ணி என் பெற்றோர்கள் கவலை அடைந்தனர். பொருளாதாரச் சூழ்நிலைதான் அதற்குக் காரணம். என் தந்தை டெய்லராகப் பணிபுரிந்து வருகிறார். என் பெற்றோர்கள் தங்கத்தின் விலை மற்றும் திருமணச் செலவை எண்ணி வருத்தமடைந்தனர். எங்களைப் போன்ற ஏழை மக்கள் திருமணம் நடத்துவது என்றால் கடினமான காரியம்.




அப்போது என் பெற்றோரிடம் நீங்கள் கவலைப்பட வேண்டாம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தாய் உள்ளத்தோடு என்னைப் போன்ற ஏழை, எளிய பெண்களின் திருமணம் தடைபடக் கூடாது என்பதற்காக தாலிக்கு 4 கிராம் தங்கத்துடன் கூடிய நிதியுதவியினை வழங்கி வருகிறார்கள் என்றேன். நான் பட்டப்படிப்பு படித்துள்ளதால் தாலிக்கு 4 கிராம் தங்கமும், ரூபாய் 50 ஆயிரம் நிதியுதவியும் கிடைத்தது. எனது திருமணம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் திருமண நிதியுதவித் திட்டத்தினால் சிறப்பாக நடைபெற்றது. ஏழை, எளிய மக்களின் உணர்வுகளை அறிந்து திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' எனத் தெரிவித்தார்.




**திருமதி பிரியதர்சினி, தாந்தோணி, கரூர்.**

“என் தந்தை பெயர் மாரிமுத்து, தாயார் பெயர் மகாலெட்சுமி. எனக்கு 16.09.2011 அன்று திருமணம் நடைபெற்றது. என்னுடைய தந்தை பெயிண்டிங் வேலை செய்து வருகிறார். மிகவும் கஷ்டப்பட்டு என்னை பட்டப்படிப்பு படிக்க வைத்தார். எந்தவித சிரமமும் இல்லாமல் என் திருமணத்தை என்னுடைய பெற்றோர்கள் நடத்தி முடித்தனர். காரணம் திருமணத்திற்கு தாலிக்கு 4 கிராம் தங்கமும் ரூபாய் 50 ஆயிரம் நிதியுதவியும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழங்கினார்கள். மீண்டும் மீண்டும் அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்க வேண்டும். எங்களைப் போன்ற ஏழைகளுக்குத் தாலிக்குத் தங்கமும், நிதியுதவியும் அளித்து உதவ வேண்டும். இன்று என் கணவரோடு மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், எனது குடும்பத்தினர் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று கூறினார்.

❖ ❖ ❖




# தமிழர்கள் நெஞ்சமெல்லாம் மகிழும் பொங்கல் தொகுப்பு பொருட்கள்

"வறியவர்களின் முகத்தில் வந்து மலரும் மகிழ்ச்சிக்கே என் வாழ்கையையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறேன் என்னும் துறவு மனத்தொண்டுள்ளமாய் நம் அம்மாவின் ஈகைக்கும், வாகைக்கும் இலக்கணமாகிறது தாய் ஆளும் தமிழகத்தில் அரங்கேறும் திட்டங்கள் பலவாகும்."

இத்திட்டங்களில் முத்தாய்ப்பாக விளங்கக்கூடிய திட்டமான பொங்கல் சிறப்புப் பரிசுத் தொகுப்பு பொருட்கள் மற்றும் விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம் அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. தமிழர்கள் தம் நெஞ்சமெல்லாம் மகிழ்ச்சியில் தாண்டவமாடும் அளவிற்குக் கொண்டாடப்பட வேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்துடன் அனைவரும் ஒன்று கூடி பொங்கலிட்டு சிறப்படைய ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரையுடன் ரூ.100/– ரொக்கப்பணமும் வழங்கப்பட்டுள்ளது.

**இத்திட்டத்தில் பயனடைந்த அரவக்குறிச்சி வட்டம், சின்னதாராபுரத்தைச் சேர்ந்த திருமதி ஜெயலட்சுமி அவர்கள் கூறுகையில்,**



“மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், என்னைப் போன்ற ஏழைக் குடும்பங்கள் சந்தோஷமாக வாழ வேண்டும் என்று நினைக்கக்கூடிய தங்க புண்ணியவதி அம்மா அவர்கள் இதுபோன்ற திருநாளில் சந்தோஷமாக வீட்டில் புத்தாடை அணிந்து பொங்கல் வைத்துக் கொண்டாட வேண்டும் என்று ஒரு தாய் தன் பிள்ளைக்கு எப்படி அழகு பார்ப்பார்களோ, அதே மாதிரி என்னைப் போன்ற பல குடும்பங்களுக்கு தாயாக இருந்து பல்வேறு உதவிகளை செய்து வரும் முதலமைச்சர் அம்மா அவர்கள் பல்லாண்டு வாழ வேண்டுமென கடவுளிடம் வேண்டிக் கொள்வேன்” எனத் தெரிவித்தார்.

**குளித்தலை வட்டம், வதியம் ஊராட்சி திரு. சண்முகம் அவர்கள் கூறுகையில்**



**சண்முகம்**

“எனது குடும்பம் வறுமையில் தினக்கூலி வேலை செய்து அன்றாட பிழைப்பு நடத்தி வருகிறோம். என்னைப் போன்றோருக்கு வருமானம் குறைவாக இருப்பதால் பொங்கல் போன்ற திருநாளைக் கொண்டாடுவது என்பது மிகவும் அரிதாகதான் இருந்து வந்தது. சமுதாயத்தில் எல்லோரையும் போல் திருநாளில் புத்தாடை அணிந்து சந்தோஷமாக பொங்கல் விழா கொண்டாட செய்த அம்மா அவர்களுக்கு நானும் எனது குடும்பமும் உயிர் உள்ளவரை நன்றியுள்ளவர்களாகவே இருப்போம்” எனத் தெரிவித்தார்.

❖ ❖ ❖

# திருநங்கையர்களின் வாழ்வில் ஒளியேற்றிய அம்மா

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" –

என்ற வள்ளுவத்திற்கிணங்க இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், எல்லோரும் சரிநிகராக வாழ வேண்டும். இதில் உயர்வு, தாழ்வு யாருக்கும் உருவாகக் கூடாது என்ற உயர்ந்த இலட்சியத்துடன் கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு வகையானத் திட்டங்கள் அறிவித்து பொருளாதார முன்னேற்றம் பெறும் வகையில் நலத்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அது மட்டுமின்றி திருநங்கையர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திடும் வகையிலும் சமுதாயத்தில் சரிநிகராக வாழ்வதற்குத் தேவையான அனைத்து வகையான உதவிகளையும் அரசின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் கரூர் மாவட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவுப்படி கிருஷ்ணராயபுரம் வட்டம் மணவாசி ஊராட்சியில் நான்கு ஆண்டுகளில் 44 திருநங்கைகளுக்கு அடையாள அட்டை வழங்கி இரண்டு சுயஉதவிக்குழுக்களுக்கு 25% மானியத்தில் ரூ.10 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டதுடன் தமிழகத்திலேயே முதன்முதலாக 29 திருநங்கைகளுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கி அதில் 20 திருநங்கைகளுக்கு பசுமை வீடுத் திட்டத்தில் வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளது. மேலும் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் தற்பொழுது ரூ.1 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெற்று தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து அவர்களுக்குள் சுயஉதவிக்குழு உருவாக்கப்பட்டு அதில் இரண்டு குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு சமூக நலத்துறையின் மூலமாகவே தொழிற்பயிற்சி வழங்கியதுடன் 25% அரசு மானியத்தில் இரண்டு குழுக்களுக்கும் தலா 5 இலட்சம் வீதம் வங்கிக்கடன் வழங்கி தற்பொழுது பாத்திரக்கடை, பெட்டிக்கடை, பால்வியாபாரம், கறவை மாடு மற்றும் ஆடு வளர்ப்பு மையங்கள் அமைத்து சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள். மேலும்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவித்து வழங்கப்பட்ட பல்வேறு திட்டங்களில் ஒன்றான விலையில்லா ஆடு வழங்கும் திட்டத்தில் 1 பயனாளிக்கு 4 ஆடுகள் வழங்கப்பட்டு இதன் மூலம் 20 ஆட்டுக்குட்டிகள் ஈன்று நல்ல முறையில் பாதுகாத்து அதன்மூலம் அவர்களின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்து வருகிறது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 44 திருநங்கைகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு அதன் மூலம் 2 பயனாளிகள் உயர் சிகிச்சைப் பெற்று பயன்பெற்றுள்ளார்கள். மேலும், 9 திருநங்கைகளுக்கு மாதம் ரூ.1,000/– வீதம் மாதாந்திர ஒய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் சமுதாயத்தில் திருநங்கையர்களின் பொருளாதார முன்னேற்றம் உயர்ந்து சிறப்பாக வாழ்ந்து வருகிறார்கள்.

**மணவாசி கிராமத்தைச் சேர்ந்த சுஜாதா அவர்கள் தெரிவிக்கையில்,**

“நான் இங்கு வசித்து வரும் திருநங்கையர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒருங்கிணைத்து குழு அமைத்து தலைவியாக செயல்பட்டு எங்கள் சகோதரிகளுக்குத் தேவையான உதவிகள் தொடர்பான மாவட்ட நிருவாகத்திடம் தெரிவித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கருணையோடு நலத்திட்டங்கள் பெற்று மிக நல்ல முறையில் இருக்கிறோம். எங்களைப் பொருத்தவரை பெற்றோர்கள், உறவினர்களால் என் சமுதாயமே ஒதுக்கி வைத்த நிலையில் ஏன் உயிரோடு வாழ வேண்டும் இறந்து விடலாம் என்ற நிலைக்கு தள்ளப்பட்ட நிலையில் என்னைப் போன்ற பலரின் நிலையை அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு எங்களையும் சமுதாயத்தில் சரிசமமாக வாழ முடியும் என்ற மனநிலையை மாற்றி எங்களின் தேவையை கருணையோடு கேட்டு எங்களுக்குக் கேட்ட உதவிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். என்னைப் போன்றவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கி சுயதொழில் தொடங்க வங்கியின் மூலம் கடனுதவி வழங்கப்பட்டு அதனடிப்படையில் சுயமாக பொருளாதாரத்தை


சுஜாதா

பெறுகின்ற நிலையை பெற்றுள்ளோம். அதுமட்டுமின்றி எங்களுக்கு குடும்ப அட்டை வழங்கி நியாய விலைக்கடையில் பொருட்கள் பெற்று வருகிறோம். தற்பொழுது வாக்காளர் அடையாள அட்டை வழங்கி நாங்கள் நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவிற்கு வாக்குச்சாவடிக்குச் சென்று வாக்களித்து வருகிறோம் என்றால் இதை விட வேறு என்ன வேண்டும், எங்கள் வாழ்நாள் முழுவதும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நலமுடன் இருக்க இறைவனை வேண்டிக்கொண்டு வாழ்ந்திடுவோம்'' என தெரிவித்தார்.

**மணவாசி கிராமத்தைச் சேர்ந்த சிநேகா அவர்கள் தெரிவிக்கையில்,**

''சமுதாயத்தில் எங்களை புறம்தள்ளி கேலிப்பொருளாக பார்த்து வந்த உலகத்தில் எங்களது வாழ்க்கையில் வெளிச்சமே வராதா என்று ஏக்கத்தோடு வாழ்ந்த நிலையில் எங்கள் முன்னே கடவுளாக முன்நின்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நானிருக்கிறேன் உங்களைப் பாதுகாக்க என்று எங்களை தாயுள்ளத்துடன் அரவணைத்து எங்களின் குறைகளை கேட்டறிந்ததுடன் ஒரு தாய் தன் பிள்ளைகளுக்கு என்னென்ன செய்ய நினைப்பார்களோ அதையெல்லாம் எங்களுக்கு செய்திட உத்தரவிட்டு அதுபடி எங்களுக்கு அடையாள அட்டை வழங்கியதுடன் வசிப்பதற்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டா வழங்கி அதில் வீடும் கட்டி எங்களைத் தங்க வைத்து அழகு பார்த்தது மட்டுமின்றி எங்களுக்கு சுயதொழில் செய்து பொருளாதாரம் முன்னேற்றம் பெறச் செய்ய வங்கியின் மூலம் கடனுதவி பெற்றுத் தந்து நான் மட்டுமின்றி என்னைப்போன்ற சகோதரிகள் அனைவரும் இன்றைக்கு சொந்த வீட்டில் வாழ்ந்து வருவதுடன் சுயமாக தொழில் செய்து சமுதாயத்தில் எங்களை சரிநிகராக தலை நிமிரச் செய்த தங்க மனம் கொண்ட கடவுள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களே'' எனக் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.


சிநேகா

❖ ❖ ❖



## ஏழ்மையில் வாடும் ஏழைகளுக்கு கறவைப்பசு வழங்கும் திட்டம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய குறு சிறு விவசாயிகளுக்கு வாழ்க்கை தரம் உயரும் பொருட்டு தமிழகத்தில் பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்து, இத்திட்டங்கள் அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு மிகவும் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் ஏழ்மையில் வாழும் ஏழைகளுக்கு கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளது.

**மல்லிநாயனப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த திருமதி ரெங்கம்மாள் க/பெ.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது.**

“என் பெயர் ரெங்கம்மாள், கணவர் பெயர் இராமச்சந்திரன். மல்லிநாயனப் பள்ளி கிராமத்தில் வசித்து வருகிறோம். எங்களுக்கு ஒரு மகன் இரண்டு மகள்கள் உள்ளனர். இரண்டு மகள்களுக்கும் திருமணமாகிவிட்டது. மகன் வெளியூரில் சென்ட்ரிங் வேலை பார்த்து வருகிறான். என் கணவர் விவசாய

கூலி வேலையும், நான் ஏரி வேலையும் செய்து பிழைப்பு நடத்தி வருகிறோம். இந்நிலையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி எங்களுக்குக் கறவைப் பசு கொடுத்தார்கள்.




இதைப் பெற்று நன்கு பராமரித்து இதற்கு பூசாபுல், வைக்கோல், அவ்வப்போது வெட்டுப்புல் கொடுத்து வளர்த்து வருகிறோம்.

பசு வாங்கியபோது முதல் தடவையாக காலை 6 லிட்டர், மாலை 6 லிட்டர் பால் கறக்கப்பட்டு நாள் ஒன்றுக்கு 12 லிட்டர் வீதம் கூட்டுறவு சங்கத்திற்கு ஊற்றப்பட்டு வருகிறது. இதன் மூலம் மாதம் ரூ.7,000 கிடைக்கிறது. அம்மா கொடுத்து 2 ஆண்டுகள் ஆகிறது. முதல் தடவை பெண் கன்று ஈன்றது. அதை விற்காமல் அந்த கன்று தற்பொழுது வளர்ந்த நிலையில் 2 மாத சினைப் பருவம் அடைந்துள்ளது. தற்பொழுது தாய் பசுவானது 2ஆவது தடவையாகவும் பெண் கன்று ஈன்றுள்ளது.

எங்கள் குடும்ப வருமானத்தை உயர்வதற்கு கறவைப் பசு வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எங்கள் குடும்பமே நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்'' எனப் பயனாளி மகிழ்ச்சியோடு தெரிவித்தார்.

**மல்லிநாயனப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த திருமதி லிங்கம்மாள் க/பெ. வீரபத்ரன் தெரிவித்ததாவது.**

''என் பெயர் லிங்கம்மாள் (வயது 40), கணவர் வீரபத்ரன் (வயது 54), மல்லிநாயனப்பள்ளியில் வசித்து வருகிறோம். எங்களுக்கு 2 மகன்கள். சொந்தமாக 1 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் சோளப்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஏழ்மையில் இருந்த எங்களுக்கு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கன்றுடன் கறவைப்பசு கொடுத்தார்கள். முதல் தடவையாக அந்தப் பசு தினமும் காலை மாலை என 10 லிட்டர் பால் கொடுத்தது அதற்கு தீவனமாக பூசா புல், தட்டு, உளுந்து, பச்சைப்புல் கொடுத்து நல்ல முறையில் பாவனை செய்து குழந்தை போல் வளர்த்து வருகிறோம். 2ஆவது முறையாக கன்று ஈன்றதில் காலை, மாலை 2 வேலையும் கறக்கிறது. இதனை 4 லிட்டர் பால் கூட்டுறவு சங்கதிற்கும், 5 லிட்டர் வீடுகளுக்கும் விற்பனையும் செய்து

குடும்ப வருமானத்திற்கு ஈடுகட்டும் அளவிற்கு நாங்கள் பாடுபடுகிறோம், தற்பொழுது எவ்வளவோ சந்தோசமாக இருக்கிறது.


லிங்கம்மாள்

இவற்றை விற்காமல் வளர்த்து பால் ஊற்றி குடும்ப பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்வோம். கறவைப் பசு கொடுத்த அம்மா அவர்களுக்கு கோடான கோடி நன்றி தெரிவிக்கிறோம்''.

**மல்லிநாயனப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த திருமதி சரிதா க/பெ. கோவிந்தசாமி தெரிவித்ததாவது.**

''என் பெயர் சரிதா (வயது 35), கணவர் பெயர் கோவிந்தசாமி (வயது 42), சிப்பாயூர் கிராமத்தில் வசித்து வருகிறோம். எனக்கு 2 மகன்கள், 1 மகள் இருக்கிறார்கள், அவர்கள் பள்ளியில் படித்து வருகிறார்கள். நான் விவசாய கூலி, ஏழ்மையில் இருந்த எங்களுக்கு முதல்வர் அம்மா அவர்கள் எங்களுக்கு கறவைப்பசு கொடுத்தார்கள். இதன்மூலம் கிடைக்கும் பாலினை அருகாமையில் உள்ள பால் சென்டரில் விநியோகம் செய்து வருகிறோம். இதனால் எங்களுக்கு மாதம் ரூ.7,000 லிருந்து ரூ.8,000ம் வரை வருமானம் வருகிறது. கறவை மாடுகளை பெருக்கி குடும்ப செலவிற்கும், குழந்தைகளின் செலவிற்கும் நாங்கள் ஈடுகட்டிக் கொள்வோம். நாங்கள் என்றென்றைக்கும் முதல்வர் அம்மா அவர்களை மறக்க மாட்டோம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எங்கள் குடும்பமே நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம்''.


சரிதா

❖ ❖ ❖

# யானைப் புகா தடுப்புப் பள்ளம் மற்றும் சூரிய மின்வேலித் திட்டங்களால் முழுப் பாதுகாப்பு பெறும் மலைவாழ் மக்கள்

**கி**ழக்குத் தொடர்ச்சி மலைத்தொடரின் அடிப்பகுதியில் அமைந்துள்ள இயற்கை எழில்மிக்க மாவட்டமான கிருஷ்ணகிரி மூன்றில் ஒரு பகுதி வனப்பகுதியாகவும், இரண்டு பகுதி விவசாய விளைநிலங்களாகவும், வானம் பார்த்த பூமியாகவும் விளங்குகிறது. வனத்துறையால் சிறப்பாகப் பாதுகாக்கப்படுவதோடு வன வளம் பெருகவும், மக்கள் வாழ்க்கைத் தரம் உயரவும், வன உயிரினங்களைப் பாதுகாக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையோடு அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்கள் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

காப்புக் காடுப் பகுதிகளில் வன விலங்குகளை வேட்டையாடுவதைத் தடுக்கவும், வனப் பொருட்கள் திருடுபோவதைத் தடுக்கவும், வன விலங்குகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும், ராசிமணல், உகினியம், தெப்பக்குழி, பாலகடாபள்ளம், ஆணைபெத்தஹல்லா, தேவர்பெட்டா, ஜவளகிரி, கெம்பக்கரை, தாவரக்கரை ஆகிய இடங்களில் வேட்டைத் தடுப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் சுழற்சி முறையில் வன அலுவலர்கள் கண்காணிக்கின்றனர். யானைகளின் நடமாட்டம் கண்காணிக்கப்பட்டு உடனடியாக அருகில் உள்ள கிராம மக்களுக்கு ஒலி பெருக்கி பொருத்திய வாகனத்தின் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு, பொது மக்கள் எச்சரிக்கப்படுவதால் மனித உயிரிழப்பு நிகழா வண்ணம் கட்டுப்படுத்தப்படுகிறது.


மாதப்பா

**குத்துக்கோட்டா ஊர் கவுண்டர் திரு. மாதப்பா கூறும்போது,**

“நாங்கள் பல தலைமுறையாக இங்குதான் வாழ்கிறோம். 10 ஆண்டுகளாகவே யானைகள், காட்டுப்பன்றிகள் மற்றும் வன விலங்குகளின் தொல்லை எங்களுக்கு மிக அதிகமாக உள்ளது விவசாயப் பயிர் ஒன்றைக் கூட விடுவதில்லை. அத்தனையும் அழித்து சேதப்படுத்துகிறது. இங்கு மின் வேலி அமைத்ததால் தற்சமயம் யானைகளின் நடமாட்டம் முற்றிலும் குறைந்துள்ளது. இந்த ஆண்டு எங்களின் உழைப்பால் வேளாண்மைப் பயிர் முழுமையாக எடுக்கப்பட்டு அதிக இலாபம் கிடைத்துள்ளது. இதற்காக புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என் ஊர் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்”, என்றார்.

**பாலகிடாபள்ளம் விவசாயி திருமதி குந்து தெரிவிக்கும்போது,**



குந்து

“எங்கள் ஊரில் நீரோட்டமுள்ள பள்ளத்தின் குறுக்கே ரூ.5 இலட்சம் செலவில் பெரிய குட்டை அமைத்துள்ளார்கள். வருடம் முழுவதும் இதில் உள்ள தண்ணீரைக் குடிக்க யானை, மான், பன்றி போன்ற மிருகங்கள் வந்துக்கொண்டே இருக்கும். இக்குட்டையினால் எங்கள் பகுதியில் நீர் மட்டம் மேலே உயர்ந்துள்ளது. இதனால் எங்களால் விவசாயம் செய்ய முடிகிறது. இக்குட்டை அமைத்துத் தந்த அம்மாவுக்கு நாங்கள் நன்றி சொல்லுகிறோம்,” என்றார்.

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

ஏழை எளியோர், ஆதரவற்றோர், முதியோர், விதவைகள், நலிவுற்ற பிரிவினர், ஆகிய சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்குக் கைகொடுத்து, அவர்களை உயர்த்த வேண்டும் என்பதில், நான் அளவற்ற அக்கறை கொண்டுள்ளேன்.



## உயிர் காக்கும் உன்னத திட்டம்!
## விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்!

**மா**ண்புமிகு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டம் ஏழை, எளிய குடும்பங்களுக்கு ஆண்டு வருமானம் ரூ.72,000/–க்கு கீழ் உள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயன்படும் வகையில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்திற்கு வருடம் ரூ.1 இலட்சம் வீதம் 4 வருடங்களுக்கு ரூ.4 இலட்சம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதோடு சில குறிப்பிட்ட சிகிச்சை முறைகளுக்கு ஒரு வருடத்திற்கு ரூ.1.50 இலட்சம் வரையும், பச்சிளங் குழந்தைகளுக்கான சிகிச்சை முறை உட்பட 1,016 சிகிச்சை முறைகளுக்கும் 113 தொடர் சிகிச்சை வழிமுறைகளுக்கும் மற்றும் 23 அறிதல் முறைகளுக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**கிருஷ்ணகிரி மாவட்ட ஆவத்துவாடி கிராமத்தைச் சார்ந்த வேங்கையன் தனது மகள் செல்வி கௌதமி இருதய சிகிச்சை செய்து நல்ல நிலையில் உள்ளதை நினைத்து நெஞ்சம் நெகிழ பேசியதாவது.**



*வேங்கையன்*

“நான் ஆவத்துவாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது மகள் கௌதமி (வயது 9), 4ஆம் வகுப்பு படித்து வருகிறாள். அவள், ஆரம்பத்தில் தலை கிறுகிறுப்பு, மயக்கம், நெஞ்சுவலி, சோர்வை போன்ற காரணங்களால் அவதிப்பட்டு வந்தாள். அருகில் உள்ள காரிமங்கலம் தனியார் மருத்துவரை அணுகினோம். அவர் தருமபுரியில் உள்ள தனியார் இருதய மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார். அங்கு ஸ்கேன் மற்றும் மருத்துவ பரிசோதனைகள் செய்து இருதயத்தில் பிரச்சினை இருப்பதாக தெரிவித்து உடனடியாக இருதய மருத்துவமனைக்கு சென்றால் சரிசெய்யலாம் என அறிவுரை கூறினார். அதன்படி மருத்துவமனைக்குச் சென்றோம். அங்கு காப்பீட்டு அட்டை, குடும்ப அட்டை, ஆதார் அட்டை மற்றும் கிராம நிருவாக அலுவலர் சான்று கோரினர். கிராம நிருவாக அலுவலர் சான்றுடன் உரிய ஆவணங்கள் கொடுத்த பிறகு அறுவை சிசிக்சை செய்து முடித்தார்கள். தற்பொழுது எனது மகள் நன்றாக இருக்கிறாள். முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் தான் எனது மகள் உயிரை காப்பாற்றியது. இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் 82,500 ரூபாயை அரசு செலவு செய்துள்ளது. உயிரைக் காக்கும் திட்டத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என்றுமே நன்றிக் கடன்பட்டிருக்கிறோம்” என தெரிவித்தார்.

❖ ❖ ❖



## திருமண உதவித்தொகை மற்றும் தாலிக்குத் தங்கம் பெற்ற ஏழைப் பெற்றோரின் நன்றிப் பெருக்கு!

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து அதனைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். அவற்றில் முதன்மையானது படித்த ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு உதவித்தொகையும், தாலிக்குத் தங்கமும் வழங்கும் திட்டமாகும். 10 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு ரூ.25,000/– உதவித்தொகை மற்றும் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கமும், அதேபோல் பட்டம் மற்றும் பட்டயப்படிப்பு படித்த ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/– உதவித்தொகை மற்றும் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலுடன் தொடர்ந்து சிறப்புடன் செயல்படுத்தப்படும்**

**இத்திட்டத்தின் கீழ் திருமண நிதியுதவியுடன் தாலிக்குத் தங்கம் பெற்ற பயனாளிகளிடம் திட்டத்தின் பயன் குறித்துக் கேட்ட போது பர்கூர் வட்டம் மல்லப்பாடி கிராமத்தைச் சேர்ந்த திருமதி காஞ்சனா (க/பெ. சுப்பிரமணி) தெரிவித்ததாவது:–**



காஞ்சனா

“நான் மல்லப்பாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். கணவர் மற்றும் மூன்று குழந்தைகள் ஆக 5 பேர் கொண்ட குடும்பம். என் கணவர் கூலித் தொழில் செய்து வருகிறார். மூத்த மகள் மோனிகாவை 12ஆம் வகுப்பு வரை படிக்க வைத்தேன். எனது மகன் ஜெகன் பட்டப்படிப்பு படிக்கிறார். கடைசிப் பெண் சோனியா பி.காம், படிக்கின்றார். நானும் என் கணவரும் கூலி வேலை செய்து இவர்களைப் படிக்க வைக்கிறோம். மூத்த பெண்ணுக்குத் திருமண நிதி உதவித் திட்டத்தில் விண்ணப்பித்தேன். இதன்மூலம் 4 கிராம் தங்கம் மற்றும் திருமண நிதி உதவி கிடைத்துள்ளது. இந்த நிதி உதவியை வழங்கிடக் காரணமாய் இருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”

வசதி படைத்தவர்கள் மட்டுமே தங்கத்தாலி, சீர்வரிசைகள் செய்து சிறப்பாகத் திருமணம் நடத்தும் காலத்தில் அவர்களுக்கு இணையாக ஏழை, எளிய பெண்களும் திருமணம் செய்து கொள்ள தாலிக்குத் தங்கத்துடன் நிதி உதவியை வழங்கி ஏழை மக்களின் வாழ்க்கையை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்லும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஏழை எளியோர் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து வருகிறார்கள்.

❖ ❖ ❖

# கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திய புது வாழ்வுத் திட்டம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், வறுமை இல்லாத தமிழகத்தை உருவாக்கும் வகையில் தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கீழ் உலக வங்கி நிதி உதவியுடன் புதுவாழ்வு எனும் வறுமை ஒழிப்புத் திட்டத்தை 2005ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் 16 மாவட்டங்களில் 70 ஊராட்சி ஒன்றியங்களில் 2,517 ஊராட்சிகளில் ரூ.717 கோடி நிதி உதவியுடன் செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டத்தின் சிறப்பான செயல்பாட்டின் விளைவாக கூடுதலாக ரூ.950 கோடி நிதி உதவியுடன் மேலும் 10 மாவட்டங்களில் உள்ள 50 ஊராட்சி ஒன்றியங்களுக்கு திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் 5 ஒன்றியங்களில் 26,724 மிகவும் ஏழைக் குடும்பங்களும், 34,590 ஏழைக்குடும்பங்களும், 6,438 நலிவுற்றோர் குடும்பங்களும், 8,549 மாற்றுத்திறனாளிகளும்; இத்திட்டத்தில் பயன்பெறுகின்றனர். மேலும் இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சி குறித்து இலகுரக ஓட்டுநர் பயிற்சி, கனரக ஓட்டுநர் பயிற்சி, செவிலியர் உதவியாளர் பயிற்சி, வெல்டிங் பயிற்சி, எலக்ட்ரீசியன் பயிற்சி, இருசக்கர வாகனம் பழுதுபார்த்தல், அழகு கலை பயிற்சி, கணினி, டேலி டி.டி.பி. கொத்தனார், ஜே.சி.பி. பயிற்சி, உணவக மேலாண்மை பயிற்சி, சி.என்.சி. மெசின் ஆப்ரேட்டர், தையல் மற்றும் கார்மெண்ட்ஸ் உள்ளிட்ட 13 வகையான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து குழுக்களுக்கும் தேவையான வங்கியிணைப்பு பெற்றுத் தருதல். மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு திட்டம் மூலம் நேரடிக் கடனுதவி அளித்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல் மற்றும் கிராமப்பகுதிகளில் சிறுதொழில்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி நிதி உதவி அளித்தல் ஆகியவற்றிற்கு கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு மொத்த உத்தேச ஒதுக்கீடு ரூ.73 கோடியாகும்.

**இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளி, தேன் எடுத்து பிழைப்பு நடத்தும் இருளர் இனத்தை சேர்ந்த மாரம்மாள், முனியம்மாள், ராஜம்மாள் தெரிவித்ததாவது :**



*மாரம்மாள், முனியம்மாள், ராஜம்மாள்*

“நாங்க அத்திமுகம்; மலை பக்கத்திலேயே இருக்கிறோம். எங்கள் தொழில் தேன் எடுத்தல், 100 நாள் வேலைக்குச் சென்று வருகிறோம். எங்க குடும்பத் தலைவருக்கு கொத்தனார் பயிற்சியும் சொல்லித்தராங்க. நாங்க குழு ஆரம்பிச்சு ஒரு மாதம் தான் ஆகுது. 3 மாதம் ஆனபிறகு தான் நிதி கொடுப்பாங்க. அதைப் பெற்று நாங்க எங்கள் ஊர் பகுதியில் டீக்கடையும், பெட்டிக்கடையும் வைக்க உள்ளோம். என மகிழ்ச்சியோடு தெரிவித்ததோடு எதுவுமே தெரியாம இருந்த நாங்க இந்தச் சங்கத்துல சேர்ந்த பிறகு லோன் குறித்தும் இதர கடன் குறித்தும் தெரிந்துக்கொண்டோம். பள்ளி செல்லாத எங்களுக்கு சங்கத்தில் சேர்ந்த பிறகு எங்களது கையெழுத்தை நாங்களே போடுகிறோம். எங்களுக்குக் கடன் உதவி வழங்கிய அம்மா அவர்களுக்கு நன்றியை சொல்கிறேன்”.

**கடன் தொகை மூலம் மளிகைக் கடை வைத்து வருமானம் ஈட்டும் பயனாளி திருமதி ரேவதி தெரிவித்ததாவது.**

“நான் வறுமை ஒழிப்பு சங்கத்தில் கடந்த 1½ ஆண்டுகளாக இருந்து வருகிறேன். எனது மகன் மாற்றுத்திறனாளி, சங்கத்தில் உறுப்பினராக சேர்க்கப்பட்டு குழுக்களின் மூலம் கடன் தொகை ரூ.50,000/–

கொடுத்தார்கள். சொந்தக் கட்டடத்தில் வைத்து சிறிய அளவில் காய்கறி வியாபாரம் செய்து வந்த நான் தற்பொழுது தமிழக அரசினுடைய புதுவாழ்வுத் திட்டத்தின் கீழ் வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் எனக்கு கொடுத்த கடனுதவித் தொகையை வைத்து சிறிய அளவில் மளிகை கடை வைத்துள்ளேன். தற்பொழுது நாள் ஒன்றுக்கு ரூ.500/– முதல் ரூ.700/– வரை விற்பனையாகிறது. எங்களது குடும்ப பொருளாதாரம் குடும்ப வருமானம் உயர்ந்துள்ளது. இதற்கு நாங்கள் என்றைக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறோம்''.

**சைக்கிள் கடை வைத்துள்ள திருமதி சுசீனா நாஷீர்பாய் தெரிவித்ததாவது**

''நான் புது வாழ்வுத் திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுவில் கடந்த ஒரு வருடமாக உறுப்பினராக இருந்து வருகிறேன். எனக்கு சங்கத்தின் மூலம் கடன் உதவித் தொகை ரூ.20,000/– கொடுத்தார்கள். அதனைப் பெற்று நானும், எனது கணவரும் சிறிய அளவில் 5 சைக்கிள் வைத்து பஞ்சர் போடுதல், சைக்கிள் வாடகை விடுதல், வீல் சரி செய்தல் போன்றப் பணிகளை செய்து வருகிறோம். கடன் பெறுவதற்கு முன்பாக 5 சைக்கிள் மட்டுமே இருந்தது. கடன் பெற்ற பிறகு 10 சைக்கிள் உள்ளது. நாள்தோறும் வாடகைக்கு மணிக்கு ரூ.5/– பெற்று சைக்கிள் கடையினை நன்றாக நடத்தி வருகிறோம். இந்த உதவி மூலமாக எங்களது வருமானம் தினமும் ரூ.400/– முதல் ரூ.500/– வரை கிடைக்கிறது. இதை நன்றாகப் பயன்படுத்தி வாழ்க்கை பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்வோம். கடனுதவி வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்''.


சுசீனா நாஷீர்பாய்

❖ ❖ ❖



# நாகப்பட்டினம் மீனவர்களின் வாழ்வில் வசந்தம் வீசும் திட்டங்கள்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்து செயல்படுத்திய திட்டங்கள் ஏராளம் ஆகும். மீன்வளம் பெருக்கவும், மீனவர் நலம் காக்கவும் நாகப்பட்டினத்தில் ரூ.35 கோடி மதிப்பில் மீன்வள பல்கலைக்கழகம் அமைத்ததுடன், மேலும், ரூ.380 கோடி மதிப்பில் ஆழ்கடல் கப்பலனை மற்றும் பசுமைச் சூழலுடன் கூடிய துறைமுகம் அமைக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். மீனவர் தடைக்கால உதவித் தொகையை ரூ.2



தென்னழகி

ஆயிரம் ஆக உயர்த்தி வழங்கினார்கள். மீன்பிடி குறைந்த காலத்திற்கு ரூ.4 ஆயிரம் ஆக வழங்கியும், மீனவர் நலனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காத்து வருகிறார்கள்.

**நாகப்பட்டினம் மாவட்டம், செருதூர் மீனவக் கிராமத்தைச் சேர்ந்த திருமதி தென்னழகி, க/பெ. பழனிவேல் என்பவர் கூறுகையில்,**

“ஏப்ரல் 15 முதல் மே 29 வரை மீன்பிடிக்கத் தடை விதிக்கப்படும். மீன்பிடித் தொழில் தவிர வேறு தொழில் தெரியாத காரணத்தால் மீன்பிடித் தடைக் காலங்களில் வேறு எங்கும் வேலைக்குச் செல்ல இயலாது. சாப்பாட்டுக்கே மிகவும் கஷ்டமான நிலை. அந்த 45 நாட்களுக்கும் மீனவ மக்கள் கஷ்டப்படக்கூடாது என்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ரூ.2 ஆயிரம் உதவித் தொகை வழங்க உத்தரவிட்டார்கள். இந்தத் தொகை எங்களின் பசியைப் போக்க உதவுகிறது. அதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்” என்று கூறினார்.


சரவணன்

**நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், ஆறுகாட்டுத்துறை மீனவக் கிராமத்தைச் சேர்ந்த திரு. சரவணன், த/பெ. சுந்தரேசன் என்பவர் கூறுகையில்,**

“மீன்பிடிப்புக் குறைந்த பருவமழைக் காலங்களில் முற்றிலும் கடலுக்குச் செல்ல முடியாது. மழைக்காலம் என்பதால் வேறு வேலையும் கிடைக்காது. இவற்றை எல்லாம் கவனித்த நமது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ரூ.4 ஆயிரம் நிவாரணம் வழங்க உத்தரவிட்டு, அதனைப் பெற்று நாங்கள் மழைக் காலங்களில் நிம்மதியாக வாழ்க்கை நடத்துகிறோம்” என்றார்.

❖ ❖ ❖

# புதிய வரலாறு படைக்கும் "அம்மா திட்டம்"

**ம**க்களைத் தேடி வருவாய்த்துறையே நேரில் சென்று மக்களின் கோரிக்கையை நிறைவேற்றித்தரும் "அம்மா திட்டம்" வாரந்தோறும் ஒவ்வொரு செவ்வாய்கிழமை அன்று வட்டாட்சியர் தலைமையில் நடத்தப்படுகிறது. இந்த முகாமில் அனைத்து வகையான ஓய்வூதியம், பட்டா மாறுதல், உழவர் பாதுகாப்பு அட்டை, பிறப்பு இறப்புச் சான்று, சாதி, வருமானம் மற்றும் இருப்பிடச் சான்றிதழ், குடும்ப அட்டை வழங்குதல் ஆகிய கோரிக்கைகள் அடங்கிய விண்ணப்பங்கள் ஆய்வு செய்து தகுதியான நபர்களுக்கு அன்றைய தினமே நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

**நாமக்கல் மாவட்டத்தில் அம்மா திட்டம் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் நெஞ்சம் நிறைந்த மகிழ்ச்சியுடன் கூறியதாவது:**

### திருமதி சின்னம்மாள் (வயது 70), வகுரம்பட்டி


*சின்னம்மாள்*

"நான் வயல்வெளிகளுக்குச் சென்று கூலிவேலை செய்து வந்தேன். எனக்கு ஒரு மகன் உள்ளார். எனது மகனும் கூலி வேலைக்கு தான் சென்று கொண்டிருக்கிறார். அம்மா அவர்களால் வழங்கப்பட்டு வரும் ரேசன் அரிசியை வாங்கி சாப்பிட்டு வந்தேன். வயதான காலமாக இருப்பதால் எனக்கு தொடர்ந்து கூலி வேலையும் கிடைப்பதில்லை. தற்போது என்னால் கூலிவேலைக்கு செல்ல முடியவில்லை. அப்போது தான் எனது கிராமத்தைச் சேர்ந்தவர்கள் நமது ஊரில் "அம்மா திட்ட முகாம்" நடைபெறும் என்றும் அதில் மனு கொடுக்குமாறும் கூறினார்கள். நானும் அங்கிருந்த அரசு அலுவலரிடம் என் மனுவைக் கொடுத்தேன். அப்போதே என் மனுவை பரிசீலினை செய்து அன்றைய தினமே எனக்கு மாதம் ரூ.1,000 முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான ஆணையும் கொடுத்தார்கள். வயதான காலத்தில் பெற்ற தாயை கவனிப்பது போல் எங்களுக்கு மாதாமாதம் உதவித்தொகை கிடைக்க உத்தரவு வழங்கிய

அம்மா அவர்களுக்கு என் வாழ்நாள் முழுவதும் கடமைப்பட்டிருப்பேன்'' என்று கண்ணீர் மல்க கூறினார்.


கொண்டன்

**திரு. கொண்டன் (வயது 65) வகுரம்பட்டி, .**

''நான் வயல்காட்டில் கூலிவேலைக்குப் போய் அதில் கிடைக்கும் குறைந்த சம்பளத்தைக் கொண்டு பிழைப்பு நடத்தினேன். எனக்கு ஒரு மகனும் உள்ளார். எனக்கு வயதானதால் கூலி வேலைக்கும் செல்லமுடியாத நிலை இருந்தது. வறுமையின் பிடியில் இருந்த நான் இனி என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தேன். அப்போதுதான் எங்கள் ஊரில் அம்மா திட்ட முகாம் நடைபெறும் என தண்டோரா போட்டார்கள். நானும் ஒரு மனு எழுதி அங்கிருந்த அரசு அதிகாரி ஒருவரிடம் கொடுத்தேன். என் விண்ணப்பத்தை அங்கேயே விசாரணை நடத்தி எனக்கு மாதம் ரூ.1,000 முதியோர் உதவித்தொகை வழங்க உத்தரவு ஆணையை வழங்கினார்கள். எனக்கு கண்ணீரே வந்து விட்டது. யாரும் உதவி செய்திடாத நிலையில் இருந்த எனக்கு மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்கிய அந்த அம்மாவுக்கு எனது குடும்பமே என்றென்றும் கடமைப்பட்டிருக்கும்'' என்று கண்ணீர் மல்க கூறினார்.

நாமக்கல் மாவட்டத்தில் 5 வட்டாட்சியர் தலைமையிலான குழுக்கள் அனைத்து ஊராட்சி ஒன்றியத்திலும் வாரந்தோறும் ஒரு வருவாய் கிராமத்தில் முகாம் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள் பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று பரிசீலிக்கப்பட்டு அன்றைய தினமே உரிய தீர்வுகள் பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

இன்றைய குழந்தைகளே நாளைய சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள் ஆவர். சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி ஆகியவற்றை எவ்வித இடர்ப்பாடும் இன்றி பெற்று மகிழ்ச்சி நிறைந்த சூழ்நிலையில் வளரும் குழந்தைகளே வளமான மற்றும் வலிமையான தலைமுறையினராக உருவாகின்றனர்.

# வேதனையின் விளிம்பில் இருந்த விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம்

**வ**றட்சியிலிருந்து மக்களைக் காக்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி பாதிக்கப்பட்ட விவசாய பெருங்குடி மக்களுக்குத் தேவையான வறட்சி நிவாரணம் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் நேரடியாக பயனாளிகளின் வங்கிக் கணக்குக்கே இந்த நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.

**நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் ஒன்றியம், புதுப்பாளையம் அக்ரஹாரம், கரட்டாங்காட்டை சோந்த விவசாயி திரு.ரா. சுப்பிரமணியம், இந்திராணி தம்பதியர் கூறியதாவது:**

“எங்களுக்கு 3 ஏக்கர் நஞ்சை நிலம் உள்ளது. அதில் 1 ஏக்கர் நிலத்தில் நெல் மற்றும் பயிர் வகைகள் பயிரிட்டு வந்தோம். தற்பொழுது மழைக் குறைவு காரணமாக நிலத்தடி நீர் குறைந்ததால் கிணறு வறண்டுவிட்டது. பயிரிடப்பட்ட நெல் சிறிது சிறிதாக கருகிக் கொண்டே வந்தது. நெல் பயிர்கள் கருகுவதைப் பார்த்து எங்கள் உள்ளமும் உருகியது. வருடம் முழுவதும் சாப்பாட்டிற்கு நெல் கிடைத்துவிடும். ஆனால் இந்த ஆண்டு என்ன செய்வது என்று வேதனைப் பட்டுக்கொண்டிருந்த வேளையில் நான் இருக்கிறேன் உங்கள் துயர் துடைக்க என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணம் அளிப்பதாக அறிவித்ததைக் கேட்டு சந்தோஷப்பட்டோம். அதன்படி கிராம நிர்வாக அலுவலர்,



ரா. சுப்பிரமணியம் – இந்திராணி

வருவாய் அலுவலர், வேளாண் அலுவலர்கள் வந்து பாதிக்கப்பட்ட பயிரை பார்வையிட்டு சென்றனர். பின்னர் எங்களுக்கு வறட்சி நிவாரணம் கிடைத்திருப்பதாக சொன்னார்கள். நாங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் மூலம் நிவாரணம் பெற்றோம். எவ்வித இடையூறும் இல்லாமலும், அலைச்சல் இல்லாமலும் எங்களுக்கு ரூ.3,500 நிவாரணம் வழங்க ஆணையிட்ட அன்னையை நாங்கள் வாழ்நாள் முழுவதும் வாழ்த்த கடமைப்பட்டுள்ளோம்'' என மகிழ்ச்சி பொங்கக் கூறினார்கள்.

**புதுப்பாளையம் காட்டூரைச் சேர்ந்த விவசாய தம்பதியர் சுப்ரமணி பாக்கியலட்சுமி அவர்களை சந்தித்தபோது நெகிழ்வுடன் கூறியதாவது:**


*பாக்கியலட்சுமி – சுப்ரமணி*

''எங்களது 4 ஏக்கர் நிலத்தில் 1 ஏக்கருக்கு மேல் நெல் தென்னை மற்றும் பயிர் வகைகள் பயிரிட்டு வந்தோம் இந்நிலையில் மழை குறைவாலும் காவிரி நீர் கிடைக்காததாலும் பயிர்கள் பாதிக்கு மேல் கருகிவிட்டன. இதனைப் பார்த்து நாங்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த வேளையிலேதான் கருணையுள்ளம் கொண்ட அம்மா அவர்கள், இயற்கை அன்னை மழை தராது போனாலும் நான் காக்கிறேன் உங்களை என்று வறட்சி நிவாரணம் ரூ.4,500/– வழங்கி எங்களை வாழவைத்த அன்னையை ஆயுள் முழுதும் வாழ்த்துவோம்'' என்று உணர்ச்சி பொங்கக் கூறினார்.

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

''உங்கள் அன்பும், உங்கள் பாசமும் ஒரு கோடி தடைகளை உடைத்தெறிகின்ற வல்லமையை எனக்குத் தருகின்றன. சக்தி என்பது மக்கள் சக்தி தானே ? மின் சக்தி என்றாலும், காந்த சக்தி என்றாலும், அணுசக்தி என்றாலும் அவை எல்லாம் மக்கள் சக்திக்கு அப்புறம்தான் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

# ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திய கறவைப் பசு மற்றும் உலர்த் தீவனத் திட்டம்!

**வே**ளாண் பெருமக்களுக்கு கூடுதலாக வருமானத்தை தொடர்ச்சியாக தரக் கூடியது கால்நடை வளர்ப்புத் தொழிலாகும். எனவே தான் தமிழக அரசு கால்நடை வளர்ப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து ஏழைப் பெண்களுக்குக் கறவை மாடுகளையும், ஆடுகளையும் வழங்கி வேளாண்மை சார்ந்த கூலித் தொழிலாளர்களும் பொருளாதார மேம்பாடு அடைய இத்தகையத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றது.

**இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற எலச்சிபாளையம் ஒன்றியம் மண்டகப்பம்பாளையம் ஊராட்சி கொசவம்பாளையம் அருந்ததியர் காலனி திருமதி கலைச்செல்வி (வயது 29) க/பெ. சீரங்கன்**

“நான் 5ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு 2 குழந்தைகள் உள்ளனர். எனது கணவர் அருகிலுள்ள நூற்பாலைக்கு அவ்வப்போது கிடைக்கும் தினக்கூலி வேலைக்கு சென்று கொண்டிருக்கிறார். அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு குடும்பம் நடத்தவே மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தோம். கடந்த 2012ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வாங்கும் திட்டத்தின் மூலம் எனக்கு கறவை மாடு அளித்தார்கள். இந்தக் கறவை மாட்டுக்குத் தேவையான உலர்த் தீவனங்களை வழங்கி வருவதால் பால் கொள்முதல் மற்றும் பணப் பட்டுவாடா செய்து நல்ல நிலையில் வாழ்ந்து வருகிறோம்.


கலைச்செல்வி

பெண்களால் தான் மாநிலமும் வீடும் வளர்ச்சி பெறும் என்பதை மனதில் கொண்டு குறைவான படிப்பறிவே உள்ள எனக்கு ஒரு தொழிலையும் வருமானத்திற்கு வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்து என்னைப் போல

ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நீடுழி வாழ வேண்டும் என வாழ்த்துவதோடு அம்மா அவர்களுக்கு நாங்கள் என்றென்றும் நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்போம்'' எனக் கூறினார்.

**நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் ஒன்றியம், மண்டகப்பம்பாளையம் ஊராட்சி, கொசவம்பாளையம் அருந்ததியர் காலனியில் வசிக்கும் திருமதி சரஸ்வதி (வயது 40) க/பெ. பெரியசாமி (லேட்)**


*சரஸ்வதி*

''எனது கணவர் இறந்து 10 வருடங்களாகிறது. எனக்கு 2 மகன்கள் உள்ளனர். பிழைப்புக்கு என்ன செய்வது என மனம் வேதனையுடன் இருந்த போது தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எங்களுக்கு கறவை மாடு இலவசமாக கொடுத்து அதற்கு வைக்கோலும் குறைந்த விலையில் கொடுத்து உதவுனாங்க. எங்கள் மாடு தற்போது 3 கன்றுகளை ஈன்றுள்ளது. தற்போது மீண்டும் சினையாக உள்ளது. எங்கள் குடும்பத்திற்கான தேவைக்கு பால் எடுத்துக் கொண்டு மீத பால் சொசைட்டிக்கு ஊற்றி வருகிறோம். வாரந்தோறும் இதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு நான் குடும்பத்தை நடத்தி வருகின்றேன். என்னை வாழ வைத்துக் கொண்டிருக்கும் பெண்குல தெய்வம் அம்மா அவர்களுக்கு எங்கள் வாழ்நாள் முழுவதும் கடமைப்பட்டுள்ளோம். அம்மா அவர்களுக்கு நன்றி'' என்று இருகரம் கூப்பி நன்றி தெரிவித்தார்.

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

நம்முடைய உழைப்பால் நாம் உருவாக்கும் எந்தச் சொத்துக்கும் உரிய மதிப்பை நாம் அளிக்கத் தவறுவதே இல்லை. எனவே, நம்முடைய முன்னோருடைய சொத்து நமக்கு எவ்வளவு கிடைத்தாலும் நம்முடைய சொந்த உழைப்பின் பயனாக நாம் உருவாக்கும் சொத்தின் மதிப்பு நமக்கு மிக அதிகமானதாகவே தெரியும். எனவே, நமது வெற்றி, வியர்வையைச் சிந்தி உழைப்பதில்தான் இருக்கிறது.




## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நாள்தோறும் நன்றி சொல்வோம்!

*"எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் இங்கே*
*இல்லாமை இல்லாத நிலை வேண்டும்"*

என்ற இலட்சியத்தைக் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை சிறப்பு முகாம் மூலம் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

நாமக்கல் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, மாற்றுத்திறனாளிகளுக்கு புதியதாக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்துடன் பெட்ரோலில் இயங்கும் மூன்று சக்கர ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டுள்ளன.



கார்த்தி

**மூன்று சக்கர பெட்ரோல் ஸ்கூட்டர் பெற்ற குருசாமிப்பாளையத்தைச் சேர்ந்த பட்டதாரிப் பெண் செல்வி. வி.கார்த்தி நம்மிடம் கூறியதாவது :–**

எனக்கு வயது 32, கடுமையான காய்ச்சல் காரணமாக 3 வயதிலேயே என் கால்கள் செயலிழந்துவிட்டன. எனினும் விடா முயற்சியால் படித்துப் பட்டம் பெற்றுள்ளேன். கால்கள் ஊனமான நிலையில் பேருந்தில் ஏறுவதும், இறங்குவதும் மிகக் கடினமாக உள்ளது. இதனால் மூன்று சக்கர ஸ்கூட்டர் வேண்டி மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் மனு கொடுத்தேன். இந்த மனுவை கனிவுடன் பரிசீலித்து நாமக்கல்லில் நடைபெற்ற சிறப்பு முகாமில் ஸ்கூட்டர் வழங்கினார்கள். இதை எங்களுக்கு வழங்கிய தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தினந்தோறும் நன்றி செலுத்திக் கொண்டிருக்கிறேன்.

**சக்கர நாற்காலி பெற்றுக் கொண்ட நாமக்கல்லைச் சேர்ந்த சுதா என்பவர் கண்ணீர் மல்க பேசியபோது,**



சுதா

நான் 5ஆவது வகுப்புப் படிக்கும்போது கை, கால்கள் பாதிக்கப்பட்டு செயலிழந்து விட்டன. எனது பெற்றோருக்கு அதிக சுமையாக இருக்கின்றேனே என்று மனம் நொந்த வேளையில், சிறப்பு முகாமிற்குச் சென்று சக்கர நாற்காலி மற்றும் உதவித் தொகை கேட்டு மனு அளித்தேன். மனுவினைப் பெற்றுக் கொண்டு உடனடியாக எனக்கு சக்கர நாற்காலியும், உதவித் தொகையும் தரப்பட்டிருப்பது மிகுந்த சந்தோசத்தை கொடுத்திருக்கிறது. அதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி'' என்றார்.

❖ ❖ ❖



## கிராம சுகாதார செவிலியர்களுக்கு மடிக்கணினி!

**ம**க்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் அனைத்துத் திட்டங்களையும் கடைக்கோடி மக்களுக்கும் கொண்டு சேர்ப்பதிலும் அத்தனைத் திட்டங்களை முன்னின்று நிறைவேற்றுவதிலும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவித்தொகை குறித்த பதிவுகளையும், குழந்தைகள் மற்றும் பிரசவித்த தாய்மார்கள் பற்றிய விவரங்களைக் கணினி மூலம் தினந்தோறும் பதிவு செய்வதற்காக கிராம சுகாதார செவிலியர்களுக்கு ஏற்படும் கால விரயத்தினைக் குறைத்திடும் வகையிலும் அவர்களின் பணி மேம்பாடு அடையும் வகையிலும் அவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தினார்கள்.

தமிழகத்தில் உள்ள கிராம சுகாதார செவிலியர்களுக்கு ரூ.19.17 கோடி மதிப்பீட்டில் 9,397 விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 30.12.2013 அன்று தொடங்கி வைத்தார்கள்.

**திருமதி சரஸ்வதி, ஆவிரங்காடு, பள்ளிப்பாளையம் ஒன்றியம், பயனாளி கூறியதாவது :–**




“எனக்கு 49 வயதாகிறது. நான் 28 வருடங்களாக செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். கிராமப்புற ஏழை, எளிய கர்ப்பிணித் தாய்மார்களுக்கு டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நிதியுதவியாக மூன்று தவணைகளில் ரூ.12,000 தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. நான் களப்பணிக்கு சென்று அங்குள்ள கர்ப்பிணித் தாய்மார்களை கண்டறிந்து அவர்கள் பெயர் மற்றும் முழுவிவரத்தினை பதிவு செய்து பிறகு அவர்களிடம் விண்ணப்பத்தினைப் பெற்று அவற்றை அரசுக்கு பரிந்துரை செய்து அவ்விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கு நிதியுதவி பெற்றுத் தருவதில் காலதாமதம் ஆகிறது. தற்பொழுது கர்ப்பிணித் தாய்மார்களை 12 வாரத்திற்குள் இணையதளம் மூலம் பதிவு செய்யப்பட்டு அவர்களை வாரம் ஒருமுறை பரிசோதித்து குறிப்பாக எடை, ஸ்கேன், தடுப்பூசி போடப்பட்ட விவரங்களை பதிவு செய்வதற்காக வாரம் ஒருமுறை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்றுதான் பதிவு செய்யவேண்டும். அவ்வாறு செல்லமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டாலோ தனியார் கணினி மையத்திற்கு சென்று பதிவு செய்ய வேண்டிய நிலை இருந்தது.

தற்பொழுது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு எங்களுக்கு மடிக்கணினி வழங்கியுள்ளார்கள். இதனால் பயனாளிகளுக்கு நான் எந்த நேரத்திலும் காலதாமதமின்றி பதிவு செய்திடலாம். போக்குவரத்து மற்றும் இதர செலவுகள் இல்லாமல் களப்பணி இருக்கும் இடத்திலேயே பதிவு செய்து கொள்ள முடிகிறது. எங்களுக்கு

வேலைப்பளுவை குறைத்து எங்களது பணிக்கு ஊக்கம் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினார்.

**திருமதி தேன்மொழி, காடச்ச நல்லூர், பள்ளிப்பாளையம் ஒன்றியம், பயனாளி கூறியதாவது :–**

''எனக்கு 48 வயதாகிறது. 25 வருடங்களாக கிராம சுகாதார செவிலியராகப் பணிபுரிந்து வருகிறேன். நான் களப்பணிக்காக கிராமத்திற்கு செல்லும்போது அங்குள்ள கர்ப்பிணித் தாய்மார்களைக் கண்டறிந்து அவர்களின் விவரங்களை பதிவு செய்வதற்கு பதிவேடுகளையும், குறிப்பேடுகளையும் எடுத்துச் செல்லும் நிலை இருந்தது. இதனால் களப்பணிக்குச் செல்லும் போதெல்லாம் பை நிறைய சுமைகளை



சுமந்துகொண்டுகிராமம்கிராமமாகச்சென்றுசிரமப்பட்டுஎங்கள்பணியினை மேற்கொள்ள வேண்டிய நிலை இருந்தது. எங்களது சிரமங்களை புரிந்து கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எங்களுக்கு மடிக்கணினி வழங்கியுள்ளதால் தேவையான அனைத்து விவரங்களை இணையதளத்தின் மூலம் எளிதில் என்னால் பதிவு செய்து கொள்ள முடியும். இதனால் பயனாளிகளுக்கு கிடைக்கப்பெறும் நிதி உதவியினை எவ்வித இடையூறும் இன்றி பெற்றுத் தர முடிகிறது. பெண் குலத்தினை கண்மலர் போல் காக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எங்களுக்கு மடிக்கணினி வழங்கி செலவு மற்றும் நேரத்தையும் குறைத்து எங்களுக்கு பேருதவி செய்தமைக்காக என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று கூறினார்.

❖ ❖ ❖

# மனித நேயத்துடன் மருத்துவ சேவை
# மக்கள் நலன் காக்கும் மகத்தான அரசு

உடலை உறுதியாக்கி நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தை அனைத்துத் தரப்பு மக்களும் பெற வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல்வேறு மருத்துவத் திட்டத்தின் வாயிலாக அனைத்துத் தரப்பு மக்களை மருத்துவ சேவையின் வழியாக மக்களை அரண்போல் காத்து வருகிறார்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் ஏழை, எளிய குடும்பங்களின் ஆண்டு வருவாய் ரூ.72,000 கீழ் உள்ளவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வருமானத்திற்கு வருமானச் சான்று, அருகில் உள்ள கிராம நிருவாக அலுவலரிடமிருந்து உரிய பரிசீலனைக்குப் பிறகு பெற்றுக் கொள்ளலாம். இத்திட்டத்தின் நோக்கம் கட்டணமில்லாத மருத்துவச் சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகளை அரசு மற்றும் தகுதி வாய்ந்த தனியார் மருத்துவமனைகள் மூலம் செயல்படுத்துகிறது.

**நாமக்கல் மாவட்டம் கபிலர்மலை ஒன்றியம் பெரியசோளிபாளையத்தைச் சேர்ந்த திருமதி பேபி, க/பெ. பழனிச்சாமி அவர்கள் கூறியதாவது.**


*பேபி*

“எனக்கு 42 வயதாகிறது. எனக்கு 11ஆம் வகுப்பு படிக்கும் வயதில் ஒரு மகன் இருக்கிறான். கடந்த ஒரு வருடமாக எனக்கு வயிற்றில் கடுமையான வலியுடன் மாதாந்திர பிரச்சினை இருந்து கொண்டே இருந்தது. அருகிலுள்ள மருத்துவமனையில் அவ்வப்போது மாத்திரை வாங்கி சாப்பிட்டு வந்தேன். வலி மீண்டும் அதிகமாகவே கோவை சென்று தனியார் மருத்துவமனையில் பரிசோதனை செய்து பார்த்தபோது எனது கர்ப்பபையில் கட்டி இருப்பதாகவும் அதை உடனடியாக அகற்ற வேண்டும் என்று டாக்டர்கள் கூறினார்கள். இதற்காக ரூ.40,000 செலவு ஆகும் என அங்கிருந்த மருத்துவர் கூறினார்கள். மண் வெட்டி எடுத்து கூலி வேலை செய்யும் எனது

கணவரால் என்னைக் காப்பாற்ற முடியுமா நான் உயிர் பிழைப்பேனா என்று எண்ணிக்கொண்டிருந்த வேளையில் இத்திட்டத்தின் மூலமாக நாமக்கல் மருத்துவமனையில் உயர் அறுவை சிகிச்சை இலவசமாக செய்கிறார்கள் என்று எங்களது உறவினர்கள் கூறினார்கள். நான் நாமக்கல் தங்கம் மருத்துவமனைக்குச் சென்று மருத்துவக் காப்பீட்டுத்திட்டத்தின் மூலம் மருத்துவமனையில் சேர்ந்தேன். இதற்காக ரூ.18,000 ஒதுக்கியதோடு தமிழக முதல்வர் அவர்களின் கருணையால் அறுவை சிகிச்சை செய்து கொண்டு தற்போது நலமாக உள்ளேன். இன்னும் ஓரிரு நாட்களில் வீடு திரும்ப உள்ளேன். எனக்கு உயிர் கொடுத்து என் குடும்பத்தை வாழ வைத்த இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வாழும் தெய்வமாக வணங்குகிறேன்'' என்று கண்ணீர் மல்க கூறினார்.

**பரமத்தி வேலூரைச் சேர்ந்த திருமதி பூங்கொடி க/பெ.முத்துசாமி அவர்கள் கூறியதாவது.**




''எனக்கு 45 வயதாகிறது. என் கணவர் கூலி வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறார். கடந்த இரு மாதங்களாக எனது இடுப்பிலும் வயிற்றிலும் கடுமையான வலி இருந்தது. அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்குச் சென்று பரிசோதித்து பார்த்தபோது எனது வயிற்றில் உள்ள பித்தப்பையில் கற்கள் இருப்பதாகவும் அதனை அறுவை சிகிச்சை மூலமாக உடனடியாக அகற்ற வேண்டும், இல்லையென்றால் உயிருக்கு ஆபத்தாக இருக்கும் என்றும் அதற்காக தனியார் மருத்துவமனையில அறுவை சிகிச்சை செய்தால் ரூ.35,000 செலவு ஆகும் என்று சொன்னார்கள். என் குடும்பத்தை நடத்தவே சிரமமாக இருந்த வேளையில் நான் எப்படி உயிர் பிழைப்பேன் என்றிருந்த வேளையில் நான் இருக்கிறேன் உங்களுக்கு உதவ என்று தமிழக முதல்வர் அறிவித்த மருத்துவ திட்டத்தின் மூலம் நாமக்கல்லில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்ந்து அறுவை சிகிச்சை செய்து கொண்டு தற்போது நலமாக உள்ளேன். உற்ற உறவுகள் கைவிட்டபோதும் தாயுள்ளத்தோடு எங்களை வாழவைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை எங்கள் வம்சம் உள்ளவரை வாழ்த்துவோம்'' என்று உணர்ச்சி பொங்கக் கூறினார்.

❖ ❖ ❖

# பொங்கல் பரிசு கரும்பு போல இனிமை!

இருப்போர்க்கு இருப்பதை போலவே இல்லாதவர்களும் பெறவேண்டும் என்ற உயர்ந்த இலட்சிய நோக்குடன் எண்ணற்ற மக்கள் நல திட்டங்களை அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், பொங்கல் திருநாளையொட்டி தமிழ்நாட்டிலுள்ள ஒரு கோடியே எண்பத்தி நான்கு இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.160 மதிப்பிலான பொங்கல் பரிசுப்பொருட்கள் கூட்டுறவு நியாய விலைக்கடைகள் மூலம் வழங்கினார்கள்.



அத்தாயி

**சிலுவம்பட்டியைச் சேர்ந்த அத்தாயி, (வயது 60) கூறுகையில்,**

“எனக்கு 3 மகள்கள் உள்ளனர். அவர்கள் திருமணம் செய்து கொண்டு வெவ்வேறு ஊர்களில் வசித்து வருகிறார்கள். ஒவ்வொரு வருடமும் பொங்கல் திருநாளன்று எல்லோரும் குடும்பத்தோடு இங்கு வருவார்கள். அனைவரும் சேர்ந்து பொங்கல் வைத்து மகிழ்ச்சியோடு இருப்போம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொங்கல் வைப்பதற்காக பச்சரிசி, சர்க்கரையும், மேலும் முந்திரி, திராட்சை, கரும்பு, பழம், நெய் போன்ற பொருட்கள் வாங்குவதற்காக ரூ.100 பணமாக கொடுத்தது மிகுந்த மனநிறைவைத் தந்துள்ளது. இதனைக் கொண்டு அந்த ஆண்டு சிறப்பான முறையில் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடினோம். பொங்கல் பரிசுப்பொருள் வழங்கிய அம்மா அவர்களுக்கு குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கபிலர்மலையைச் சேர்ந்த வெள்ளையம்மாள் (வயது 70) கூறுகையில்**



வெள்ளையம்மாள்

“இதுவரை அரசாங்கத்திடமிருந்து அரிசி போன்ற பொருட்களை மட்டும் வாங்கிக் கொண்டு இருந்தேன். இப்போது பொங்கலுக்கு அரிசி, சர்க்கரை பணம் ரூ.100 ரேசன் கடையில் எனக்கு கொடுத்தார்கள். இது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. அம்மா அவர்கள் கொடுத்த பச்சரிசி, சர்க்கரையைக் கொண்டு எனது குடும்பத்துடன் சேர்ந்து பொங்கல் வைக்க உள்ளேன். எந்த வருசமும் இல்லாத அளவு, அந்த ஆண்டு பொங்கலை மனநிறைவாக கொண்டாடி மகிழ்ந்தோம் எனக் கூறினார்.

❖ ❖ ❖



## ஒரு கிலோ 20 ரூபாய்க்கு குறைவான விலையில் தரமான அரிசி

'**வ**யிற்றுக்கு சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம்' என்ற பாரதியின் கனவை நனவாக்க, நடுத்தர மற்றும் ஏழை, எளிய மக்களின் வாழ்வை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக அரிசி பெறும் அனைத்து குடும்ப அட்டைதார்களுக்கு விலையில்லா அரிசி வழங்கிக் கொண்டிருக்கிறார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இதுவன்றி அனைத்துத் தரப்பு மக்களும் தரமான அரிசியைக் குறைந்த விலையில் பெற வேண்டும் என்பதற்காக அமுதம் மற்றும் கூட்டுறவு பண்டக சாலைகள் மூலமாக கொள்முதல் செய்த விலைக்கே மக்களுக்கு அரிசி வழங்கும் ஓர் உன்னதத் திட்டத்தை 17.04.2013 அன்று நந்தனம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிடங்கு வளாகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தனது பொற்கரங்களால் பயனாளிகளுக்கு ஒரு கிலோ அரிசி ரூ.20க்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

**திருச்செங்கோடு நகராட்சி சாணார்பாளையத்தை சேர்ந்த திரு. வி. கண்ணன் அவர்களை சந்தித்தபோது அவர் பெருமிதத்துடன் கூறியதாவது.**




''எனக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளார்கள். இருவரும் பள்ளிக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். நான் தறித் தொழில் செய்து வருகிறேன். எனது குடும்ப அட்டையின் மூலம் சர்க்கரை அதிகம் வாங்கிக் கொள்வதால் எனக்கு அரசின் விலையில்லா அரிசி கிடைக்கவில்லை. கூலி வேலைக்கு செல்வதால் நல்ல தரமான அரிசியை கடையில் வாங்கும்போது அதிக விலையாகிறது. இதனால் எனது சம்பளம் முழுவதும் அதற்கே கொடுக்க வேண்டியுள்ளது. சில சமயம் கடைகளில் கடன் சொல்லி வாங்கும் நிலையில் இருந்தேன். இந்நிலையில்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் கூட்டுறவு அங்காடிகளில் ரூ.20க்கு ஒரு கிலோ தரமான அரிசி வழங்கப்படும் என அறிவித்தார். இதனைக் கேட்டு எங்கள் மனம் மகிழ்ச்சியில் துள்ளியது. திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தி கூட்டுறவு சங்கத்தில் வாரம் ஒரு முறையோ அல்லது கையில் பணம் கிடைக்கும் நேரத்தில் அங்கு சென்று அரிசி வாங்கி வருவேன். கடைகளில் விற்கும் அரிசியை விட தரமானதாகவும், விலை குறைவாகவும் இருப்பதால் எங்களைப் போன்ற ஏழை, எளிய மக்களுக்கு அம்மா அறிவித்த இத்திட்டமானது அட்சய பாத்திரம் போன்ற திட்டமாகும். இதனால் எங்கள் வருமானத்தில் சிறிய சேமிப்பு ஏற்பட்டு பொருளாதாரத்தை உயர்த்திக்

கொள்ளவும் முடிகிறது. எங்களைப் போன்ற ஏழை, எளிய மக்களை வாழ வைத்துக் கொண்டிருக்கிறார் எங்கள் அன்னபூரணி தாய் அம்மா அவர்கள்'' என மகிழ்ச்சியுடன் கூறினார்.

**வீட்டுவசதி குடியிருப்பில் வசித்து வரும் ஜெயந்தி, க.பெ. ரவி . கொல்லபட்டி அவர்களை சந்தித்தபோது அவர்கள் மகிழ்ச்சியுடன் கூறியதாவது.**


*ஜெயந்தி*

''நான் கூலி வேலைக்குச் செல்கிறேன். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள். இங்கு 1 கிலோ அரிசி ரூ.20க்கு கொடுக்கிறார்கள். பொங்கல் மற்றும் பலகாரம் செய்ய ஏதுவாக பச்சரிசியும் கிடைக்கிறது. கடைகளில் வாங்கினால் விலை மிகவும் கூடுதலாக உள்ளது. எனது குழந்தைகள் பொங்கல் அதிகம் விரும்பி சாப்பிடுவார்கள் அதனால் இங்கு வாரம் ஒரு முறை அரிசி வாங்கிச் சென்று சமைக்கிறேன். இங்கு வாங்கும் அரிசி சுத்தமாகவும் நல்ல தரமானதாகவும் இருப்பதால் குழந்தைகளும் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். எங்களைப் போன்ற ஏழை, எளிய மக்களும் பயன்பெறும் வகையில் குறைந்த விலையில் அரிசி வழங்கிய அன்னைக்கு நன்றி'' என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெற்ற ஒரு முதன்மை மாநிலமாக உருவாக்குவதே என்னுடைய குறிக்கோள் அல்லது கனவாகும். அதனைச் செயல்படுத்துகின்ற போது கனவுகள் உண்மையாகும். முறையாகத் திட்டமிடப்பட்டால் அதுவே பாதி இலக்கை அடைந்தது போல் ஆகும்.




## உணவு உற்பத்தியைப் பெருக்கிட உதவி செய்யும் உழவர் பெருவிழா!



**வி**வசாயிகளைப் பாதுகாக்கவும், உணவு உற்பத்தியைப் பெருக்கவும், பொருளாதார வளர்ச்சி பெறவும், விவசாயிகளை ஊக்குவிக்கவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் “உழவர் பெருவிழா”வினை நடத்திட ஆணையிட்டார்கள். இதன் மூலம் வேளாண் உயர்தொழில்நுட்பம், தரமான விதை, மானிய விலையில் இடுபொருட்கள், செயல் விளக்கங்கள், வேளாண் இயந்திரங்கள், கால்நடைகள் பாதுகாப்பு, பயிர் சாகுபடி குறித்த செயல்விளக்கங்கள் ஆகியவை விவசாயிகளிடம் கொண்டு செல்லப்படுகிறது.

**வெகு சிறப்புடன் நடைபெற்று வரும் உழவர் பெருவிழா குறித்து நம்மிடம் பேசியபோது, திரு.ஏ.எஸ்.சேகர் மோகனூர் பகுதி, அரியூர்.**


*சேகர்*

“எனது 7 ஏக்கர் நிலத்தில் நெல், கடலை, கரும்பு, துவரை பயிர் செய்துள்ளேன். இந்த ஆண்டு மழை இல்லாததால் விவசாயம் எவ்வாறு இருக்கும் என எண்ணிக் கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமங்கள் தோறும் உழவர் பெருவிழா நடத்தப்படும் என அறிவித்தது மிக்க மகிழ்ச்சி. உழவர் பெருவிழாவில் நான் கலந்து கொண்டதின் மூலம் வறட்சிக் காலத்தில் என்ன பயிர் செய்யலாம், எதைச் செய்தால் வருமானம் கிடைக்கும் என்பதையும் தெரிந்து கொண்டேன். மேலும் குறைவான தண்ணீரைக் கொண்டு சொட்டு நீர் பாசனம் மூலம் எவ்வாறு பயிர் செய்வது, அதற்கான வழிமுறைகள், எந்த நேரத்தில் பயிர்களுக்கு உரம் இடுவது, எந்த அளவு இடுவது என்பது பற்றியும் அறிந்து கொண்டேன். சொட்டுநீர் பாசனம் அமைத்ததின் மூலம் கடந்த ஆண்டைவிட கூடுதல் மகசூல் எனக்கு கிடைத்துள்ளது. விவசாயத்திற்குத் தேவையான அனைத்து விவரங்கள், சலுகைகள் ஆகியவற்றை தெரிந்து கொள்ளும் வகையில் உழவர் பெருவிழா அமைந்துள்ளது. இதனை அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்”, என்றார்.

**பி. இராமசாமி, த/பெ. பழனிமலை ஒருவந்தூர் கூறும்போது,**

“எனக்கு 5 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் நெல் மற்றும் வாழை பயிர் செய்துள்ளேன். நான் சென்ற ஆண்டு நடைபெற்ற உழவர் பெருவிழாவில் கலந்து கொண்டபோது வரிசை நடவு மற்றும் சொட்டுநீர் பாசனம் பயன்படுத்தும் முறை குறித்து தெரிந்து கொண்டேன். முன்பு 1 ஏக்கர் நிலத்தில் 2 டன் மட்டுமே நெல் மகசூல் கிடைத்தது. ஆனால், தற்போது 4 டன் வரை நெல் மகசூல் கிடைக்கிறது. அதேபோன்று நல்ல தொழில் நுட்பங்களை அறிந்து வாழை சாகுபடி செய்ததின் மூலம் ஒரு ஏக்கர் 900 வாழைக் கன்றுகள் வரை நட்டுள்ளேன். இதன்மூலம் எனக்கு அதிக வருமானம் கிடைக்கும்”, என்று கூறி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

❖ ❖ ❖

# தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனையில் புதிதாகத் தொடங்கப்பட்ட சித்த மருத்துவப் பிரிவினால் பயன்பெறும் தொழிலாளர்கள்!

**ம**க்களை நாடி அரசு என்ற குறிக்கோளை எய்தவும் மருத்துவத் துறையின் பணிகளை மேம்படுத்திடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிந்து தொழிலாளர் ஈட்டுறுதிக் காப்பீட்டு மருத்துவமனைகளில் புதியதாக சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

**நாமக்கல் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனையில் தொடங்கப்பட்டுள்ள சித்த மருத்துவப் பிரிவின் சித்த மருத்துவர் திரு.வி.முரளிகுமார் மருத்துவமனையின் செயல்பாடுகள் பற்றி கூறுகையில்,**

“இந்த மருத்துவமனையில் காலை 7.30 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 6.30 மணி வரை நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அறுவை சிகிச்சை தவிர்த்து மற்ற நோய்களுக்கு இங்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. பெரும்பாலும் தோல் சம்பந்தப்பட்ட நோய்கள், மூட்டு எலும்பு தேய்மானம், கர்ப்பப்பை தொடர்பான நோய்களுக்கென தினந்தோறும், சுமார் 40 நோயாளிகள் வருகை தந்து சிகிச்சை பெறுகின்றனர். மேலும் வெளிப்பூச்சு மருந்து அளிக்கப்படுவதாலும் மூலிகையினால் செய்யப்பட்ட மருந்து உட்கொள்ளப்படுவதால் எவ்வித பக்க விளைவுகளும் இல்லை என்பதால் நோயாளிகள் சித்த மருத்துவத்தையே நாடி வருகின்றனர்.

சிறுநீரகக் கற்களை கரைக்கும் மூலிகைகள் மாத்திரை வடிவில் வழங்கப்படுவதால் நோயாளிகள் பக்க விளைவுகள் ஏதுமின்றி விரைவில் குணமடைந்து வருகின்றனர்,” என்று தெரிவித்தார்.

**மருத்துவ சிகிச்சை பெற்ற பயனாளி திரு. சுப்பிரமணி (வயது 37) நம்மிடம் பேசியபோது,**

“நான் பொன்னி சர்க்கரை ஆலையில் வேலை பார்த்து வருகிறேன். எனக்கு முகத்தில் கறுப்பாகவும், திட்டு திட்டாகவும் பரவி வந்தது.

தற்பொழுது சித்தா பிரிவு தொடங்கப்பட்டவுடன் அதை அறிந்து இங்கு வந்து சிகிச்சை பெற்றேன். தினந்தோறும் முகத்தில் பூச ஒரு மருந்தும், உட்கொள்ள ஒரு மருந்தும் கொடுத்தார்கள். தற்பொழுது அந்த கருமை திட்டுகள் படிப்படியாக குறைந்து மறைந்தும் வருகிறது. எங்களைப் போல கூலித் தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில் தொழிலாளர் ஈட்டுறுதிக் காப்பீட்டுத் திட்டத்தில் புதியதாக சித்த மருத்துவ பிரிவைத் தொடங்க உத்தரவிட்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு தொழிலாளர் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,'' என்றார்.



சுப்பிரமணி

**திருமதி மீனாட்சியம்மாள் (வயது 65) என்பவர்,**



மீனாட்சியம்மாள்

"எனக்கு மூட்டுகளில் கடுமையான வலி வந்து நடக்க முடியாமல் மிகவும் சிரமப்பட்டேன். சித்த மருத்துவப் பிரிவு புதியதாக தொடங்கியதில் இருந்து இங்கு வந்து சிகிச்சைப் பெறுகிறேன். தற்பொழுது வலி குறைந்து மெதுவாக நடந்து செல்கிறேன். வயதான காலத்தில் அதிக செலவு செய்து தனியார் மருத்துவமனைகளில் எங்களால் சிகிச்சை பெறமுடியாமல் இருந்தது. என்னைப் போன்ற வயதானவர்களுக்கு மாண்புமிகு முதல்வரின் இந்த திட்டம் முத்தான திட்டமாகும். சித்த மருத்துவ பிரிவைத் துவக்கிய அம்மா அவர்களுக்கு எனது குடும்பத்தினர் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,'' என்று கூறினார்.

❖ ❖ ❖

# ஆரோக்கியத்திற்கும், ஆலோசனைக்கும் இலவச மருத்துவ மையம்

**த**மிழ்நாடு அரசின் நல்வாழ்வு திட்டங்கள் மற்றும் மருத்துவமனைகளில் வழங்கப்படும் சேவைகள் குறித்து பொதுமக்கள் 24 மணிநேர 104 மருத்துவ உதவி மற்றும் தகவல் மையத்தை தொடர்பு கொண்டு பயனடையலாம்.

104 மருத்துவ உதவி சேவை வேண்டி அழைக்கும் நபரின் முக்கிய தகவல்களை பதிவு அலுவலர் (Registration Officer) பெறுகிறார். பதிவு அலுவலர், அழைக்கும் நபரின் பெயர், தந்தை அல்லது கணவர் பெயர், ஊர் மற்றும் மாவட்டம் ஆகிய முக்கிய தகவல்கள் பதிவு செய்தவுடன் பதிவு எண் (Registration No) ஒன்று வழங்கப்படுகிறது. மறுமுறை அழைக்கும்போது அப்பதிவு எண்ணைக் கூறியவுடன் உரிய சேவையை தொடர்ந்து பெறலாம்.

**104 மூலம் மருத்துவ ஆலோசனைகளை பெற்ற நாமக்கல் மாவட்டம், எர்ணாபுரம் ஊராட்சி மணிக்கட்டிபுதூரைச் சேர்ந்த திருமதி ராதாமணி க/பெ. (லேட்) துரைசாமி என்பவர் தெரிவித்ததாவது.**

“எனக்கு வயது 37. எனது கணவர் மரணமடைந்து விட்டார். எனக்கு 2 பெண் குழந்தைகளும் ஒரு ஆண் குழந்தையும் உள்ளனர். நான் பத்தாவது வரை படித்து தற்பொழுது மளிகை கடை வைத்துள்ளேன். நான் ஒருமுறை எர்ணாபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றப் பொழுது அங்கு தட்டியில் இலவச மருத்துவ ஆலோசனை 104 என்ற விளம்பரப் பலகையை பார்த்து அங்கிருந்த நர்ஸிடம் 104ஐ பற்றி விவரம் கேட்டேன். அதற்கு அவர்கள் 104 என்பது மருத்துவத்திற்கான இலவச சேவை அழைப்பு எண் என்பதைத் தெரிவித்ததோடு உங்களது உடல்நலம் மருத்துவ ஆலோசனை சிகிச்சை பெறுவதற்கான வழிமுறைகளை இதன்மூலம் இலவசமாக அறிந்து கொள்ளலாம் எனத் தெரிவித்தனர்.


ராதாமணி

எனக்கு அடிக்கடி தலைவலி வருகிறது. கண்ணாடி அணிந்தும் சரியாகவில்லை. எனக்கு வரும்

தலைவலி பற்றி அவர்களிடம் கேட்கலாம் என்று 104 என்ற இலவச தொலைபேசி எண்ணை அழைத்து என் தலைவலி பற்றி அவர்களிடம் சொன்னேன். அப்போது அவர்கள் எனது நோயின் விவரத்தை கேட்டறிந்து பின்னர் நாமக்கல் அரசு தலைமை மருத்துவமனையில், நரம்பு டாக்டரை போய் பார்த்து அங்கு சி.டி.ஸ்கேன் வசதி உள்ளதால் அதில் தலையை மட்டும் ஸ்கேன் செய்து பார்க்கும்படி ஆலோசனைக் கூறினார்கள்.

இத்தகைய வசதிகளை உருவாக்கி தந்து எங்களைப் போன்ற ஏழை, எளியோர் மற்றும் ஆதரவற்றோர் பயன்பெறும் வகையில் 104 இலவச தொலைபேசி வசதியை ஏற்படுத்திக் கொடுத்த தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என நெஞ்சம் நெகிழ கூறினார்.

**104 மூலம் மருத்துவ ஆலோசனை பெற்று பயனடைந்த நாமக்கல் ஊராட்சி ஒன்றியம் நல்லிபாளையத்தைச் சேர்ந்த திருமதி கௌசல்யா க/பெ. கனகராஜ் (லேட்) என்பவரைச் சந்தித்தபோது கூறியதாவது.**


*கௌசல்யா*

``எனக்கு 35 வயதாகிறது. எனது கணவர் இறந்து 2 வருடங்களாகிறது. எனது மகளுடன் தனியாக வசித்து வருகின்றேன். பெண்களுக்கு ஏற்படக்கூடிய கர்ப்பப்பை புற்றுநோய் குறித்து அறிந்து கொள்ளலாம் என்று எண்ணியபோது இதை யாரிடம் கேட்பது என மன சஞ்சலத்துடன் இருந்து வந்தேன். விளம்பரத்தட்டி மற்றும் செய்தித்தாள்கள் மூலம் 104 என்ற இலவச தொலைபேசி எண் பற்றித் தெரிந்து கொண்டேன். அதில் தொடர்புக் கொண்டு கர்ப்பப்பை புற்றுநோய் எவ்வாறு ஏற்படுகிறது என்றும், அதை எவ்வாறு கண்டறியலாம் என்பதையும் அதற்கு எத்தகைய சிகிச்சையினைப் பெறலாம் என்றும் கேட்டேன்.

பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு ஆலோசனைகள் பெற்றிடவும் என்னைப் போன்ற பெண்களும் தயக்கம் ஏதுமின்றி மருத்துவ விவரங்களை எளிதில் அறிந்து கொள்ளவும் நல்ல வாய்ப்பினை உருவாக்கித் தந்துள்ளமைக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று கூறினார்.

❖ ❖ ❖



# இல்லத்தரசிகளின் துயர் துடைத்த விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின் அடுப்பு

இல்லத்தரசிகளின் குடும்பச் சுமையைப் போக்கிடும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கும் திட்டத்தைத் தொடங்கினார்கள். நீலகிரி மாவட்டம் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் போன்ற மலைப் பிரதேசங்களில் நிலவும் குளிர்ச்சியான தட்ப வெப்ப நிலை காரணமாக மின் விசிறியைப் பயன்படுத்த இயலாது என்பதால் அதற்குப் பதிலாக விரைந்து உணவு சமைத்திடும் வகையில் மின்காந்த அடுப்பு (Induction Stove) வழங்கினால் அவர்களுக்கு உபயோகமாக இருக்கும் என்னும் அடிப்படையில் மலைப்பகுதிகளில் உள்ள இல்லத்தரசிகளுக்குப் பெரிதும் பயன் அளித்திட அவர்களுக்கு மிக்சி மற்றும் கிரைண்டருடன், மின் அடுப்பை (Induction Stove) வழங்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

**நீலகிரி வட்டம், நஞ்சநாடு கிராமத்தைச் சேர்ந்தவர் ராஜன் (வயது 52) விவசாயத் தொழிலாளி. இவருடைய மனைவி இலட்சுமி (வயது 43).**

**இவர்களுடைய மகள் சங்கீதா (வயது 22) மற்றும் மகன் அசோக் (வயது 20). இவர்கள் 4 பேரும் கூலி வேலைக்கு சென்று வருகிறார்கள்.**




**குடும்பத்தலைவி லட்சுமி கூறியதாவது:** "தினமும் கூலி வேலைக்கு சென்று விடுவதால் ஆட்டுக்கல், அம்மிக்கல்லைப் பயன்படுத்தி சட்டினி, மசாலா அரைப்பது, மாவு அரைப்பது போன்றவை செய்ய மிகவும் கஷ்டமாக இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விலையில்லா மிக்சி, கிரைண்டருடன், மின் அடுப்பும் எங்களுக்கு வழங்கியது எல்லையில்லா மகிழ்ச்சியாகும். இப்போது எந்தவித சிரமமும் இன்றி மிக்சி, கிரைண்டரை பயன்படுத்தி உணவு தயாரித்து வருகிறோம்." அம்மா அவர்களுக்கு இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நஞ்சநாடு கிராமத்தைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளி சாரதா (வயது 43). இவருக்கு சந்தியா (வயது 21) என்ற மகள் மற்றும் சரத்குமார் (வயது 19) என்ற மகன் உள்ளனர். சாரதா கூறும்போது,**

"எங்கள் வீட்டில் மிக்சி, கிரைண்டர், மின் அடுப்பு ஆகிய சமையல் உபகரணங்கள் இதுவரை இருந்ததே கிடையாது. இதனால் மாவு அரைக்க, சட்டினி, மசாலா போன்றவற்றை அரைத்து கொடுக்குமாறு அருகில் உள்ள வீடுகளுக்கு சென்று தயங்கி தயங்கி கேட்டு வந்தேன். சில நேரங்களில் மிகவும் கஷ்டமாக இருக்கும்.




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழங்கிய தரமான விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின் அடுப்பு எங்களுக்கு கிடைத்து விட்டது. என்னைப் போன்ற ஏழைப் பெண்களின் ஏக்கத்தை நிவர்த்தி செய்த அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்", என்றார்.

❖ ❖ ❖



# ஏழை மக்கள் நலன் காக்கும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

உயர்சிகிச்சைப்பெறஏழ்மைஒருதடைக்கல்லாகஇருந்துவிடக்கூடாது எனும் உன்னத நோக்கத்திற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் "மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்" உருவாக்கப்பட்டது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 4 ஆண்டுகளுக்கு 4 இலட்சம் ரூபாய் வரையிலும், சில குறிப்பிட்ட சிகிச்சை முறைகளுக்கு ஒரு ஆண்டிற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரை வழங்கப்படும்.

நீலகிரி மாவட்டத்தில் "முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தால்" சுமார் 1.34 கோடி குடும்பங்கள் தமிழகத்தில் பயன்பெறுவர். நீலகிரி மாவட்டத்தில் இத்திட்டத்திற்கென 9 மருத்துவமனைகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**ஜெகதளா பேரூராட்சி காரக்கொரை கிராமத்தைச் சேர்ந்த திருமதி இலட்சுமி என்பவரிடம் நாம் பேசியபோது,**

"நான் ஏழ்மையான விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவள். நான் விவசாய வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தபோது கால் தவறி 10 அடி பள்ளத்தில் விழுந்து காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. நான் ஏறத்தாழ

40 நாட்களுக்கு மேல் நடக்க முடியாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தேன். அப்போது எனது அண்டை வீட்டில் உள்ள ஒரு சகோதரர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் பற்றி எனக்கு எடுத்துக் கூறினார். அதில், தனியார் மருத்துவமனைகளுக்கும் விரிவான காப்பீட்டு திட்டத்தின் அங்கீகாரம் உள்ளது என்றார். அதனடிப்படையில் நான் உதகை எஸ்.எம் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றேன். எனக்கு அந்த மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்து என் கால் எலும்பு முறிவைச் சரி செய்தார்கள். அதற்கு நான் சொந்த செலவு செய்ய வேண்டுமென்றால் ஏறத்தாழ ரூபாய் 1 இலட்சம் ஆகும். அந்த வசதி எனது குடும்பத்திற்கு இல்லை. தமிழக முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அனைத்து செலவினங்களையும் அரசே ஏற்றுக் கொண்டதால் நான் இப்போது முழு குணமடைந்து மறுபடியும் விவசாய வேலைக்குச் சென்று வருகிறேன். அதற்கு முழு முதற் காரணம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொடங்கிய விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்தான்'' என்று கூறினார்.

**கோத்தகிரி வட்டம் ஜெக்கனோரை கிராமத்தைச் சேர்ந்த படுகர் இன விவசாய குடும்பத்தைச் சேர்ந்த போஜன் என்ற கூலித் தொழிலாளி கூறியதாவது:**


*போஜன்*

``நான் இருதய நோயால் அவதிப்பட்டு வந்த போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைப் பற்றி அறிந்து கோத்தகிரி கே.எம்.எப் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்று தற்போது நலமாக உள்ளேன். மேலும் எனது இருதய அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு மாதந்தோறும் கே.எம்.எப் மருத்துவமனைக்குச் சென்று இலவசமாகப் பரிசோதனை செய்து கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தினால் தான் நான் இன்று உயிரோடு இருக்கிறேன். நான் மறுபடியும் குணமடைந்து கூலி வேலைக்குச் செல்வதால்தான் என் குடும்பத்தைக் காப்பாற்ற முடிகிறது. இதற்கு முழு முதற்காரணமான மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல்லாண்டு காலம் வாழ நான் இறைவனை வேண்டுகிறேன்", எனக் கூறினார்.

❖ ❖ ❖



## ஏழை, எளிய மக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைய ஆடுகள் வழங்கும் திட்டம்

'**கி**ராமத்தின் உயர்வே நாட்டின் உயர்வு' என்பதை இலக்காகக் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ஏழை, எளியோருக்கு கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டம் மற்றும் வெள்ளாடு/செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்த வேண்டியதன் இன்றியமையாமையையும், அதிகரித்து வரும் கால்நடைகளுக்குத் தரமான மருத்துவச் சேவை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் கருத்தில் கொண்டு, தரம் உயர்த்தப்பட்ட கிளை நிலையங்களை ஊரக கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தியும், தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருந்தகங்களுக்கு புதிய கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் நியமித்தும், மேலும், கால்நடை துறையில் திட்டங்களை மேற்பார்வையிட கண்காணிப்பு பிரிவு ஒன்றும், மாவட்டங்களிலுள்ள உதவி இயக்குநர் அலுவலகங்களை செம்மைப்படுத்தியும், இணை இயக்குநர், உதவி இயக்குநர்கள் மற்றும் இதர பணியிடங்கள் நிரப்பியும் கால்நடை பராமரிப்புத் துறையின் சேவைகள் முழுமையாகவும், விரைந்தும் பயனாளிகளை சென்று அடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு அரசு சிறப்புடன் செயலாற்றி வருகிறது.

**நீலகிரி வட்டம், மஞ்சகொம்பை கிராமத்தைச் சேர்ந்தவர் தனலட்சுமி (வயது 45) என்பவர் கூறியதாவது :**




“என்னுடைய ஏழ்மையான குடும்ப சூழ்நிலைக் காரணமாக நான் திருமணம் செய்து கொள்ளவில்லை. எங்கள் குடும்பத்தில் அனைவரும் கூலி வேலைக்கு சென்று எங்களுடைய வாழ்க்கையை பல்வேறு சிரமங்களுக்கு இடையில் மிகவும் கஷ்டப்பட்டு நடத்தி வருகிறோம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விலையில்லா ஆடுகள் எங்களுக்கு வழங்கியது எல்லையில்லா மகிழ்ச்சியாகும். எங்களுக்கு வழங்கப்பட்ட 4 ஆடுகள், 20 குட்டிகள் ஈன்றுள்ளது. இதனால் எங்களுடைய பொருளாதார நிலை பெரிதும் உயர்ந்துள்ளது. விலையில்லா ஆடுகள் வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார்.

**மஞ்சகொம்பை கிராமத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி சரோஜா (வயது 47) கூறியதாவது :**




“விலையில்லா ஆடுகள் பெற்றது குறித்து சரோஜா கூறும்போது, எங்கள் வீட்டில் அனைவரும் தினக்கூலி வேலைக்கு சென்று மிகவும் சிரமப்பட்டு வாழ்க்கையை நடத்தி வருகிறோம். நாமும் இதேபோல் ஆடுகள் சொந்தமாக வாங்கி உபயோகப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றினாலும் குடும்ப வறுமையின் காரணமாக வாங்க முடியாமல் வருந்தி வந்தேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழங்கிய விலையில்லா ஆடுகள் எனக்கு கிடைத்துவிட்டது. ஆடுகள் மட்டும் வழங்காமல் அதற்குத் தேவையான கொட்டகைக் கட்டுவதற்கு பணம் மற்றும் காப்பீடும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். மேலும், எனக்கு வழங்கிய ஆடுகள் 17 குட்டிகள் ஈன்றுள்ளது. என்னைப் போன்ற ஏழைப் பெண்களின் ஏக்கத்தை நிவர்த்தி செய்த அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார்.

❖ ❖ ❖



# இலட்சியம் நிறைவேறக் கைகொடுக்கும் மடிக்கணினித் திட்டம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பள்ளி மாணவர்களின் கல்விக்கு தேவையான பாடப்புத்தகம், பாடக்குறிப்பேடு, காலணி, மிதிவண்டி, பேருந்து பயண அட்டை, நிலவரைபட புத்தகம், கிரையான்ஸ், வண்ணப் பென்சில், ஜியாமென்டிரி பாக்ஸ், புத்தகப்பை, சீருடை போன்ற அனைத்தும் விலையில்லாமல் வழங்கிட ஆணையிட்டு பள்ளி கல்வித்துறையில் மாபெரும் புரட்சி செய்துள்ளார். இதற்கெல்லாம் மகுடமாக மாணவ, மாணவியரின் அறிவு விளக்கைத் தூண்டிவிடும் வகையில், விலையில்லா மடிக்கணினிகளை வழங்கி இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களுக்கு முன் உதாரணமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திகழ்ந்து வருகிறார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் புரட்சிகரமான திட்டமான விலையில்லா மடிக்கணினி கிடைக்கப்பெற்ற

மாணவர்கள் தாங்கள் அடைந்த மகிழ்ச்சியை நம்மிடையே பகிர்ந்து கொண்டனர்.

**மாணவன் கவுதம் பி.எஸ்.சி. முதலாம் ஆண்டு**





“எனது தந்தை தினக்கூலி வேலைக்கு சென்று வருகிறார். ஏழ்மையான குடும்ப சூழ்நிலையில் என் தந்தை என்னை கஷ்டப்பட்டு படிக்க வைக்கிறார். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விலையில்லா மடிக்கணினி வழங்கியது எல்லையில்லா மகிழ்ச்சியாகும். என்னுடைய இலட்சியம் பேராசிரியர் ஆவதாகும். நான் வேதியியல் பாடம் படித்து வருவதால் மடிக்கணினி எனக்கு பெரும் உதவியாக உள்ளது. இதனை வழங்கிய அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்”. இவ்வாறு கவுதம் கூறினார்.

**மாணவி அர்ச்சனா பி.காம் முதலாம் ஆண்டு**




“மாணவி அர்ச்சனா கூறியதாவது, எனது தாய் காட்டில் கூலிவேலைக்கு சென்று வருகிறார். தந்தை உயிருடன் இல்லாத நிலையில் என்னுடைய தாய் மிக சிரமப்பட்டு என்னை படிக்க வைக்கிறார். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விலையில்லா மடிக்கணினி வழங்கியது எல்லையில்லா மகிழ்ச்சியாகும். என்னுடைய இலட்சியம் பட்டய கணக்காளர் ஆவதாகும். நான் படிக்கும் துறைக்கு மடிக்கணினி மிக உபயோகமாகவும், உதவியாகவும் உள்ளது. இதனை வழங்கிய அம்மா அவர்களுக்கு மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்”.

❖ ❖ ❖



## விழி இல்லாதவருக்கும் வழிகாட்டி வாழ வைக்கும் தமிழக அரசு!

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாற்றுத் திறனாளிகளின் நலன்கருதி அரசுப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்யும் சலுகையை மாற்றுத்திறனாளிகளின் துணைவியாருக்கும் விரிவுபடுத்துதல், மூன்று சக்கர மோட்டர் வாகனங்களுக்கான 14.5 விழுக்காடு மதிப்புக்கூட்டு வரியினை முற்றிலும் நீக்குதல், 10,000 ரூபாய் மதிப்புள்ள அதிக திறன்வாய்ந்த காதொலிக் கருவிகளை வழங்குதல், பார்வையற்ற பட்டதாரி மாற்றுத்திறனாளிகளுக்கும் சிறப்பு ஆசிரியர் தகுதித்தேர்வு எனப் புதிய புதிய திட்டங்களை வகுத்து திறமுடன் செயல்பட வழியமைத்துக் கொடுத்தார்கள்.

**பார்வையற்ற பட்டதாரி மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்தப்படும் என்று அறிவித்துள்ளதை அறிந்த பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் மகிழ்ச்சிப் பெருக்குடன் அளித்த பேட்டி:**

“எனது பெயர் ஆறுமுகம். நான் குன்னம் வட்டம் அசூரில் வசித்து வருகிறேன். எம்.ஏ., பி.எட். (தமிழ்) முடித்து தற்போது எம்.பில். பயின்று வருகின்றேன்.




கண்பார்வையற்ற எங்களை எல்லாரும் பாவமாகத்தான் பார்ப்பார்கள். எங்களுக்குள்ளும் திறமை இருக்கிறது என்பதை உணர்ந்துகொள்பவர்கள் சிலரே. நாங்கள் படித்து பட்டம் பெற்று வரும்போது இவர்களுக்கெல்லாம் எங்கு வேலை கிடைக்கப் போகிறது என்று ஏளனமாய் பேசியவர்களும் உண்டு. ஆனால், தமிழ்நாட்டு மக்களுக்கெல்லாம் தாயாக விளங்குகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எங்கள் நிலையையும் கருத்தில் கொண்டு எங்கள் திறமைகளுக்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கிற வகையிலே நாங்களும் ஆசிரியர் தகுதித்தேர்வினை எழுதலாம் என்று ஆணையிட்டிருக்கிறார்கள்.

விழியில்லாத நாங்களும் மாணவர்களுக்கு வழிகாட்ட முடியும் என்று எங்கள்மீது நம்பிக்கை வைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எங்கள் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றோம்”.

**செஞ்சேரியைச் சேர்ந்த செல்வி. சரண்யா என்பவர் கூறும்போது:**

“நான் எம்.காம்., பி.எட். படித்துள்ளேன். கல்வித்துறையில் நிறைய சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டு. ஆனால் அதற்கான சரியான தளம் அமையவில்லை. கண்பார்வை இல்லாத சூழ்நிலையிலும் சிரமப்பட்டு பட்டப் படிப்புவரை நாங்கள் படித்ததற்கு தகுந்த அங்கீகாரத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். மேலும், எங்களுக்காக நடத்தப்படும் சிறப்பு ஆசிரியர் தகுதித்தேர்விற்கு விண்ணப்பிக்கும் நபர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் சிறப்பு பயிற்சி வகுப்புகள் பள்ளிக்கல்வித் துறையின் மூலம் நடத்தப்படும் என்றும் அறிவித்துள்ளார்கள்.

எங்களைப்போன்ற மாற்றுத் திறனாளிகளுக்கு இத்தகைய வாய்ப்பை வழங்கி கல்வித்தாயாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என்றென்றும் நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்போம்” என்றார்.

❖ ❖ ❖

# மக்கள் நலத்திட்டங்களை மக்களிடையே எடுத்துச்செல்லும் செய்தி மக்கள் தொடர்புத்துறை

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழக அரசின் சாதனைகள், நலத்திட்டங்கள் ஆகியவை குறித்து அரசின் முக்கிய விழாக்கள், அரசு நிகழ்ச்சிகள், மனுநீதிநாள் முகாம், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆகியவற்றின்போது புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு மக்களிடையே எடுத்துச் சொல்லப்படுகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறை சார்பில் 13.01.2013 அன்று வேப்பூர் ஊராட்சி ஒன்றியம், சு.ஆடுதுறை ஊராட்சியில் நடைபெற்ற பொங்கல் சுற்றுலா விழாவில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினைச் சுற்றுலா விழாவிற்கு வந்த ஸ்பெயின், ஜெர்மன், பிரான்ஸ், இத்தாலி, ஹாலந்து, பெல்ஜியம் உள்ளிட்ட நாடுகளைச் சார்ந்த 50 க்கும் மேற்பட்ட வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் உட்பட பொங்கல் விழாவில் கலந்துகொண்ட 10,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கண்டு ரசித்தனர்.

**புகைப்படக் கண்காட்சி குறித்து குன்னம் ஊராட்சித் தலைவர் திரு.தி.இளங்கோவன் தெரிவித்ததாவது,**

‘‘மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள் அத்திட்டங்கள் குறித்து பத்திரிக்கைகள் வாயிலாகவும், தொலைக்காட்சி செய்திகள் வாயிலாகவும் அறிந்துள்ளேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சிறப்புகள் குறித்தும் சிறு வயது முதல் அறிந்துள்ளேன். இருந்த போதிலும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் புகைப்படக் கண்காட்சியில் அம்மா அவர்கள் அறிவித்து செயல்படுத்திய அனைத்துத் திட்டங்கள் குறித்த புகைப்படங்கள், அத்திட்டங்களின் சிறப்பை


இளங்கோவன்

எளிதாக உணர்த்துகின்றன. மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நாட்டின் பெரிய தலைவர்களிடம் பாராட்டு பெற்றது குறித்த புகைப்படங்கள் நான் இதுவரை காணாதவையாகும்'' என்று கூறினார்.




**புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட திருமதி அமுதா முருகேசன் என்ற பெண் தெரிவித்ததாவது,**

“எந்த ஒரு திட்டத்தை செயல்படுத்தினாலும் அதனை குறித்து பொதுமக்களுக்கு தெரியப்படுத்தினால் தான் அதிக மக்கள் பயன்பெற முடியும். செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் புகைப்படக்கண்காட்சியின் மூலம் சாதாரண பாமர மக்கள் கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திட்டம் குறித்து பார்த்து, படித்து தெரிந்து கொள்வது புகைப்படக் கண்காட்சியின் முக்கியத்துவத்தை தெரியப்படுத்துகின்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சென்னையில் குறைந்த விலையில் உணவுப்பொருட்களை வழங்க மலிவு விலையில் உணவு வழங்கும் திட்டத்தைத் துவக்கி வைத்ததோடு அவர்களே உணவு பொருட்களை தனது திருக்கரங்களால் அள்ளி தட்டில் வைத்த புகைப்படம், ஊட்டியில் அரசு தேயிலை நிறுவனத்தை சிறப்பாகச் செயல்படுத்தி வருவது, வைகை அணையைக் கட்டி தென்மாவட்ட விவசாயிகளுக்கு எதிர்காலத்தை ஏற்படுத்திய பென்னிகுவிக் அவர்களுக்கு சிலை திறந்த நிகழ்ச்சி, கருணை அடிப்படையில் வாரிசுதாரர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருவது ஆகியன குறித்து தெரிந்து கொள்ள உதவியாக உள்ளது'' என்று தெரிவித்தார்.

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தியாகிகளையும்; சமுதாய மேம்பாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களையும் போற்றிப் பெருமைப்படுத்த வேண்டியதும்; அவர்களது பெருமைகளை எதிர்கால தலைமுறையினர் அறிந்து பின்பற்றும் வகையில் நினைவுச் சின்னங்களை எழுப்பி மரியாதை செய்ய வேண்டியதும் ஒரு நல்லரசின் கடமையாகும்.

# முதியோர்களின் வாழ்வை மலரச் செய்த உதவித்தொகை

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கடந்த 2011ஆம் ஆண்டு தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் முதியோர், மாற்றுத்திறனாளிகள், விதவைத்தாய்மார்கள், கைம்பெண்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித்தொகை ரூ.500 லிருந்து ரூ.1,000 ஆக உயர்த்தி வழங்க ஆணையிட்டது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.


அழகம்மாள்

**இத்திட்டத்தினால் பயனடைந்த முதியோர், மாற்றுத்திறனாளிகள், விதவைப்பெண்கள் இத்திட்டம் குறித்து நம்மிடம் தெரிவித்ததாவது,**

**செல்வி. மொ.அழகம்மாள்**

“எனக்கு இரண்டு கண்களும் தெரியாது. நான் எனது தந்தையுடன் அம்பேத்கார் தெருவில் வசித்து வருகின்றேன். எனக்கு கண்பார்வை இல்லாததால் எந்த வேலையும் செய்ய முடியாமல் எனது தந்தையை நம்பி வாழ்ந்து வருகின்றேன். மேலும், எனக்கு திருமணமும் ஆகவில்லை. நான் மாதந்தோறும் மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை ரூ.1,000 பெற்று வாழ்க்கையை நடத்த முடிகின்றது. மாதம் ரூ.1,000 வழங்க உத்தரவிட்டு வழங்கி வரும் அம்மா அவர்களுக்கு நன்றி” என தெரிவித்தார்.


எல்லம்மாள்

**திருமதி பொ.எல்லம்மாள்**

“எனது கணவர் பொன்னுசாமி இறந்து விட்டார். எனக்கு குழந்தைகளும் கிடையாது. நிலம்

எதுவும் இல்ல. விவசாயக் கூலி வேலைக்கு போக உடம்பு ஒத்துக்கல. சாப்பாட்டுக்கு வழி தெரியாம இருந்தேன். முன்னாடி 500 ரூபாய் கொடுத்திட்டு இருந்தாங்க. அம்மா வந்து அதை ஆயிரம் ரூபாயா ஒசத்திட்டாங்க. இது எனக்கு சாப்பாட்டுக்கும், செலவுக்குப் போதுமா இருக்குது. மாசம் 1,000 ரூவா வழங்க உத்தரவு போட்ட அம்மாவுக்கு நன்றி'' என தெரிவித்தார்.


ராமசாமி

**திரு. அ.ராமசாமி**

''நான் பெரம்பலூர் தாலுக்கா எசனை கிராமத்துல வாழ்ந்துகிட்டு இருக்கிறேன். எனக்கு 80 வயசுக்கு மேல ஆயிடுச்சு. கண்ணும் நல்லா தெரியல. நல்லது கெட்டதுக்கு அக்கம் பக்கம் வெளியூருக்கும் போக முடியாது. எந்த பொழப்புக்கும் என்னால போப முடியாது. எனக்கு கவர்மெண்டு குடுக்கற 1,000 ரூவாவை வெச்சுதான் சாப்பாடு சாப்படறேன். நான் உயிரோட இருக்கற வரைக்கும் அம்மா எனக்கு இந்த பணம் தருவாங்கன்னு சொன்னாங்க. எனக்கு வாழ பணம் தந்த அம்மாவுக்கு நன்றி சொல்றேன்.


காவேரி

**திருமதி பொ.காவேரி**

நான் எசனை கிராமத்துல தேவேந்திர குலத்தெருவில குடியிருக்கேன். எனக்கு ரெண்டு பொம்பள புள்ளைங்க இரண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணி வச்சுட்டேன். பொம்பள புள்ளைங்க கட்டி குடுக்கறத்துக்கே நான் வச்சிருந்த நகை, பணமெல்லாம் செலவாச்சு. எனக்கு கவர்மெண்டுல பணம் கொடுக்கறதா சொன்னாங்க. எழுதிபோட்டேன். எனக்கு இப்போ மாசம் பொறந்தா 1,000 ரூவா போஸ்டுமேன் கொண்டாந்து கொடுத்தர்ராரு. எனக்கு வாழ வழிசெஞ்சு மாசாமாசம் பணம் அனுப்பும் அம்மாவுக்கு நன்றி என்று தெரிவித்தார்.

❖ ❖ ❖

# விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பெருக்கும் சின்ன வெங்காய ஏல விற்பனை!



பெரம்பலூர் மாவட்டமானது மக்காச்சோளம், பருத்தி, சின்ன வெங்காயம் உற்பத்தியில் தமிழ்நாட்டிலேயே முதல் மாவட்டமாக உள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் சுமார் 7,000 ஹெக்டேர் பரப்பளவில் சின்ன வெங்காயம் பயிர் செய்யப்படுகின்றது. சின்ன வெங்காய உற்பத்தியானது தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தியில் பெரம்பலூர் மாவட்டத்தின் பங்கு 23 சதவீதம் ஆகும். பெரம்பலூர் மாவட்டத்தில் சின்ன வெங்காயம் பயிர் செய்யும் விவசாயிகள் சின்ன வெங்காயத்தை தங்கள் பகுதியிலேயே ஏல முறையில் நல்ல விலைக்கு விற்பனை செய்து பயன் பெறவேண்டும் என்பதற்காக தமிழக அரசு செட்டிக்குளம் பகுதியில் ரூ.114.9 இலட்சம் மதிப்பிலான 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கினையும், வெங்காய வணிக வளாகத்தினையும், 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இதர காய்கனிகளுக்கான குளிர்பதன சேமிப்புக் கிடங்கினையும் ஏற்படுத்தியுள்ளது.

27.06.2014 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட சின்ன வெங்காய வணிக வளாகத்தில் 17.07.2014 முதல் விவசாயிகளின் சின்ன வெங்காயமானது ஏலமுறையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகள் இதுநாள்வரை தங்கள் வெங்காயத்தை வயல்வெளிகளில் சரியான எடை இல்லாமல், நல்ல விலையும் இல்லாமல் விற்பனை செய்து வந்த நிலை மாறி

தற்போது செட்டிகுளம் வெங்காய விற்பனை வணிக வளாகத்தின் மூலம் ஏல விற்பனை செய்து நல்ல இலாபம் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

செட்டிகுளம் சின்ன வெங்காய வணிக வளாகத்தில் ஒவ்வொரு வாரமும் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் ஏல விற்பனை நடைபெற்று வருகின்றது. செட்டிக்குளம் வெங்காய விற்பனை வளாகத்தில் 17.07.2014 முதல் 30.09.2014 வரை நடைபெற்ற ஏல விற்பனை மூலம் 1,078 விவசாயிகள் கொண்டு வந்த 351.10 மெ.டன் சின்ன வெங்காயமானது ரூ.42,70,254 க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தின் மூலம் வெங்காய விற்பனை செய்ய வந்த இரூரை சேர்ந்த செல்லமுத்து என்ற விவசாயி கூறுகையில்,**

“நான் இரூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு விபரம் தெரிந்த வரை, காலம் காலமாக எங்கள் குடும்பம் விவசாயம் செய்து வருகின்றது. எனக்கு சொந்தமான 6 ஏக்கர் நிலத்தில் பல ஆண்டு காலமாக வெங்காயம் பயிர் செய்து வருகிறேன். கஷ்டப்பட்டு உழைத்தாலும்; நாங்கள் உற்பத்தி செய்யும் பொருளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. இடைத்தரகர்கள்தான் பயனடைந்தனர்.


செல்லமுத்து

வெங்காயத்தை வாங்குவதற்கு வியாபாரிகள் யாரும் நேரடியாக வருவதில்லை. எங்களிடம் குறைந்த விலையில் வாங்கி இடைத்தரகர்கள் வியாபாரிகளிடம் அதிக விலைக்கு எங்கள் கண்முன்னே விற்பார்கள். இந்த நிலையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் செட்டிகுளத்தில் சின்ன வெங்காய ஏல விற்பனை மையத்தை தொடங்கியதால் விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். இதுநாள் வரை விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் இடையில் இடைத்தரகர்கள் பெரும் இலாபம் சம்பாதித்தனர். இதனால் விவசாயம் செய்து வரும் என்னைப் போன்ற பல விவசாயிகள் பெரும் நஷ்டத்தை தொடர்ந்து சந்தித்து வந்தோம்.

ஆனால், எங்களின் கஷ்டங்களை எல்லாம் உணர்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் செட்டிக்குளத்தில் வெங்காய வணிக வளாகத்தினை அமைத்து என்னைப் போன்ற ஏழை விவசாயிகளின் கண்ணீர் துடைத்தார்’’ என்றார்.

❖ ❖ ❖

# ஆதிதிராவிட, பழங்குடியின மக்களின் நலன் காக்கும் அரசு

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காகவும், மாணவ, மாணவிகளுக்காகவும் செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களின் வாயிலாக பலன்பெற்ற மக்களின் எண்ண ஓட்டங்கள் வருமாறு :


*சரசு*

### திருமதி சரசு, தேனூர் கிராமம்

“எனது பெயர் சரசு நான் தேனூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்த நான் வறுமையின் காரணமாக கூலித் தொழில் செய்து வந்தேன். கொத்தடிமை தொழிலாளர் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் ரூ.38 ஆயிரம் நிதியுதவி எனக்கு வழங்கப்பட்டது.

வறுமையின் பிடியில் சிக்கித் தவித்த எனது குடும்பத்திற்கு இந்த நிதி பேருதவியாக இருந்தது. என்னைப் போன்ற பலரின் வாழ்க்கையில் எதிர்பாராத பல்வேறு உதவிகளை செய்து வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார்.

### திரு. ராஜேந்திரன், ஆலம்பாடி புதுகாலனி

“எனது பெயர் ராஜேந்திரன். ஆலம்பாடி புதுகாலனியில் வசித்து வருகிறேன். எனது மகன் பார்த்திபன் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு இறந்து விட்டதால் பெரும் துயரத்திற்கு ஆளாகினோம். இந்த சூழ்நிலையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கருணையால் எனது குடும்பத்திற்கு ரூ.1 இலட்சம் நிதி வழங்கி வறுமையில் இருந்த எங்களுக்கு வாழ்க்கை ஒளி ஏற்றினார்கள்.

இதுமட்டுமல்ல ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கு எண்ணற்ற நலத்திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழங்கி வருவதால் எங்களுக்கு உரிய பாதுகாப்பும், வாழ்வாதாரத்திற்குத் தேவையான அனைத்து சலுகைகளும் முறையாக வழங்கப்படுகிறது. ஆதிதிராவிட மக்களுக்கு இத்தகைய சிறப்பை செய்து வரும் அம்மா அவர்களுக்கு கோடான கோடி நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.


*ராஜேந்திரன்*

**செல்வி. நிவேதா**


*நிவேதா*

"எனது பெயர் நிவேதா. நான் தந்தை ஹேன்ஸ்ரோவர் மேல்நிலைப் பள்ளியில் பயின்று 2013ஆம் ஆண்டு நடைபெற்ற 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் 1,180 மதிப்பெண் பெற்றேன். மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெற்றதைப் பாராட்டி பரிசுத் தொகையாக ரூ.30,000க்கான காசோலையினை வழங்கினார்கள். இந்த தொகை எனது மேல்படிப்பிற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

மாணவ, மாணவிகளுக்கு வேறு எந்த மாநிலத்திலும் வழங்கப்படாத வகையில் பல்வேறு திட்டங்களை வழங்கி வரும் ஒரே முதலமைச்சர் அம்மா அவர்கள் என்றால் அது மிகையாகாது. என்னைப் போன்ற மாணவ, மாணவிகளின் கல்வியையும், எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு விலையில்லா மிதிவண்டி, மடிக்கணினி, நோட்டுப்புத்தகம், காலணி, சீருடை, உள்ளிட்ட எண்ணற்ற விலையில்லா திட்டங்களை வழங்கி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு அனைத்து மாணவ, மாணவிகளின் சார்பாக நன்றிகளைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்''.

❖ ❖ ❖



## ஏழைகளை வாழவைக்கும் விலையில்லா வெள்ளாடுகள்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சிறப்புத் திட்டங்களான விலையில்லாக் கறவைப் பசுக்கள் மற்றும் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டங்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விலையில்லாக் கறவைப் பசுக்கள், வெள்ளாடுகளைப் பயனாளிகளுக்கு வழங்குவதோடு அவற்றைப் பேணிக்காப்பதில் பயனாளிகளுக்கு உதவிடும் வகையில் கால்நடைப் பராமரிப்புத்துறையின் மருத்துவர்கள், ஆய்வாளர்கள், பணியாளர்கள் ஆகியோர் பங்கேற்கும் கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. 236 கிராம ஊராட்சிகளில் வழங்கப்பட்ட ஆடுகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சையும், 44 கிராம ஊராட்சிகளில் வழங்கப்பட்ட கறவைப் பசுக்களுக்கு இனப்பெருக்க சிகிச்சையும் அளிக்கப்பட்டன.

**புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், மேலூர் ஊராட்சியைச் சேர்ந்த பயனாளி திருமதி அன்னலட்சுமி (வயது 35) நம்மிடம் கூறியபோது,**

“எனது கணவர் கூலி வேலை பார்க்கிறார். எனக்கு 2 பையனும், 1 பெண் குழந்தையும் உள்ளார்கள். சொற்ப வருமானத்தில் ஜீவனம் நடத்திக்

கொண்டிருக்கிறோம். நான் 100 நாள் திட்ட வேலைக்குச் சென்று கொண்டிருந்தேன். விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் எனக்கு 4 ஆடுகள் வழங்கப்பட்டன. அதில் 3 ஆடுகள் ஒரே நேரத்தில் 7 ஆட்டுக் குட்டிகள் ஈன்றுள்ளன.


அன்னலட்சுமி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் எங்களுக்குக் கிடைத்த இந்த ஆடுகளைக் கொண்டு எங்களது பொருளாதாரத்தை உயர்த்திக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அம்மா அவர்களுக்கு எங்கள் குடும்பம் வாழ்நாள் முழுவதும் நன்றியுடையவர்களாக இருப்போம்'' என்றார்.

**இன்னொரு பயனாளி திருமதி ஆசியா பேகம் (வயது 32) கூறும்போது,**

“எனது கணவர் அப்துல்ரகுமான், கூலி வேலை பார்க்கிறார். 3 குழந்தைகள் உள்ளனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் திட்டத்தில் 4 வெள்ளாடுகள் வழங்கப்பட்டன. அதில் ஒரு ஆடு 2 ஆண் குட்டிகளையும், 2 வது ஆடு ஒரு பெண் குட்டியும் 3 வது ஆடு 1 பெண் குட்டியினையும் ஈன்றுள்ளது. எங்கள் குடும்பத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வாழவைத்துவிட்டார்கள். “அம்மா'' அவர்கள் நூறாண்டுகள் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறோம்'' என்று மகிழ்ச்சியோடு கூறினார்.


ஆசியா பேகம்

விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் கிராமப்புற ஏழைக் குடும்பங்களுக்கு வருவாய் ஈட்டித் தந்து கொண்டிருக்கிறது. அதன் மூலம் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்வு பெற்றிருக்கின்றன என்றால் அது மிகையல்ல.

❖ ❖ ❖

# கனவுகள் நனவாகிடவே கைதூக்கி நிற்க வைத்த முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளிய மக்களின் ஆரோக்கிய வாழ்விற்கான அற்புதத் திட்டமான முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை 16.01.2012 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் மூலம் 1 கோடியே 34 இலட்சம் குடும்பங்கள் இலவச மருத்துவ சேவையைப் பெற்று பயனடைகின்றனர்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழகத்தில் உள்ள தொலைதூர பகுதிகளில் வாழும் ஏழை, எளிய கிராமப்புற மக்களுக்கு மருத்துவ வசதி ஏற்படுத்தித் தர தற்போது உள்ள 395 நடமாடும் மருத்துவக்குழுக்களை மேம்படுத்தி ஆய்வக வசதிகளுடன் கூடிய 395 சிறப்பான நடமாடும் மருத்துவமனைகள் உருவாக்கப்பட்டுள்ளது. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை மூலமாக 135 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்து, நகர்ப்புற ஏழை, எளிய மக்களுக்கு நல்வாழ்வு சேவைகளை வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ரூ.5 கோடி செலவில் பிறவிக் குறைபாடுகள் உள்ள குழந்தைகளைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் திட்டம் தமிழகம் முழுமையிலும் செயல்படுத்தப்படவுள்ளது.

**இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளி திரு.விக்னேஷ் என்பவர் கூறியதாவது:–**

‘‘என் பெயர் விக்னேஷ். எனக்கு 17 வயதாகிறது. நான் புதுக்கோட்டை வட்டம் கூழையான்விடுதி கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது தந்தை விவசாய கூலி வேலை செய்து வருகிறார். அதில் வரும் வருமானத்தைக் கொண்டு குடும்பம் நடத்தவே கஷ்டமாக இருக்கும் சூழ்நிலையிலும் என்னை பன்னிரெண்டாம் வகுப்பு படிக்க வைத்து வருகிறார். அதனால் நன்றாகப் படித்து என்னுடைய குடும்பப் பொறுப்பை சுமந்து எனது குடும்பத்தை காப்பாற்ற வேண்டும் என்பதே எனது கனவாக இருந்து வந்தது. திடீரென்று




ஒரு நாள் எனக்கு வயிற்றுவலி ஏற்பட்டு, மிகுந்த வேதனை அடைந்து பள்ளியிலிருந்து பாதியிலேயே வீட்டிற்கு திரும்பி வந்தேன். பின்னர், எனது தந்தை என்னை மா.மலர் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைக்கு சிகிச்சை அளிக்க அழைத்துச் சென்றார். அப்பொழுது மருத்துவர் எனக்கு குடல் வால்வு தொற்று நோய் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், உடனடியாக அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டும் என்றும், என்னுடைய தந்தையிடம் கூறினார்கள். எங்கள் குடும்பத்தை வாட்டியது வறுமை. நான் நோயால் வாடினேன். எனது தந்தை இந்த சூழ்நிலையில் எப்படி அறுவை சிகிச்சை செய்து கொள்ள முடியும் அதிக பணம் செலவாகுமே என்று வருத்தப்பட்டார். அதற்கு மருத்துவர் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் பற்றி உங்களுக்குத் தெரியாதா ? என்று எனது தந்தையிடம் கேட்டார். பின்னர் மருத்துவர் உங்களுடைய மருத்துவக் குறிப்புடன் புதுக்கோட்டையில் நடைபெறும் மருத்துவ முகாமில் கலந்து கொள்ளுங்கள் என்று கூறினார். பிறகு, மருத்துவ முகாமில் கலந்து கொண்ட என்னை மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறுவை சிகிச்சை செய்து கொள்ள பரிந்துரை செய்து எனக்கு 04.05.2014 அன்று குடல் வால்வு தொற்று அறுவை சிகிச்சை நடைபெற்று இப்பொழுது நான் நலமாக உள்ளேன்.

என் கனவுகள் யாவும் பொடிப்பொடியாய்த் தகர்ந்து போய்விடுமோ என்று பயந்த நேரத்தில், என்னை கைதூக்கி நிற்க வைத்து என்னைப் போன்ற பணவசதி கொஞ்சமும் இல்லாத ஏழை, எளியவர்கள் எவ்வித செலவுமின்றி, உடல்நலம் பெற்றிடும் வகையில் மருத்துவ சிகிச்சை வழங்கும் திட்டத்தை தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

❖ ❖ ❖

# பள்ளிச் செல்வங்களைப் புதுமைச் சிற்பிகளாக உருவாக்கிடும் சீரிய திட்டங்கள்!

"அறிவுசார் மனிதவளம் மேம்பாடு அடைய வேண்டுமெனில், அனைவருக்கும் தங்குதடையின்றி தரமான கல்வி கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும்"

என்ற நோக்குடன் தமிழக அரசு பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் தமிழகத்தில் பள்ளி குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த ஒரு இணைச் சீருடை இரண்டு இணை சீருடையாகவும், பின்னர் 4 இணை சீருடையாகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா பாடநூல்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் 258.95 இலட்சம் பேருக்கு ரூ.523.97 கோடி செலவில் விலையில்லா பாடநூல்கள் வழங்கப்பட்டுள்ளது. ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.213.65 கோடி செலவில் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2012–2013 அறிமுகப்படுத்தப்பட்ட விலையில்லா கல்வி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், ஒன்று முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் 1.05 கோடி மாணவ, மாணவியர்களுக்கு ரூ.147.57 கோடி செலவில் புத்தகப் பைகளும், ஆறு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் 55.68 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.20.24 கோடி செலவில் கணித உபகரணப் பெட்டிகளும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 63.91 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.11.66 கோடி செலவில் கிரையான்ஸ்/ வண்ணப் பென்சில்களும், ஆறு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் 55.67 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.16.42 கோடி செலவில் நில வரைபடப் புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன. 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா ஒரு இணை காலணிகள் 84.92 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.112.62 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது. 11ஆம் வகுப்புப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதி வண்டிகள் வழங்கும் திட்டத்தின்

கீழ் ரூ.577.39 கோடி செலவில் 18.83 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

**விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்த மாணவி ரேஷ்மா கூறியதாவது:–**


ரேஷ்மா

“என் பெயர் ரேஷ்மா, (வயது 16) நான் புதுக்கோட்டை அரசு இராணியர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 11ஆம் வகுப்பு பயின்று வருகிறேன். எனது அம்மா பெயர் பாத்திமா, அப்பா பெயர் அப்துல்லா. அவர் ஒரு மளிகைக் கடையில் கூலிவேலை செய்து வருகிறார். நாங்கள் புதுக்கோட்டை நகராட்சி, கோல்டன் நகரில் வசித்து வருகிறோம். நாங்கள் மிகவும் ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவர்கள். எங்களை வறுமை சூழ்ந்த போதிலும் என்னுடைய அப்பா என்னைப் படிக்க வைத்துக் கொண்டு இருக்கிறார். என்னுடைய அப்பா ஒருநாள் வேலை செய்யும் கூலியை கொண்டே எங்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இயலும். இந்த சூழ்நிலையில் அப்பா என்னை நீ பள்ளிக் கல்வியை நிறுத்திவிடு என்னால் இதற்கு மேல் உன்னை படிக்க வைக்க இயலாது என்று கூறினார். தமிழக அரசு அறிவித்த விலையில்லா பாடநூல்கள், விலையில்லா சீருடைகள், விலையில்லா காலணிகள், விலையில்லா வண்ணப்பென்சில்கள், விலையில்லா கணித உபகரணப்பெட்டிகள், விலையில்லா புவியியல் வரைப்பட நூல்கள், விலையில்லா பேருந்து பயண அட்டைகள், விலையில்லா நோட்டு புத்தகங்கள், விலையில்லா புத்தக பைகள், மதிய உணவுத்திட்டம் விலையில்லா மிதிவண்டிகள், இடைநிற்றல் குறைப்பதற்கான சிறப்பு ஊக்கத்தொகை ஆகிய திட்டங்களை எடுத்து கூறினேன். பின்னர் எனது அப்பா தமிழக அரசு இவ்வளவு திட்டங்களை அறிவித்து என்னுடைய குடும்ப சுமையை குறைத்திருக்கிறார்கள். இவ்வளவு திட்டங்கள் வழங்கி வருவதால் நீ தொடர்ந்து பள்ளிக்கல்வியை பயில வேண்டுமென்று கூறினார்”.

> “ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவருக்கு
> எழுமையும் ஏமாப் புடைத்து”

என்ற குறளுக்கேற்ப இந்த பிறவியில் எனக்கு கல்வி வழங்கிய தமிழக அரசை நான் ஏழு பிறவியிலும் மறக்கமாட்டேன்.

❖ ❖ ❖

# சிறார்களைப் பாதுகாக்கும் சீரிய திட்டம்

"பெண்களும், சிறார்களும் தாக்குதலுக்கு ஆளாகக் கூடியவர்கள் என்பதை நினைவில் கொள்ளவும். அவர்களுக்கு ஆதரவான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் நாம் கவனக்குறைவாக இருக்கக்கூடாது"

– என்ற சீரிய நோக்குடன் தமிழக அரசு பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில், சைல்டுலைன் என்ற அமைப்பு செயல்பட்டு வருகிறது. சைல்டுலைன் 1098 என்பது 0–18 வயதிற்குப்பட்ட குழந்தைகளுக்கான இந்தியா முழுவதும் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய இலவச தொலைபேசி சேவை ஆகும்.

இந்தத் திட்டத்தினை புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை பலநோக்கு சமூக சேவை சங்கம் (PMSSS) என்ற தொண்டு நிறுவனம் கூட்டு நிறுவனமாகவும் இதன்கீழ் புதுக்கோட்டை, அன்னவாசல், விராலிமலை, குன்றாண்டார்கோயில், கந்தர்வக்கோட்டை, கறம்பக்குடி ஆகிய ஒன்றியங்களிலும் கிளை நிறுவனங்களாக ஊரக ஒருங்கிணைப்பு கல்வி மையம் (Rural Education for Community organization) புதுக்கோட்டை என்ற நிறுவனத்தின்கீழ் அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், மணமேல்குடி ஆகிய ஒன்றியங்களிலும், கிராம மேம்பாட்டு மையம் (Rural Development organizational arimalam) என்ற நிறுவனத்தின்கீழ் அரிமளம், திருமயம், பொன்னமராவதி, திருவரங்குளம் ஆகிய ஒன்றியங்களிலும் சைல்டுலைன்–1098 பணிகளை மேற்கொண்டு மாவட்ட அளவில் கடந்த 09.08.2011 முதல் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

மேலும், பள்ளிக் குழந்தைகள், சுயஉதவிக் குழுக்கள், பொது மக்கள் ஆகியோருக்கு சைல்டுலைன் 1098 பற்றி விழிப்புணர்வு கொடுத்து அவர்கள் மூலமாகவும் தகவல் பெறப்பட்டு பாதிக்கப்பட்ட குழந்தைகளை மீட்டெடுத்து தகுந்த பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு அவர்கள் கல்வி கற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. குழந்தை திருமண சட்டத்தின்படி குழந்தை திருமணங்கள் கிராமங்களில் நிகழாதவாறு அவர்களுக்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டு வருவதோடு, குழந்தைத் திருமணம் நடைபெறுவது பற்றி தகவல் கிடைத்தால் மாவட்ட சமூக நல அலுவலகம் (DSWO), மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு (DCPU), ஆள் கடத்தல் தடுப்புப் பிரிவு (AHTU) மற்றும் உள்ளூர் காவல்

அலுவலர்கள் மற்றும் ஊர்த் தலைவர்களின் உதவியுடன் குழந்தை திருமணத்தினைத் தடுத்து நிறுத்தி அக்குழந்தையை மீட்டெடுத்து குழந்தைகள் நல ஆலோசனை குழுவிடம் (CWC) ஒப்படைக்கப்பட்டு பெற்றோரிடமும், பாதிக்கப்பட்ட பெண்ணிடம் உறுதி சான்றிதழ் பெற்று குழந்தைக்கு 18 வயது பூர்த்தியாகும் வரை திருமணம் செய்யக் கூடாது என்று எச்சரித்து தக்க ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது.

**சைல்டு லைன் 1098 அமைப்பின் மூலம் மீட்கப்பட்ட சிறுவன் கார்த்திக் கூறியதாவது:–**




“என் பெயர் கார்த்திக். என் வயது 9, நான் நாகப்பட்டினம் மாவட்டம், நரியன்காடு கிராமத்தைச் சேர்ந்தவன், தந்தை பெயர் செல்வம், தாயார் பெயர் புஷ்பம். எனது தந்தை தினமும் குடித்துவிட்டு என்னை அடிப்பதால், நான் வீட்டை விட்டு வெளியேறினேன். பின்னர், செய்வதறியாது புதுக்கோட்டை இரயில் நிலையத்தில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது ஆள்கடத்தல் மற்றும் தடுப்புத்துறை ஆய்வாளர் அவர்களின் உதவியுடன் சைல்டுலைன் 1098 அமைப்பின் மூலம் மீட்கப்பட்டேன். 19.11.2014 முதல் 22.11.2014 வரை புதுக்கோட்டை சைல்டுலைன் PMSSS அலுவலகத்தின் பாதுகாப்பில் இருந்தேன்.

எனது பெற்றோர்கள் வர இயலாததால் 22.11.2014 அன்று குழந்தைகள் நல குழுமத்தின் முன் ஆஜர்படுத்தப்பட்டேன். பின்னர், விடுதியில் தங்கி படிப்பதாக விருப்பம் தெரிவித்ததின் அடிப்படையில் என்னை புதுக்கோட்டை பலநோக்கு சமூக சேவை சங்கத்தின் கீழ் இயங்கி வரும் உண்டு உறைவிடப் பள்ளியில் சேர்த்து படிக்க ஏற்பாடு செய்தார்கள். என் பெற்றோரிடம் 24.11.2014 அன்று ஒப்புதல் கடிதம் பெற்று ஒப்படைக்கப்பட்டேன். இந்த அமைப்பின் மூலம் நான் எந்தவொரு இடையூறும் இல்லாமல் நன்றாக படித்து வருகிறேன். என்னைப் போன்ற குழந்தைகளை மீட்டு, அவர்களுக்கு நல்வாழ்வு அளித்து வரும் தமிழக அரசுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்”.

❖ ❖ ❖



# தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் பொருளாதார மேம்பாடு!

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கிராமப்புறங்களில் வாழ்கின்ற இளைஞர்கள், ஆதரவற்றவர்கள், விதவைகள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட ஏழை, எளிய மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றிட பல்வேறுத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அவையாவும் மிகவும் திறமுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தனிநபர் வருமானத்தைப் பெருக்குவதினால் குடும்பப் பொருளாதாரம் உயரும், குடும்பப் பொருளாதாரம் உயர்ந்தால் ஒரு கிராமத்தின் பொருளாதாரமும், அதன் மூலம் மாநிலத்தின் பொருளாதாரமும் முன்னேற்றம் அடையும் என்பதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார


முனீஸ்வரி

இயக்கத்தினை ஆரம்பித்து அதன் மூலம் ஏழை, எளிய மக்களுக்கு தொழில் ரீதியாகப் பயிற்சியளித்து, தொழில் தொடங்கிட தேவையான உதவிகளைச் செய்து அதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திடவும், நடவடிக்கைகள் மேற்கொண்டு சாதனைப் படைத்து வருகிறார்கள்.

**இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் பயனடைந்த பட்டினம்காத்தான் ஊராட்சியைச் சேர்ந்த முனீஸ்வரி, க/பெ. சித்திரைவேலு தெரிவித்ததாவது:**

“நான் ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். எனது கணவர் கூலி வேலை செய்து வந்த நிலையில் மிகவும் சிரமமான நிலையில் வாழ்க்கையை நடத்தி வந்தோம். இந்நிலையில் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின், கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் உறுப்பினராக சேர்க்கப்பட்டு, நான் தொழில் செய்வதற்கு பல்நோக்குப் பயிற்சி பெற்று, பின்னர் பட்டினம்காத்தான் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் நாப்கின் தொழிலினை குழுவாக செய்து வருகிறோம். எங்களுக்கு நாப்கின் தொழில் செய்வதற்கு ரூபாய் 3 இலட்சம் வழங்கப்பட்டது. இத்தொழிலின் மூலம் மாத வருமானமாக குறைந்தது மூவாயிரம் ரூபாய் கிடைக்கிறது. இதன் மூலம் எனது வாழ்வாதாரத்தைப் பெருக்கியதுடன், மேலும் இத்தொழிலை விரிவுபடுத்தி அதன் மூலம் வரக்கூடிய வருவாயை வைத்து எனது குடும்பத்தை மிகச்சிறப்பான முறையில் நடத்தி வருகிறேன். என்னைப் போன்றே இச்சங்கத்திலுள்ள அனைவரும் தொழிலினை மேற்கொண்டு போதிய வருவாய் பெற்று மகிழ்ச்சியாக வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் எனது வாழ்வில் புதுவாழ்வினை ஏற்படுத்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்”.

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

இன்றைய குழந்தைகளே நாளைய சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள் ஆவர். சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி ஆகியவற்றை எவ்வித இடர்ப்பாடும் இன்றி பெற்று மகிழ்ச்சி நிறைந்த சூழ்நிலையில் வளரும் குழந்தைகளே வளமான மற்றும் வலிமையான தலைமுறையினராக உருவாகின்றனர்.

# நிறைந்த இலாபம் தரும் பண்ணைக் குட்டை மீன்குஞ்சு வளர்ப்பு!



**வி**வசாயிகளின் துயரை நிரந்தரமாகப் போக்கிடும் வகையிலும் மழை நீரை வீணாக்காமல் சேமித்து வைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்தும் வகையில் பண்ணைக் குட்டைகள் அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டதன்பேரில் இராமநாதபுரம் மாவட்டத்தில் 5 ஆயிரம் பண்ணைக் குட்டைகள் அமைத்து விவசாயத்திற்கு பயன்படும் வகையிலும் நிலத்தடி நீர் ஆதாரத்தைப் பெருக்கும் வகையிலும் பண்ணைக் குட்டைகள் வாயிலாக 0.5 மீ ஆழமும், மீதமுள்ள 1.50 மீ ஆழத்தை எந்திரத்தின் மூலம் விவசாயத்திற்கு அமைத்துத் தரப்படுகிறது.

வறட்சியான காலத்திலும் விவசாயிகள் தங்களின் நிலத்திலிருந்து குறுகிய காலத்தில் வருமானம் பெறும் வகையில் பண்ணைக் குட்டைகளில் சேகரிக்கப்பட்ட மழை நீரில் புதிய முயற்சியாக மீன்குஞ்சுகள் விடப்பட்டு வளர்க்கப்பட்டு வருகிறது. கடலாடி வட்டத்தில் 13 விவசாயிகளும், ஆர்.எஸ். மங்கலம் வட்டாரத்தில் 7 விவசாயிகள் என மொத்தம் 20 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களது பண்ணைக் குட்டைகளில் தலா 800 மீன்குஞ்சுகள் விடப்பட்டன. மீன்குஞ்சுகளுக்கான உணவு பண்ணை உற்பத்தி திட்டம் மூலம் 20 விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

**மீன்குஞ்சு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் பயனடைந்த விவசாயி திருவேங்கடம் தெரிவித்ததாவது.**


*திருவேங்கடம்*

“எனது பெயர் திருவேங்கடம். நான் இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், சிறைக்குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது நிலத்தில் பருவமழை தவறியதால், மானாவாரிப் பயிர்கள் எதிர்பார்த்த பலன் அளிக்கவில்லை. இருப்பினும் வறட்சியான காலத்திலும் விவசாயிகள் தங்களது நிலத்திலிருந்து குறுகிய காலத்தில் வருமானம் பெறும் வகையில் கோடைப் பண்ணைக் குட்டைகளில் சேகரிக்கப்பட்ட மழை நீரில் மீன்குஞ்சுகள் வளர்த்து விவசாயிகள் இலாபம் பெறும் வகையில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் கீழ் அமைத்துக் கொடுக்கப்பட்ட பண்ணைக் குட்டைகளில் மீன்குஞ்சுகள் வளர்ப்பதற்கு ஏதுவாக மீன்குஞ்சு மற்றும் மீன்குஞ்சுகளுக்கான உணவுகள் யாவும் பண்ணை உற்பத்தித் திட்டத்தின் மூலம் எனக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பண்ணைக் குட்டைகளில் மீன்குஞ்சுகள் விடப்பட்டு 4 மாதங்கள் ஆன நிலையில் சுமார் 70 சதவிகித வளர்ச்சியினை மீன்குஞ்சுகள் பெற்றிருந்தது. அதனை நான் அறுவடை செய்தபோது மீன்கள் ஒவ்வொன்றும் 125 கிராமிலிருந்து 150 கிராம் வரை எடையுள்ளதாக இருந்தன. மீன்கள் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 150 வீதம் விற்பனை செய்து பயிர் சாகுபடி செய்ய இயலாத நேரத்திலும் சுமார் ரூபாய் 7,500 முதல் ரூபாய் 8,000 வரை வருமானம் பெற்றேன். எனது விவசாய நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள பண்ணைக் குட்டைகள் மூலம் விவசாயம் செய்வதற்கு முழு ஈடுபாட்டுடன் திருப்தியும், மகிழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற மற்ற விவசாயிகளும் தங்கள் விவசாய நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைத்து மீன்குஞ்சு வளர்ப்பில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு அதிகப்படியான உற்பத்தியைப் பெருக்கி இலாபம் அடைந்து பயன்பெறலாம். குறைந்த காலத்தில் அதிக வருமானம் பெற்று எங்கள் பொருளாதாரத்தைப் பெருக்கிட இத்திட்டத்தை எங்களுக்கு வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியினை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்”.

❖ ❖ ❖

# மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் மறுமலர்ச்சி!

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் நலன்பெற்று உயர்வடைய மாதாந்திர உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மூன்று சக்கர வாகனம், மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனம், தையல் இயந்திரங்கள், காதொலிக்கருவி, உருப்பெருக்கி உட்பட எண்ணற்ற நலத்திட்டங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**திருவாடானை ஊராட்சி ஒன்றியம் பெருவண்டல் கிராமத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி செல்வி. தேன்மொழி கூறுகையில்:–**




“நான் 5 வயது குழந்தையாக இருக்கும்போது போலியோவால் பாதிக்கப்பட்டு, நடக்க முடியாத சூழ்நிலையில் இருந்தேன், என்னை எனது பெற்றோர் சுமந்து சென்று பள்ளியில் படிக்க வைத்தார்கள். பின்னர் எனது மேல்படிப்பை தொடர்வதற்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட மூன்று சக்கர வாகனத்தின் மூலம் பள்ளிப் படிப்பை முடித்தேன். மேலும், படிப்பை தொடர்வதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் மாற்றுத்திறனாளிகளுக்காக வழங்கப்பட்ட மோட்டார் பொருந்திய மூன்று சக்கர வாகனம் எனக்கு கிடைக்கப் பெற்றது. மாற்றுத்திறனாளிகள் துறையின் சார்பாக மாதந்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை மூலம் வாகனத்திற்கு எரிபொருள் வாங்குவதற்கு உதவியாக உள்ளது. அதன்மூலம் எனது அனைத்து தேவைகளையும், பணிகளையும் விரைந்து முடிப்பதற்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது” என்று தெரிவித்தார்.

**சிலுகைவயல் மாற்றுத்திறனாளி செல்வி கவிதா கூறியதாவது:–**

“நான் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவள். நான் சிறுமியாக இருக்கும் பொழுது போலியோவால் பாதிக்கப்பட்டு, எனது இரண்டு கால்களால் நடக்க முடியாமல் கஷ்டப்பட்டேன். நான் எனது பெற்றோரின் உதவியால் பள்ளிக்கூடம் சென்று படித்து வந்தேன். இந்தச்

சூழ்நிலையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் வழங்கப்பட்ட மோட்டார் பொருந்திய மூன்று சக்கர வாகனம் எனக்கு கிடைத்தது. இதன் மூலம் நான் விடா முயற்சியுடன் ஆசிரியர் பயிற்சியை முடித்து தமிழ் இலக்கியத்தில் முதுகலை பட்டப்படிப்பு படித்து வருகிறேன். எங்களைப் போன்ற மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி எங்கள் வாழ்கையில் நம்பிக்கையை ஊட்டும் அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.




**கண்பார்வை குறைபாடுடைய மாற்றுத்திறனாளி அனிதா கூறியதாவது:–**

''எனது தந்தை தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். நான் குழந்தை பருவத்தில் இருக்கும்பொழுது எனது கண்ணில் பார்வை குறைப்பாடு ஏற்பட்டதன் காரணமாக பள்ளியில் சேர்ந்து படிப்பை தொடர்ந்து படித்துவர இயலவில்லை. இந்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விலையில்லா தரமான உருப்பெருக்கி எனக்கு வழங்கப்பட்டதன் காரணமாக மேல்நிலை தேர்வில் 825 மதிப்பெண்கள் பெற்று பார்வையற்ற மாணவர்களில் இராமநாதபுரம் மாவட்ட அளவில் முதல் மாணவியாக தேர்ச்சி பெற்றேன். இதன் காரணமாக தமிழக அரசால் ரூ.46 ஆயிரத்திற்கான பரிசுத்தொகை கிடைக்கப்பெற்றது. நான் தற்போது தனியார் கல்லூரியில் பி.ஏ. படித்து வருகிறேன். இந்தப் பரிசுத் தொகை எனக்கு படிப்பதற்கு மிகவும் உதவியாக உள்ளது. இதன்மூலம் எனது கல்வித்தரம் உயர்ந்து கல்லூரியில் கூடுதலாக மதிப்பெண் பெறுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தி தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.




❖ ❖ ❖

# ஊக்கமளிக்கும் உன்னதத் திட்டங்களால் உயர்வடைந்த பெண்கள்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உயரிய வழிகாட்டுதலில் சமூக நலத்துறையின் கீழ் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகிறது.

**உச்சிப்புளி, தர்காவலசைப் பகுதியைச் சேர்ந்த சூர்யா கூறுகையில்,**


சூர்யா

“எனது தந்தை முத்துக்கருப்பன் கூலி வேலை செய்து வருகிறார். எனது தாய் செல்வராணி நான் 2 வயதாக இருக்கும்போதே இறந்துவிட்டார். 12ஆவது வகுப்பு படித்து வரும் நான் போலீசாக வேண்டும் என்கிற கனவில் உள்ளேன். எனது கனவு நிறைவேறாமல் போனாலும் என்னை வளர்த்து ஆளாக்கிய எனது தந்தையைக் காப்பாற்ற ஏதாவது ஒரு கைத்தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று எண்ணினேன். எனக்கு வளர் இளம் பெண்களுக்கான தையல்பயிற்சி அளித்தனர். இதன்மூலம் சொந்த காலில் நின்று எனது தந்தையைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது” என்றார்.

**உச்சிப்புளி, சத்யா நகரைச் சேர்ந்த ராஜேஸ்வரி கூறுகையில்,**


ராஜேஸ்வரி

“நான் 2ஆவது முறையாக கர்ப்பம் ஆனது முதல் குழந்தை பிறந்த 6 மாதம் வரை தினமும் சத்துமாவு வழங்கி வந்தனர். அதனை மனநிறைவுடன் உட்கொண்டேன். எனக்கு 2 கிலோ 500 கிராமில் பெண்குழந்தை பிறந்தது. குழந்தைக்கு 6 மாதம் முதல் 3 வயது வரை தினமும் சத்து மாவு கொடுத்தனர். தற்போது எனது குழந்தை ஏறத்தாழ 10 கிலோ எடையில் நல்ல ஆரோக்கியமாக உள்ளது” என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

❖ ❖ ❖



## விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டம்

**மா**ண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் கிராமப்புறங்களில் உள்ள ஏழை, எளிய மக்கள் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட வேண்டும் என்ற எண்ணத்தில் விலையில்லா ஆடு வழங்கும் திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

இத்திட்டத்திற்கான பயனாளிகள் கீழ்க்குறிப்பிட்டுள்ள தகுதிகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறார்கள். தேர்வு செய்யப்படும் குடும்பத்தில் உள்ள குடும்பத் தலைவியின் பெயர் அல்லது அந்தக் குடும்பத்தில் உள்ள ஒரு பெண்ணின் பெயர் பயனாளிகள் பட்டியலில் இடம் பெற வேண்டும். பயனாளி நிலமற்ற விவசாய கூலித் தொழிலாளியாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட கிராமப் பஞ்சாயத்தில் நிரந்தரமாக குடியிருப்பவராக இருக்க வேண்டும். தேர்வு செய்யப்படும் பயனாளி அக்குடும்பத்தில் 18 முதல் 60 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**சேலம் மாவட்டம் கொம்பாடிபட்டி காலனியை சேர்ந்த பயனாளி திருமதி பாப்பா பழனிசாமி (வயது 46) தெரிவித்ததாவது:**

நானும், எனது கணவரும் ஏரி வேலைக்குத் தான் போயிட்டிருந்தோம். எங்களுக்கு 2 குழந்தைகள். எங்களுக்கு சொந்த வீடோ, நிலமோ




இல்லை. 2 வருஷத்துக்கு முன்னாடி எங்களுக்கு புரட்சித்தலைவி அம்மா 4 விலையில்லா ஆடுகளை கொடுத்தார்கள். இதுவரை 6 குட்டிகள் ஈன்றுள்ளது. ஆடு வழங்கிய நாளிலிருந்து இன்னைக்கு வரைக்கும் ஆடு நல்லா ஆரோக்கியமாக உள்ளது. டாக்டர் வந்து பார்த்துட்டு மருந்து மாத்திரையெல்லாம் கொடுத்துட்டு போறாங்க. அம்மா குடுத்த ஆட்டுக்கு இதுவரைக்கும் எந்த செலவும் செய்யலை. நாளைக்கு எனக்கு ஏதாவது கஷ்டம் வந்தா கை கொடுக்கிறது இந்த ஆடாகத்தான் இருக்கும். எந்த வசதியும் இல்லாம இருந்த எனக்கு இந்த ஆடுகளை தந்து மறுவாழ்வு கொடுத்து, சமுதாயத்தில் எங்களை வாழ வழிகாட்டிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எங்கள் குடும்பமே நன்றி உள்ளவர்களாக இருப்போம் எனத் தெரிவித்தார்.

**சேலம் மாவட்டம் அயோத்தியாப் பட்டணம் சி.மாசிநாயக்கன்பட்டியில் வசிக்கும் குப்புசாமி மனைவி திருமதி பார்வதியம்மாள் (வயது 63) தெரிவித்ததாவது:**




நானும் எனது வீட்டுக்காரரும் கூலி வேலை செய்து வந்தோம். எங்க குழந்தைங்க எல்லாம் கல்யாணம் பண்ணி அவங்க அவங்க தனித்தனியா வாழ்றாங்க. எங்களுக்கு யாருடைய ஒத்துழைப்பும், உதவியும் கிடையாது புரட்சித்தலைவி அம்மா அறிவித்த விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 4 ஆடு கொடுத்தார்கள். அதனை நல்ல முறையில் பராமரித்து வளர்த்தோம். இதுவரை அந்த ஆடுகள் 16 குட்டிகள் ஈன்றுள்ளது. சமுதாயத்தில் யாருடைய ஒத்துழைப்பும் இன்றி இருந்த எங்களுக்கு விலையில்லா ஆடு வழங்கி நல்ல நிலையில் வாழ வழிவகுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நானும் எனது கணவரும் வாழ்நாள் முழுவதும் நன்றி உள்ளவர்களாக இருப்போம் எனத் தெரிவித்தார்.

❖ ❖ ❖



# மக்கள் நலன் காக்கும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

**த**மிழகத்தில் உள்ள ஏழை, எளிய மக்கள் மருத்துவமனைகளில் உயர் மருத்துவ சிகிச்சைப் பெற்று பயனடைய செயல்படுத்தப்படும் திட்டம் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஆகும்.

இத்திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 11.01.2012 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், கட்டணமில்லாத மருத்துவ சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகளை, அரசு மற்றும் தகுதி வாய்ந்த தனியார் மருத்துவமனைகள் மூலம் செயல்படுத்துவதாகும். தமிழகத்திலுள்ள 1.34 கோடி குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டு வருமானம் ரூ.72 ஆயிரத்துக்கும் குறைவாக உள்ள குடும்பங்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் பொருந்தும். இத்திட்டத்தின்படி ஒரு குடும்பத்திற்கு ஒரு ஆண்டிற்கு ரூ.1 இலட்சம் வரை ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு சில சிகிச்சைகளுக்கு ரூ.1.5 இலட்சம் வரையிலும் சிகிச்சை அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் மொத்தம் 1,016 நோய் சிகிச்சைகளும், 23 நோய் பரிசோதனைகளும், அதனோடு தொடர்புடைய 113 தொடர் சிகிச்சைகளும் அளிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தில் வரைமுறைபடுத்தப்பட்ட சிகிச்சைகள்

அனைத்தும், திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் அளிக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, சங்ககிரி, ஓமலூர், ஆத்தூர், மேட்டூர் ஆகிய அரசு மருத்துவமனைகள் உள்ளிட்ட 5 அரசு மருத்துவமனைகள், 35 தனியார் மருத்துவமனைகள் என மொத்தம் 40 மருத்துவமனைகளில் இத்திட்டத்தின் கீழ் சிகிச்சை அளிக்கப்படுகிறது.




**இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளி சுப்பிரமணி கூறியது.**

“எனது பெயர் சுப்பிரமணி (வயது 62). நான் சேலம் அம்மாபேட்டை பகுதியில் குடியிருந்து வருகிறேன். எனக்கென்று சொந்த நிலமோ, வீடோ, பொருளாதார வசதியோ எதுவும் கிடையாது. எனக்கு 2 பெண் குழந்தைகள். நான் கூலி வேலை செய்து, அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு எனது மகள்களுக்கு திருமணம் செய்து வைத்தேன். எனக்கு கடந்த 4 நாட்களுக்கு முன்னர் திடீரென்று நெஞ்சுவலி ஏற்பட்டது. உடனடியாக மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்ற போது தான் இதயத்திற்கு வரும் இரத்தநாளங்களில் அடைப்பு இருப்பதாகவும், உடனடியாக அறுவை சிகிச்சை செய்தால் மட்டுமே உயிர் பிழைக்க முடியும் என்றும் மருத்துவர் கூறினார். அதற்கு ஒரு இலட்சம் குறைந்தபட்சம் செலவாகும் என்று சொன்னார்கள். அவ்வளவு பணத்திற்கு என்ன செய்வதென்று தெரியாமல் தவித்த நிலையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் பணம் இல்லாமல் ஆப்பரேசன் செய்து கொள்ளலாம் என்று தெரிவித்து, காப்பீட்டு திட்டத்திற்கான விண்ணப்பத்தினை கொடுத்தார்கள். உடனே நான் விண்ணப்பத்தை கிராம நிருவாக அலுவலரிடம் வருமான சான்றிதழ் வாங்கி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உடனடியாக அடையாள அட்டை விண்ணப்பித்து, முதலமைச்சர் காப்பீட்டு திட்ட அட்டை கொடுத்தார்கள். அடையாள அட்டை கொண்டு வந்து மருத்துவமனையில் கொடுத்த உடனேயே அறுவை சிகிச்சை செய்தார்கள். இப்போது நான் நலமுடன் இருக்கிறேன்.

இதய அறுவை சிகிச்சை செய்து உயிர்வாழ எனக்கு வழிகாட்டி வாழ்வளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என் குடும்பமே நன்றிக் கடன்பட்டுள்ளது” என கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தார்.

❖ ❖ ❖




# வாழ்வாதாரத்தை உயர்த்திய புது வாழ்வுத் திட்டம்

தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களில் புதுவாழ்வுத் திட்டம் முன்னோடித் திட்டமாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால், அவர்களது முந்தைய ஆட்சிக் காலத்தில் அதாவது, 2005ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட திட்டமாகும்.

புதுவாழ்வுத் திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் பல்வேறு குழுக்களுள் ஒன்றான கோகுலம் ஆடு வளர்ப்பு பூச்சரம் குழுவினரிடம் திட்டப்பயன் குறித்துப் பேசினோம்.

**இக்குழுவைச் சேர்ந்த திருமதி பூங்கொடி, நம்மிடம் தெரிவித்ததாவது,**

“நாங்கள் 17 பேர் சேர்ந்து செயல்பட்டு வருகிறோம். புதுவாழ்வுத் திட்டத்தின் மூலம் அமுதசுரபி நிதியின் கீழ், 50 ஆயிரம் ரூபாய்க்கு 25 ஆடுகள் வாங்கினோம். தற்பொழுது 10 குட்டிகள் ஈன்றுள்ளன. ஆடுகள் வாங்கி 6 மாதம் தான் ஆகிறது. இதனைக் கட்டுவதற்கு கொட்டகை அமைக்க 50 ஆயிரமும், தீவனப்புல் வெட்டுக் கருவி வாங்கிட 45 ஆயிரமும் வாங்கியிருக்கிறோம்.

இந்த ஆடுகளுக்கு தீவனம் வழங்க தனியாரிடம் 1 ஏக்கர் நிலம் ரூ.10,000/– குத்தகைக்கு எடுத்து அதில் 1 சென்ட்டில் சூபாபுல், கோபேர்பில்லுகரனை, அகத்தி கீரை புற்களை விதைத்து ஆடுகளுக்கு வழங்கி வருகிறோம். குழுவில் உள்ள அத்தனை பேரும் இணைந்து இரண்டிரண்டு நபர்களாக ஆடுகளைப் பார்த்துக் கொள்கிறோம். இதன் மூலம் நல்ல வருவாய் கிடைக்கிறது. எங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டி இந்த ஆடுகளை வழங்கிய அம்மாவுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்றார்.

**பத்திரக்கவுண்டர்பாளையம் கிராமத்தில் வசிக்கும் திருமதி மணி என்பவர்,**

''நான் புதுவாழ்வுத் திட்டத்தின் மூலம் ஆடு வளர்ப்புக் குழுவில் சேர்ந்துள்ளேன். எங்களது குழுவிற்கு 25 ஆடுகள் கொடுத்துள்ளார்கள். வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று குட்டிகளை ஆடுகள் ஈன்றுள்ளன. குழுவில் உள்ளவர்கள் சுழற்சி முறையில் வாரம் இரண்டு பேர் ஆடுகளைப் பராமரிப்பு செய்து வருகிறோம். ஆடுகள் வாங்கி 6 மாதம் ஆகிறது. ஈன்ற குட்டிகளை வளர்த்து அவற்றில் 5 ஆடுகளை ரூ.10,000/– த்திற்கு விற்றுள்ளோம். இதில் வரக்கூடிய முதல் இலாபத்தை இருப்பு வைத்துக்கொண்டு 6 மாதத்திற்கு பிறகு வரும் இலாபத்தைக் குழுவினர் அனைவரும் பிரித்துக் கொள்கிறோம். எங்களுக்குப் பொருளாதார வசதி ஏற்படுத்திக் கொடுத்த அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று நன்றிப் பெருக்கோடு நம்மிடம் கூறினார்.




❖ ❖ ❖



## மகப்பேறு நிதியுதவி திட்டம் அரசிற்கு மணிமகுடம் சூட்டும் திட்டம்

**சு**காதாரத்துறையின் வாயிலாக தமிழகத்திலுள்ள ஏழை, எளிய, வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள கருவுற்ற தாய்மார்களுக்கு டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவியை ரூ.6,000/–த்திலிருந்து ரூ.12,000/– ஆக உயர்த்தி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம் கருவுற்ற தாய்மார்களுக்கு மூன்று தவணையாக நிதியுதவி வழங்கப்படுகிறது.

**கன்னங்குறிச்சியைச் சேர்ந்த திருமதி மணிமேகலை கூறியதாவது:–**

“எனது பெயர் மணிமேகலை. நான் சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட தாமரைநகர் பகுதியில் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் ஸ்ரீதர் இரும்பு பட்டறையில் வேலை பார்த்து வருகிறார். எனது தந்தை கூலி வேலை செய்து, அதன் மூலம் சேர்த்து வைத்த பணத்தை

வைத்து தான் எனக்கு திருமணம் செய்து வைத்தார். எனக்கு கன்னங்குறிச்சி அரசு துணை சுகாதார நிலையத்தில் பிரசவம் நடைபெற்றது.




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் வழங்கிவரும் நிதியுதவிக்கு பதிவு செய்து, கருவுற்ற 7ஆவது மாதத்தில் ரூ.4000/–மும், பிரசவம் ஆனவுடன் ரூ.4,000/–மும், பிறகு ரூ.4,000/– என ரூ.12,000/– மூன்று தவணையாக பெற்றுள்ளேன். எங்களைப் போன்ற ஏழை, எளிய பெண்கள் திருமணம் முடிந்தவுடன், தாய் தனது கடமை முடிந்து விட்டது என்று நினைத்து, கருவுற்ற காலத்தில் அம்மா வீட்டிற்கு செல்லும்போது அதை பாரமாக நினைக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையினை உணர்ந்து புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான் ரூ.12,000/– நிதியுதவி வழங்குகிறார்கள். எங்கள் கஷ்டத்தை உணர்ந்து, எங்களுக்கு நிதியுதவி வழங்கி ஆரோக்கியத்தோடு வாழ வழிவகுத்த புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

**கன்னங்குறிச்சியைச் சேர்ந்த திருமதி கலையரசி கூறியதாவது :**

''எனது பெயர் கலையரசி. நான் சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட 7ஆவது தெருவில் குடியிருந்து வருகிறேன். எனது தந்தை பெயர் சுப்பிரமணி. அவர் டெய்லர் வேலை செய்து வருகிறார். எனது தாயார் பெயர் பஞ்சம்மாள். நாங்கள் வாடகை வீட்டில்தான் குடியிருந்து வருகிறோம். எங்கள் தந்தை ஒருவரின் வருமானத்தில் தான் எங்கள் குடும்பம் வாழ்ந்து வருகிறது.

நான் கருவுற்ற மூன்று மாதத்தில் கிராம செவிலியர் மூலம், தாய் சேய் பாதுகாப்பு அட்டை வழங்கப்பட்டது. அதில் எங்கள் முழு விவரம், கல்வித்தகுதி,

உடல் பரிசோதனை, தடுப்பூசி, ஊட்டச்சத்து, ஆய்வக பரிசோதனைகள் முதலியவைகள் அடங்கிய குறிப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், மாதம் ஒருமுறை கிராம செவிலியர் வீட்டிற்கே வந்து பரிசோதனை செய்து அதற்கு தகுந்தாற்போல் மருந்து மாத்திரை தருகிறார்கள். எனக்குப் பிரசவ வழி ஏற்பட்ட போது உடனடியாக கன்னங்குறிச்சி துணை சுகாதார நிலையத்திற்கு அழைத்து வந்து பிரசவம் நல்ல முறையில் நடைபெற்றது.




இன்று நானும் என் குழந்தையும் நலமுடன் இருக்கிறோம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் வழங்கும் ரூ.12,000/– நிதியுதவி மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நாங்கள் என்றும் நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்போம்'' என தெரிவித்தனர்.

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

நாட்டின் நம்பிக்கையாகத் திகழும் மாணவச் செல்வங்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி அவர்தம் எதிர்கால வாழ்க்கையைச் செம்மைபடுத்தி, அவர்களை நல்ல குடிமக்களாக்கும் கடமை ஆசிரியர் சமுதாயத்தைச் சார்ந்ததாகும்.

# ஒளி கிடைத்தது உள்ளம் மகிழ்ந்தது எங்கள் வாழ்க்கையில் இன்றுதான் சுதந்திரம்

**சே**லம் மாவட்டம் ஏற்காடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இடையப்பட்டி ஊராட்சியிலுள்ள நெய்யமலை மலை கிராமமானது, ஏற்காடு சேர்வராயன் மலைத் தொடர்ச்சியின் ஒரு பகுதியாகும். நெய்யமலை பகுதியில் 1,200–க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இந்த மலைவாழ் மக்கள் தங்களின் பொருளாதாரத்திற்காக ஆடு, மாடுகளை வளர்த்தும், சாமை, தினை, வரகு, சோளம், புழுதிகார்நெல் போன்ற தானிய வகைகளைப் பயிர் செய்து வருகின்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் இப்பகுதி மக்களின் வாழ்நாள் கோரிக்கையினை ஏற்று இடையப்பட்டியிலிருந்து 7 கி.மீ தொலைவிற்கு 108 மின்கம்பங்களை அமைத்து உயர் அழுத்த மின்சார கம்பிகளைப் பயன்படுத்தி 100 கிலோவாட் புதிய மின்மாற்றியினை நிறுவி பல ஆண்டுகளாக இருளில் மூழ்கிக் கிடந்த இந்த கிராமத்தை ஒளிமயமாக்க ரூ.31.60 இலட்சம் செலவிட்டு இரவை பகல் போல் ஆக்கித் தந்த அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

**பாஞ்சாலை (வயது 45) கூறியதாவது :**

எனது பெயர் பாஞ்சாலை. நான் பிறந்தது முதல் இந்த கிராமத்துல தான் இருந்து வரேன். எங்க பசங்கள நான் படிக்க வைக்கிறபோது மின்சார வசதி இல்லை. அதனால படிக்க வைக்க முடியல. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா எங்க கிராமத்துக்கு மின்சாரம் குடுத்து வெளிச்சத்த ஏற்படுத்திட்டாங்க. இந்த கிராமத்துல இருந்து படிக்கிற பிள்ளைங்க வாழ்க்கையில இனி வெளிச்சம் தான். இந்த மின்சாரம் வழங்கிய அம்மாவுக்கு எங்களது மனமார்ந்த நன்றி.


பாஞ்சாலை

**தர்மலிங்கம் (வயது 37) தெரிவித்ததாவது :**




"எனது பெயர் தர்மலிங்கம். நான் இந்த ஊர்லகுடியிருந்துவருகிறேன்.எங்கநிலத்துல சாமை, தினை விவசாயம் செய்யறோம். இந்த ஊர்ல மொத்தம் 320 வீடுகள் இருக்குது. நாங்க இன்னைக்குதான் முதன் முதல்ல எங்க ஊர்ல மின்சாரத்தை பார்க்கிறோம். எங்களுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்குது. எங்க அப்பா அடிக்கடி சொல்லுவாங்க நாங்க தான் கரண்ட பாக்க முடியாம போயிடிச்சு உங்க காலத்துலையாவது கரண்ட் கிடைக்குமான்னு சொல்லுவாரு. அது இன்னைக்கு கிடைச்சிடுச்சி. எங்க காலம் பாதி போனாலும், இனிவர காலத்துலயாவது எங்க குடும்பமும் சந்தோஷமா இருக்கறத்துக்கு அம்மா குடுத்த மின்சாரம் உதவியா இருக்கும். எங்க வாழ்நாள் முழுக்க தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்போம் என கண்ணீர் மல்க நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்".

**பெருமாள், பூர்ணிமா கூறியதாவது :**




"எனது பெயர் பெருமாள். 2 பெண் குழந்தைகளும், 2 ஆண் குழந்தைகளும் உள்ளனர். நான் 5 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வருகிறேன். நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்து 66 ஆண்டுகள் ஆகிறது. ஆனா எங்க கிராமத்துக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் கொடுத்த மின்சாரத்தால இன்னைக்கு தான் சுதந்திரம் அடைந்தமாதிரி எங்களுக்கு சந்தோஷமாக இருக்கிறது. 2002இல் அம்மா ஆட்சியில் தான் நடந்து வருவதற்கு பாதை அமைக்கப்பட்டது. மேலும், எங்கள் பயன்பாட்டிற்காக நியாயவிலைக் கடையும் கொடுத்து இருக்கறாங்க. இங்குள்ள குழந்தைகள் படிப்பிற்காக அரசு ஆரம்ப பள்ளி

செயல்பட்டு வருகிறது. இப்படி இந்த ஊருக்கு படிப்படியாக ஒவ்வொரு வசதியும் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தான் கிடைக்கிறது. மின்சாரத்துடன் சேர்ந்து விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறியும் கிடைச்சிருக்கு.

**மேலும், அவரது மனைவி பூர்ணிமா அவர்கள் தெரிவிக்கும்போது,**

மின்சாரமும் கொடுத்து அந்த மின்சாரத்துல ஓடுற மிக்சி, கிரைண்டர், மின்விசிறி கொடுத்தது எங்களுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்குது. இந்த 3 பொருளும் எங்க ஊர்ல யார்கிட்டேயும் இல்ல. இதற்குக் காரணம் கரண்ட் இல்லாதது தான். இன்னைக்கு முதலமைச்சர் அம்மா அவர்கள் கரண்டையும் கொடுத்து இந்த கரண்டுல ஓடுற 3 பொருளையும் கொடுத்து நாங்க செய்யற வீட்டு வேல நேரத்த மிச்சப்படுத்த ரொம்ப வசதியா இருக்கும். எங்க அம்மாவ நான் மறந்தாலும், முதலமைச்சர் அம்மாவ என்னைக்கும் எங்க கிராமமே மறக்காது''.


*சாமிக்கண்ணு–லட்சுமி*

**சாமிகண்ணு, லட்சுமி கூறியதாவது :**

''எனது பெயர் சாமிக்கண்ணு. எங்களுக்கு இரண்டு பெண் குழந்தைங்க. எங்களுடைய குழந்தைங்க படிப்பு மின்சாரம் இல்லாம கெட்டு போயிடுமின்னு நெனச்சு, இந்த கிராமத்த விட்டே வேறு ஊருக்கு போயிரலாம்ன்னு இருந்தோம். சாயங்காலம் ஆயிட்டாவே எங்க குழந்தைங்கல கையிலேதான் எடுத்து வச்சிக்குவோம். இதுக்கு காரணம் இரவில் புழு, பூச்சு நடமாட்டம் இருந்தா வெளிச்சம் இல்லாம அத பாக்கமுடியாது. இன்னைக்கு இந்த ஊருக்கு மின்சாரம் கிடச்சு இருக்குது. இதனால குழந்தைங்க சந்தோஷமா இரவில் நடமாடலாம். மேலும், படிக்கறத்துக்கு இந்த மின்சாரம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ரொம்ப சந்தோஷமா இருக்கு. இந்த சந்தோஷத்த கொடுத்தது முதலமைச்சர் அம்மா தான். இது எனக்கு மட்டும் கிடச்ச சந்தோஷம் இல்ல. இந்த கிராமத்துக்கே கிடைச்ச சந்தோஷம். இந்த கிராமமே அம்மாவுக்கு நன்றிக் கடன்பட்டு இருக்கு'' எனப் பேசினார்.

❖ ❖ ❖



# ஏழைகளின் ஏக்கத்தை நிறைவேற்றிய பசுமை வீடுகள் திட்டம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ‘சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்’ திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டத்தில் ஊரக பகுதிகளில் உள்ள ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் இந்தியாவிலேயே முதல்முறையாக 300 சதுர அடி பரப்பளவில் ரூ.1.80 இலட்சம் மதிப்பீட்டில் வீடுகள், ரூ.30 ஆயிரம் மதிப்பீட்டில் சூரிய சக்தியில் செயல்படும் மின்கலன்கள் மற்றும் விளக்குகள் ஆக மொத்தம் ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ‘சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம்’ செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தினால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதுடன், மரபு சாரா எரிசக்தி பயன்பாடு மூலம் மின்சக்தி பெறப்படுகிறது. மேலும், ‘மழைநீர் சேகரிப்பு’ அமைப்பு ஒவ்வொரு வீட்டிலும் அமைக்கப்படும். ஒவ்வொரு பயனாளிகளுக்கும் முழு சுகாதாரத் திட்டத்திலிருந்து தனிநபர் கழிப்பிடத் திட்டத்தின் கீழ் கழிவறை கட்டிக்கொள்ள மானியம் வழங்கப்படும். இதனுடன், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், தனிநபர் இல்லக்கழிப்பிடம் ரூ.11,100/– மதிப்பில் அமைத்து தரப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் “சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்” திட்டத்தின் கீழ், மாற்றுத்திறனாளிகள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், விவாகரத்து பெற்ற பெண்கள்,

பெண்கள் தலைமையில் உள்ள குடும்பங்கள், திருநங்கைகள், எய்ட்ஸ் / காசநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்கள், தீ, வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடுகளில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ள குடும்பங்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இத்திட்டத்தின் மூலம் வீடு பெறும் பயனாளிக்கு வேறு எங்கும் கான்கிரீட் வீடு இருக்கக்கூடாது. பயனாளி வேறு எந்த அரசு வீடு வழங்கும் திட்டத்தின் கீழும் பயன்பெற்றிருக்கக்கூடாது.

**சேலம், மகுடஞ்சாவடி பகுதியைச் சேர்ந்த பயனாளி திரு.கணேசன் கூறியதாவது:–**


கணேசன்

"எனது பெயர் கணேசன். எனது வயது 69. எனது மனைவி பெயர் பட்டம்மாள். நாங்கள் சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம் கூடலூர் ஊராட்சியில் குடியிருந்து வருகிறோம். நான் பிறந்தது முதலே எனது தாய் தந்தையர் கட்டிய கூரை வீட்டில் தான் குடியிருந்து வருகிறேன். எனக்கு 2 மகன்கள் உள்ளனர். அவர்கள் 2 பேரும் கூலி வேலைக்குச் செல்கிறார்கள். எனக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 'சூரிய சக்தியுடன் கூடிய பசுமைவீடு' வழங்கும் திட்டத்தின் கீழ், எனக்கு வீடு கட்டுவதற்கு அனுமதியளித்து, அருமையான கான்கிரீட் வீட்டை கட்டிக் கொடுத்துள்ளார்கள். எனக்கு மிகவும் சந்தோஷமாக உள்ளது. நான் பழைய வீட்டில் இருக்கும் போது காத்து காலம் வந்துவிட்டால் எனக்கு மிகவும் பயமாக இருக்கும். இதுவரை 3 முறை அடித்த காற்றில் எங்கள் வீடு சேதம் அடைந்து மீண்டும் அதை சரிசெய்திருக்கிறோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்களைப் போன்ற ஏழை, எளிய மக்களுக்கு 'சூரிய சக்தியுடன் கூடிய பசுமைவீடு' ரூபாய் 2 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பில் கட்டித் தருவதாக சொன்னதன் அடிப்படையில் நாங்களும் விண்ணப்பம் கொடுத்தோம். எங்களின் பொருளாதார நிலைமையை பரிசீலித்த அலுவலர்கள் உடனடியாக வீடு கட்டுவதற்கு அனுமதியும் வழங்கி, ஒரு அழகான கான்கிரீட் வீட்டையும் கட்டி கொடுத்துள்ளார்கள். கான்கிரீட் வீடு கட்ட வேண்டும் என்ற கனவு தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் திட்டத்தால் நிறைவேறியுள்ளது. பசுமைவீடு கட்டிக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எங்கள் குடும்பமே நன்றிக் கடன்பட்டுள்ளது" என தெரிவித்தார்.

**இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த சேலம், மகுடஞ்சாவடி ஒன்றியம் கூடலூரைச் சேர்ந்த பயனாளி திரு.கந்தசாமி கூறியதாவது:–**



*கந்தசாமி*

“எனது பெயர் கந்தசாமி. எனக்கு வயது 49. எனது மனைவி பெயர் பாரதி. எனக்கு 2 பெண் குழந்தைகள். அவர்கள் பள்ளிக்கூடம் செல்கிறார்கள். நான் தனியார் நிறுவனத்தில் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். இந்த சம்பளத்தை வைத்துதான் எனது வயதான தாய், தந்தையரின் மருத்துவச் செலவு, மகள்களின் படிப்பு செலவு மற்றும் அடிப்படைத் தேவைகள் ஆகியவற்றை சமாளித்து வருகிறோம். என் தாய் தந்தையர் கட்டிய கூரை வீட்டில் தான் நாங்கள் இதுவரை குடியிருந்தோம். மழைக்காலத்தில் வீட்டிற்குள் மழைநீர் தேங்கி, குழந்தைகளின் பாட புத்தகங்களை வைப்பதற்கு கூட இடமில்லாத நிலையில் இருந்தோம். மேலும், எங்களது பழைய கூரை வீட்டில் மழைக்காலத்தில் பூச்சி, புழுக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும். வீடு கட்டுவதற்கு போதிய நிதி ஆதாரமோ, உதவி செய்வதற்கு உற்றார் உறவினர்களோ யாரும் கிடையாது. கான்கிரீட் வீடு கட்ட வேண்டும், மனைவி, குழந்தைகளின் கனவினை நனவாக்க வேண்டும் என்பதே என்னுடைய வாழ்நாள் கனவாக இருந்தது.

இந்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பசுமை வீடு கட்டும் திட்டத்தின் கீழ், ரூபாய் 2 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பில் அழகான பசுமைவீடு கட்டிக் கொடுத்தார்கள். மழைக்காலத்தில் இனி நாங்கள் பயமில்லாமல் சந்தோஷமாக இருக்கலாம். எங்கள் வாழ்நாளில் மெத்தை வீட்டில் குடியிருக்க முடியுமா ? என்ற ஏக்கத்தினை நிறைவேற்றி, நாங்களும் சமுதாயத்தில் நல்லா இருக்க வேண்டும் என்று நினைத்தவர் தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். நான் கஷ்டப்படும் பொழுதெல்லாம், கஷ்டத்திற்கு என்றாவது பலன் கிடைக்கும் என எதிர்பார்த்தேன். அந்த எதிர்பார்ப்பு இன்று ஒரு ரூபாய் செலவு செய்யாமல், கான்கிரீட் வீடு எனக்கு கிடைத்தது ஒரு மிகப்பெரிய வரம் தான். அந்த வரத்தைக் கொடுத்த கடவுள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான்” என கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தார்.

❖ ❖ ❖

# மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களை தாயுள்ளத்தோடு வழங்கும் அரசு!

அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை, மாற்றுத்திறனாளிகளுக்கான நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டை, மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகைப் பார்வையற்ற மாணவர்களுக்கு வாசிப்பாளர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் சுயதொழில் தொடங்க வங்கிக்கடன், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து உதவி உபகரணங்கள், பெட்ரோல் ஸ்கூட்டர், பொது வினியோக திட்டத்தில் உதவி உபகரணங்கள், மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் ஆகியவை சேலம் மாவட்டத்தில் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

**இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளி வி.கௌரி நம்மிடம் பேசியபோது**

எனது பெயர் வி.கௌரி (வயது 36). நான் சேலம் மாவட்டம், நரசோதிப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் பிறவியிலேயே மாற்றுத்திறனாளி. எனது தாய், தந்தையர் கூலி வேலை செய்து என்னைப் பட்டப்படிப்பு வரை படிக்க வைத்தார்கள். அதன் பின்னர் அக்குபங்சர் என்ற உயர்படிப்பு முடித்தேன். வேலை தேடி பல்வேறு இடத்திற்கு அலைந்த போது மாற்றுத்திறனாளி என்று எனக்கு வேலைதர மறுத்துவிட்டனர். சிறிய மருத்துவசாலை தொடங்குவதற்கு உரிய பணவசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டேன். உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் உதவி கேட்டபோது யாரும் உதவி செய்ய முன்வரவில்லை. தமிழக அரசு மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லா கடனுதவி வழங்குவதாக கேள்விப்பட்டேன். சேலம் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் மூலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் ரூ.50,000/– கடன் பெற்றுத் தந்தார்கள்.


வி.கௌரி

கடனாக பெற்ற தொகையை வைத்து மருத்துவம் செய்வதற்கு உபகரணங்கள் வாங்கி வைத்தியம் பார்க்கிறேன். என் குடும்பத்திற்கு தேவையான வருமானமும் கிடைத்து, வங்கிக் கடனையும் மாத தவணைகளில் சுலபமாக செலுத்துவதற்கு வருமானம் கிடைத்துள்ளது.

சமுதாயத்தில் பிறர் எங்களை மதிக்கும் வகையில் நல்வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வழிவகை செய்த தமிழக அரசிற்கு எங்களது குடும்பமே வாழ்நாள் முழுவதும் நன்றி உடையவர்களாக இருப்போம் என தெரிவித்தார்.

**இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளி பி. யுவராஜ் நம்மிடம் பேசியபோது,**



யுவராஜ்

எனது பெயர் யுவராஜ். நான் சேலம் மாவட்டம் குகைப்பகுதியில் குருசாமி பாடசாலை தெருவில் வசித்து வருகிறேன். நான் மாற்றுத்திறனாளி. எனது தந்தை தறிநெசவு கூலி வேலை செய்து அதன் மூலம் வரும் மாதம் ரூ.4,000/– வருமானத்தை வைத்து என் குடும்பத்தை நடத்தி வருகிறார். நாங்கள் வாடகை வீட்டில்தான் குடியிருந்து வருகிறோம். எனது தந்தை என்னை மிகவும் கஷ்டப்பட்டு பட்டப்படிப்பு வரை படிக்க வைத்தார்கள். தனியார் நிறுவனத்தில் வேலை கிடைத்தும் என்னால் வேலைக்கு சென்றுவர இயலவில்லை. போக்குவரத்து நெரிசலில் பேருந்தில் ஏறுவதற்கும், இறங்குவதற்கும் மிகவும் சிரமப்பட்டதால் என்னால் எந்த வேலைக்கும் செல்ல இயலவில்லை. படித்தும் பயனில்லாமல் இருக்கிறேன் என்று மனவேதனைப்பட்ட நிலையில் இருந்தேன். தமிழக அரசு மாற்றுத்திறனாளிகள் நலனில் அக்கறை கொண்டு, மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டர் சைக்கிள் வாகனம் இலவசமாக வழங்குவதை அறிந்து விண்ணப்பித்தேன். கடந்த ஆறு மாதத்திற்கு முன்னால் எனக்கு மோட்டார் சைக்கிள் கிடைத்தது. அதன் மதிப்பு வெளிச்சந்தையில் சுமார் ரூ.67,000/– இருக்குமென தெரிவித்தார்கள். எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது.

என்னைப் போன்ற மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் தலைநிமிர்ந்து வாழ்ந்திட எண்ணற்ற உதவிகளை தாயுள்ளத்தோடு வழங்கிய அம்மா அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டவராக இருப்பேன் எனத் தெரிவித்தார்.

❖ ❖ ❖

# உழவர் பாதுகாப்புத் திட்டம் விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம்!

தமிழகம் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் நிறைந்த மாநிலம். விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களைப் பாதுகாத்து அவர்கள் பயன்பெறும் வகையிலும், அவர்களது குடும்பத்தினரும் பயன்பெற்று வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் பயன்பெற்றிட பிறப்பு முதல் இறப்பு வரையில் (பிறப்பு, கல்வி, திருமணம், முதுமை, விபத்து மற்றும் மரணம்) துணை நிற்கும் வகையில் ஒரு விரிவான திட்டத்தை செயல்படுத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வருவாய்த்துறையின் கீழ் சமூக பாதுகாப்புத் திட்டம் வாயிலாக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டம் என்ற திட்டத்தை அறிவித்து செயல்படுத்தினார்கள்.

**உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் இயற்கை மரண நிதியுதவி பெற்ற பயனாளி அம்பிகா:**

எனது பெயர் அம்பிகா. எனது வீட்டுக்காரர் பெயர் ஜெகநாதன். நாங்கள் தும்பல்பட்டி ஊராட்சி இரட்டைப்புளி புதூரில் குடியிருக்கிறோம். என் கணவர் ஜெகநாதன் கடந்த 3 மாதத்திற்கு முன்னர் உடல்நிலை சரியில்லாமல் இறந்து விட்டார். அவரின் இறுதி சடங்கிற்கு கூட பணமில்லாமல் மிகவும் கஷ்டப்பட்ட நிலையில் எங்கள் உறவினர் ஒருவரிடம் கடன் பெற்று இறுதிச் சடங்கு செய்தோம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இயற்கை மரண உதவித்தொகையாக ரூ.12,500/– தமிழக அரசு வழங்கியது. நல்லகாரியம் நடைபெறுவதற்கு நாம் பணம் கேட்டு அதற்கு காலதாமதம் ஆனாலும் பொறுத்துக்கொள்ள முடியும். ஆனால், இறுதிச் சடங்கு போன்ற காரியங்களுக்கு உடனடி பணத்தேவை ஏற்படுவதால் அதை ஏற்பாடு செய்வது மிகவும் கஷ்டமான ஒரு காரியம். இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு மாண்புமிகு



அம்பிகா

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இயற்கை மரண உதவித்தொகை வழங்குவது மிகவும் வரவேற்க தகுந்த ஒரு நற்செயலாகும் எங்களைப் போன்ற பொருளாதார வசதி இல்லாத விவசாயிகளுக்கு இந்த திட்டம் ஒரு வரப்பிரசாதமாகவே உள்ளது. எங்கள் குடும்பத்தின் சார்பில் தமிழக அரசிற்கு நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம் என தெரிவித்தார்.

**விதவை உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளி சடச்சி.**

“என் பெயர் சடச்சி (வயது 75). எனது வீட்டுக்காரர் பெயர் சின்னப்பையன். நாங்க தும்பல்பட்டி ஊராட்சியைச் சேர்ந்தவர்கள். எனக்கு 2 ஆம்பள பசங்க இருக்காங்க. அவர்கள் இரண்டு பேரும் கூலி வேலைக்கு போறாங்க. அவங்க 2 பேருக்கு கல்யாணமாகி 10 வருடங்கள் ஆகிறது. அவர்கள் தனிக்குடித்தனம் சென்று விட்டார்கள். நானும் எனது வீட்டுக்காரரும் தனியாக இருந்தோம். கடந்த 5 வருடத்திற்கு முன்னர் எனது வீட்டுக்காரர் இறந்து விட்டார். பசங்க யாரும் என்னை சரியாக கவனிப்பதில்லை. ஒரு வருசத்துக்கு முன்னாடி நான் உதவித்தொகை வேண்டுமென்று விண்ணப்பித்தேன். கடந்த 10 மாதமாக எனக்கு மாதம் ரூ.1,000/– தமிழக அரசு வழங்குறாங்க. நான் ஒரு ஆள் என்பதால் ரூ.1,000/– பணம் எனது தேவைக்கு போதுமானதாக இருக்கிறது. எனது வீட்டுக்காரர் என்னை விட்டு போனதுக்கு அப்புறம் நான் பசங்ககிட்ட காசு கேட்டபோதெல்லாம் அவர்களால் உதவிட முடியவில்லை. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாதம் ரூ.1,000/– உதவித்தொகை வழங்க ஏற்பாடு செய்து கொடுத்தாங்க. இன்னைக்கு நான் யாரை நம்பியும் இல்லை. தமிழக அரசு மாதம் தோறும் வழங்கும் ஆயிரம் பணத்தை வைத்து நான் வாழ்க்கை வாழ்ந்துக்கிட்டு இருக்கேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி விசுவாசம் உள்ளவளாக இருப்பேன் என நன்றி தெரிவித்தார்.



சடச்சி

❖ ❖ ❖

# மக்களை நாடி மனு பெற்று அன்றே உதவிடும் அம்மா திட்டம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்த சீரிய திட்டமான அம்மா திட்டத்தின் மூலம் ஒவ்வொரு வருவாய் வட்டத்திலும் வெள்ளிக்கிழமை தோறும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனடியாக அன்றைய தினமே நலத்திட்டங்கள் மற்றும் அவற்றைப் பெறுவதற்கான ஆணைகள் வழங்கப்படுகிறது.

**அம்மா திட்டத்தின் கீழ் பயன்பெற்ற குப்பச்சி (வயது 70) கூறியதாவது,**




“எனது பெயர் குப்பச்சி (வயது 70), கணவர் பெயர் வீரணன். நான் சிவகங்கை மாவட்டம், தமராக்கி கிராமத்தில் வசித்து வருகிறேன். அம்மா திட்டம் மூலம் எங்கள் கிராமத்திற்கு அதிகாரிகள் வந்து மனுக்கள் வாங்கினார்கள். நானும் முதியோர் உதவித் தொகைக் கேட்டு மனுக் கொடுத்தேன். அன்றைக்கே எனக்கு முதியோர் உதவித் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1,000/– பெறுவதற்கு உத்தரவு வழங்கினார்கள். இதனால் வயதான காலத்தில் கஷ்டப்பட்ட எனக்கு மிகவும் உதவியாக இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்த இந்தத் திட்டத்தின் மூலம் நிறைய பேர் பயனடைந்து உள்ளார்கள். எனக்கு முதியோர் உதவித் தொகை கிடைக்கச் செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நீடுழி வாழ வேண்டும்”.

❖ ❖ ❖

# அமைப்புசாரா தொழிலாளர்களின் நலன் காக்கும் தமிழக அரசு நல வாரிய உறுப்பினர்கள் பாராட்டு!

**த**மிழக அரசு அமைப்புசாரா தொழிலாளர்களின் பணி நிலைமையை முறைப்படுத்தவும், அவர்களுக்கு சமூகபாதுகாப்பு அளிக்கவும் அமைப்புசாரா தொழிலாளர் பாதுகாப்பு நலத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகின்றது.

அமைப்புசாரா தொழிலாளர்கள் நலத்திட்ட உதவிகளை பெற 18 வயது நிறைவு செய்தவராகவும், 60 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**திருப்புவனம் தாலுகா, லாடனேந்தலை சேர்ந்த திருமதி லெட்சுமி கூறுகையில்,**

*லெட்சுமி*



"எனது கணவர் பெயர் சௌந்தரராஜன். இவர் முடிதிருத்தும் தொழில் செய்து வந்தார். உடல்நிலை சரியில்லாத காரணத்தால் இயற்கை மரணம் எய்தினார். எனது கணவர் இறந்த பின்பு குடும்பம் நடத்துவது மிகவும் கஷ்டமாக இருந்தது. போதிய வருமானம் இல்லாததால், நான் கூலித் தொழில் செய்து எனது குடும்பத்தைப் பராமரித்து வருகிறேன். எனது கணவர் தமிழ்நாடு முடிதிருத்துவோர் நலவாரியத்தில் உறுப்பினராக இருந்ததால், நலவாரியத்தின் சார்பில் இயற்கை மரண உதவித்தொகையாக ரூ.17,000/– வழங்கப்பட்டது. தமிழக அரசின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுவது என்னைப் போன்ற ஏழை குடும்பத்தைச் சேர்ந்த நபர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. எங்களின் வாழ்க்கைக்குத் தேவையான உதவிகளை நலத்திட்டங்களாக வழங்கி வரும் தமிழக அரசுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்றார்.

❖ ❖ ❖

# இயலாதோர்க்கு உயரிய சிகிச்சை அளிக்கும் மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வசதி படைத்தவர்களுக்கு இணையாக அனைவரும் மருத்துவ சிகிச்சை பெற்று நலமுடன் வாழ்வதற்கு 'முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைத்' தொடங்கி வைத்துள்ளார்கள். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/–த்திற்குள் உள்ள அனைவரும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற முடியும். ஏற்கெனவே மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அடையாள அட்டை பெற்றவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும். அடையாள அட்டை இல்லாதவர்கள் கிராம நிருவாக அலுவலர் சான்று மற்றும் குடும்ப அட்டை ஆகிய ஆவணங்களுடன் வந்து இந்தத் திட்டத்தின் பயன்களைப் பெறலாம்.

**இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளிகள் நம்மிடம் கூறும்போது, திருமதி எஸ். பஞ்சவர்ணம், (வயது 27) மணலூர், திருப்புவனம் ஒன்றியம், சிவகங்கை மாவட்டம்.**




"எனது இரண்டாவது குழந்தை கருவுற்றிருக்கும் போதே டாக்டர்கள் எனது இதயத்தில் பிரச்சினை உள்ளது என்றும், அதற்குத் தொடர்ந்து மாத்திரை சாப்பிட வேண்டும் எனவும் கூறினர். ஆனால் என்னால் சிறு வேலை கூட செய்ய முடியாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தேன். சிறிது தூரம் நடந்தால் கூட மூச்சு வாங்கி நெஞ்சு வலிக்கும். என் கணவர், என் குழந்தைகளையும் வைத்துக் கொண்டு என்னையும் பராமரிக்க முடியாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தார். இந்த நிலையில்

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்த திட்டத்தின் மூலம் எனக்கு இருதய வால்வு மாற்றும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. சிகிச்சை முடிந்து இன்று பூரண நலமுடன் இருந்து வருகிறேன். கடந்த மூன்று வருடமாக வாழ்வா சாவா என்று போராடி வந்த எனக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உயிர்ப் பிச்சை அளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு என் கோடானு கோடி நன்றி'' என்று கண்ணீர் மல்க கூறினார்.

**திரு. முகம்மது ஜக்கரியா, (வயது 27) கக்கன்பாக்கம், சிவகங்கைநகர் சிவகங்கை மாவட்டம்,**

"UKG படிக்கின்ற பெண் குழந்தையும், பிறந்து சில மாதங்களே ஆன ஆண் குழந்தையையும் அதோட இருதய நோயாளியான என்னையும் வைத்துக் கொண்டு என் மனைவி தினந்தோறும் வாழ்க்கையே ஒரு போராட்டமாக நிற்பதைப் பார்க்கும்பொழுது நான்படும் வேதனை சொல்ல இயலாது. மிகவும் சிரமமான சூழ்நிலையில் வாழ்ந்து வந்த எனக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் எனக்கும் வாழ ஒரு வாய்ப்புக் கொடுத்துள்ளார். இந்த உதவி மட்டும் எனக்குக் கிடைக்கவில்லை என்றால் நான், என் குடும்பம் எல்லாம் என்ன நிலைமை ஆகியிருப்போம் என்று என்னால நினைச்சுக் கூட பார்க்க முடியவில்லை. கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எங்கள் வாழ்நாள் முழுவதும் நன்றிக் கடன்பட்டிருப்போம்'' என்று உணர்வு பொங்கக் கூறினார்.




❖ ❖ ❖

# பெண்கள் நலனில் சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தும் அரசு




**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வளரிளம் பெண்களிடம் தன் சுத்தம் மற்றும் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 10 முதல் 19 வயதுடைய வளரிளம் பருவப்பெண்களுக்கு விலையில்லா சானிடரி நாப்கின்கள் வழங்கும் திட்டத்தை அறிவித்து தமிழகத்திலுள்ள அனைத்துக் கிராமங்களிலும் செயல்படுத்தி வருகிறார்கள். அம்மா அவர்கள் வழங்கிய முத்தானத் திட்டங்களில் இத்திட்டமும் ஒன்றாகும்.

**சிவகங்கை மாவட்டம் ஒக்கூர் சோமசுந்தரம் செட்டியார் மேல்நிலைப் பள்ளியில் +2 படித்து வரும் மாணவி கே.கிருத்திகா கூறுகையில்,**

எங்கள் பள்ளியில் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை 3 பாக்கெட் விலையில்லா சானிடரி நாப்கின்கள் வழங்கப்படுகிறது. சானிடரி




நாப்கின் சுத்த பஞ்சினால் தயாரிக்கப்பட்டுள்ளதால் மிருதுவாகவும், பின்விளைவுகள் ஏதும் ஏற்படாதவண்ணம் பாதுகாப்பாக உள்ளது. இதனால் படிப்பில் அதிக கவனம் செலுத்த முடிகிறது. வளரிளம் பெண்களின் உடல் ஆரோக்கியத்தை மனதில் கொண்டு தாயுள்ளத்தோடு இலவசமாக நாப்கின் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நாங்கள் என்றும் நன்றியுடன் இருப்போம்.




**சிவகங்கை மாவட்டம் ஒக்கூர் சோமசுந்தரம் செட்டியார் மேல்நிலைப்பள்ளியில் +2 படித்து வரும் எஸ்.பௌசிகா கூறுகையில்,**

நான் +2 படித்து வருகிறேன். எங்களுக்கு வழங்கப்படும் சானிடரி நாப்கினைப் பயன்படுத்துவதால் பின்விளைவுகள் ஏதுமில்லை.மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எங்களைப் போன்ற ஏழைப் பிள்ளைகளைத் தங்கள் பிள்ளைகளாக நினைத்து இதனை வழங்கி வருகிறார்கள். 'வளரிளம் பெண்களுக்காக' சிரத்தையோடு செயல்படுத்தப்படும் இத்திட்டம் மிகச் சிறப்பானதாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என்றும் நன்றியுடன் இருப்போம் எனத் தெரிவித்தார்.

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

ஒரு பிறப்பில், தான் கற்ற கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டுமல்லாமல் அவரது ஏழு பிறப்பிலும் உதவிடும் என்று வள்ளுவப் பெருமான் போற்றிப் புகழும் கல்விச் செல்வத்தைப் போதிக்கும் பேற்றினைப் பெற்றவர்கள் ஆசிரியப் பெருமக்கள் ஆவார்கள்.



## மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பசுமை வீடுகள் திட்டம்

ஒரு குடும்பத்திற்கு, ஒரு சமூகத்திற்கு, ஒரு நாட்டிற்கு என அனைத்து வகையிலும் முன்னேற துணை நிற்கின்ற வகையில் நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்த பசுமை வீடுகள் திட்டம் ஒரு பொன்னான திட்டம் ஆகும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் கட்டப்படும் இவ்வீடுகளுக்கு சூரிய மின்சக்தி வசதி செய்து தர Tamil Nadu Energy Development Agency (TEDA) துணை புரிகிறது. இந்த மின் திட்டம் இரண்டு ஆண்டுகள் உத்தரவாதம் மற்றும் மூன்று ஆண்டுகள் சேவை வசதியுடன் செய்யப்படுகிறது.

**சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஒன்றியம் ஊத்துப்பட்டியைச் சேர்ந்த செ.ஸ்டெல்லா என்ற பயனாளி கூறுகையில்,**

“எங்கள் குடும்பம் மிகவும் ஏழ்மையான குடும்பம். என் கணவர் கூலி வேலை செய்கிறார். அதில் குடும்பம் நடத்துவது மிகவும் சிரமம். எங்களுக்கு



ஸ்டெல்லா

குடிசைதான் கதி என்று இருந்த போது வரப்பிரசாதமான திட்டமாக பசுமை வீடுகள் திட்டம் அமைந்துள்ளது. எங்களுக்கு இத்திட்டத்தில் வீடு ஒதுக்கித் தந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி''.

**சிவகங்கை மாவட்டம் எஸ். புதூர் ஊராட்சி ஒன்றியம் செட்டிக்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த ப.கருப்பையா கூறுகையில்,**

கருப்பையா



''எங்கள் குடும்பத்துல எல்லாரும் அம்மா அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கோம். சொந்தமாக ஒரு கான்கிரீட் வீடு கட்டுவது என் வாழ்நாள் கனவா இருந்துச்சு. அது இப்போ நிறைவேறின சந்தோஷத்தில நான் மட்டுமில்ல என்னோட தலைமுறை தலைமுறையா, வரும் வருங்கால சந்ததியினரும் நன்றியோட இருப்பாங்க'' என்று உணர்ச்சி பொங்கக் கூறினார்.

❖ ❖ ❖

# மனித நேயத் திட்டங்களால் மனம் உருக நன்றி கூறும் மாற்றுத்திறனாளிகள்

**கொ**டைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான் ஆம் வேந்தர்க்கு ஒளி

எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க, கொடுக்கும் தன்மை, இரக்க உள்ளம், நேர்மையான ஆட்சி, குடிமக்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வரும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய திட்டங்களின் பயன்கள் அனைத்தும் அடித்தட்டு மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும்.

**மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்தின் மூலம் பயனடைந்த ஆலக்குடியைச் சேர்ந்த ரமேஷ் (வயது 35) என்பவர் தெரிவிக்கும்போது,**


ரமேஷ்

"எனக்கு லெட்சுமி என்ற மனைவியும், ராஷ்மி என்ற பெண்குழந்தையும் உள்ளனர். எனது இரு கால்களும் போலியோவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மாண்புமிகு அம்மா அவர்கள் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை மூலம் எனக்கு பெட்டிக்கடை வைக்க அரசு மானியத்துடன் நிதி உதவி அளிக்க ஆணையிட்டார்கள். அந்த நிதியினைக் கொண்டு பெட்டிக் கடை வைத்து நடத்தி வருகிறேன். கனவாக இருந்த இந்தப் பெட்டிக்கடைத் தொழில் எனது செலவிற்கும் குடும்பத்தைப் பராமரிப்பதற்கு போதுமான அளவு வருமானம் மட்டுமல்லாமல், நல்ல படியாக வருமானம் தினசரி கிடைக்கிறது. வளமான வாழ்க்கைக்குத் தேவையான உதவி செய்து, எனது வாழ்வில் ஒளியேற்றிய அம்மாஅவர்களுக்கு எங்கள் குடும்பமே நன்றி கடன்பட்டுள்ளது" என்று ஆனந்தக் கண்ணீருடன் நன்றியைத் தெரிவித்தார்.

❖ ❖ ❖



## இசைக் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கும் விலையில்லா மடிக்கணினி

இசை என்ற சொல்லுக்கு இசைய வைப்பது என்பது பொருள். மனிதனையும் மற்ற உயிரினங்களையும் இசைய வைக்கின்ற, பணிய வைக்கின்ற ஓர் அரும் சாதனம் இசையாகும்.

தஞ்சாவூர் மாவட்டம், காவிரி வடகரையில் தஞ்சையில் இருந்து 13 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள திருவையாற்றில் தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

கலைப்பண்பாட்டுத்துறையின் கீழ் இயங்கி வரும் இக்கல்லூரியில் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட இளங்கலை இசைப்படிப்பு, முதுகலை இசைப்படிப்பு, முனைவர் பட்ட ஆய்வு (Ph.D.) பகுதி நேர–முழு நேர படிப்பு ஆகிய படிப்புகள் கற்பிக்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் மூன்றாண்டு பட்டயப் படிப்புகளான இசைக்கலைமணி (குரலிசை, வீணை, வயலின்) வாத்தியக் கலைமணி (தவில், நாதஸ்வரம், மிருதங்கம்) ஆடற்கலைமணி ஆகிய வகுப்புகளும் நடைபெற்று வருகிறது. ஓராண்டு இசை ஆசிரியர் பயிற்சியும் நடத்தப்படுகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, திருவையாறு தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியில் இளங்கலை இசை பட்டப்படிப்பில் பயிலும் 25 மாணவ, மாணவியருக்கு முதல் முறையாக விலையில்லா மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் விலையில்லா மடிக்கணினிகளைப் பெற்றுள்ள இசைக்கல்லூரி மாணவ, மாணவியரின் மகிழ்ச்சி வார்த்தைகளில் அடங்காது. அவர்கள் ஏகோபித்த நன்றியுடன் தெரிவித்தக் கருத்துகள் பின்வருமாறு:—**

“மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எங்களுக்கு வழங்கிய விலையில்லா மடிக்கணினிகள் இசை குறித்த பல்வேறு தகவல்களை நாங்கள் அறிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும். மேலும், இளங்கலைப் படிப்பில் கணினி பற்றிய திறன் சார்ந்த பாடத்திட்டம் உள்ளதால், அதற்கான செய்முறை பயிற்சிகளை கணினியில் செய்து பயிற்சி பெறவும், இசை சம்பந்தமான தகவல்கள் மற்றும் எல்லா வகையான இசை நிகழ்ச்சிகளையும் பதிவிறக்கம் செய்து கொள்ளவும் மடிக்கணினி மிகவும் பயனுள்ளதாக இருக்கும். காலஞ்சென்ற இசை வல்லுநர்களின் பாடல்கள் மற்றும் வரலாறுகளை அறியவும், இசைக் கலைஞர்களின் அரிய பாடல்களைக் கேட்கவும், ஒளிக்காட்சி மூலம் நேரடியாக இசையைக் கற்பதற்கும், எங்களது பாடத்திட்டங்களை பதிவு செய்து கற்பதற்கும் மடிக்கணினிகள் உதவியாக இருக்கும்.

இசை என்பது படைப்பாற்றலின் திறவுகோலாகும். சிறந்த படைப்புத் திறனால் புதுமையானக் கண்டுபிடிப்புகளை உருவாக்க முடியும். நினைவாற்றலை மேம்படுத்தி சுய ஒழுக்கத்தையும், படித்த தகவல்களை தக்க வைத்துக் கொள்ளும் திறனை அதிகரிக்கவும் இசை உதவுகிறது. எனவே எங்களுக்கு வழங்கப்பட்ட விலையில்லா மடிக்கணினிகளைப் பயன்படுத்தி இளைய தலைமுறைக்குத் தேவையான இசை மென்பொருளை உருவாக்கவும், இசைச் சார்ந்த கற்றல் நுட்பங்களைத் தயாரிக்கவும் திட்டமிட்டுள்ளோம். இசைக் கல்வி குறித்து புதிய கோணத்தில் சிந்திக்கவும், எங்களது இசை சார்ந்த திறனை வளர்த்துக் கொள்ளவும், உலக மொழியான இசை அறிவினைப் பெற்று உலகெங்கிலும் நாங்கள் திறமையுடன் பிரகாசிக்கவும் வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி” என மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

❖ ❖ ❖

# சமுதாய வளைகாப்பு திட்டத்தால் மனம் மகிழ்ந்த கர்ப்பிணிகள்

**மா**ண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தாய்–சேய் நலத்தை பாதுகாக்கும் பொருட்டு, ஒவ்வொரு குழந்தையும் ஆரோக்கியமாக பிறப்பதற்கு வழிவகை செய்திடும் வகையில் வட்டாரம் தோறும் ‘சமுதாய வளைகாப்பு விழா’ நடத்த ஆணையிட்டுள்ளார்கள்.

கர்ப்பிணிப் பெண்கள் கர்ப்ப காலத்தில் போதுமான ஊட்டச் சத்து, சுகாதாரம் மற்றும் மன நலத்தைப் பேணிப் பாதுகாக்க நல்ல ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்கத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அதன்படி 7 மாதங்கள் அல்லது 9 மாதங்கள் நிறைவடைந்த கர்ப்பிணிப் பெண்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு வளைகாப்பு விழா நடத்தப்பட்டு 5 வகையான கலவை சாதம் தயாரித்து வழங்கப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் பயன்குறித்துப் பயனாளிகள் சிலரிடம் பேசினோம்.

**திருமதி இந்திரா தெரிவித்ததாவது:–**

“வளைகாப்பு விழா குடும்பத்தினர் மற்றும் உறவினர்களோடு தான் கொண்டாடுவார்கள். ஆனால் எங்களுக்கு எல்லோரோடும் சேர்ந்து கொண்டாடக் கூடிய வாய்ப்புக் கிட்டியது மிகவும் மகிழ்ச்சியை அளித்தது.


இந்திரா

நாங்கள் அறியாத பல விஷயங்களைக் கற்றுக் கொள்ள வாய்ப்பு கிடைத்தது. இந்த புதிய சமுதாய வளைகாப்பு விழா திட்டத்தின் மூலமாக பல நல்ல ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டேன். அழகான ஆண் குழந்தை 3.320 கிலோ கிராம் எடையில் பிறந்தது. நானும் நல்ல ஆரோக்கியமாக இருக்கின்றேன். இந்த வளைகாப்பு விழாவின் மூலம் ஆரோக்கியமான

நல்ல குழந்தையைப் பெற்றெடுக்க தேவையான ஆலோசனைகளைப் பெற வாய்ப்பளித்த அம்மா அவர்களுக்கு எனது நன்றி''.

**தஞ்சாவூர் மாவட்டம், பூக்காரத் தெரு, திருமதி ஜெயக்குமாரி**

''அங்கன்வாடி பணியாளர்களும் மற்றும் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலரும் கருவுற்ற காலத்தில் சாப்பிட வேண்டிய சரிவிகித உணவு குறித்த ஆலோசனைகளை எனக்கு வழங்கினார்கள்.

இதைக் கடைப்பிடித்த பிறகு ஒன்பது மாத இறுதியில் கல்யாண மண்டபத்தில் நடந்த சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் எனது வீட்டில் எனக்கு வளைகாப்பு செய்தால் எப்படி செய்வார்களோ அதே போன்று புதுப் புடவை, மாலை, வளையல் அணிவித்தனர்.

என்னென்ன உணவுப் பொருள்களில் என்னென்ன சத்து உள்ளது என்பதை அறிந்து கொள்ள அங்கு வைக்கப்பட்டிருந்த கண்காட்சி உதவியாக இருந்தது. கர்ப்பிணிகள் 60 பேரும் சந்தித்துப் பேசவும், சமுதாய வளைகாப்பு வாய்ப்புக் கொடுத்தது. அதோடு டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி பற்றியும் எடுத்துக் கூறினர்.

இவை எல்லாவற்றையும் இந்த சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி மூலம் அறிந்து கொண்டதால் எனக்கு மூன்று கிலோ கிராம் எடை உள்ள அழகான பெண் குழந்தையை பிரசவ சிக்கலின்றி தைரியமாகப் பெற்றெடுக்க முடிந்தது.

குழந்தை பிறந்தவுடன் எதிர்ப்பு சக்தி நிறைந்த சீம்பாலை முதல் உணவாகவும் கொடுத்ததோடு அல்லாமல் தாய்ப்பாலை மட்டுமே இது நாள் வரை கொடுத்து வருகிறேன். இந்த அரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த அம்மா அவர்களுக்கு நன்றி'' என்றார்.

❖ ❖ ❖





# நலிவுற்ற சிறுபான்மையின மக்களின் வாழ்க்கையில் பொலிவூட்டும் அரசு

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சிறுபான்மையின குறிப்பாக இஸ்லாமிய மக்களின் கல்வி மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில், பல்வேறு திட்டங்களைத் தீட்டி வழங்கினார்கள். இத்திட்டங்களை தமிழ்நாடு அரசு தொடர்ந்து அதனைச் சிறப்பாகவும் செம்மையாகவும் செயல்படுத்தி வருகிறது.



பெனாசீர்

**உத்தமபாளையம் வட்டம், கம்பத்தைச் சேர்ந்த திரு. ஆயூப்கான் அவர்களின் மனைவி, திருமதி பெனாசீர் அவர்கள் தெரிவிக்கையில்,**



அஜராம் நிஷா

தனது கணவர் அச்சுத் தொழில் செய்து வருவதாகவும், தங்களது மகள் கல்லூரியில் பயின்று வருவதாகவும், தங்களது மகன் பதினொன்றாம் வகுப்பு பயின்று வருவதாகவும், மிகவும் வறுமையான சூழ்நிலை மற்றும் அவர்களை படிக்க வைக்க முடியாத சூழ்நிலையில் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் மூலம் கல்வி உதவித்தொகை ரூ.6,000/– கிடைக்கப்பெற்று தனது மகளின் கல்லூரிப் படிப்பைத் தொடர்வதற்கு உதவி புரிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு தங்கள் குடும்பத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினார்.

**உத்தம பாளையம் வட்டம், கூடலூரைச் சேர்ந்த திரு. காதர்மைதீன் அவர்களின் மனைவி திருமதி அஜராம் நிஷா அவர்கள் தெரிவிக்கையில்,**

தனது கணவர் பெட்டிக்கடை தொழில் செய்து வருவதாகவும், அதில் கிடைக்கக்கூடிய வருவாயில் தான், தனது கணவர், தனது பெண் குழந்தை, தனது வயதான மாமனார், மாமியார் ஆகியோர்களுடன் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வருவதாகவும், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் மூலம் தங்களது தொழிலை அபிவிருத்தி செய்ய கடனுதவி மற்றும் மானியத்தொகை ரூ.7,500/– வழங்கியதால் தங்களது குடும்பத்தினர் நல்ல நிலையில் வாழ்ந்து வருவதாகவும் அதற்காக தங்களது குடும்பத்தினர் அனைவரின் சார்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்குக் கோடான கோடி நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினார்.

❖ ❖ ❖

# இருப்பிடத்திலிருந்தே தேவையான சான்றிதழைப் பெற மின்னாளுமைத் திட்டம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு அரசு செயல்படுத்தப்படும் இணையதளத்தின் வாயிலான மின்னாளுமை (E-Governance) திட்டத்தின் கீழ் பொதுமக்கள் எளிதில் வருமானம், சாதி, இருப்பிடம், முதல் பட்டதாரி, ஆதரவற்ற விதவையர் ஆகிய சான்றிதழ் மற்றும் இதர சான்றிதழ்களைப் பெற்று பயனடைந்து வருகிறார்கள். மின்னாளுமை (E-Governance) திட்டத்தின் கீழ் சான்றிதழ் பெற மனுவில் உள்ள முழு விபரங்களுடன் ரூ.30 சேவை கட்டணமாக செலுத்தி பதிவு எண் பெறவேண்டும். சேவை மையத்தின் மூலம் ஒரு முறை வழங்கப்படும் பதிவு எண்ணினை வைத்து தேவைப்படும் நேரங்களில் தேவையான சான்றிதழை விண்ணப்பித்துக் கொள்ளலாம். பதிவு எண்ணினைக் கொண்டு இணையதளத்தின் வாயிலாகவும் விபரங்களை அறிந்து கொள்ளலாம்.



பாஸ்கரன்

**இத்திட்டத்தின் கீழ் பொது சேவை மையங்களில் சான்றிதழ்கள் உடனுக்குடன் கிடைக்கப் பெற்ற பயனாளி, தேனி வட்டம், அல்லிநகரத்தைச் சேர்ந்த திரு.செல்லையா என்பவரின் மகன் திரு. பாஸ்கரன் அவர்கள் தெரிவிக்கையில்,**

‘‘தனது சகோதரியின் குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பதற்கு தேவையான சாதி, இருப்பிடம் மற்றும் வருமானச் சான்றிதழ்கள் தேவைப்பட்ட போது, தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் சேவை மையமான தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் மின்னாளுமைத் (E-Governance) திட்டத்தின் கீழ் தங்களது குடும்ப அட்டை மற்றும் ஆதார் அடையாள அட்டையினைப் பயன்படுத்தி விண்ணப்பம் செய்ததாகவும், அதற்குக் கட்டணமாக ரூ.30 செலுத்தியதாகவும், விண்ணப்பம் செய்ததற்கு சான்றாக பதிவு எண்ணுடன் கூடிய ரசீது வழங்கப்பட்டதாகவும், விண்ணப்பித்து இரண்டு நாட்கள் கழித்து தனது கைபேசி எண்ணிற்கு சான்றிதழ்கள் பெற்றுக்

கொள்ளுமாறு குறுஞ்செய்தி வந்ததாகவும், சான்றிதழ்களைத் தனது குடியிருப்புப் பகுதியில் உள்ள சேவை மையத்தின் மூலம் பெற்றதாகவும், முன்பெல்லாம் சான்றிதழ்கள் வேண்டி அரசு அலுவலகங்களுக்குச் சென்றால் அலுவலர்கள் முகாம் சென்று இருப்பதாகவும், அவர்கள் வரும் வரை காத்திருக்கும் நிலை இருந்து வந்ததாகவும், தற்போது அலுவலர்களை நேரடியாக சந்திக்காமலேயே சான்றிதழ்கள் பெற மிகவும் வசதியாக உள்ளதாகவும் கூறினார். மேலும், பொதுமக்களின் நேர விரயம் மற்றும் பயணச் செலவினங்கள் தவிர்க்க அடித்தட்டு மக்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிக்காட்டுதலின்படி எண்ணற்றப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வரும் தமிழக அரசுக்கு தனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றும் தெரிவித்தார்.



சின்ன முடியாண்டி

**பெரியகுளம் வட்டம், வடபுதுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு.பெருமாள் என்பவரின் மகன் திரு.சின்னமுனியாண்டி அவர்கள் திட்டத்தின் மூலம் பயனடைந்ததைப் பற்றி தெரிவிக்கையில்,**

''தான் கூலி வேலை செய்து வருவதாகவும், அரசின் மூலம் வழங்கப்பட்டு வரும் வங்கி கடனுதவி பெற தேவையான வருமானம் மற்றும் இருப்பிடச் சான்றிதழ்கள் கோரி வடபுதுப்பட்டி சேவை மையமான தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் மின்னாளுமை (E-Governance) திட்டத்தின் மூலம் விண்ணப்பம் செய்ததாகவும், விண்ணப்பத்தினை இணையதளத்தின் வாயிலாக 5 நிமிடங்களில் பூர்த்தி செய்ததாகவும், அதற்கு உடனே ரசீது வழங்கியதாகவும், விண்ணப்பித்து இரண்டு நாட்களில் தனக்கு சான்றிதழ்கள் கிடைக்கப் பெற்றதாகவும், ஒரு சில நிமிடங்களிலேயே விண்ணப்பிப்பதன் மூலம் தனது அன்றாட வேலை பாதிப்படையாமலும், அரசு அலுவலகங்களுக்கு சென்று வரும் அலைச்சல், கால விரயம் போன்றவை தவிர்க்கப்பட்டதாகவும், தற்போது வங்கி கடனுதவி வேண்டி விண்ணப்பிப்பதற்கு மிகவும் எளிதாக மின்னாளுமை (E-Governance) திட்டம் தனக்கு உதவியதாகவும், இதுபோன்ற மக்கள் நலத்திட்டங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தி வரும் தமிழக அரசுக்கு தனது சார்பாகவும், தனது குடும்பத்தினர் அனைவரின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

❖ ❖ ❖

# "தாய்" திட்டத்தால் புதுப்பொலிவு பெற்று வரும் தேனி மாவட்டம்

**த**மிழகத்தில் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட, குறைந்தபட்ச அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவற்றில் ஓர் உன்னதத் திட்டமே "தாய்" திட்டம்.

'தாய்' திட்டத்தின் கீழ், தேனி மாவட்டத்தில் உள்ள 130 ஊராட்சிகளில் உள்ள குக்கிராமங்களில் கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு, ஒரு குக்கிராமத்தில் தற்போதுள்ள வசதிகள் எவை, தேவைப்படும் வசதிகள் எவை என்பதை அறிந்து பணிகள் தேர்வு செய்யப்பட்டு பல்வேறு மக்கள் நலப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.




மாவட்டத்தில், 'தாய்' திட்டப்பணிகள் குக்கிராமங்களில் ஆங்காங்கே தினமும் ஏதாவது ஒரு இடத்தில் நடந்து வருகிறது. நல்ல இயற்கை சூழ்நிலையில் வாழ்ந்து வரும் தேனி மாவட்ட மக்கள், தமிழக அரசின் 'தாய்' திட்டத்தால், குக்கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெற்று மனநிறைவு பெற்று வருகின்றனர்.

"இயற்கை அன்னையின் கொடையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய 'தாய்' திட்டமும் தேனி மாவட்டத்தையே புதுப்பொலிவு பெறச் செய்துள்ளது.




'தாய்' திட்டப்பணிகள் எதிர்வரும் 3 நிதியாண்டுகளிலும் மாவட்டத்தில் உள்ள ஏனைய ஊராட்சிகளிலும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட உள்ளன. மக்கள் தொகை அடிப்படையில் பிரித்தளிக்கப்படும் நிதியின் மூலம் மக்களின் முக்கியத்தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

**'தாய்' திட்டம் குறித்து தேனி ஊராட்சி ஒன்றியம் பூமலைக்குண்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. பரமசிவம் அவர்களிடம் கேட்டபோது,**

"முதலமைச்சர் அம்மா அவர்கள் எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும் அதைச் சிறப்பாக நிறைவேற்றி சாதனை படைப்பார்கள். 'தாய்' திட்டம் அம்மா அவர்கள் தாயுள்ளத்துடன் கொண்டு வந்த திட்டமாகும். குக்கிராமங்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தந்துள்ளது. எங்கள் கிராமத்திற்கு அருகிலுள்ள குக்கிராமத்தில் மயான சாலைவசதி இல்லாமல் பல ஆண்டுகளாக சிரமப்பட்டு வந்தனர். மயானசாலை அமைத்து பொதுமக்களின் கோரிக்கையை நிறைவேற்றி மக்கள் மனதில் நிறைவை ஏற்படுத்தித் தந்துள்ளார்கள். இத்திட்டத்தை கொண்டு வந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றி" என உணர்ச்சிப் பொங்கத் தெரிவித்தார்.

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

வளர்ச்சியடைந்த உலகம் முழுவதிலும் நாம் மனித ஆற்றலிலிருந்து அறிவாற்றலுக்கு மாறியுள்ளோம். நாம் நம் உடல் தசைப் பயன்பாட்டிலிருந்து மூளையின் பயன்பாட்டிற்கு மாறியுள்ளோம். அறிவைப் பயன்படுத்தும்போது சக்தியாக மாறுகிறது. அறிவுசார் மூலதனம் என்பது உற்பத்தியின் அனைத்துக் கூறுகளிலும் மிகவும் மதிப்பு வாய்ந்ததாகும்

# பொதுமக்களின் இன்னல்களைப் போக்கிடவும் பொருளாதார விரயத்தைத் தவிர்த்திடவும் "மக்களைத் தேடி வருவாய்த்துறை"

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்களைத்தேடி வருவாய்த்துறை என்ற சீர்மிகு 'அம்மா' திட்டத்தினை அறிவித்து சிறப்பாகவும், செம்மையாகவும் செயல்படுத்தி வருகிறார்கள்.

தேனி மாவட்டத்தில், போடிநாயக்கனூர், பெரியகுளம், தேனி, உத்தமபாளையம், ஆண்டிபட்டி ஆகிய வட்டங்களில் நடைபெற்ற அம்மா திட்ட முகாம்களில் இலவச வீட்டு மனைப்பட்டா, பட்டா மாறுதல் (உட்பிரிவு இல்லாத இனங்கள்), பட்டா மாறுதல் (உட்பிரிவு செய்யப்பட வேண்டிய இனம்), ஆக்கிரமிப்பு அகற்றுதல் போன்றவை தொடர்பாகவும், சாதிச்சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ், குடும்பத்தில் முதல் பட்டதாரி என்பதற்கான சான்றிதழ், இரு பெண் குழந்தைகள் உள்ளதற்கான சான்றிதழ், வாரிசு சான்றிதழ், ஆதரவற்ற விதவை சான்றிதழ், ஆண் வாரிசு இல்லை என்ற சான்றிதழ், சொத்துரிமை சான்றிதழ், சிறு, குறு விவசாயிகளுக்கான சான்றிதழ் மற்றும் இதர சான்றிதழ் தொடர்பாகவும், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் முகவரி மாற்றம் தொடர்பாகவும், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மாதாந்திர உதவித்தொகை, விபத்து மற்றும் நிவாரண உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, நலிந்தோர் உதவித்தொகை தொடர்பாகவும், புதிய குடும்ப அட்டை, பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தங்கள் தொடர்பாகவும், சிட்டா நகல், நிலவரைபட நகல், பட்டா நகல் தொடர்பாகவும், மொத்தம் 30,247 மனுக்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், வருவாய் அலுவலர்கள், கோட்டாட்சியர், வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்களால் மனுக்கள் பெறப்பட்டு உடனடித் தீர்வு காணப்பட்டுள்ளது.

**ஆண்டிபட்டி வட்டம், மரிக்குண்டு உட்கடை, பந்துவார்பட்டி கிராமத்தைச் சேர்ந்த வீரம்மாள் அவர்கள் நம்மிடம் கூறும்போது,**

"தனக்கு ஒரு மகன், இரு மகள்கள் உள்ளதாகவும், அவர்கள் திருமணமாகி தனியாக வசித்து வருவதாகவும், தான் வயதான காலத்தில் ஆதரவற்ற நிலையில், ஒரு வேளை உணவு கூட இல்லாமல் மிகவும் கஷ்டமாக வாழ்ந்து வந்ததாகவும், தனது வயதான காலத்தில் வெளியே எங்கும்



வீரம்மாள்

செல்ல முடியாமல் வாழ்ந்து வந்த சூழ்நிலையில் தனது கிராமத்தில் அம்மா திட்டம் முகாமின் போது தனக்கு முதியோர் உதவித்தொகை வேண்டி மனு அளித்ததாகவும், உடனே மனுவினை பரிசீலனை செய்த அதிகாரிகள் முதியோர் உதவித்தொகை மாதந்தோறும் ரூ.1,000/– மனு அளித்த அன்றே கிடைத்திட வழிவகை செய்ததாகவும், ஒரு வேலை உணவிற்கு வழியில்லாமல் இருந்த எனக்கு அம்மா திட்டம் முகாமின் மூலம் தேடி வந்த உதவித்தொகை கிடைத்ததாகவும், தற்போது மூன்று வேளை உணவுடன் யாருடைய தயவுமின்றி நல்ல நிலையில் வாழ்ந்து வருவதாகவும், என்னை போன்றோர்கள் படும் இன்னல்களை போக்கியதற்கு கோடான கோடி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு என் ஆயுள் உள்ளவரை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டவளாக இருப்பேன் என்றும் கண்ணீர் மல்கக் கூறினார்''.

**ஆண்டிபட்டி வட்டம், சண்முகசுந்தரபுரம் உட்கடை பிராதுகாரன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு.பால்ராஜ் அவர்களின் மகன் அரிச்சந்திரன் அவர்கள் தெரிவிக்கையில்,**



அரிச்சந்திரன்

``தான் கூலி வேலை செய்து வருவதாகவும், திருமணமாகி 2 குழந்தைகளுடன் வாழ்ந்து வந்த போது தனது குழந்தைகளுக்கு பிறப்பு சான்றிதழ் தேவைப்பட்ட சூழ்நிலையில் எங்களது கிராமத்தில் அம்மா திட்டம் முகாம் நடைபெறுவதை அறிந்தவுடன் அலுவலர்களிடம் பிறப்பு சான்றிதழ் வேண்டி மனு அளித்ததாகவும், மனுவினை பரிசீலனை செய்த அதிகாரிகள் உடனே பிறப்புச் சான்றிதழ் வழங்கியதாகவும், தான் எங்கும் செல்லாமல் இருந்த இடத்திலிருந்தே ``அம்மா திட்டம்'' முகாம் மூலம் பிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கு ஆணையிட்டு, அதனை செயல்படுத்தி வரும் தமிழக அரசுக்கும், இப்படி அருமையாக செயல்பட வழியமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் தனது சார்பாகவும், தனது குடும்பத்தின் சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம் எனக் கூறினார்''.

❖ ❖ ❖

# தொழிலாளர்கள் வாழ்வில் ஒளியேற்றிய மகத்தான திட்டங்கள்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் முதன்முதலாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கவும், திடீர் விபத்துக்களினால் தொழிலாளர் குடும்பங்களுக்கு ஏற்படும் பொருளாதார பாதிப்பில் இருந்து பாதுகாத்திடவும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதன் மூலம் சமூகப் பாதுகாப்பினை ஏற்படுத்திடவும், 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டது.

மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள தொழிலாளர் நலத்துறையின் சார்பில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் என மொத்தம் 17 தொழிலாளர் நல வாரியங்களின் கீழ் உறுப்பினர்களாகச் சேரும் தொழிலாளர்களுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு நல உதவித்தொகை, மாதாந்திர உதவித்தொகை, கண்கண்ணாடி உதவித்தொகை, இயற்கை மரண உதவித்தொகை, விபத்துக் காப்பீடு, ஈமச்சடங்கு உதவி போன்ற எண்ணற்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

**உத்தமபாளையம் வட்டம், காமயகவுண்டன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு.சண்முகவேல் அவர்களின் மகன் திரு.பழனிவேல்ராஜன் அவர்கள் தெரிவிக்கையில்,**


பழனிவேல்ராஜன்

நான் முடிதிருத்துவோர் தொழில் செய்து தனது இரண்டு பெண் மகள்களை படிக்க வைக்க இயலாத கஷ்டமான சூழ்நிலையில் தான் தொழிலாளர் நலத்துறையின் மூலம் தமிழ்நாடு முடிதிருத்துவோர் தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் உறுப்பினராக பதிவு

பெற்றதன் மூலம் மூத்த மகளை பத்தாம் வகுப்பு முதல் பொறியியல் முதலாமாண்டு வரை கல்வி உதவித்தொகை பெற்று தற்போது படிக்க வைத்து வருவதாகவும், இரண்டாவது மகளை பத்தாம் வகுப்பு மற்றும் பதினொன்றாம் வகுப்பு வரை கல்வி உதவித்தொகை பெற்று தற்போது படிக்க வைத்து வருவதாகவும், தன்னால் தனது குழந்தைகளைப் படிக்க வைக்க முடியாமல் போய்விடுமோ என்று எண்ணிய நிலையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி எண்ணற்ற பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வரும் தமிழக அரசுக்கு தனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

**தேனி, முல்லை நகரைச் சேர்ந்த திரு.அண்ணாதுரை அவர்களின் மனைவி திருமதி சகாயராணி அவர்கள் தெரிவிக்கையில்,**

தனது கணவர் எதிர்பாராத சூழ்நிலையில் இறந்துவிட்டதாலும், தானும், தனது ஒரு ஆண் மற்றும் இரண்டு மகளுடன் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வந்தபோது தொழிலாளர் நலத்துறையின் மூலம் தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியத்தில் தங்களை உறுப்பினராக பதிவு பெற்றதாகவும், அதனால் இரண்டு பெண் மகள்களுக்கும் திருமண நிதி உதவி பெற்றதால் தனது மகள்களின் திருமணத்தினை மிகவும் சிறப்பாக நடத்திட முடிந்ததாகவும், மேலும், தனது மகன் கல்வி உதவித்தொகை கிடைக்கப் பெற்றதால் பட்டப்படிப்பு முதலாமாண்டு படித்துக் கொண்டு இருப்பதாகவும், தன்னைப் போன்று எதுவும் இல்லாத நிலையில் வாழ்ந்து வரும் மக்களுக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி எண்ணற்ற பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வரும் தமிழக அரசுக்கு தனது குடும்பத்தினர் அனைவரின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினை கண்ணீர் மல்க தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.




❖ ❖ ❖



## திருக்கோயில்களில் சுவையான அன்னதான உணவு பக்தர்கள் மகிழ்ச்சி, மனநிறைவு!

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அன்னதானத் திட்டம் என்ற புதுமைத் திட்டத்தை அறிவித்து கடந்த 2002ஆம் ஆண்டு, சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலில் தொடங்கி வைத்தார்கள்.

முதல்கட்டமாக 63 கோவில்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. கோயிலுக்கு வரும் பக்தர்கள் மத்தியில் அமோக வரவேற்பைப் பெற்றதால் பின்னர், படிப்படியாக 7 கட்டங்களாக இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றதும் அன்னதானத் திட்டத்தின் பயனாளிகளின் எண்ணிக்கை உறுதி செய்வதுடன் உணவின் தரத்தை மேம்படுத்த வேண்டும் எனவும் உத்தரவிட்டார்கள். அதோடு மட்டுமல்லாமல் நிதி வசதி மிகுந்த கோவில்களில் ஞாயிற்றுக்கிழமை தோறும் வடை பாயாசத்தோடு மதிய உணவளிக்க வேண்டும் எனவும் ஆணையிட்டுள்ளார்கள். ஆன்றோர்கள், சான்றோர்கள், பக்தர்கள் மற்றும்



ஆர்வலர்களால் பெரிதும் பாராட்டப்படும் அன்னதானத் திட்டத்தை மேலும், 106 கோயில்களுக்கு விரிவுபடுத்தி இந்தத் திட்டத்திற்குப் புத்துயிர் அளித்துள்ளார்கள்.

இத்திட்டம், வெளி மாநிலங்களிலிருந்து வரும் பக்தர்கள் மற்றும் வெளியூர் பக்தர்களின் மத்தியில் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளதால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், திருவரங்கம் அரங்கநாதசுவாமி, பழனி ஆகிய இரண்டு கோயில்களில் தினந்தோறும் நாள் முழுவதும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

**திரு. வீரபாகு (வயது 85) தூத்துக்குடி மாவட்டம், தென்திருப்பேரை கிராமம்**

“நான் ஒவ்வொரு ஆண்டும் அருள்மிகு ரெங்கநாதரை தரிசனம் செய்ய ஸ்ரீரங்கத்திற்கு வந்து கொண்டிருக்கிறேன். கோயிலில் அன்னதானம் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளதை செய்தித்தாள் மூலமாகத் தெரிந்து கொண்டேன். சாமி தரிசனம் முடிந்து, அன்னதான பிரசாதம் எங்கு வழங்கப்படுகிறது என்று விசாரித்தபோது மதியம் சரியாக 12 மணிக்கு வழங்குவதாகச் சொன்னார்கள். கோவிலில் வழங்கப்பட்ட அன்னதானம் சுவையாக இருந்தது”, என்றார்.

**ஆர். ஆறுமுகம் (வயது 58)**

“சாமி தரிசனம் செய்ய சுற்றுலாவாக வந்துள்ளேன். உச்சிகால பூஜை முடிந்தவுடன் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. வெளியில் ஹோட்டல்களில் சாப்பாட்டிற்காக அலைய வேண்டியதில்லை. கோயில் வளாகத்தில் அன்னதானம் வழங்குவது கடவுள் கொடுத்த வரப்பிரசாதம்”, என்று தெரிவித்தார்.

❖ ❖ ❖

# மக்களின் மனுக்கள் மீது உடனடித் தீர்வைத் தரும் அம்மா திட்டம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட "அம்மா திட்டம்" சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.



அம்மா திட்டத்தின் மூலம் பயன்பெற்றுள்ள பயனாளிகள் சிலர் தெரிவித்தக் கருத்துக்கள்:

**திரு. டி. சங்கர் – அணலை**

"நான் தனியார் அச்சகத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த ஒரு வருடமாக குடும்ப அட்டையில் என்னுடைய மகளின் பெயர் நீக்கம் செய்து சான்றிதழ் பெற முயற்சி செய்தேன். திருப்பராய்த்துறையில் அம்மா திட்ட முகாம் நடைபெறுவதாக கேள்விப்பட்டு காலை 11 மணிக்கு மனு அளித்தேன். பிற்பகல் 2 மணிக்கு வட்டாட்சியரால் சான்றிதழ் வழங்கப்பட்டது. இவ்வளவு சுலபமாக என்னுடைய வேலை முடியும் என்று எதிர்பார்க்கவில்லை. இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா



*சங்கர்*

அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.


மாரியாயி

**திருமதி. மாரியாயி (வயது 62)**

''திருப்பராய்த்துறை ரோடு எலமனூர் அண்ணாநகரில் வசிக்கிறேன். நான் விவசாயக் கூலி வேலை செய்து வருகிறேன். என்னுடைய புருஷன் செத்து இரண்டு வருசம் ஆச்சு. எங்களுக்குக் குழந்தைகள் ஏதும் இல்ல. கீழே விழுந்து சமீபத்தில் கால் அடிபட்டுடிச்சி. அதனால நடக்க முடியல. இதுபோல ஒரு உதவித் தொகை இருப்பது எனக்குத் தெரியல. இன்னைக்கு அரசு அதிகாரிங்க எங்க கிராமத்துக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வர்றதா தெரிஞ்சது. எனக்கும் உதவித் தொகை வேண்டி மனுகொடுத்தேன். அதிகாரிகள் வீட்டுல வந்து விசாரிச்சு உடனடியாக மாசம் ஆயிரம் ரூவா வாங்கற உத்தரவை எனக்குக் கொடுத்தாங்க. நான் கொஞ்சம்கூட எதிர்பாக்கவேயில்ல. இவ்வளவு சீக்கிரம் கிடைக்குமுனு. இந்த மாதிரி கிராமங்களுக்குப் போயி என்ன மாதிரியான ஏழைப் பாழைங்களுக்கு உதவி செய்ய உத்தரவு போட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவங்களுக்கு என்னோட மனம் நிறஞ்ச நன்றியைத் தெரிவிச்சுக்கிறேன்''.

**திருமதி. சுபைதா பேகம் நம்மிடம் பேசியபோது,**


சுபைதா

''எனது மகள் சஹானா பேகம் 10ஆம் வகுப்பு படிக்கிறாள். ஜாதி சர்டிபிகேட்ல அவ பேரு தப்பா பதிஞ்சு இருந்துச்சி. எவ்வித அலைச்சலும் இல்லாமல் 10 நிமிடங்களில் அம்மா திட்ட முகாமில் பெயர் மாற்றம் செய்து கொடுத்திட்டாங்க. இதுபோல உடனடியா நடக்கும்னு நான் நினைக்கவே இல்லை. அம்மா திட்டத்தால் எனக்கு இந்த வேலை சுலபமா ஆச்சு. அதுக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவங்களுக்கு கோடானு கோடி நன்றி'' என்றார்.

❖ ❖ ❖

# இளைஞர்கள் வாழ்வில் முன்னேற வழிகாட்டிய அரசு!

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் 487 இளைஞர்களுக்கு ரூ.1,029 இலட்சம் கடனுதவியும், ரூ.154.3 இலட்சம் அரசு மானியமும் வழங்கப்பட்டுள்ளது. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு மூலதன மானியமாக ரூ.251.74 இலட்சமும், மின் மானியமாக ரூ.62 இலட்சமும், மின்னாக்கி மானியமாக ரூ.114.58 இலட்சமும், மதிப்புக்கூட்டு வரி மானியமாக ரூ.99.41 இலட்சமும், தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

**இடியாப்பம் செய்யும் தொழிலை தொடங்கியுள்ள பேட்டையைச் சேர்ந்த, திருமதி மரியம் ஜமிலா அவர்கள் கூறியதாவது :**

எனக்கு இரண்டு குழந்தைகள், நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு வந்தோம். எனது கணவர் அவர்களின் அறிவுரையின் பேரில், மாவட்ட தொழில் மையம் மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் சுயதொழில் புரியும் திட்டத்தின் கீழ், அரசு மானியத்துடன் இடியாப்பம் செய்யும் தொழிலுக்காக ரூ. 3 இலட்சம் வங்கிக் கடன் பெற்றேன். பேட்டையில் எனது வீட்டுக்கு அருகிலேயே இடியாப்பம் செய்யும் தொழிலைத் தொடங்கி நடத்தி வருகிறேன். அரசு மானியமாக ரூ.45,000/– வழங்கினார்கள். எனக்கு நாள் ஒன்றுக்கு ரூ.1,500/– வரை வருமானம் வருகிறது. நாங்கள் பொருளாதாரத்தில் உயர்ந்து தற்போது நல்ல நிலையில் உள்ளோம். நான் 4 பேருக்கு வேலை தந்துள்ளேன். என்


மரியம் ஜமிலா

போன்ற பெண்கள் வாழ்க்கையில் உயர்வதற்கு வழிகாட்டிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது மனமார நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

**மாவட்ட தொழில் மையம் உதவியுடன், சுய தொழிலாக ஆட்டோ ஓட்டும் பெண்மணி செல்வி. மாரீஸ்வரி (வயது 28) கூறியதாவது,**


மாரீஸ்வரி

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளேன். எனது குடும்பம் வறுமை நிலையில் இருந்து வந்தது. படித்த இளைஞர்களுக்கு சுயதொழில் செய்வதற்கு மாவட்டத் தொழில் மையம் வாயிலாக வங்கி கடன் வழங்குவதாக அறிந்தேன். சுய தொழிலாக ஆட்டோ வாங்குவதற்கு விண்ணப்பம் கொடுத்தேன். எனக்கு வங்கிக் கடனாக ரூ.1.95 இலட்சம் வழங்கினார்கள். இதில் எனக்கு ரூ.29,000/– மானியம் ஆகும். வங்கியில் குறைந்த வட்டி என்பதால் எனக்குப் பணம் திரும்ப செலுத்துவதில் சிரமம் ஏதும் ஏற்படவில்லை.

இதன் மூலம் தினமும் எனக்கு நிரந்தர வருமானம் வருவதோடு, பலதரப்பட்ட மக்களை அவர்கள் விரும்பும் இடத்திற்கு பாதுகாப்போடு கொண்டு சென்று விடுவது மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. குறிப்பாக பள்ளி, கல்லூரி மாணவிகள் எனது ஆட்டோவில் பாதுகாப்பாக வருவதை கேட்கும் போது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இதனை என் போன்ற பெண்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எனது வாழ்க்கையில் நிரந்தர வருமானத்திற்கு வழி அமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖



# மன உறுதியும் நம்பிக்கையும் தரும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்களின் நலனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு நோய் நொடியின்றி மக்கள் வாழவும், நோய் வந்தால் உயரிய சிகிச்சை பெறவும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

இத்திட்டத்தின் கீழ் 1,016 நோய்களுக்கான மருத்துவ சிகிச்சைகள், 113 தொடர் சிகிச்சைகள், 23 வகையான நோய்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் என தமிழகத்தில் பயனடைந்த ஏழை, எளிய மக்களின் எண்ணிக்கை எண்ணிலடங்காது. திருவள்ளூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சிகிச்சை பெறுவதற்கு ஏதுவாக 5,37,542 நபர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் ஜூலை 24 வரை ரூ.27.42 கோடி செலவில் 12,054 நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மக்களின் அலைக்கழிப்புகளுக்கு விடை கொடுக்கும் அற்புதத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இதுவரையில் அடையாள அட்டை பெறாதவர்கள் உடன் அடையாள அட்டை பெற ஏதுவாக, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அடையாள அட்டை பிரிண்டிங் இயந்திரத்தை

வழங்கி ஆன்லைன் மூலமாக உடனுக்குடன் அடையாள அட்டை வழங்கிட உத்திரவிட்டார். அதன்படி 2013 மார்ச் மாதத்திலிருந்து விண்ணப்பித்தவுடன் அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அடையாள அட்டை பெற்றுக் கொண்ட பயனாளிகள் நோயின்றி வாழுகின்ற நம்பிக்கையையும், உயர் சிகிச்சை பெற முடியும் என்ற உறுதியையும் நம்மிடம் பகிர்ந்து கொண்டனர்.

**சென்னை திருமுல்லைவாயிலைச் சேர்ந்த திரு.கே. நாராயணன் (த/பெ. ப. கிருஷ்ணமூர்த்தி) நம்மிடம் கூறுகையில்,**




“கிராம நிருவாக அலுவலரிடம் பெற்று வந்த வருமானச் சான்றிதழையும், குடும்ப அட்டை நகலையும் கொடுத்தேன். என் கைரேகை பதிவு செய்து புகைப்படம் பிடித்து உடனே அடையாள அட்டை கொடுத்து விட்டார்கள். இந்த அட்டையின் மூலம் என் குடும்பத்தினரின் நலனையும், என் உடல்நலத்தையும் காத்துக் கொள்வேன். அட்டைப் பெற்றவுடன் எனக்குள் தைரியம் பிறந்துள்ளது. இத்திட்டம் என் போன்ற ஏழைகளுக்கு மிகவும் பயனுள்ள திட்டம்”, என்று கூறினார்.

**திருவள்ளூர் மாவட்டம் செவ்வாய்பேட்டை திருவூர் கிராமத்தை சேர்ந்த திரு. டி. பாலகுமார், த/பெயர் துரைசாமி கூறுகையில்,**

“அடையாள அட்டை உடனே கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு வந்தேன். அதேபோல முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டை மிகவும் துரிதமாக என் கைக்கு வந்தது. கூலி வேலை செய்யும் என் போன்றோர்க்கு இது மிகவும் அவசியமானதாகும். சமீபத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வேப்பம்பட்டில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமில் இலவசப் பரிசோதனை செய்தார்கள். அதில் என் குடும்பத்தினர் அனைவரும் கலந்து கொண்டு பரிசோதனை செய்து கொண்டோம். நோய் வரும் முன் காத்துக் கொள்ள முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட மருத்துவ முகாம் மிகவும் உதவியாக இருந்தது. அடையாள அட்டை பெற்றுக் கொண்டதன் மூலம் எங்களின் உயிர் பாதுகாப்பிற்கு உத்திரவாதம் ஏற்பட்டுள்ளது”.

❖ ❖ ❖

# முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் சிறு விவசாயிகளுக்கு பேருதவி

**சி**று விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலித் தொழிலாளர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டும், கல்வி மற்றும் பொருளாதாரத்தில் விவசாயப் பெருமக்கள் முன்னேற வேண்டும் என்பதற்காகவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு 'முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தை' உருவாக்கினார்கள்.

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் இணைந்துள்ள விவசாயக் குடும்ப உறுப்பினர்களுக்குக் கல்வி உதவித் தொகை, மருத்துவ சிகிச்சைக்கான உதவித் தொகை, திருமண உதவித் தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை, விபத்து நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் அடைந்த பயனாளிகள் சிலரைச் சந்தித்துத் திட்டத்தின் பயன்குறித்துப் பேசினோம்.

**திருவண்ணாமலை வட்டம் சோமாசிபாடியைச் சேர்ந்த மாணவி பத்மபிரியாவிடம் பேசியபோது,**


பத்மபிரியா

"நான் பி.காம் படித்துள்ளேன். என் படிப்புச் செலவுக்காக உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாக உதவித்தொகை வாங்கினேன். அதன் மூலம் புத்தகங்கள், நோட்டுகள் வாங்குவதற்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இத்திட்டம் பெற்றோர்களின் சுமையை குறைக்க மிகவும் பயன் உள்ளதாக இருக்கிறது. உழவர் பாதுகாப்பு திட்டம் மூலமாக நான் பயன் அடைந்தது மட்டுமல்லாது என்னுடன் படிக்கும் மாணவிகள் மற்றும் எங்க ஊரிலுள்ள மற்ற மாணவிகளும் பயன் அடைந்துள்ளார்கள். இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,'' என்றார்.

**பயனாளி குப்பம்மாள் என்பவர் கூறியதாவது:–**




"என் வீட்டுக்காரர் கூலி வேலைதான் செய்து வந்தார். ஒரு வருடத்திற்கு முன் அவர் இறந்துவிட்டார். அதன்பின் செய்வது அறியாமல் திகைத்திருந்தேன். மணியக்காரர் மூலமாக மனு போட்டதினால் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் எனக்கு ஒரு இலட்சத்து 12 ஆயிரம் கொடுத்தாங்க அது மூலமாக குடும்பத்தை நடத்தி வருகிறேன். இந்த உதவித்தொகை வழங்கிய முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**சோமாசிபாடி வனதேவன் என்பவர் கூறியதாவது,** "எங்களுக்கு ஒரு ஏக்கர் நிலம் உள்ளது. இத்திட்டத்தில் உறுப்பினராக இருந்ததால் திருமண நேரத்தில் திருமண உதவித் தொகை கிடைத்து அது எனக்கு பேருதவியாக இருந்தது.'' என்றார்.

**முனியம்மாள் என்பவர் கூறியதாவது,** "எங்க ஊட்டுக்காரு சென்ற ஆண்டு உடல்நலம் சரியில்லாம இறந்திட்டாரு. அவர் வச்சிருந்த உழவர் பாதுகாப்பு அட்டை மூலம் ரூ.12 ஆயிரத்து 500 கொடுத்தாங்க அதை வச்சி சிறு கடை நடத்தி குடும்பத்த நடத்துறேன். உதவி செஞ்ச அம்மாவுக்கு நன்றி'' என தனது நன்றியை வெளிப்படுத்தினார்.

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் திட்டங்களை தீட்டுகிறோம். அவ்வாறு தீட்டப்பட்ட திட்டங்கள் மக்களை சென்றடைகின்றன. திட்டங்களிலே ஒரு சில குறைகள் இருக்கலாம். திட்டங்கள் மக்களைச் சென்றடைவதிலே சில இடங்களில் சில குறைகள் இருக்கலாம். அவற்றைச் சுட்டிக்காட்டினால், அவற்றை சரிசெய்ய நாங்கள் தயங்க மாட்டோம். அதற்காக ஒட்டுமொத்தமாக குற்றம் சாட்டுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.



## விலையில்லாப் பாடநூல்களால் கல்வியில் உயரும் மாணவச் சமுதாயம்

ஒரு காலத்தில் ஏழை, எளிய பாமர மக்கள் புத்தகங்களை விலை கொடுத்து வாங்கிப் படிக்க முடியாத துன்பநிலையில் ஏக்கத்தோடு நின்றனர். வசதி உடையவர்கள் மட்டுமே கல்விப் பயின்று உயர்நிலையை அடைந்தனர். ஆனால், இன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழக அரசு ஏழை, எளியோர் என்ற பாகுபாடும், ஆண், பெண் என்ற வித்தியாசம் இன்றி அனைவருக்கும் விலையில்லா பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகளை அளிக்கிறது.

**திருவண்ணாமலை நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 10ஆம் வகுப்பு படிக்கும் மாணவி மு. ரூபிணி கூறுகையில்;**

“ஒரு நாட்டிற்கு எத்தகைய புறவளங்கள் இருந்தாலும் அகவளமும் பண்பாடும், கல்வியறிவும் பெற்றில்லாத நாட்டை யாராவது நாடு என்று போற்றுவார்களா? அத்தகைய தலைசிறந்த பயன் மிகுந்த கல்வியை




அனைத்து மாணவர்களும் பெற்றிடும் வண்ணம், தமிழக அரசு கொண்டுவந்துள்ள திட்டம்தான் “விலையில்லா பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம்”. இவையாவும் மாணவர்களின் அறிவை வளர்க்கும். இந்த உன்னதத் திட்டத்திற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எங்கள் நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்”.

**திருவண்ணாமலை நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி 11ஆம் வகுப்பு மாணவி ஏ.அம்மு கூறுகையில்,**

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"




எனும் திருவள்ளுவரின் பொய்யா மொழிக்கு ஏற்ப கல்வியானது கற்கக் கற்க வளர்ந்து கொண்டே இருக்கும். எங்களைப் போன்ற மாணவிகள் மற்றும் மாணவர்கள் பாடப் புத்தகங்களை விலை கொடுத்து வாங்கிப் படிக்கும் நிலையை மாற்றி விலையில்லாப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தை அமல்படுத்தியுள்ளார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இத்திட்டத்தின் மூலம் எங்களது பெற்றோர்களின் சுமையைக் குறைத்து அவர்களுக்கு மனநிம்மதி அளித்து, நாங்கள் தொடர்ந்து படிக்க ஊக்கமும் உற்சாகமும் அளித்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எங்களது பணிவான நன்றி” என்று கூறினார்.

❖ ❖ ❖

# மாணவ, மாணவிகளின் உயர்வுக்கு வழிகாட்டும் உழவர் பாதுகாப்புத் திட்டம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில், விவசாயிகளின் குடும்பத்தினருக்கு பிறப்பு, கல்வி, திருமணம், முதுமை, இறப்பு உள்ளிட்ட அனைத்து நிலைகளிலும் துணை நிற்கும் வகையில் உழவர் பாதுகாப்புத் திட்டத்தினை உருவாக்கித் தந்தார்கள். அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, இத்திட்டம் மிகச்சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகளின் திருமணத்திற்கு திருமண நிதியுதவியாக ஆண்களுக்கு ரூ.8,000மும், பெண்களுக்கு ரூ.10,000மும் வழங்கப்படுகின்றது. உறுப்பினர் விபத்தில் மரணமடைந்தாலோ, இரு கைகளும் அல்லது இரு கால்களும், முற்றிலுமாக கண்பார்வை இழந்தாலோ ரூ.1 இலட்சம் நிவாரணத்தொகை வழங்கப்படுகின்றது. உறுப்பினர் ஒரு கை அல்லது ஒரு கால் இழந்தால் அல்லது பக்க வாதத்தால் பாதிக்கப்பட்டாலோ ரூ.50 ஆயிரம் நிவாரணத்தொகை வழங்கப்படுகின்றது. உறுப்பினருக்கு கடுமையாக காயம் ஏற்பட்டு உறுப்புகள் இழந்தால் ரூ.20,000 நிவாரணமும், இயற்கை மரணத்திற்கு ரூ.10,000, ஈமச்சடங்கு நிதியுதவியாக ரூ.2,500, மாதாந்திர ஓய்வூதியமாக ரூ. 1,000, பெண் உறுப்பினர் மகப்பேறு உதவித்தொகையாக மாதம் ரூ.1,000 வீதம் 6 மாதங்களுக்கும் வழங்கப்படுகின்றது.




**மாணவி செ. கீர்த்திகா தெரிவித்ததாவது,**

“எனது தந்தை பெயர் செல்வேந்திரன். நான் மன்னார்குடி இராஜகோபால சுவாமி கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வருகின்றேன். எனது தாய், தந்தையர்கள் விவசாயம் செய்து வருவதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், கல்வி உதவித்தொகையாக ரூ. 2,250 வழங்கியுள்ளார்கள். இதனால் நான் நன்கு படித்து பட்டதாரி ஆவேன்.

நல்ல வேலைக்கு சென்று எனது பெற்றோரை பார்த்துக்கொள்வேன். இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நானும், குடும்பத்தினரும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்''.



சந்தீப் குமார்

**மாணவர் கு. சந்தீப் குமார் தெரிவித்ததாவது,**

''எனது ஊர் மன்னார்குடி வட்டம், குன்னியூர் ஊராட்சி, வீராக்கி ஆகும். எனது தந்தை குமரவேல் விவசாயம் செய்து வருகின்றார். நான் செம்போடை ருக்குமணி வரதராஜன் பாலிடெக்னிக் கல்லூரியில் 3ஆம் ஆண்டு மெக்கானிக்கல் பட்டயப்படிப்பு படித்து வருகின்றேன். எனக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகையாக ரூ.1,250 வழங்கியுள்ளார்கள். இந்த உதவித்தொகையை 3ஆம் ஆண்டாக பெற்று வருகின்றேன். இதனால் எனது தந்தைக்கு என்னைப் படிக்க வைப்பது எளிதாக இருக்கின்றது. நானும் கல்விக் கட்டணம் குறித்த கவலையின்றி படித்து வருகின்றேன். இந்த உதவியை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி''.



கௌதமி

**மாணவி கி. கௌதமி தெரிவித்ததாவது,**

''எனது ஊர் தெற்கு தென்பரை கிராமம் ஆகும். எனது தந்தை கிருஷ்ணமூர்த்தி விவசாயம் செய்கின்றார். நான் மன்னார்குடி இராஜகோபால சுவாமி கல்லூரியில் பி.எஸ்.சி இரண்டாம் ஆண்டு கணிதம் பாடம் படித்து வருகின்றேன். எனக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் கல்வி உதவித் தொகையாக ரூ.2,250 வழங்கியுள்ளார்கள். என்னைப் போன்ற கிராமத்துப் பெண்கள் படிக்க இந்த கல்வி உதவித்தொகைதான் காரணமாக உள்ளது. உழவர்களைப் பாதுகாத்து அவர்களின் குழந்தைகள் பட்டம் படிக்க திட்டம் வகுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றி''.

❖ ❖ ❖




## மலிவாகவும், சுவையாகவும் பசியாற்றும் அம்மா உணவகம்!

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 02.06.2013 அன்று தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி மூலம் 10 மாநகராட்சிகளில் அம்மா உணவகங்கள் திறந்து வைக்கப்பட்டன. இதில் ஒன்றான வேலூர் மாநகராட்சியில் 10 அம்மா உணவகங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

*சந்திரா*



“அம்மா உணவகத்திற்கு” வந்து மலிவான விலையில் தரமான உணவு உண்டு பயனடைந்தப் பயனாளிகள் நம்மிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு தனது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டனர்.

**சந்திரா (வயது 60) என்பவர் கூறும் போது,**

“எனக்கு மாதந்தோறும் அம்மா கொடுக்கிற ஓய்வூதியப் பணத்தில்தான் தினந்தோறும் அம்மா உணவகத்தில் காலை டிபன், மதியம் சாப்பாடும் சாப்பிடுகிறேன். எங்களுடைய குடும்ப வாழ்வாதாரத்திற்கும், பசிக்கின்ற வயிற்றிற்கு மலிவு விலையில் உணவளித்த தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நானும் எனது குடும்பத்தினரும் மனசார நன்றியை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்” எனக் கூறினார்.

**கணேசன் (வயது 65) என்பவர் தெரிவிக்கும்போது,**





“நான் சவரத்தொழில் செய்து வருகிறேன். அம்மா உணவகத்தில் காலை டிபன், மதியம் சாப்பாடு மிகவும் அருமையாகவும், சுவையாகவும் இருக்கிறது. போதுமான அளவிற்கு வருமானம் இல்லாத நாட்களில் வயிறார உணவைச் சாப்பிட முடியாத நிலை இருந்தது. தற்போது குறைந்த விலையில் தரமான உணவை வாங்கிப் பசியைப் போக்கிக் கொள்கிறேன். அம்மா அவர்களை நானும், எங்கள் குடும்பமும் மனதார வாழ்த்தி, நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்” எனக் கூறினார்.




**பெயிண்டர் பிலிப்ஸ் (வயது 45) என்பவரிடம் பேசியபோது,**

“என்னுடைய குறைந்த வருமானத்திற்கு ஏற்ப அம்மா உணவகத்தில் வழங்கப்படும் சிற்றுண்டி மற்றும் மதிய உணவு சுகாதாரமாகவும், தரமானதாகவும், சுவையாகவும் உள்ளது. எங்களைப் போன்ற ஏழை, எளிய மக்களுக்கு பயனுள்ள இத்திட்டத்தைச் செயல்படுத்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று கூறினார்.

❖ ❖ ❖



## மாற்றுத்திறனாளிகளுக்கு வாழ்வாதாரம் வழங்கும் வகையில் எண்ணற்ற திட்டங்கள்

**வே**லூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் கல்வி பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்க்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம், கல்வி பயிலும் பார்வையற்ற மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்க்கு வாசிப்பாளர் உதவித்தொகை வழங்கும் திட்டம், 3 வயதுடைய செவித்திறன் குறையுடைய, மனவளர்ச்சி குன்றிய கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்ப கால பயிற்சி மையம், 14 வயதுக்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான மறுவாழ்வு இல்லம், கடுமையான பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு பராமரிப்பு மானியம் வழங்கும் திட்டம், வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை, என்.எச்.எப்.டி.சி. திட்டம் என பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**வேலூர் மாவட்டம், கிருஷ்ணாநகர், கணியம்பாடி,**
**திரு. இ.பாலமுருகன், த/பெ.ஏகாம்பரம் கூறியதாவது :**

“என் பெயர் இ.பாலமுருகன் (வயது 28), த/பெ. ஏகாம்பரம், எனக்கு சின்ன வயதிலேயே போலியோ நோயினால் பாதிக்கப்பட்டு இரண்டு கால்களும் ஊனமுற்று உள்ளேன். நான் தனியார் நிறுவனத்தில் கம்ப்யூட்டர் ஆப்ரேட்டராக பணிபுரிந்து மாதம் ரூ.5 ஆயிரம் சம்பளம் பெற்று அதில் நான்



பாலமுருகன்

எனது தாய், தந்தை என 3 பேர் கஷ்டப்பட்டு வாழ்ந்து வருகிறோம். இரண்டு கால்களும் ஊனமுற்ற நான் அலுவலகத்திற்கு ஒருவரின் உதவியுடன் தான் சென்றுவர முடியும். இந்நிலையில் எனது வாழ்க்கையில் மூன்று சக்கர மோட்டார் பொருத்திய ஸ்கூட்டர் வாங்குவது என்பது கனவிலும் இயலாத ஒன்று. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் மோட்டார் பொருத்திய மூன்று சக்கர ஸ்கூட்டர் ரூ.54 ஆயிரம் மதிப்பீட்டில் வழங்கியதால் அலுவலகத்திற்கும் மற்றும் வெளியில் செல்வதற்கும் யாருடைய உதவியின்றி சென்று வர முடிகிறது. ஸ்கூட்டர் வழங்கிய அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி என்று கூறினார்.”

**வேலூர் மாவட்டம், பிரம்மபுரம்,**
**திருமதி பூங்கொடி,**
**க/பெ.சுதாகர் கூறியதாவது,**


பூங்கொடி

“எனது பெயர் பூங்கொடி, எனது மகன் பெயர் எஸ்.டிசோசா. (வயது 5). எனது மகனுக்கு பிறவியில் இருந்தே பேச்சாற்றல் இல்லாததால் எதிர்காலத்தில் எனது மகன் பேசவே மாட்டான் என்று நினைத்து மிகவும் வருத்தப்பட்டேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எங்களை போன்ற ஏழ்மை நிலையில் உள்ள பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு செவித்திறன் குறையுடைய இளம் சிறார்களுக்கு ஆரம்ப கால பயிற்சி மையம் உருவாக்கி உள்ளார்கள் என தெரிந்து, இப்பயிற்சி மையத்தில் சேர்த்தேன். அங்கு பயிற்சி பெற்றதன் மூலம் பேச்சாற்றல் பெற்று எனது மகனின் முகத்தில் காணும் சிரிப்பில் மகேசனை காண்கிறேன். எனது வாழ்விலும் என் மகனின் எதிர்கால கனவுகளை நனவாக்கி மீண்டும் ஒரு வசந்தத்தை ஏற்படுத்திய மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நானும் எனது குடும்பத்தினரும் உளமாற நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்”.

❖ ❖ ❖

# சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் "சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம்" வேலூர் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள் வறுமை கோட்டிற்கு கீழ் ஊரக பகுதிகளில் வாழும் அனைவரும் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் பயனாளிகள் ஆவார்கள். வீடுகள் ஒவ்வொன்றிலும் தங்கும் அறை, படுக்கையறை, சமையலறை, கழிப்பறை, தாழ்வாரம் மற்றும் மழைநீர் சேமிப்பு உள்ளடக்கியதாகும். இவற்றுடன் 5 சூரிய ஒளி சி.எப்.எல். பல்புகள் அமைத்து தரப்படும். பயனாளிகள் விரும்பினால் மின்வாரியத்தின் மூலம் மின் இணைப்பு பெறலாம்.

**வேலூர் தெள்ளூர் ஊராட்சியை சேர்ந்த திருமதி. எம்.அமலா தெரிவித்ததாவது**




"என் வயது 25. தெள்ளூர் ஊராட்சியில் வசித்து வருகிறேன். எனது கணவர் பெயர் முருகேசன். எங்களுக்கு பிப்ரவரி 2013இல் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் வீடு கட்டிக்கொள்ள ரூ.2,10,000/– மதிப்பீட்டில் வழங்கப்பட்டது.

நானும் எனது கணவரின் தாய் தந்தையுடன் இதற்கு முன்பு ரூ.500/– வாடகை கொடுத்துக் கொண்டு ஓலைக்குடிசை வீட்டில் வாழ்ந்து வந்தோம். கனமழையின் காரணமாக ஓலை குடிசை வீட்டின் உள்ளே மழைநீர் வந்து பகலிலும் சரி, இரவிலும் சரி மிகவும் கஷ்டப்பட்டு கொண்டு இருந்தோம். நாங்கள் அனைவரும் விவசாய கூலி தொழில் செய்து மாதந்தோறும் ரூ.2ஆயிரம் அல்லது ரூ.3 ஆயிரம் வருமானம் வருகிறது. இந்த வருமானத்தை வைத்து நாங்கள் 5 பேரும் ஜீவனம் செய்வது மிகவும் கஷ்டமாக உள்ளது. இந்த கஷ்ட ஜீவனம் செய்துவரும் எங்களைப் போன்ற ஏழ்மையானவர்கள் ஓலை குடிசை வீட்டிற்குகூட வாடகை கொடுக்க முடியாத நிலையில் உள்ள எங்களுக்கு ஒரு கான்கிரிட் வீடு கட்டுவது என்பது கனவாகவே இருந்து வந்தது. இந்த கனவினை நனவாக்கி எங்களுக்கு கான்கிரிட் வீடு கட்டிக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எங்கள் குடும்பத்தை சார்ந்த அனைவரும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்''.

**டி.கே.புரம் ஒன்றியத்தை சேர்ந்த திரு. ஜெயராமன் தெரிவிக்கையில்,**

''என் வயது 62. எனது மனைவி பெயர் கஸ்தூரி. வயது 50. டி.கே. புரம் ஒன்றியத்தில் வசித்து வருகிறோம். எங்களுக்கு 2 பெண் மற்றும் 1 ஆண் பிள்ளைகள் உள்ளனர். நாங்கள் இங்கு குடிசை வீட்டில்தான் வாழ்ந்து வந்தோம். பீடி சுற்றும் தொழில் செய்து மாதந்தோறும் ரூ.2,500/– சொற்ப வருமானத்தை பெற்று ஜீவனம் செய்து வருகிறோம். இந்தக் குறைந்த வருமானத்தை கொண்டு இந்தக் குடிசை வீட்டினை மாற்றி கான்கிரிட் வீடாக கட்டும் அளவிற்கு எங்களுக்கு வசதி இல்லை. இந்த சமயத்தில்தான் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் பசுமை வீடு வழங்க கோரி மனு செய்தேன். எங்களுடைய ஏழ்மை நிலையை கருத்தில் கொண்டு எனக்கு சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு கட்டிக்கொள்ள ரூ.1,80,000, சோலார் விளக்கு அமைக்க ரூ.30 ஆயிரமும் வழங்கினார்கள். நாங்கள் இந்த பணத்தை கொண்டு பசுமை வீட்டினை கட்டிக் கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறோம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எங்கள் குடும்பத்தினர் அனைவரும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்''.




❖ ❖ ❖

# பெண்களின் உயர்கல்விக்கும், நல்வாழ்வுக்கும் நம்பிக்கையூட்டும் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்த பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் வறுமையில் வாழும் ஏழைத் தாய்மார்களின் பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிக்கும் விதமாகவும், அவர்களின் வாழ்க்கைப் பொருளாதாரம் மேம்படும் வகையில், சிறிய குடும்பம் என்ற நிலையை உருவாக்கி, வறுமையை போக்கிட இரண்டு குழந்தைகளுக்குப் பிறகு கருத்தடை அறுவை சிகிச்சையை ஊக்குவிக்கும் விதமாகவும் இத்திட்டம் 1992ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. முதன் முதலில் இத்திட்டத்தில் பயன்பெறும் குழந்தைக்கு வைப்புத் தொகை ரூ.1,500/– வழங்கப்பட்டது. அதன் பிறகு 1996ஆம் ஆண்டு இரண்டு பெண் குழந்தைகளுக்கு வைப்புத் தொகையாக ரூ. 1,500/– வீதம் 20 வயது முடியும்பொழுது முதிர்வு தொகை வழங்கப்பட்டது. மீண்டும் 2001ஆம் ஆண்டு பயன்பெறும் பயனாளிக்கு ஒரே பெண் குழந்தை இருப்பின் ரூ.22,400/–ம், இரண்டு பெண் குழந்தைகள் இருப்பின் அவர்களுக்குத் தலா ரூ.15,200/–ம், இருபது ஆண்டுகள் முடியும்பொழுது முதிர்வுத் தொகை பெறும் வகையிலும், அவர்கள் கல்வி பயிலும் பொழுது மாதம் ரூ.150/– வீதம் ஆண்டிற்கு ரூ.1,800/– ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் தற்பொழுது 01.08.2011 முதல் மாற்றி அமைக்கப்பட்டு, ஒரே பெண் குழந்தையுடன் அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு ரூ.50,000/– வைப்புத் தொகையும், இரண்டு பெண் குழந்தைகள் இருப்பின் ரூ.25,000/– வீதம் இரண்டு பெண் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது. மேலும், தற்போது முதிர்வுத் தொகை வயது 18 ஆகவும் மாற்றம் செய்யப்பட்டு முதிர்வுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. வேலூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் எண்ணற்ற பயனாளிகள் பயன்பெற்று வருகின்றார்கள்.

**இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த திருமதி. ரேவதி கூறியதாவது:–**

“எனது பெயர் ரேவதி. வயது–27. எனது கணவர் பெயர் கோவிந்தன். வயது 34. கஸ்பா, வேலூர் என்ற முகவரியில் வசித்து வருகின்றேன். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். முதல் பெண் பெயர் நிவேதாஸ்ரீ வயது 5, இரண்டாவது பெண் தனுஷ்கா வயது 2. எனது கணவர் இரும்புக் கடையில் வேலை செய்து வருகின்றார். நாங்கள் மிகவும் கஷ்டமான நிலையில் குடும்பத்தை நடத்தி வருகின்றோம். எனக்கு இரண்டு குழந்தைகளும் பெண் பிள்ளைகளாக பிறந்துவிட்டது என்ற கவலை இருந்தது. அவர்களை எப்படி படிக்க வைத்து திருமணம் செய்து கொடுப்போம்என்றகவலை அதிகமாக இருந்து வந்தது. ஏனென்றால் அவர்களின் எதிர்காலத்திற்காக எந்த ஒரு சேமிப்பும் செய்ய இயலாத ஏழ்மை நிலையில் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு இருந்த வேளையில் பத்திரிக்கையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஏழ்மை நிலையில் வசித்து வரும் குடும்பத்தில் உள்ள இரண்டு பெண் குழந்தைகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகின்றது என்பதைத் தெரிந்து நாங்கள் விண்ணப்பித்தோம். அதன்படி இரண்டு பெண் குழந்தைகளுக்கும் தலா ரூ.25,000/– வைப்புத் தொகையாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள்.



ரேவதி

இத்திட்டத்தில், பயனடைந்த நாங்கள் மிகவும் சந்தோஷம் அடைகின்றோம். எங்களுடைய பெண் குழந்தைகள் 18 வயது முதிர்வடையும் போது இந்த வைப்புத் தொகை அவர்களின் உயர்கல்விக்கும், வாழ்க்கைக்கும் உதவியாக இருக்கும். பெண் குழந்தைகள் என்றாலே அவர்களை கரைசேர்ப்பதென்பது மிகவும் கடினம் என்ற நிலைமையினை மாற்றி மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள எங்களைப் போன்ற பெற்றோர்கள், பெண் குழந்தைகளை உயர்கல்வி மற்றும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவோம்

என்ற தன்னம்பிக்கையை வழங்கியது பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்தான். இத்திட்டத்தை வழங்கிய அம்மா அவர்களுக்கு நாங்கள் என்றென்றும் நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்போம் என்று தெரிவித்தார்''.




**இத்திட்டத்தில் பயனடைந்த திருமதி. சல்மா கூறியதாவது:–**

எனது பெயர் சல்மா (வயது 29). எனது கணவர் பெயர் ஜோஹார் ஷெரீப், (வயது 39). மசூதி தெரு, வேலூர் என்ற முகவரியில் வசித்து வருகின்றோம். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். முதல் பெண் பெயர் அர்பா (வயது 5), இரண்டாவது பெண் ஷாதியா (வயது 3). எனது கணவர் லாரியில் கிளீனராக வேலை செய்து வருகின்றார். இந்தச் சூழ்நிலையில் எனக்கு இரண்டாவது பெண் குழந்தை பிறந்தது. இந்நிலையில் நானும் எனது கணவரும் முடிவு செய்து நான் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்ட போது மருத்துவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றி தெரியப்படுத்தினர். அதன்படி, உரிய ஆவணங்களுடன் மாவட்ட சமூகநல அலுவலகத்தை அணுகி விண்ணப்பம் செய்தோம். அவர்கள் விசாரணை செய்து தகுதி அடிப்படையில் எங்களின் பெண் குழந்தைகளின் பெயரில் தலா ரூ.25,000/– வைப்புத் தொகை நிதியாக வைக்கப்பட்டுள்ளது. இது எனக்கும் எனது கணவருக்கும் மிகவும் சந்தோஷத்தை தந்தது. இந்த வைப்புத் தொகை என்னுடைய பெண்கள் 18 வயது பூர்த்தியடையும் போது நான் பெறாத கல்வியை என் இரண்டு பெண்களும் படிக்க இந்தத் தொகை மிகவும் உறுதுணையாக இருக்கும். எங்களால் செய்ய முடியாததை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் செய்து உதவியது எனக்கும் எனது கணவருக்கும் ஏற்பட்ட சந்தோஷம் வார்த்தையில் சொல்லமுடியாததாகும். இந்தப் பேருதவியை எங்களுக்கு செய்து கொடுத்த தமிழ்நாடு அரசுக்கு எங்கள் வாழ்நாள் உள்ளவரை நன்றியுள்ளவர்களாக இருப்போம் எனக் கூறினார்''.

❖ ❖ ❖

# இளைஞர்களின் பொருளாதாரத்தை உயர்த்தும் புதிய தொழில் திட்டம்!

**த**மிழகத்தில் தொழில் புரட்சியை ஏற்படுத்திடும் வகையில் தொழில் வணிகத்துறையில் நல்ல பல திட்டங்களை வகுத்து தொழில் வளர்ச்சி பெறும் சீரிய நோக்கோடும் தொழில் முனைவோர்களை உருவாக்கி வேலையில்லா திண்டாட்டத்தை ஒழித்து பொருளாதார ரீதியில் வளர்ச்சி பெருகிட வேலூர் மாவட்ட தொழில் மையம் சேவை புரிந்து வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கிட அனைத்து துறைகளிலும் பல்வேறு புதிய தொழில் திட்டங்களை உருவாக்கி நாடு வளம்பெற வழிவகை செய்து உள்ளார்கள். குறிப்பாக தொழில் வணிகத்துறையைச் சார்ந்த மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக புதிய தொழில் திட்டங்களை உருவாக்கி அதன் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் முனைவோர்களை கண்டறிந்து பொருளாதார ரீதியில் வளர்ச்சி பெற்ற மாவட்டமாக உருவாக்கி அதன் மூலம் நாடு வளம்பெற வழி வகை செய்துள்ளார்கள்.

**இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் திட்டம்** (UYEGP) **மூலம் பயன்பெற்ற பயனாளி நம்மிடம் கூறும்போது**

என் பெயர் எ.விக்டோரியா, நான் காட்பாடி தாராபடவேட்டில் குடியிருந்து வருகின்றேன். எனக்கு திருமணமாகி இரண்டு பெண் குழுந்தைகள் உள்ளனர். எங்கள் தொழிலில் குறைந்த வருமானம் கிடைத்து வந்ததால் மிகவும் சிரமம் ஆன சூழலில் வாழ்ந்து வந்தோம்.

இந்நிலையில், எம்.ஏ., (வரலாறு) படித்த எனக்கு இசைக்குழு ஒன்று சொந்தமாக வைக்கலாம் என்று எண்ணி அதுபற்றி ஒரு தோழியிடம் கேட்டேன். அவள் காட்பாடி காந்திநகரில் மாவட்ட தொழில் மைய அலுவலகம் உள்ளது



*விக்டோரியா*

என்றும் அங்கு அனுகினால் கடன் வசதி கிடைக்கும் என்று தெரிவித்தாள். நான் மாவட்ட தொழில் மையம் அணுகி அங்கு வரவேற்பு பணியில் இருந்தவரிடம் விவரம் தெரிவித்தேன். அவர் எனக்கு UYEGP விண்ணப்பம் வழங்கி அத்திட்டம் பற்றி முழுமையாக விளக்கம் அளித்தார்கள். அவ்விண்ணப்பத்தினை முழுமையாக பூர்த்தி செய்து அலுவலகத்தில் சமர்ப்பித்து நேர்முகத் தேர்வு நடத்தி தேர்வுக்குழுவின் மூலம் என்னுடைய கடன் விண்ணப்பம் கடன் பெற வேண்டி இந்தியன் வங்கி, தாராபடவேடு கிளைக்கு பரிந்துரை செய்யப்பட்டது. அங்கு எனது விவரங்கள் கேட்கப்பட்டு எனது விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து எனக்கு ரூ.3 இலட்சம் கடன் ஒப்புதல் ஆணை வழங்கப்பட்டது. அதனை மாவட்ட தொழில் மையத்தில் சமர்ப்பித்தேன்.

அதன்பின் எனக்கு 7 நாள் பயிற்சிகள் அளிக்கப்பட்டு பயிற்சி சான்றிதழ் வழங்கப்பட்டது. பயிற்சி முடித்த பின் பயிற்சித் தொகை ரூ.600/– மாவட்ட தொழில் மையம் அலுவலகத்தால் வழங்கப்பட்டது. அதன் பிறகு வங்கியில் சான்றிதழ் சமர்ப்பித்தேன் திட்ட மதிப்பீட்டில் என் பங்கு தொகையாக 5 சதவிகிதம் வங்கியில் என் கணக்கில் செலுத்தினேன். வங்கி மேலாளர் எனக்கு கடன் வழங்கினார். கடன் ரூ.3 இலட்சத்தில் தேவையான உபகரணங்கள் பெற்று எனது கணவருடன் “ராக கீதம்” என்ற இசைக்குழுவை நிறுவி அதன் மூலம் வருவாய் ஈட்டி வருகின்றேன். மேலும் மாவட்ட தொழில் மையத்தின் மூலம் அரசு மானியம் ரூ.45,000/– எனக்கு கிடைத்து அதனை வங்கியில் டிபாசிட் செய்து வைக்கப்பட்டுள்ளது. மாதம் தவறாமல் கடனையும் திருப்பி செலுத்தி எனது குடும்பத்தினை நல்ல நிலைமையில் கொண்டு செல்ல வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது குடும்பத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்”.

**புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம் (NEEDS ) மூலம் தொழில் செய்துவரும் பயனாளி தெரிவித்த போது,**

என் பெயர் எஸ்.பிரகாஷ், நான் ஒரு பட்டதாரி, ஆற்காட்டில் வசித்து வருகின்றேன். நான் ஒரு தொழில் செய்ய வேண்டும் என்று மாவட்ட தொழில் மையத்தை அணுகினேன். அப்போது மாவட்ட தொழில் மைய அலுவலர் அவர்கள், நீங்கள் தொழில் கடன் பெற்று செய்வதை விட (புதிய தலைமுறைக்காக) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் துவங்கப்பட்ட புதிய திட்டம் (NEEDS) புதிய

தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தின் மூலம் தங்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் கிடைக்க வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டு அதற்கான விண்ணப்பம் வழங்கப்பட்டது.



நான் குளிர்பானம் தயாரிக்கும் நிறுவனத்தை நிறுவத் தேவையான விலைப்புள்ளி மற்றும் தொழில் திட்ட விளக்கங்கள் மற்றும் அனைத்து தேவையான விவரங்களுடன் இரண்டு விண்ணப்பங்களை மாவட்ட தொழில் மையத்தில் சமர்ப்பித்தேன் எனது விண்ணப்பத்தின் மீது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நேர்முகத்தேர்வில் தேர்வு செய்து எனது விண்ணப்பம் கடன் வழங்க வேண்டி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இராணிப்பேட்டை வங்கிக்கு பரிந்துரை செய்யப்பட்டது. நான் வங்கியை அணுகி விவரங்கள் அளித்தவுடன் வங்கியில் கடன் ஒப்புதல் ஆணை வழங்கப்பட்டு, மாவட்ட தொழில் மையத்தின் மூலம் ஒரு மாதம் தொழில் முனைவோர் பயிற்சி மையம் (EDI), சென்னை நிறுவனம் நடத்திய பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி சான்றிழை பெற்று வங்கியில் சமர்ப்பித்து வங்கியிலிருந்து மீண்டும் கடன் ஒப்புதல் ஆணை (Regular Sanction) பெற்று மாவட்ட தொழில் மையத்தில் சமர்பித்தேன். தமிழக அரசின் மானியம் முதல் தவணையான 50 சதவிகிதம் வங்கிக்கு உடனே அனுப்பி வைத்தார்கள். எனக்கு கடன் தொகை ரூ.45.60 இலட்சத்தினை திட்ட மதிப்பீட்டிற்கு எற்றவாறு வழங்கப்பட்டது. மாவட்ட தொழில் மையத்தின் மூலம் 25 சதவிகிதம் மானியமும் (திட்ட மதிப்பீட்டின் ரூ.11.25 இலட்சம் மானியமும் முன் முனை மானியமாக (Front ended Subsidy) வழங்கப்பட்டது. நான் தற்போது புதிய கட்டடங்கள் கட்டி தேவையான இயந்திரங்களை பொருத்தி தொழிலை துவக்கி நல்ல நிலைமையில் நடத்தி வருகின்றேன். நான் எதிர்பார்த்ததை விட தொழிலுக்காக அரசு மானியமும் வழங்கி நல்ல முன்னேற்றம் அடைய செய்து என்னை வாழவைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவிக்கிறேன்''.

❖ ❖ ❖



## கறவைப் பசு பெற்றோம்! வாழ்வில் உயர்ந்தோம்!

தமிழ்நாட்டில் ஏழ்மையிலும் ஏழ்மையான கிராம மக்களின் வாழ்வாதாரம் மேம்படவும், வறுமைக்கோட்டிற்குக்கீழே உள்ள ஏழை, எளிய மக்கள் பிறரை நம்பி இருக்காமல் சொந்தக்காலில் நிற்கவும், நாட்டில் வெண்மைப்புரட்சி ஏற்படுத்திடவும், கிராமப்புற ஏழ்மை நிலையில் உள்ள மக்களுக்கு கால்நடைப் பராமரிப்புத் துறை வாயிலாக விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் ஒரு குடும்பத்திற்கு தலா 4 வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

**திருமதி மனோன்மணி, க/பெ. நல்லமுத்து, பனையூர் கிராமம், ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியம், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.**




“எங்கள் குடும்பம் கூலி வேலை செய்யும் குடும்பம். வேலைக்குப் போனால்தான் கஞ்சி என்ற நிலை. இந்த நிலையில்

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழைக் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் இலவசமாக கறவைப் பசு வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். எங்கள் ஊர் முழுக்க இதே பேச்சாக இருந்தது. எங்கள் ஊர் கிராமத் தலைவரை அணுகி எனக்கு கறவைப் பசு கிடைக்க மனு கொடுத்தேன். மறு வாரமே கறவைப் பசு வழங்குவதற்கு என்னைத் தேர்ந்தெடுத்து உள்ளதாக கூறினார்கள். மகிழ்ச்சியில் திக்கு முக்காடிய நிலையில் இருந்த எனக்கு அம்மா அவர்கள் அறிவித்த கறவைப் பசுவை வழங்கியுள்ளார்கள். இது தினந்தோறும் காலை 5 லிட்டரும், மாலை 5 லிட்டரும் என பால் தருகிறது. ஒரு நாளைக்கு 10 லிட்டர் பாலை விற்பனை செய்து பணம் ஈட்டுவேன் என்று என் ஜென்மத்தில் ஒரு நாளும் நினைத்ததில்லை. அத்தனையும் கனவில் நடப்பதுபோல் உள்ளது. ஆனால் இது கனவல்ல. நிஜம் என்று எண்ணும்பொழுது புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்ல வார்த்தையில்லை. அவங்க நோய் நொடியில்லாமல் 100 வருஷம் வாழணும்''.

**திருமதி செல்லம்மாள், க/பெ. இராமலிங்கம், பனையூர் கிராமம், ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியம், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய திட்டத்தின் கீழ் கறவைப் பசு வழங்கியுள்ளார்கள். எனக்கு ரொம்ப சந்தோஷம்தான். எனக்கு வழங்கப்பட்டுள்ள கறவைப் பசு மூலம் வேளைக்கு 5 லிட்டர் வீதம் நாளொன்றுக்கு 10 லிட்டர் பால் கிடைப்பதால் இதன் வாயிலாக எனக்கு தினந்தோறும் ரூ.200/– முதல் ரூ.250/– வரை வருமானம் கிடைக்கிறது. எந்தவித முதலீடும் இல்லாமல் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எனக்கு வழங்கிய




கறவைப் பசுவின் வாயிலாக தினந்தோறும் என் குடும்பத்திற்கு வருமானம் கிடைக்கிறது என்றால் அந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எனக்கு இது தவிர சொல்ல வார்த்தை ஏதும் இல்லை. புரட்சித்தலைவி அம்மாவுக்கு நன்றி'' என்று கூறி திருமதி செல்லம்மாள் மகிழ்ச்சி பொங்கத் தெரிவித்தார்.

❖ ❖ ❖



## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் வழங்கப்பட்ட விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தால் ஏழை, எளிய மக்களின் பொருளாதாரம் இலட்சங்களாக உயர்வு !

**கி**ராமப்புறங்களில் வாழும் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

**சின்னசேலம் வட்டம், அம்மையகரம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி பார்வதி, (வயது 33), கணவர் பெயர் முருகேசன் (லேட்) அவர்கள் தெரிவித்ததாவது :**

“எனது கணவர் லாரி ஓட்டுநராக பணிபுரிந்து வந்தார். கடந்த 2000ஆம் ஆண்டு சாலை விபத்தில் அவர் இறந்துவிட்டார். எனக்கு 15 வயதில் திலீப் குமார் என்ற மகன் உள்ளான். தற்பொழுது எனது மகன் 10ஆம் வகுப்பு படித்து வருகிறான். எனது மகனைப் படிக்க வைக்க சிரமப்பட்டு

கொண்டு இருந்தேன். உற்றார் உறவினர்கள் யாரும் உதவி செய்ய முன்வரவில்லை. ஒரு வேளை சாப்பாட்டிற்கே கஷ்டமாக இருந்தது. கடந்த 27.08.2011ஆம் ஆண்டு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் விலையில்லா ஆடுகள் வழங்கும் முன் மாதிரி திட்டத்தின்கீழ், ஆடுபெறும் பயனாளியாக நான் தேர்வு செய்யப்பட்டேன். அத்திட்டத்தின் கீழ் எனக்கு 3 பெட்டை ஆடுகளும், 1 கெடா ஆடும் என மொத்தம் 4 வெள்ளாடுகள் விலையில்லாமல் கொடுத்தாங்க. எனக்கு வழங்கப்பட்ட ஆடுகள் கடந்த 2 ஆண்டுகளில் 3 முறை குட்டிகளை ஈன்றுள்ளது. இப்படி ஈன்ற குட்டிகள் மூலம் என்னிடம் 32 ஆடுகள் இருந்தன. இதில் எனது மகன் படிப்பு செலவிற்காக 6 ஆண் ஆடுகளை தலா ரூ.4,000 வீதம் விற்பனை செய்துள்ளேன். இதன் மூலம் ரூ.24 ஆயிரம் கிடைத்தது. இப்போது என்னிடம் 26 ஆடுகள் உள்ளது. சிறு ஆட்டுப் பண்ணை போல் உள்ளது.


பார்வதி

என்னுடைய வாழ்வில் கஷ்டப்பட்டு கொண்டிருந்த நிலை மாறி, தற்போது பொருளாதார ரீதியாக நான் வாழ்க்கையில் முன்னேறி உள்ளேன். இப்போது என்னிடம் உள்ள 26 ஆடுகளின் மொத்த மதிப்பீடு தோராயமாக ரூ. 1,10,000 ஆகும். ஆட்டுச் சானத்தின் மூலம் ரூ.1,500/– வருடத்திற்கு கிடைக்கிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் வழங்கப்படும் விலையில்லா ஆடு வழங்கும் திட்டத்தை நான் வரவேற்கிறேன். என்னைப் போன்ற ஏழை, எளிய மக்களுக்கு இத்திட்டம் ஒரு வரப்பிரசாதமாக உள்ளது. இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்த அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

**சின்னசேலம் வட்டம், எலவடி ஊராட்சியைச் சேர்ந்த மாரியம்மன் கோயில் தெருவில் வசிக்கும் திருமதி வெள்ளிக்கிளி (வயது 32), கணவர் பெயர் ராமசாமி அவர்கள் தெரிவித்ததாவது,**

நானும், எனது கணவரும் விவசாய கூலி வேலை செய்துதான் 3 குழந்தைகளை வளர்த்து வருகிறோம். விவசாயத்தில் தினமும் கூலி வேலையும் கிடைப்பதில்லை. எனது பெரிய மகள் அகிலா,

பாரதியார் கல்லூரியில் பி.எஸ்.சி. கணிதம் முதலாமாண்டும், 2வது மகன் கார்த்திக் 12ஆம் வகுப்பும், 3வது மகன் ராஜ்குமார் 9ஆம் வகுப்பும் படித்து வருகிறார்கள். எனது 3 குழந்தைகளையும் படிக்க வைப்பதற்கு பணம் கட்ட முடியாமல் சிரமப்பட்டு கொண்டிருந்தேன். குறைந்த வருமானத்தை வைத்து



வெள்ளிக்கிளி

குழந்தைகளை படிக்க வைக்கவும், குடும்பத்தை நடத்துவதற்கும் சிரமப்பட்டு கொண்டிருந்தேன். எவ்வளவு கஷ்டப்பட்டாலும் குழந்தைகளை மட்டும் நன்கு படிக்க வைக்க வேண்டுமென்று நான் உறுதியாக இருந்தேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்த விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தில் 4 விலையில்லா ஆடுகள் எனக்கு வழங்கினார்கள். கூலி வேலைக்கு செல்வதை நிறுத்திவிட்டு முழுமையாக ஆடு வளர்ப்பில் ஈடுபட்டேன். அரசு வழங்கிய 4 ஆடுகள், தற்போது 2 ஆண்டுகள் ஆகிறது. எனக்கு வழங்கப்பட்ட 3 பெட்டை ஆடுகளும், 3 முறை குட்டிகளை ஈன்றுள்ளது. தற்போது என்னிடம் 25 ஆடுகள் உள்ளது. அவைகளை நன்கு பராமரித்து வருகிறேன். அவற்றில் 4 ஆடுகளை விற்று எனது மகள் மற்றும் மகன் கல்லூரி மற்றும் பள்ளி படிப்பிற்கு பயன்படுத்தியுள்ளேன். தற்போது என்னிடம் உள்ள 25 ஆடுகள் சிறு ஆட்டு பண்ணை அளவிற்கு உயர்ந்துள்ளது. மனதளவிலும், பொருளாதார ரீதியாகவும் எங்கள் குடும்பம் உயர்ந்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மகளிருக்கான விலையில்லா மிக்சி, கிரைண்டர், ஃபேன் வழங்கப்பட்டது. நாங்களும் பெற்றுக் கொண்டோம். எங்கள் குடும்பம் கூரை வீட்டில்தான் உள்ளது. தற்போது பசுமை வீடு கட்டும் திட்டத்தின் கீழ் மெத்தை வீடு கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் மெத்தை வீடு கட்ட உள்ளேன். விலையில்லா ஆடு வழங்கும் திட்டம் எங்களைப் போன்ற ஏழை, எளிய மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கிறது. இதுபோன்ற திட்டம் தொடர வேண்டும். இத்திட்டத்தை தமிழ்நாட்டுக்குத் தந்த அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றி''.

❖ ❖ ❖

# கல்லாதோர் இல்லாத மாநிலமாக தமிழகத்தை உருவாக்க "கற்கும் பாரதம்" திட்டம் மூலம் எழுத்தறிவு பெற்றவர்கள் மகிழ்ச்சி!

**க**ல்லாதோர் இல்லாத மாநிலமாக தமிழகத்தை உருவாக்க வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்டு வரும் கற்கும் பாரதம் திட்டத்தின் மூலம் 17.26 இலட்சம் கல்லாதோர் கற்றோராக மாற்றப்பட்டுள்ளனர். மத்திய, மாநில அரசுகளால் சக்ஷார் பாரத் என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டு வரும் இந்தத் திட்டம் கற்கும் பாரதம் என்னும் பெயரில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த மாதிரி மையங்களில் பயிலும் வயது வந்தோருக்கு கணினியையும், எல்சிடி–யையும் பயன்படுத்தி ஏற்கெனவே தொகுக்கப்பட்ட அடிப்படை எழுத்தறிவுத் திட்டத்தை உள்ளடக்கி மென்பொருளை இணைத்து கல்வி கற்பிக்கப்படுகிறது. பெண்களுக்கு தையல் பயிற்றுவித்தல், சோப்பு, எண்ணெய் தயாரித்தல், செயற்கை ஆபரணங்கள் தயாரித்தல், மெழுகுவர்த்தி தயாரித்தல் போன்றவற்றை பயிற்றுவிக்க அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளர்கள்.



மகளிர் சுய உதவிக் குழுக்களில் 100 விழுக்காடு எழுத்தறிவு பெற்றவர்கள் என்ற இலக்கை எய்தும் 30 ஊராட்சி கட்டமைப்புகளுக்கு தகுதியுடையவர்களுக்கு ரூ.50,000 சிறப்பு ஊக்கத் தொகை வழங்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டார்.

கல்வி அறிவு மற்றும் தொழில் பயிற்சியான செயற்கை ஆபரணங்கள், சோப்பு பவுடர் தயாரித்தல், மெழுகுவர்த்தி தயாரித்தல், அழகுகலை பயிற்சி, கம்ப்யூட்டர் சாம்பிராணி தயாரித்தல் ஆகிய தொழிற்பயிற்சி பெற்று பயன் அடைந்தவர் தங்கள் எண்ணங்களை இங்கே கூறுகையில்,

**விழுப்புரம் மாவட்டம், மயிலம் ஊராட்சி ஒன்றியம் சித்தணி கிராமத்தைச் சேர்ந்த திருமதி மு.தேன்மொழி, (வயது 32), க/பெ.முருகன் தெரிவித்ததாவது;**




“எனது அப்பா, அம்மா என்னை படிக்க வைக்கவில்லை. அதனால் எனக்கு எழுத படிக்க தெரியவில்லை. எங்கள் கிராமத்தில் வயது வந்தோர் கற்கும் பாரதத் திட்டத்தில் எழுத படிக்க கத்து கொடுக்க வகுப்பு தொடங்கினாங்க. அதில் சேர்ந்து எழுத படிக்க கத்துக்கலாம் என நினைத்து நானும் சேர்ந்தேன். தற்போது எழுத படிக்க தெரிவதால் பேருந்துகளில் என்ன எழுதியிருக்கிறது என்பதை படித்து, தெரிந்து அதன்படி நான் தனியாக வெளியூர் சென்றுவர முடிகிறது. எங்களை போன்ற எழுத்தறிவு இல்லாதவர்களுக்கு, எழுத, படிக்க வயது வந்தோர் கற்கும் பாரதத் திட்டத்தினை அறிவித்து உதவிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்”.

**விழுப்புரம் மாவட்டம், மயிலம் ஊராட்சி ஒன்றியம், சித்தணி கிராமத்தைச் சேர்ந்த திருமதி எழிலரசி (வயது 29), க/பெ. சிவபெருமாள் தெரிவித்ததாவது;**




எனக்கு சபரி (வயது 9) என்ற மகனும், சுவாதி (வயது 7) என்ற மகளும் உள்ளனர். நான் மிகவும் ஏழை குடும்பத்தை சேர்ந்தவள். எனது அப்பா, அம்மா என்னை படிக்க வைக்க வசதி இல்லாததால் என்னைப் படிக்க வைக்கவில்லை. நான் படிக்காத காரணத்தால், படிக்காத மாப்பிள்ளையைப் பார்த்து எனக்கு திருமணம் செய்து வைத்தார்கள். தனியாக வெளியூர்களுக்கு பேருந்துகளில் பயணம் செய்ய முடியாத நிலையில், படித்த மற்றவர்களை கேட்டுத் தான் தெரிந்துக் கொள்வேன். தற்போது கற்கும் பாரதத் திட்டத்தில் நான் சேர்ந்து படித்ததால் எழுதவும், படிக்கவும், அங்கே நடத்தும் பயிற்சியின் மூலம் சுய தொழிலும் கற்றுக்கொண்டேன். வெளியூர் சென்றால் இப்போது நானே பேருந்துகளில் உள்ள ஊர்களைப் படித்துத் தெரிந்து தனியாக சென்று வர முடிகிறது. இந்த அளவிற்கு கற்கும் பாரதத் திட்டத்தின் மூலம் எங்களுக்குக் கல்வி அறிவு கத்துக் கொடுக்க உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்”.

❖ ❖ ❖



# விலையில்லா மடிக்கணினியால் உருவாகும் கல்விப் புரட்சி

**நா**ட்டின் நம்பிக்கையாகத் திகழும் கிராமப்புற ஏழை, எளிய மாணவச் செல்வங்களும் கணினிக்கல்வி அறிவினைப் பெற்று வாழ்க்கையில் ஏற்றம் பெற்றிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

**விழுப்புரம் வட்டம், பேரங்கியூர் கிராமத்தைச் சேர்ந்த மாணவி வி. ராதா, (வயது 18) நம்மிடம் கூறும்போது,**

“2012ஆம் ஆண்டில் மேல்நிலை இரண்டாமாண்டுபடித்துகொண்டிருக்கும்போது விலையில்லா மடிக்கணினியை எனக்குக் கொடுத்தார்கள். நான் தற்போது தொழில்நுட்பக் கல்லூரியில் பி.இ. இரண்டாம் ஆண்டு படித்து


ராதா

வருகிறேன். எங்கள் குடும்பம் விவசாயக் குடும்பமாகும். விவசாயக் கூலி வேலை செய்துதான் எனது அப்பா என்னைக் கல்லூரியில் படிக்க வைக்கிறார். எங்களால் மடிக்கணினி விலை கொடுத்து வாங்க முடியாத சூழ்நிலையில் அம்மா அவர்கள் அரசுப் பள்ளியில் படித்த எங்களைப் போன்ற மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கியது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது'' என்றார்.

**அதே கிராமத்தைச் சேர்ந்த சு. சௌந்தரவள்ளி, (வயது 18) என்ற மாணவி நம்மிடம் தெரிவித்தபோது,**



சௌந்தரவள்ளி

''எனது அப்பா, அம்மா விவசாயக் கூலிவேலை செய்துதான் என்னைப் படிக்க வைக்கிறார்கள். என்னுடைய அப்பா, அம்மா இருவரும் படிக்கவில்லை. நான் பி.இ. இரண்டாம் ஆண்டு (மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியல் படிப்பு) படித்து வருகிறேன். எங்களால் ரூ.30 ஆயிரம் செலுத்தி மடிக்கணினி வாங்கப் போதிய வசதி இல்லை. நான் கனவில்கூட மடிக்கணினி வாங்கிப் பயன்படுத்துவேன் என்று நினைத்துக் கூட பார்க்கவில்லை. எங்களைப் போன்ற ஏழைக் குடும்பத்தில் படிக்கும் மாணவ, மாணவியருக்கு மடிக்கணினி எட்டாக் கனியாக இருந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விலையில்லா மடிக்கணினி வழங்கி வருவது ஒரு வரப்பிரசாதமாகக் கருதுகிறேன்'' என்று கூறினார்.

**மேலும், இக்கிராமத்தைச் சேர்ந்த பாலமுருகன் (வயது 19) கூறுகையில்,**



பாலமுருகன்

''நான் பொறியியல் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வருகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடைகோடி கிராமத்தில் வசிக்கும் என்னைப் போன்ற மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கி வருகிறார்கள். இத்திட்டத்தின் கீழ் மடிக்கணினி பெற்று முழுமையாக பயனடைந்துள்ளேன் என்று கூறினால் அது மிகையாகாது. பொறியியல் படிப்பிற்கு மடிக்கணினி மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. மடிக்கணினி உள்ளதால் பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் தெளிவுபடுத்திக் கொள்கிறோம். இப்படி எட்டாக்கனியாக இருந்த மடிக்கணினி எங்கள் மடியில் தவழ்வது அம்மா அவர்களால்தான் அவர்களுக்கு என் கோடான கோடி நன்றி'' என்று பெருமையுடன் பேசினார்.

❖ ❖ ❖



## 80 சதவிகித மானிய விலையில் விவசாயிகளுக்கு சூரிய சக்தி நீர் இறைப்பான்கள்

**த**மிழகத்தில் அதிகரித்து வரும் மின் தேவையைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு மின் உற்பத்திக்கான பல்வேறு கட்டமைப்புகளை உருவாக்கி வருகிறது. எனினும், மின்சாரத்தின் தேவை மக்கள் தொகை வளர்ச்சிக்கேற்ப நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வருவதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சூரிய ஒளியைப் பயன்படுத்தி மின் உற்பத்தியைப் பெருக்க ஊக்கம் அளித்துள்ளார்கள். குறிப்பாக, விவசாய மின்மோட்டார்களுக்கு சூரிய ஒளி மூலம் விவசாயிகளே மின் உற்பத்தி செய்யும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். இதன் மூலம் விவசாயத்திற்கான மின் தேவை குறைந்து அதிக அளவில் மின்சாரத்தை சேமிக்க வழிவகை ஏற்படுகிறது. மின்சாரத்தை சூரிய ஒளிமூலம் உற்பத்தி செய்ய சூரிய சக்தி நீர் இறைப்பான்களை 80 சதவிகித மானிய விலையில் தமிழக அரசு விவசாயிகளுக்கு வழங்கி வருகிறார்கள்.

சூரிய சக்தி நீர் இறைப்பான் அமைக்க 200 சதுரமீட்டர் இடம் போதுமானது. இந்த இடத்தில் சூரிய ஒளி நேரடியாகப் படும் இடமாகத் தேர்வு செய்ய வேண்டும். சூரிய சக்தி (சோலார்) அமைக்கும் இடத்தில் எந்தவிதமான மரங்களின் நிழல்களும் படாமல் இருக்க வேண்டும். சூரிய

சக்தி நீர் இறைப்பான், சூரிய சக்தி தகடுகள் மற்றும் அதை அமைக்க ஆகும் செலவில் 80 சதவிகிதத்தை அரசே மானியமாக வழங்குவதால் விவசாயிகளுக்குப் பெரும் செலவு ஏற்படாது.



இராமன்

**சூரிய சக்தியில் இயங்கும் சோலார் பம்ப்செட் அமைக்கப்பட்டுள்ள கானை ஊராட்சி ஒன்றியம் அரியூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி திரு. இராமன் என்பவரை சந்தித்தபோது தெரிவித்ததாவது :–**

“என்னுடைய விவசாய நிலத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இயங்கும் சோலார் பம்ப்செட் ரூ.4,39,950 மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது. நான் தற்பொழுது நெல் மற்றும் மரவள்ளிக்கிழங்கு ஆகியவைசாகுபடிச்செய்துவருகிறேன்.மாற்றுப்பயிராகநிலக்கடலையையும் பயிர்செய்து வருகிறேன். 250 அடி ஆழத்திற்கு ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இதன் அருகில் சூரிய சக்தி பெற சோலார் தகடு 200 சதுர அடியில் அமைத்துள்ளேன். இதன் மூலம் 5 குதிரைத்திறன் கொண்ட மின்மோட்டார் மூலம் விவசாயத்திற்குத் தேவையான நீர் இறைக்கப்பட்டு வருகிறது.

சூரியசக்தியின் மூலம் நாளொன்றுக்கு 10 மணிநேரம் நீர்பாசனம் செய்ய முடிகிறது. மின்சாரம் தடைப்பட்டாலும் சூரிய சக்தியில் அமைக்கப்பட்டுள்ள சோலார் பம்ப்செட் விவசாயம் செய்வதற்குப் பயனுள்ளதாக அமைந்துள்ளது. தடையின்றி வேளாண் உற்பத்தி செய்ய சோலார் பம்ப்செட் அமைப்பதற்கு 80 சதவிகிதம் மானியமாக தமிழக அரசு வழங்கியது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. எங்களைப் போன்ற ஏழை விவசாயிகளுக்கு இத்திட்டம் பெரும் வரபிரசாதமாக உள்ளது என்று தெரிவித்தார்”.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு திருவாளர் அலர்ட்ரோனா எனர்ஜி பிரைவேட் லிட், சென்னை, ஜெயின் இரிகேன் சிஸ்டம் லிட், ஜல்கான், ரிச் பைப்டோ கேர், போடிநாயக்கனூர், மற்றும் சாய் பாபுஜி பிரைவேட் லிட், ஐதராபாத் ஆகிய 4 நிறுவனங்கள் தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு மாற்று எரிசக்தி முகமை மூலம் 30 சதவிகித மானியமும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 50 சதவிகித மானியமும் என 80 சதவிகித மானியத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மானியத் தொகை ரூ.3,35,200/– ஆகும். விவசாயிகளின் பங்குத் தொகை ரூ.1,04,750/–ஆகும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் அந்தந்த வட்டாரங்களில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

❖ ❖ ❖

# சிறு, குறு தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் முன்னேற்றிய அரசு!

**நா**ட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவதிலும், நிலைத்த வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தொழில்முனைவோர் மேம்பாடு அடைவதற்கும் முக்கிய பங்காற்றுவது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை என்று சொன்னால் அது மிகையாகாது. இத்தகைய சிறப்பு வாய்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு தமிழக அரசு பல்வேறு சலுகைகளை வழங்கி தொழில் முனைவோரை மேலும் ஊக்குவித்து வருகின்றது. அந்த வகையில் முதல் தலைமுறை தொழில் முனைவோர்களை ஊக்குவித்து அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்து சுயமாக தொழில் தொடங்க தமிழக அரசால் அறிவித்து செயல்படுத்தப்பட்டுள்ள ஒரு அற்புதமான திட்டம் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன வளர்ச்சி திட்டமாகும்.

**இத்திட்டத்தினால் பயனடைந்த விழுப்புரம் மாவட்ட பயனாளிகள் தெரிவித்தபோது,**

**டி.சித்ரா (வயது 45), கணவர் பெயர் டி.பி.கிஷோர்குமார் கூறுகையில்,**

“நான் தனிப்பட்ட முறையில் ஒரு தையல் இயந்திரத்தை கொண்டு எனது வீட்டிலேயே பெண்களுக்கான தையல் தைக்கும் தொழில் செய்து வந்ததில் மாதம் வருமானம் ரூ.5,000/– கிடைத்தது. தமிழக அரசால் மாவட்ட தொழில் மையம் மூலம் மானியத்துடன்கூடிய கடனுதவி வழங்குவதாக செய்திதாள் மூலம் எனக்கு தெரிய வந்தது. அதன் பின்னர் மாவட்ட தொழில் மையம் மூலம் கடன்



*சித்ரா*

பெறுவதற்காக விண்ணப்பம் செய்தேன். என்னுடைய விண்ணப்பம் பரிசீலனை செய்ததில் முறையாக தையல் தொழில் சான்றிதழ் இருந்ததால் எனக்கு கடனுதவி வழங்க மாவட்ட தொழில் மையம் மூலம் யூனியன் வங்கிக்கு பரிந்துரை செய்து 15 சதவீதம் மானியத்துடன் கூடிய கடனுதவியாக ரூ.3.50 இலட்சம் தமிழக அரசால் மாவட்ட தொழில் மையம் மூலம் கடந்த 6 மாதத்திற்கு முன்பு வழங்கப்பட்டது.

இந்தக் கடன் தொகையைக் கொண்டு 10 தையல் இயந்திரங்கள் வாங்க பெற்று சாய் சரஸ்வதி தையல் பயிற்சி நிலையம் ஏற்படுத்தி சிறப்பான முறையில் இயங்கி கொண்டிருக்கிறது. இந்த தையல் பயிற்சி நிலையத்தில் சுமார் 15 நபர்கள் சேர்க்கப்பட்டு 2 மாத தையல் பயிற்சி அளிக்கப்படுகிறது. தையல் பயிற்சி அளிக்கப்படும் நபர்களின் மூலம் மாதமொன்றுக்கு ரூ.10,000/–மும், வெளியிலிருந்து பெறப்படும் துணிகளை தைத்து கொடுப்பதால் ரூ.10,000/–மும் ஆக மொத்தம் ஒரு மாதத்திற்கு ரூ.20,000/– வருமானம் கிடைக்கிறது. மேலும் இந்த தையல் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற நான்கு பெண்களுக்கு இங்கேயே வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு அவர்களுக்கும் மாதமொன்றுக்கு எனக்கு கிடைக்கும் வருவாயிலிருந்து ரூ.5,000/– வழங்கும் அளவிற்கு எனது பொருளாதாரம் வளர்ச்சி அடைந்துள்ளது. என்னால் பலபேருக்கு வேலைவாய்ப்பும் அளிக்கப்பட்டுள்ளது என்ற மனநிறைவும், வருமானம் பல மடங்கு உயர்ந்துள்ளதால் நானும், எனது குடும்பத்தாரும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறோம்.

எனவே, தனிப்பட்ட முறையில் தையல் இயந்திரம் மூலம் தொழில் செய்ததை விட அரசு கடனுதவி பெற்று தையல் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டதால் மாதத்திற்கு கூடுதல் வருமானம் கிடைத்ததால் என்னால் பலபேருக்கு சுய தொழில் மூலம் வேலைவாய்ப்பு பெற உறுதுணையாகவும், எனது வாழ்வாதாரத்தையும் பொருளாதார முன்னேற்றம் அடைய செய்து வாழ்க்கையில் மகிழ்ச்சி பொங்குமளவிற்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்தி கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நானும் எங்கள் குடும்பம் சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்''.

என் பெயர் எம்.தனுசு (வயது 28), தந்தை பெயர் கே.மணி. 3/83 மேற்கு தெரு, கோலியனூர் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் எம்.பி.ஏ. படித்து உள்ளேன். சென்னையில் ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து மாதம் ரூ.17 ஆயிரம் வருமானம் பெற்று வந்தேன். எனக்கு சுயமாக




தொழில் செய்ய வேண்டும் என்ற எண்ணம் பலநாட்களாக இருந்து வந்தது. அதன்பேரில் மாவட்ட தொழில் மையத்தில் புதிய தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (NEEDS) சுய தொழில் புரிய விண்ணப்பம் செய்ததில் எனக்கு சுத்தகரிப்பு செய்யப்பட்ட குடிநீர் தயாரிக்கும் நிறுவனம் தொடங்குவதற்கு ரூ.6,30,000/– மானியத்துடன் கூடிய கடனுதவியாக ரூ.25 இலட்சம் வழங்கப்பட்டது. இத்தொகையைக் கொண்டு சுத்தகரிப்பு செய்யப்பட்ட குடிநீர் தயாரிக்கும் நிறுவனத்தை 9.1.2015 அன்று ஆரம்பித்தேன். இத்தொழில் மூலம் ஒரு மாதத்திற்கு ரூ.90,000/– அளவிற்கு குடிநீர் விற்பனை செய்ததில் ஒரு நாளைக்கு ரூ.1,500/– வீதம் மாதத்திற்கு ரூ.45,000/– இலாபம் கிடைக்கிறது. அரசால் வழங்கப்படும் ரூ.25 இலட்சத்தினை தனியார் மூலம் வெளியில் வட்டிக்கு கடனுதவி பெற்றிருந்ததால் அதிகளவில் வட்டி செலுத்த நேரிட்டிருக்கும். இதனை தவிர்த்து அரசால் குறைந்த வட்டியில் மானியத்துடன்கூடிய கடனுதவி பெற்றதால் என்னைப் போன்ற படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்பது ஒரு கனவாக இருக்கின்ற இன்றைய நிலையில் எனது பலநாள் கனவை நனவாக்கி சுயமாக தொழில் தொடங்கியதற்கு எனது குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் பெருமகிழ்ச்சியை ஏற்படுத்தியது. நான் சுய தொழில் தொடங்கியதால் என்னால் 7 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் அளவிற்கும் சமுதாயத்தில் ஒரு பெரிய அந்தஸ்தை பெற்று எனது வாழ்க்கையில் இமயம் அளவிற்கு உயர்த்தி எனது வாழ்க்கையில் பொருளாதார முன்னேற்றம் அடைய செய்து என்னைப் போன்ற இளைஞர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

❖ ❖ ❖

# ஏழை மக்கள் மத்தியில் அமோக வரவேற்பு பெற்றுள்ள “அம்மா சிமெண்ட்”

அரசு அறிவித்திருக்கும் “அம்மா சிமெண்ட்” மலிவு விலையில் விற்பனை செய்வது அனைத்து தரப்பு மக்கள் மத்தியிலும் வரவேற்பைப் பெற்றுள்ளது. மேலும், சிமெண்ட் விலை உயர்வையும் கட்டுப்படுத்த வழி வகுக்கிறது.

**இத்திட்டத்தினால் பயன்பெற்ற பயனாளிகள் நம்மிடம் கூறும்போது,**

“என் பெயர் எஸ்.திருமால். வயது 39. கருங்காலிப்பட்டு மெயின் ரோடு, கருங்காலிப்பட்டு என்ற முகவரியில் எனது குடும்பத்தினருடன் வசித்து வருகிறேன். தினக்கூலி அடிப்படையில் வேலை செய்து வரும் நான் மாதாந்திர குறைந்த வருமானத்தை கொண்டு எனது இரண்டு ஆண் மற்றும் ஒரு பெண் பிள்ளைகளை நன்கு ஆரோக்கியமாக வளர்ப்பதற்கும், படிக்க வைக்கவும் மிகவும் கஷ்டப்பட்டு வரும் ஏழ்மை நிலையில் இருந்து வருகிறேன்.




இந்த நிலையில் எனக்கு சொந்தமான 200 சதுரஅடி கொண்ட மனையில் புதிதாக வீடு கட்டுவதற்கு தனியார் மூலம் சிமெண்ட் மூட்டைகளை அதிக விலை கொடுத்து வாங்கி வீட்டின் கட்டுமானப் பணிகளை செய்து கொண்டிருந்த நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட அம்மா சிமெண்ட் திட்டத்தின்கீழ் ஒரு சிமெண்ட் மூட்டை ரூ.190/–க்கு வழங்குவதாக அறிந்து கொண்டேன். உடனடியாக அருகில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அதற்குரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்ததின் பேரில் எனக்கு அரசால் வழங்கப்படும் சலுகை விலையில் அம்மா சிமெண்ட் மூட்டை கிடைத்தது. பாதி நிலையில் இருந்த என்னுடைய வீட்டின் கட்டுமானப் பணியினை முழுமையாக முடிவுற்று எனது குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக

புதிய வீட்டிற்கு குடியேற மிகவும் உறுதுணையாக இருந்தது. என்னைப் போன்ற ஏழை மக்களுக்கு மலிவு விலையில் அம்மா சிமெண்ட் கிடைத்தது ஒரு வரப்பிரசாதமாகும். சமுதாயத்தில் வாழ்வாதாரத்தை உயர்த்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என் குடும்பத்தினர் சார்பாக கோடானகோடி நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்''.




''என் பெயர் சீதா (வயது 22), கருங்காலிப்பட்டு மெயின் ரோடு, கருங்காலிப்பட்டு என்ற முகவரில் எனது குடும்பத்தினருடன் வசித்து வருகிறேன். ஏழ்மை நிலையில் உள்ள நாங்கள் கூலி வேலை செய்து குறைந்த வருமானத்தை கொண்டு எனது இரண்டு பெண் பிள்ளைகளை படிக்க வைத்து, வளர்ப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டு வருகிறேன். இந்த நிலையில் எனக்கு சொந்தமான 200 சதுரஅடி கொண்ட மனையில் வீட்டினை கட்டுவதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன்.

புதிதாகக் கட்டும் இந்த வீட்டிற்கு தனியார் மூலம் சிமெண்ட் மூட்டைகளை அதிக விலை கொடுத்து வாங்கி வீட்டின் கட்டுமானப் பணிகளை செய்து கொண்டிருந்த நிலையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட அம்மா சிமெண்ட் திட்டத்தின்கீழ் ஒரு சிமெண்ட் மூட்டை ரூ.190/–க்கு வழங்குவதாக அறிந்து கொண்டேன். உடனடியாக அருகிலுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அதற்குரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்ததின் பேரில் எனக்கு அரசால் வழங்கப்படும் சலுகை விலையில் அம்மா சிமெண்ட் மூட்டை கிடைத்தது. பாதி நிலையில் இருந்த என்னுடைய வீட்டின் கட்டுமானப் பணியினை முழுமையாக முடிவுற்று எனது குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக புதிய வீட்டிற்கு குடியேற முடிந்தது. என்னைப் போன்ற ஏழை மக்களுக்கு மலிவு விலை அம்மா சிமெண்ட் பெரிதும் பயனுள்ளதாக உள்ளது. இத்திட்டத்தின் மூலம் எங்கள் கனவை நனவாக்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என் குடும்பத்தினர் சார்பாக என்றென்றும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

❖ ❖ ❖

# ஆதிதிராவிட மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றும் அரசு!

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் வறுமையைப் போக்கி அவர்களது வாழ்க்கைத் தரத்தையும், பொருளாதாரத்தையும் உயர்த்த வேண்டும் என்ற சீரிய எண்ணத்தில் தாட்கோ (தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்) துறையின் மூலம் மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டம் அல்லது நிலம் மேம்படுத்துதல் திட்டம், தொழில் முனைவோர் திட்டம், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம், சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதி கடன் திட்டம், சுய உதவிக்குழுக்களுக்கு பொருளாதாரக் கடன் திட்டம், துரித மின் இணைப்புத் திட்டம், துப்புரவு தொழிலாளர்களுக்கான புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை உருவாக்கித் தந்தார்கள்.

**திருவில்லிபுத்தூர் வட்டம் நக்கமங்களத்தைச் சேர்ந்த பா.மாடசாமி, தெரிவிக்கையில்,**

நான் கடந்த 10 ஆண்டுகளாக சொந்தமாக ஆட்டோ ஓட்டி வந்தேன். அதில் எனக்கு போதிய வருமானம் கிடைக்கவில்லை. இந்நிலையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில், தாட்கோ அலுவலகம் மூலம் இளைஞர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரசு மானியத்தில் வாகனக்கடன் வழங்குவதாக அறிந்து மனு செய்தேன். ரூ.10 இலட்சத்து 26 ஆயிரத்து 489 மதிப்பிலான மகேந்திரா டூரிஸ்டர் வேன் மானியத்துடனான கடனில் எனக்கு வழங்கப்பட்டது. இதில் ரூ.70 ஆயிரம் மட்டுமே கட்டினேன். தாட்கோ மூலம் கடன் பெற்றதால் மொத்த தொகையில் ரூ.2 இலட்சத்து 25 ஆயிரம் மானியமாக கிடைத்தது. மானியத் தொகை போக மீதமுள்ள தொகைக்கு



மாடசாமி

வட்டி கட்டினால் போதும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருக்கும் போது தான் எங்களுக்கெல்லாம் விடிவுகாலம். ஏழ்மையில் வாழ்கின்ற எங்களைப் போன்ற ஆதிதிராவிடர் மக்களின் வாழ்வு உயர தொடர்ந்து பல்வேறு நலத்திட்டங்களைத் தந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சாத்தூர் வட்டம் பெரியகொல்லபட்டியைச் சேர்ந்த திரு.வே.வெற்றிவேல், த/பெ.வேலாயுதம் நம்மிடம் கூறுகையில்,**



வெற்றிவேல்

நான் தனியாரிடம் தினக்கூலி அடிப்படையில் ஆட்டோ ஓட்டி வந்தேன். தமிழக அரசு ஆதிதிராவிட இளைஞர்கள் சொந்த தொழில் செய்ய மானியத்துடன் கூடிய வாகனக்கடன் வங்கி மூலமாக வழங்குவதாக அறிந்து தாட்கோ அலுவலகத்தில் முறையாக விண்ணப்பம் செய்தேன். வாகனத்திற்கு மிகவும் குறைந்த தொகையான ரூ.26 ஆயிரம் மட்டுமே எனது பங்குத்தொகையாக செலுத்தி ரூ.1.15 இலட்சம் மானியத்தில் ரூ.3.86 இலட்சம் கடன்தொகை கிடைத்ததை என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. வறுமையில் வாடிய எனது குடும்பத்தில் உள்ள ஏழ்மையை நிவர்த்தி செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்போம்.

❖ ❖ ❖

## அம்மாவின் அமுதமொழி

ஒரு நிறுவனம் மேன்மை அடைய வேண்டும் என்றால்; அதன் விற்பனைத் திறன் அதிகரிக்கப்பட வேண்டும் என்றால்; வழக்கத்திற்கு மாறாக சிந்திக்க வேண்டும். புதிய சிந்தனைகள் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும். வெற்றியை அளிக்கும்.

# உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகளின் நலன்களை பேணிக்காக்கும் பொற்கால ஆட்சி

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் பயன் அளிக்கும் மிகவும் உன்னதமான திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, திருமண நிதி உதவி, இயற்கை மரணம் உதவி, விபத்து நிவாரணம், ஈமச் சடங்கு செலவு, முதியோர் ஓய்வூதியம், புற்றுநோய், காசநோய், சிறுநீரக நோய் மற்றும் கொடிய நோயினால் பாதிக்கப்பட்டு தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கான ஓய்வூதியம், எச்.ஐ.வி நோயினால் உயிரிழந்த உறுப்பினர்களின் அனாதைக் குழந்தைகளுக்கு மாத உதவி போன்ற உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் பயனடைந்த விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகள் தாங்கள் அடைந்த பயன்கள் பற்றி உள் உணர்வுடன் தெரிவித்ததாவது,**

“எனது பெயர் வெள்ளையம்மாள். எனது கணவர் பெயர் ராமன். நான் மத்திய சேனையில் வசித்து வரும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சேர்ந்தவள். எனது கணவர் 10 வருடங்களுக்கு முன்பு காலமாகி விட்டார். எனக்கு குழந்தைகள் ஏதும் இல்லை. நான் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எனக்கு பொருளுதவியோ, பண உதவியோ செய்யும் அளவிற்கு யாரும் இல்லை. என்னால் முடிந்தவரை விவசாயக்கூலி வேலை செய்து பிழைத்து வந்தேன். தற்போது வயதாகி விட்டதால் என்னால் அந்தக் கூலி வேலை கூட செய்ய முடியவில்லை. அந்த சமயத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் விதவைகளுக்கு மாதம் ரூ.1,000/– கொடுப்பதாக தகவல் தெரிந்து மாவட்ட ஆட்சித்தலைவரிடம் மனு செய்தேன். அவர்கள் என் வீட்டிற்கு வந்து விசாரணை



வெள்ளையம்மாள்

செய்து எனது உண்மை நிலவரத்தை அறிந்து உடனடியாக எனக்கு மாதம் ரூ.1,000/– பெறுவதற்கான உத்தரவு வழங்கினார்கள். அதன் மூலம் இன்றைக்கு நான் அம்மாவினுடைய ஆசியில் நல்ல மனநிறைவோடு வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நான் உயிருடன் இருக்கும் வரை அம்மாவுக்கு என்றென்றைக்கும் நன்றிக் கடன் பட்டவளாக இருப்பேன்'' என கண்ணீர் மல்க தெரிவித்தார்.


திம்மையா

''எனது பெயர் திம்மையா என்ற ராஜமாணிக்கம். தகப்பனார் பெயர் அழகர்சாமி. நான் பராசக்தி நகர், பாவாலி ஊராட்சியில், வசித்து வருகிறேன். எனக்கு வயது 43 ஆகிறது. நான் பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்தவன். நான் எச்.ஐ.வி. நோயினால் பாதிக்கப்பட்டு உள்ளேன். எனக்கு 1 மகன், 1 மகள் உள்ளனர். எச்.ஐ.வி. நோயினால் பாதிக்கப்பட்ட பின்பு என்னால் எந்தவிதமான வேலைக்கும் செல்ல இயலவில்லை. அதனால் எனது குடும்பம் சாப்பிடுவதற்கு கூட மிகவும் கஷ்டப்பட்டு வந்தது. எச்.ஐ.வி. நோய் தாக்கப்பட்டதை அறிந்து மிகுந்த மனவேதனை அடைந்தேன். இனிவரும் காலங்களில் எனது குடும்பத்தை யார் காப்பாற்றுவார் என எண்ணி வருத்தப்பட்டதோடு, என்னுடைய மருத்துவச் செலவிற்கும் யாரை நாடுவது என எண்ணியிருந்த நிலையில் தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் எச்.ஐ.வி. நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஓய்வூதியத் தொகை வழங்குவது அறிந்து நானும் ஓய்வூதியம் கேட்டு மனு செய்தேன். உடனடியாக உரிய விசாரணையை மேற்கொண்டு உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவித்தொகையினை வழங்கியதற்கு என் நன்றியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்''.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் செயல்படுத்தாக வகையில் மக்களின் தேவைகளை அறிந்து தெரிந்து அற்புதமானத் திட்டங்களை அறிவித்து ஏழை, எளிய மக்களுக்காகக் கொண்டு வரப்பட்ட மாண்புமிகு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மக்களுக்கான மகத்தான திட்டம் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை என்பது இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளிகளின் கூற்று மெய்பிக்கும் வகையில் உள்ளது.

❖ ❖ ❖

# நரிக்குறவர் வாழ்க்கையில் ஒளியேற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நரிக்குறவர் சமூக மக்களுக்கு நிரந்தரமாகக் குடியிருக்க இலவச வீட்டுமனைப் பட்டா ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டு வருகின்றன. நரிக்குறவர் சமூக மக்கள் தமது குலத் தொழிலான ஊசி, பாசி விற்பதற்குப் போதுமான நிதி இல்லாமல் தனியாரிடம் வட்டிக்குக் கடன் பெற்று தொழில் செய்து வந்தனர். தொழிலில் கிடைக்கும் இலாபத்தில் கிடைக்கும் பெரும் பகுதியை கடனுக்குரிய வட்டிக்கே செலுத்த வேண்டிய நிலையில் அவதியுற்று வந்தனர். இதை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நரிக்குறவர் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் நரிக்குறவர் வாரியத்தின் மூலம் தொழில் தொடங்கிட 100 சதவீதம் மானியத்தில் நிதி வழங்க உத்தரவிட்டார்கள்.

**அருப்புக்கோட்டை ஒன்றியம், சுக்கிலநத்தம் ஊராட்சிக்குட்பட்ட நரிக்குறவர் காலனியைச் சேர்ந்த ஜெஜிந்தரன் மனைவி திருமதி வனிதா தெரிவிக்கையில்,**


*வனிதா*

“நாங்கள் எங்களது குலத் தொழிலான ஊசி, பாசி விற்பனையை திருவிழா நடைபெறும் கோவில்களிலும் கிராம மற்றும் நகர தெருக்களிலும் செய்து வருகிறோம். ஊசி, பாசி கொள்முதல் செய்வதற்குப் போதிய நிதிவசதி இல்லாத சூழ்நிலையில் பிறரிடம் கடன் வாங்கித் தொழில் செய்து வருகிறோம். இத்தொழில் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ.100 மட்டும் கிடைப்பதால் பெற்ற கடனைத் திருப்பி செலுத்தவும் குடும்பத்தையும் பராமரிப்பதும் கடினமாக உள்ளது. தற்சமயம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க 100 சதவீத மானியத்தில் தொழில் தொடங்க ரூ.7,500/– கொடுத்திருப்பதால் எங்களது தொழிலை சுயமாகச் செய்வதால் நாள் ஒன்றுக்கு ரூ.300க்கு மேல் வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. எங்களைப்

பசியிலிருந்தும் வறுமையிலிருந்தும் விடுவித்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியினைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று கூறினார்.

**விருதுநகர் மாவட்ட நரிக்குறவர் சங்கத் தலைவர் திரு. சிவாஜி தெரிவிக்கையில்,**



*சிவாஜி*

''மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா தமிழகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் வழங்கப்படுகின்ற அடிப்படை சலுகைகளான குடும்ப அட்டை மற்றும் ஜாதிச் சான்றிதழ்களை எங்களது சமூகத்திற்கு வழங்கி அங்கீகாரம் கிடைக்க வழிவகை செய்தார்கள். இதன் மூலம் இன்றைய தினம் 20 கிலோ விலையில்லா அரிசி, சலுகை விலையில் வழங்கக்கூடிய மண்ணெண்ணெய், சர்க்கரை உட்பட அத்தியாவசியப் பொருள்களும் வழங்கப்படுவதால் எங்களுடைய வாழ்க்கை சிறப்பாக உள்ளது. எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்றார்.

**அருப்புக்கோட்டை நரிக்குறவர் கானியைச் சேர்ந்த லோகிதாஸ் மகன் முருகன் நம்மிடம்,**

''எங்களது காலனியில் 56 குடும்பங்கள் வசிக்கின்றன. ஏழ்மையில் தொழில் தொடங்க முடியாத சூழ்நிலையில், எங்கள் காலனியைச் சேர்ந்த 64 உறுப்பினர்களுக்கு தலா ரூ.7,500 வீதம் வழங்கி தொழில் தொடங்க உதவி செய்திருப்பதற்கு தமிழக அரசுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்'' என்றார்.

காலம்காலமாக, நாடோடிகளாக வாழ்ந்து வருகின்ற நரிக்குறவர் சமூக மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான இருக்க இருப்பிடம், உண்ண உணவு, உடுத்த உடை ஆகிய அனைத்தும் பிற மக்களுக்குக் கிடைப்பது போன்று இவர்களுக்கு வழங்கி வருவதும், இவர்கள் தொழில் தொடங்குவதற்காக 100 சதவீத மானியத்தில் நிதி வழங்கியிருப்பது, இவர்களுடைய வாழ்வாதாரமும், வாழ்க்கை முறையும் மாறும் என்பதில் மாற்றுக்கருத்து ஏதும் இல்லை என்பதே உண்மை.

❖ ❖ ❖

# மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்றம் தந்த மனிதநேய அரசு

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காகப் பல்வேறு சிறப்புத் திட்டங்களை தமிழகத்தில் அறிமுகப்படுத்தி இந்தியாவிற்கே முன்மாதிரியாகத் திகழ்கிறார்கள்.

விருதுநகர் மாவட்டத்திலுள்ள மாற்றுத் திறனாளிகள் வளம் பெறவும், நலம் பெறவும், மாற்றுத் திறனாளிகளுக்கான அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் மிகுந்த முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**இராஜபாளையம் ஏஞ்சல் கல்லூரியில் பி.எட். பயிலும் விருதுநகர் மாவட்டம் வாழைகுளம்பட்டியைச் சேர்ந்த முத்துக்கிருஷ்ணன்,**

“எனது இரண்டு கால்களும், போலியோ நோயினால் பாதிக்கப்பட்டு நடக்க இயலாத நிலையில் உள்ளேன். இதனால் எனக்குக் கல்லூரி சென்று வருவது மிகவும் சிரமமான காரியமாகும். இந்நிலையில் மாற்றுத்திறனாளிகள் நலத்திட்டத்தில் எங்களுக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனம் வழங்குவதாக அறிந்து விண்ணப்பித்து இந்த வாகனத்தைப் பெற்றுள்ளேன். மாற்றுத்திறனாளிகளின் நலன் கருதி பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து மனநிறைவோடும், மனஉறுதியோடும், சமுதாயத்தில் மற்றவர்களுக்கு இணையாக வாழவைக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,” என்றார்.



முத்துக்கிருஷ்ணன்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு வழங்கி வரும் நலத்திட்டங்களால் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் மலர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

❖ ❖ ❖

# தமிழகத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழும் நலிவுற்ற மக்களின் வறுமையை அகற்றிய புதுவாழ்வு திட்டம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நலிவுற்ற மக்களின் வாழ்க்கையில் வறுமையை அகற்றி புதுவாழ்வு திட்டத்தின் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வளர்ச்சியை அடைய செய்துள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் இந்த சீரிய முயற்சியால், தமிழக அரசின் பங்குடன், உலக வங்கி நிதியுதவியுடன் புதுவாழ்வுத் திட்டம் மிகச்சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2005ஆம் ஆண்டு முதற்கட்டமாக 16 மாவட்டங்களில் 70 பிற்படுத்தப்பட்ட வட்டாரங்களில் உள்ள 2,059 கிராம ஊராட்சிகளில் கூடுதல் நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து 2011ஆம் ஆண்டு முதல் மேலும், பத்து மாவட்டங்களில் 50 பிற்படுத்தப்பட்ட வட்டாரங்களில் உள்ள 1,661 கிராம ஊராட்சிகளில் விரிவுப்படுத்தப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் சாத்தூர், வெம்பக்கோட்டை, வத்திராயிருப்பு மற்றும் நரிக்குடி ஆகிய 4 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 165 கிராம ஊராட்சிகளில் 26,052 நலிவுற்ற மக்களை கிராம சபையின் ஒப்புதலோடு கண்டறிந்து, அவர்களின் வறுமையை போக்குவதற்காக பல்வேறு வழிகளில் திட்ட செயல்பாடுகள் வகுக்கப்பட்டு 01.06.2011 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**விருதுநகர் மாவட்டம், சாத்தூர் ஒன்றியம் பெரிய ஓடைப்பட்டி என்.வெங்கடேஸ்வரபுரத்தைச் சேர்ந்த திருமதி பிச்சைமணி தெரிவித்ததாவது,**

‘‘ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த எனக்கு ஒரு மகன் இருக்கிறான். நானும் எனது கணவரும் கூலி வேலை செய்து கிடைத்த சம்பளம் எனது குடும்பத்திற்கு போதாத நிலையில் என் கணவர் திடீரென்று இறந்து விட்டார். குடும்ப சுமையை மகன் ஏற்றுக் கொண்டு வாழ்க்கையை நகர்த்திக் கொண்டு சென்றோம்.


பிச்சைமணி

இந்த நிலையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் ஆட்சியில் எங்களைப் போன்ற நலிவுற்ற ஏழைகளுக்கு புதுவாழ்வுத் திட்டத்தின் சார்பில் நலிவுற்றோருக்கு ஊராட்சியில் உள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் தனிநபர் கடன் வழங்கப்படுவதை அறிந்து மனு செய்தேன். இந்த சங்கத்தில் ரூ.13,000/– கடன் பெற்று இரண்டு ஆடுகளை வாங்கினேன், இந்த இரண்டு ஆடுகளும் தற்போது 6 ஆடுகளாகப் பெருகி உள்ளது. புதுவாழ்வுத் திட்டத்தின் மூலம் எங்கள் குடும்பம் வாழ வழிவகுத்து கொடுத்த அம்மா அவர்களுக்கு எங்கள் குடும்பத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

**வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், முத்துசாமிபுரத்தைச் சார்ந்த திரு. எம்.மாரிமுத்து தெரிவிக்கையில்,**


மாரிமுத்து

''என் பெயர் எம்.மாரிமுத்து, என் அப்பா பெயர் கே.மாரியப்பன், அம்மா சிறுவயதிலேயே இறந்து விட்டார். என்னுடைய இரண்டு கால்களும் போலியோவால் பாதிக்கப்பட்டு வளர்ச்சியடையாமல் போனது. அப்பாவுக்கு வயதாகி விட்டதால் வேலைக்கும் செல்ல முடியவில்லை. இந்த நிலையில் நான் ஆலங்குளத்தில் உள்ள ஜெராக்ஸ் கடைக்கு வேலைக்குச் சென்றேன். அங்கு மாதம் ரூ.1,500 ஊதியம் கிடைத்ததை வைத்துக் கொண்டு வறுமையுடன் குடும்பத்தை நடத்தி வந்தேன்.

அப்போது தான் இருளடைந்த மாற்றுத்திறனாளிகளின் வாழ்வில் ஒளியேற்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ''புதுவாழ்வு திட்டம்'' எங்கள் ஊருக்கு வந்தது. பின்னர் தனிநபர் கடனாக ரூ.25,000/– பெற்று ஜெராக்ஸ் மிஷின் வாங்கி தனியாக கடை வைத்து உள்ளேன். தற்போது மாதம் ரூ.3,000 வருமானம் கிடைக்கிறது. பின்னர் மாற்றுத்திறனாளிகளுக்கான செல்போன் பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சியை முடித்துவிட்டு தற்போது ஜெராக்ஸ் கடையுடன் சேர்ந்து செல்போன் பழுதுபார்க்கும் பணியையும் செய்து வருகிறேன். இதனால் எனக்கு நல்லவருமானம் கிடைப்பது மட்டுமின்றி சமுதாயத்தில் நல்லமதிப்பும் கிடைக்கச் செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

❖ ❖ ❖

# முகாம் வாழ் இலங்கை தமிழர்களின் ஏழைப் பெண்களுக்கும் திருமண நிதியுதவி, தாலிக்குத் தங்கம்

**த**மிழகத்தில் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தியதோடு, “தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அனைத்து நலத்திட்டங்களும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கப்படும்” என்று அரசாணை 480–ஐ பிறப்பித்து தமிழகத்தில் தஞ்சமடைந்த ஈழத்தமிழர்களும், தமிழ்நாட்டு மக்களைப் போல் அனைத்து திட்டங்களிலும் பயன்பெற ஏதுவாக விதிகளைத் தளர்த்தி வழிவகை செய்து மனிதாபிமானத்திற்கே இலக்கணமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திகழ்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்களில் 65வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள், விதவைகள், ஆதரவற்ற பெண்கள், மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் அவர்தம் தகுதி அடிப்படையில் மாதந்தோறும் ரூ.1,000/– வீதம் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவித் தொகைகள் வழங்கப்படுவதோடு, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் முகாம்களில் வாழும் பெண்களுக்கு தையல் பயிற்சி அளிக்கப்படுவதோடு, தையல் கலை தெரிந்த பெண்களுக்கும் இலவச தையல் இயந்திரம் வழங்கப்பட்டு வருகிறது. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமணயுதவித் திட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த பெண்களில் பட்டம்/பட்டயம் பெற்ற பெண்களுக்கு தலா ரூ.50,000/– மற்றும் 4 கிராம் திருமாங்கல்யத்திற்கான தங்கமும், இதர படித்த பெண்களுக்கு தலா ரூ.25,000/– மற்றும் 4 கிராம் திருமாங்கல்யத்திற்கான தங்கமும் வழங்கப்பட்டு வருகிறது.

**திருமணத்திற்கு நிதியுதவியும், தாலிக்கு தங்கமும் பெற்ற விருதுநகர் மாவட்ட முகாம் வாழ் தமிழர்களின் நெகிழ்ச்சியான பேட்டி.**

“எனது பெயர் அலமேலு, கணவர் பெயர் சண்முகம். நான் இலங்கையிலிருந்து வந்து விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், குல்லூர்சந்தை அகதிகள் முகாமில் வாழ்ந்து வருகிறேன். எனது மூத்த மகள் சிந்துஜா +2 படித்திருக்கிறாள். அவளுக்கு திருமணம் நிச்சயித்த போது திருமண நிதியுதவி கோரி விண்ணப்பித்திருந்தேன். திருமணம் முடிப்பதற்கு என்னிடம் பண வசதி இல்லை. அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களிடம் கடன் வாங்கி திருமணம் முடித்தேன். தமிழக அரசின் கருணையால் கிடைத்த ரூ.25 ஆயிரம் நிதியினை கொண்டு வாங்கிய கடனை முழுமையாக




அடைத்து விட்டேன். திருமணத்தின் போது தாலிக்கு தங்கம் வாங்க வசதியில்லாததால் மஞ்சள்கிழங்கை கட்டி தான் என் மகள் திருமணம் நடந்தது. தற்போது கிடைத்துள்ள 4 கிராம் தங்கத்தின் மூலம் என் மகளுக்கு புதிதாக தாலி செய்து அணிவித்து மகிழ்ச்சி அடைந்தோம். என்னைப் போன்ற ஏழைத் தாய் நடத்த முடியாத திருமணத்தை தமிழக அரசு தாயுள்ளத்தோடு செய்த உதவியை நாங்கள் என்றென்றும் எங்கள் வாழ்நாளில் மறக்கமாட்டோம். எங்கள் ஆயுள் உள்ளவரை முகாம் வாழ் தமிழர்கள், நாங்கள் அனைவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என்றும் நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்போம்''.

''எனது பெயர் எஸ். காந்திமதி. நான் இலங்கையிலிருந்து விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், கண்டியாபுரம் அகதிகள் முகாமில் வாழ்ந்து வருகிறேன். எனக்கு ஐந்து குழந்தைகள் உள்ளனர். எங்களுக்கு பாய், தலையணை, மற்றும் சமையல் பாத்திரங்கள் வழங்கி எங்கள் வாழ்க்கையில் ஒளியேற்றியுள்ளது தமிழக அரசு. இதுவரை எந்த அரசும் எங்களுக்கு வழங்காத சீரிய ஆணையினை தமிழக அரசு பிறப்பித்து தற்போது நாங்களும் தமிழ்நாட்டு மக்களைப் போலவே அனைத்து திட்டங்களிலும் பயன்பெற்று வருகிறோம். எனது மகளுக்கு உரிய திருமண வயது வந்ததும் அவளது திருமணத்தைப் பற்றி நினைக்கும் போது பொருளாதார நிலை சரியில்லாததாலும் யாருடைய உதவியும் இல்லாததாலும் உரிய நேரத்தில் திருமணத்தை நடத்தமுடியவில்லையே என மிகவும் வருத்தப்பட்டோம். திருமணத்தை நடத்திட யாரிடம் சென்று கடன் பெறுவது, அதை எவ்வாறு திருப்பிச் செலுத்துவது எனக் கவலைப்பட்டு கொண்டிருக்கும் போது தெய்வமே நேரில் வந்து உதவுவது போல தமிழக அரசின் இத்திட்டத்தை அறிந்து உரிய முறையில் விண்ணப்பித்தேன். தமிழக அரசிடமிருந்து ரூ.25 ஆயிரத்திற்கான திருமண நிதியுதவி கிடைத்தது. அதனைக் கொண்டு திருமணக் கடனை அடைத்ததோடு சீர் வசதிகளும் செய்ய முடிந்தது. சமயத்தில் உதவி செய்து நாங்கள் வாங்கிய கடனை அடைத்து நிம்மதியாக வாழ வழி செய்த தமிழக அரசுக்கு முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் அனைவரின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்''.




❖ ❖ ❖

# மக்களைத் தேடி வருவாய்த்துறை

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 2011ஆம் ஆண்டு தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் 10.06.2011 அன்று சட்டப்பேரவையில் அறிவித்த சிறப்புமிகு திட்டம் தான் விரைவு பட்டா மாறுதல் திட்டமாகும்.

இத்திட்டத்தின்படி, உட்பிரிவு அல்லாத இனங்களில் ஒவ்வொரு திங்கள்கிழமையும் பட்டா மாறுதல் கோரி நேரடியாகப் பொதுமக்கள் கொடுக்கும் மனுக்களை அப்பகுதி கிராம நிருவாக அலுவலர்கள் பெற்றுக் கொண்டு ஒப்புகைச் சீட்டு வழங்கிட வேண்டும். இதற்குப் பொதுமக்கள் எவ்விதக் கட்டணமும் செலுத்த வேண்டியது இல்லை. மூல ஆவணங்களின் நகல் எடுத்து இணைத்து வழங்கிட வேண்டும். திங்கள்கிழமை பெறும் மனுக்களை கிராம நிருவாக அலுவலர் சரிபார்த்து தனது அறிக்கையுடன் வெள்ளிக்கிழமை வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். அந்த அறிக்கை வட்டாட்சியர் அலுவலகத்தில் கணினியில் பதிவு செய்யப்படும். ஆவணங்களின் நகல் பிரதிகளைக் கொண்டு மண்டலத் துணை வட்டாட்சியரும், குறு வட்ட வருவாய் ஆய்வாளரும் பரிசீலனை செய்து 2ஆவது வெள்ளிக்கிழமையன்று மனுதாரர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரும்போது மூல ஆவணங்களைப் பார்வையிட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்ட பட்டா மாறுதல் ஆணை மற்றும் சிட்டா நகல்களை வழங்க வேண்டும்.

இத்திட்டத்தில் பெறப்படும் மனுக்களுக்கென தனிப்பதிவேடு பராமரித்து புலப்படச் சுவடியிலிருந்து தொடர்புடைய புல எண்ணின் நகல் இணைத்து குறு வட்ட நில அளவரிடம் இரண்டு நாட்களில் வழங்க வேண்டும். குறு வட்ட நில அளவர் புலத்தணிக்கை செய்து மூல ஆவணங்களைப் பார்வையிட்டு உட்பரிவு செய்து தேவையான ஆவணங்களுடன் 10 தினங்களுக்குள் இப்பணிகளை முடித்து நில அளவை துணை ஆய்வாளரிடம் வழங்க வேண்டும். அவர் அவற்றைச் சரிபார்த்து நான்கு தினங்களுக்குள் வட்டாட்சியரின் ஒப்புதல் பெற சமர்ப்பிக்க வேண்டும். மனுதாரர் விண்ணப்பித்து 4–ஆவது வெள்ளிக்கிழமை அன்று வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து மூல ஆவணங்களைக் காண்பித்து பட்டா மாறுதல் உத்தரவு, புலப்பட நகல், சிட்டா நகல் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளும் திட்டம் தான் விரைவு பட்டா மாறுதல் திட்டமாகும்.

**பட்டா மாறுதல் ஆணைகள் பெற்ற பொதுமக்களின் நெகிழ்ச்சிப் பேட்டி :**

**திரு. ஜி.சுபாஷ்சந்திரபோஸ், த/பெ. குருசாமி செட்டியார் அவர்கள் தெரிவிக்கையில்,**




"நான் அருப்புக்கோட்டை வட்டம், பாளையம்பட்டியில் வசித்து வருகிறேன். எனக்கு 52 வயதாகிறது. எனது தந்தையாரின் பூர்வீக வீட்டில் வசித்து வருகிறேன். பட்டா மாறுதல் பெற நீண்ட நாள் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு செல்ல வேண்டியிருக்கும் என்ற எண்ணத்தில் நான் இதுவரை விண்ணப்பிக்காமல் இருந்தேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி கொண்டு வந்த இந்த விரைவுப் பட்டா மாறுதல் திட்டத்தினை கேள்விப்பட்டு நான் விண்ணப்பித்தேன். விண்ணப்பித்த 10 தினங்களுக்குள் அதிகாரிகள் நேரில் விசாரணை செய்து, பட்டா மாறுதல் உத்தரவினை பெற்றுச் செல்லுமாறு தெரிவித்தார்கள். என்னைப் போன்ற ஏழை, எளிய மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது".

**திருமதி பாக்கியலட்சுமி, க/பெ. நாகராஜ் அவர்கள் தெரிவிக்கையில்,**




"நான் அருப்புக்கோட்டை வட்டம், கோவிலாங்குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு வயது 35 ஆகிறது. நானும் எனது கணவரும் கூலி வேலை பார்த்து வருகிறோம்.

எங்களுக்குச் சொந்தமான பூர்வீக இடத்திற்கு பட்டா வாங்க இயலாமல் பலமுறை முயன்றும் இயலவில்லை. தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்த இத்திட்டத்தினைக் கேள்விப்பட்டு பட்டா வேண்டி மனு செய்தேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய தயவினால் விண்ணப்பித்த சில நாட்களுக்குள் எனக்குப் பட்டா மாறுதல் ஆணைகள் கிடைத்தது. எங்களைப் போன்ற ஏழை மக்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என்னென்றும் நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்போம்".

❖ ❖ ❖